# குறிஞ்சிக் குமரி



கா.கோவிந்தன்.எம்.ஏ

V. PR.
TIRU

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHET
PAGANERI

YOUNG MEN CHETTIARS' TAMIL
PAGANERI

முதற் பதிப்பு: ஏப்ரல், 1956.

[முழு உரிமையும் பதிப்பகத்தாருக்கே]

விலை ரூபாய் மூன்று

அச்சிட்டது:
மன்றம் அச்சகம், மண்ணடி, சென்னை-1

# பதிப்புரை 3788.

'எட்டுத்தொகை நூல்கள்' எனத் தமிழ் நூல்களிற் சிறப்பாகப் பெருமைக்குரியனவாகத் திகழும் நூல்களிற் கலித்தொகையும் ஒன்றாகும். அவற்றுள்ளும் 'கற்று அறிந்தார் ஏத்தும்' சிறப்பின் மிக்கது கலி எனப் பாராட்டுவர் தமிழ்ச் சான்றோர்.

அத்தகைய சிறப்புமிக்க கலித்தொகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலனையும் ஒட்டியதாக ஐந்து பிரிவினையுடைத்து. அவற்றுள், இங்கே இந்நூலுள் எடுத்து விளக்கிக் கூறப்பட்டுள்ள பகுதி குறிஞ்சிக் கலியாகும்.

தமிழகத்துப் பழஞ்சான்றோர் தமிழ் நூல்களை அகம் புறம் என, இரு பிரிவுகளாக வகுத்துள்ளனர். அவற்றுள், அகமாவது ஒத்த அன்புடைய இளைஞன் ஒருவனும், குமரி ஒருத்தியும் கூடுகின்ற போதிலே அவர்கள் துய்த்த பேரின்பம் பின்னர் இன்னதெனை வெளிப்படக் கூறற்கு இயலாததாய் உள்ளத்துணர்வே யாக, அவர்தாமே நுகர்ந்து இன்பம் உறுவதோர் இயல் பாகும். இஃதன்றிப் பிறவெல்லாம் துய்த்து உணரப் பட்டுப், பிற்றை ஞான்று இவை இவை இன்னின்ன வாறாக எமக்கு இன்பமோ துன்பமோ விளைத்தனவெனப் பிறர்க்கும் வெளிப்படக் கூறப்படுமோர் தகுதியுடையன வாதலின் புறம் என்றார். எனவே, அகப்பொருள் எனின் அகத்தே நிகழும் ஒழுக்கத்தினையும், புறப்பொருள் எனின் புறத்தே நிகழும் ஒழுக்கத்தினையும் கூறுவதாக அமைந் தன ஆன்றோராக்கிய பநுவல்கள்.

இனி, இன்பந்தானே மட்டுமன்றித் துன்பமும் அகத்துள் நிகழக் காண்கின்றனமேயெனின், அஃதும்

காமத்தைச் சார்ந்து நிகழ்வதொன்ருயின் அகப்பொருள் என்றும்; பிறவாயின் புறப்பொருள் என்றும் கொள்ளுதல் மரபு.

அகப்பொருள் நூல்களிற் கூறப்படுகின்ற இன்ப ஒழுக்கங்கள் எல்லாம், உலகம் இகழ்ந்துரைக்கும் காம வேட்கை மீதூற, அதன் பயனுக நிகழும் வெறிச்செயல்கள் அன்று. மற்று, அவையெல்லாம் காதலன் காதலி இருவரிடையேயும் தோன்றிய இணையிலா உள்ளன்பின் பெருக்கால் நிகழும் ஓர் தூய மனஒருமைப்பாட்டின் சின்னம் ஆகும்.

இதனை வலியுறுத்திக் கூறும் பழந்தமிழ்ச் சான்ருேர் வாக்குகள் ஏராளம். எடுத்துக்காட்டாக 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என, ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறுவதையும்; 'அன்பின் ஐந்திணை' என, இறையனுர் இயம்புவதையும்; 'உளமலி காதல் களவெனப்படுவது' என, நாற்கவிராச நம்பியார் நவில்வதையும் உணர்ந்து தெளிக. காதல் என்பது சாதாரண உடலின்பம் மட்டுமே விரும்புவதோர் வேட்கையுணர்வன்று. ஒருவர் மற்ருெருவரின் இன்ப துன்பங்களைத் தமதாகக் கொளலும், ஒருவரை ஒருவர் நீங்க எண்ணுது என்றும் எஞ்ஞான்றும் ஓருயிரும் ஈருடலுமாய் ஒத்து இணைந்து வாழும் வாழ்வும், ஆகியதே தூய காதல் வாழ்வு என அறிந்துகொள்ளல் வேண்டும். இத்தகைய நலமிகு அன்பின் செவ்வியையே 'காதற்காமம்' எனச் சான்ருேர் சாற்றுவர்.

'காதற்காமம் காமத்துச் சிறந்தது' 'விரும்புவோர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி புலத்தலிற் சிறந்தது' எனப் பரிபாடலின்கண் குன்றம் பூதனுர் எனும் சான்ருேர் கூறியதும் இதனை வலியுறுத்தும். மேலும், இவ்

வொழுக்கத்தைச் சிற்றின்பம் எனக் கூறுது, 'ஒத்த அன்பின் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம்' எனப் பெருமிதத்துடன் கூறுவர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

இனி, மேற்குறிய ஐவகையான நிலப்பகுப்பும் எதை எதைக் குறிக்கும் என ஆராயின், மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனவும், காடும் காடுசார்ந்த இடமும் முல்லை எனவும், வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் எனவும், கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் எனவும் குறிக்கப்பெறும் என உணரலாம். இதுபற்றியே புவனத்தை நானிலம் என்பாரும் உளர். பாலைக்கு என்று தனி நிலப்பகுப்பு ஏதுங்கிடையாது. குறிஞ்சியும் முல்லையும் தத்தம் நிலையிற் காலவேற்றுமை காரணமாகத் திரிந்து சுரமாதலே பாலையெனக் குறிக்கப்படும். இஃதன்றி இவை அந்நிலங்களிற் சிறப்பாகக் காண்பதாகின்ற மலர்கள் காரணமாகப் பிறந்த பெயர்கள் எனக் கூறுவதும் உண்டு.

இத்தகைய காதல் நிலைப்பட்ட தலைவன் தலைவியரிடையே ஒழுகும் ஒழுக்கம் எழுவகைப்படும். அவற்றினுள் புணர்தல் பற்றியதாக அமைந்துளதே குறிஞ்சியாகும். பிற மற்றை நிலங்கட்கு உரியனவாம்.

இனி இங்கே நிகழும் ஒழுக்கத்தை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றனுள் அடக்கிக் கூறுவர்.

முதற்பொருளாவது பெரும்பொழுது சிறுபொழுது ஆகிய இருவகைப்பட்ட கால அளவுகளில், அவ்வந்நிலத்திற்குரிய பொழுதைக் குறிப்பதாகும். இந்நிலையில் குறிஞ்சிக்குப் பெரும்பொழுதிற் கூதிரும் முன்பனியும், சிறுபொழுதில் யாமமும் உரியதாகும் என்பர்.

கருப்பொருள் என்பது அவ்வந் நிலங்களுக்குரிய தெய்வம், மக்கள், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், செய்தி முதலியன.

இவற்றுள் குறிஞ்சிக்குத் தெய்வம் முருகவேள்; தலைவன் பெயர் சிலம்பன், வெற்பன், பொருப்பன்; தலைமகள் பெயர் கொடிச்சி, குறத்தி; மக்கள் பெயர் கானவர், வேட்டுவர், இறவுளர், குறவர், குன்றுவர், வேட்டுவித்தியர், குறத்தியர், குன்றுவித்தியர்; புள் கிளியும், மயிலும், விலங்கு புலியும் யானையும், கரடியும், பன்றியும்; ஊர் சிறுகுடியும், குறிச்சியும்; நீர் அருவியும் சுனையும், பூ குறிஞ்சியும், காந்தளும், வேங்கையும், சுனைக்குவளையும்; மரம் அகிலும், ஆரமும், திமிசும், தேக்கும், வேங்கையும், அசோகமும்; உணவு ஐவன நெல்லும், தினையும், மூங்கிலரிசியும்; பறை முருகியமும், தொண்டகப் பறையும்; யாழ் குறிஞ்சியாழ்; பண் குறிஞ்சிப்பண்; செய்தி தேனழித்தலும், கிழங்ககழ்தலும், தினை முதலியன விளைத்தலும், கிளி கடிதலும் ஆகும்.

இனிப் பொருளாவது திணைக்கு உரிய பொருள் என்றதாகும். அவற்றில் குறிஞ்சிக்கு உரியன புணர்தலும், புணர்தல் நிமித்தமும் ஆகும். இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்பாடும், பாங்கற் கூட்டமும், பாங்கியிற் கூட்டமும், இரவுக் குறிக்கண் எதிர்ப்பாடும், பகற்குறிக்கண் எதிர்ப்பாடும் போல்வன புணர்தல் என்று கூறப்படும். தலைமகன் தோழியைக் குறையுறும் பகுதியும், ஆண்டுத் தோழி கூறுவனவும், குறை நேர்தலும், மறுத்தலும் முதலியன புணர்தல் நிமித்தமும் ஆகும்.

இவ்வாறு கூறிய முதல், கரு உரிப்பொருள்கள் மூன்றும் ஒன்று ஒன்றினிற் சிறந்து வருவதை அகப் பொருட் செல்வமாம் தமிழ் நூல்களிற் பரக்கக் காணலாம்.

இனி, ஒத்த அன்பும், குணமும், செல்வமும் உடைய ஒருவனும், ஒருத்தியும் ஒரு பொழிலகத்தே எதிர்ப்பட்டு ஞான்று இருவர் உளமும் ஒத்து இயற்கைப் புணர்ச்சி நிகழுமுன் தலைமகன் பக்கம் நிகழும் காட்சி, ஐயம், தெரிதல், தேறல் என்பன கைக்கிளை எனக் கூறப்படும்.

இத்தகைய முறையிலே தமிழ்ப் பெரியார் விரிவாகப் பகுத்துக் கூறியுள்ள அகப்பொருள் இலக்கணச்செறிவு எல்லாம் நிரலே இனிமையுடன் விளங்கத் திகழும் கலித் தொகையுள், ஆசிரியர் கபிலர் ஆக்கிய செழுந்தமிழ் நூல் குறிஞ்சிக் கலியாகும்.

அருமைமிக்க கலிப்பாவால் அமைந்த அந்நூலின் அழகினைத் தமிழில் விளக்கிக் கூறுவது இவ்வெளியீடாம் குறிஞ்சிக்குமரி. அனைவரும் கற்றுக் களித்திடுக.

பதிப்பாசிரியன்,
**தேனருவிப் பதிப்பகம்.**

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | 'வீழ்ந்தேன் அவன் மார்பில்' ... | 1 |
| 2. | 'நன்மலை நாட! கேள்' ... ... | 11 |
| 3. | வெற்பனும் வந்தனன் ... ... | 20 |
| 4. | அகவினம் பாடுவாம் ... ... | 31 |
| 5. | பாடுகம் வா தோழி! ... ... | 41 |
| 6. | ஆர்வுற்றார் நெஞ்சம்! ... ... | 51 |
| 7. | வீங்கின தோள்கள்! ... ... | 60 |
| 8. | என்னையும் மறைத்தாள்! ... ... | 68 |
| 9. | 'யாமத்தும் துயிலலள்!' ... ... | 74 |
| 10. | 'பைதலென் யானை!' ... ... | 81 |
| 11. | நல்லறம் உணர்ந்த நம்பி ... ... | 88 |
| 12. | களிறும் புலியும் மயங்கிய காடு ... | 94 |
| 13. | இரவில் வாரல்! ... ... ... | 100 |
| 14. | மறவற்க இவளை! ... ... ... | 108 |
| 15. | என் கை பற்றினன் ... ... | 114 |
| 16. | மணக்கோலம் கண்டு மகிழ்வேன் ... | 119 |
| 17. | கண்டாள் கவின் பெற்றாள் ... ... | 125 |
| 18. | அல்லல் அகற்றினன் ... ... | 132 |
| 19. | யானை அனையன் ... ... ... | 137 |
| 20. | அறம் தவறினன் அரசனே ... ... | 142 |
| 21. | அகன்றாள் அவள் ... ... ... | 149 |
| 22. | மன்றத்து மடலேறுவேன் ... ... | 153 |
| 23. | பற்றாது விடாது ... ... ... | 159 |
| 24. | நாண்நினைந்து கைவிடேல் ... ... | 165 |
| 25. | குறித்ததை முடிப்பவன் ... ... | 174 |
| 26. | மாறுண்டோ நெஞ்சே ... ... | 183 |
| 27. | கால்நிலங் கிளற நின்றாள் ... ... | 190 |
| 28. | முத்தேர் முறுவலாய்! ... ... | 197 |
| 29. | ஏதில் குறுநரி! ... ... ... | 206 |


——

3788.

# குறிஞ்சிக் குமரி

—:o:—

## 1

## ‘வீழ்ந்தேன் அவன் மார்பில்’

மரம் செறிந்த ஓர் அழகிய மலைச்சாரல்; ஆங்கே ஒரு தினைப்புனம்: புனத்தின் இடையே, யானையும் எட்டா உயரத்தில் அமைந்த ஒரு பரண்; பரண்மீது ஒரு இளம் பெண்; அறிவும் திருவும் அழகும் ஒருங்கே உடையவள்; கவண், தட்டை முதலாம் கிளியோட்டும் கருவிகளைக் கையில் கொண்டு, தினைக்கதிர்களைத் தின்ன வரும் கிளிகளையுங் குருவிகளையும், ஓட்டும் தொழில் மேற்கொண்டு வந்தவள்; ஆயினும், அவள் அத்தொழிலில் கருத்தைச் செலுத்தாது, எதையோ எண்ணி ஏங்கி நிற்கின்றாள்; அந்நிலையில் ஆங்கு வந்தாள் அவள் தோழி.

தோழி ஆங்கு வருவதற்கு முன்னர், இடைவழியில் இளைஞன் ஒருவனைக் கண்டுவந்தாள். அவன் ஓர் ஆண் அழகன்; வில்லும் அம்பும் கொண்டு, யானை போலும் கொடிய காட்டு விலங்குகளை வேட்டையாட வந்து, அவற்றின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிச் சென்று, அவற்றைத் தேடித் திரிவான்போல் தோன்றினன். ஆயினும், அவன், பேரழகுதோன்றத் தலையில் அணிந்து கொண்டிருக்கும், மணம்நாறும் பன்னிற மலர் கொண்டு தொடுத்த கண்ணி, வேட்டையாட வந்தவனல்லன் அவன் என்பதை எடுத்துக் காட்டுவதாய் இருந்தது.

வந்த அவன், அவள் வரும் வழியில், அவள் வருகையை எதிர்நோக்கி யிருப்பான்போல இருந்து, அவ்வழிவரும் அவள் நோக்கம், தன்மீது விழுமாறு அவளையே ஊன்றி நோக்கினன். அவன் அவளைப் பார்த்த பார்வை, ‘அவன் யாதோ ஒன்றை அவள்பால் கூற எண்ணுகின்றனன்’ என்பதை உணர்த்திற்று; ஆனல், அவன் வாயினின்றும் சொற்கள் வெளிப் பட்டில; என்றாலும், அவன் உள்ளத்தில் யாதோ ஒரு குறை உளது. அக்குறையினை அவள்பால் கூறி, அவள் துணை பெற்று, அதைப் போக்கிக் கொள்ளத் துடிக்கிறது அவன் உள்ளம் என்பதை, அவன் தோற்ற மும், அவன் நிற்கும் நிலையும், அவன் முகக்குறிப்பும் நன்கு உணர்த்தின.

ஆயினும், அவன், அவள்பால் யாதொன்றும் உரைக்காமலே, சிறிது நாழிகை அவளையே பார்த் திருந்துவிட்டு, அவ்விடத்தின் நீங்கிச் சென்றுவிட்டான்; இக்காட்சியைத், தோழி, கடந்த சிலநாட்களாகவே கண்டு வந்தாள்.

இடைவழியில் அவ்விளைஞனையும், அவன் நிலையை யும் சில நாட்களாகவே கண்டு வந்த தோழி, ஈண்டுப்

பரண்மேல் நிற்கும் அப்பெண்ணை நோக்கினாள்; அவள் இயல்பிலும் மாறுதல் இருக்கக் கண்டாள்; கையில் கவணேந்தி நிற்கும் அவள், கிளிகள் புனத்தில் படிந்து, தினைக் கதிர்களைக் கொய்து கொண்டு போகவும், அவற்றை ஓட்ட எண்ணாது, தன் கடமை மறந்து கருத்திழந்து நிற்கும் நிலையினைக் கண்டாள்.

சின்னாட்களாகவே, அவள் போக்கில் புதுமை புகுந்துளதைக் கண்டு வந்தாள்; அவள் கூந்தல் இதுவரை இல்லாப் புதுமணம் பெற்றுளது; கண்கள் பிள்ளைப் பருவத்துக் கள்ளமற்றப் பார்வையை இழந்து, புத்தொளி வீசத் தொடங்கி உள்ளன; மண்வீடு கட்டியும் மணற்சோறு ஆக்கியும் மகிழ்ந்தாடும் ஆடல்களை வெறுக்கிறாள்; உண்ணும் உணவினும் உள்ளம் செல்லவில்லை; எச்செயலையும் தோழி அறியச் செய்துவந்தவள், இப்போது, தான் செய்யும் செயலைத் தோழி அறியாதவாறு செய்வதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளாள்; பண்டுபோல், யாண்டும் ஓடி ஆடித் திரியாது ஓரிடத்தே அடங்கி யிருத்தலை விரும்புகிறாள்; முன்னெல்லாம் செவிலியின் மடியிற் கிடந்து உறங்கியவள், இப்போது உறங்கத் தனியிடம் நாடிச் செல்லுகிறாள். இதையும் உணர்ந்து வந்தாள் தோழி.

"வில்லேந்தி வேட்டைக்கு வந்து, வழியில் தன்னைக் கண்டு, தன்னிலை மறந்து சென்ற அவ்விளைஞன் செயலுக்கும், கவண் கைக்கொண்டு கிளியோட்ட வந்து, கிளிகள் தினை உண்ணக் கண்டும், அவற்றைத் துரத்தும் கருத்திலளாய் நிற்கும் இவள் செயலுக்கும் யாதோ ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்! வேட்டையாடும் வேட்கை அவனுக்கும் இல்லை; தினைப்புனக் காவல் இவளுக்கும் கருத்தன்று; இருவர் உள்ளத்தும் மறைந்து உறைவது ஒன்று உண்டு!

"இருவர் செயலையும், இருவர் நிலையையும் உற்று நோக்கின், ஒருவரை யொருவர் கண்டு காதலித்துள்ளனர்; தம் காதல் உறவிற்கு என் துணை இன்றியமையாதது என்பதை உணர்ந்து, அதைப் பெறத் துடிக்கின்றான் அவ்விளைஞன்; ஆனால், இவளோ இக்காதல் உறவினை யான் அறியேன் என எண்ணுகிறாள்; அது மட்டுமன்று; அதை என்பால் உணர்த்தவும் நாணுகிறது அவள் பெண்ணுள்ளம். அவள் நிலை அதுவாயினும், அவள் உயிர்த் தோழியாய நான், என்கடமையில் தவறாது நின்று இவளைக் காத்தல் வேண்டும்" எனத் துணிந்த தோழியின் உள்ளம் மேலும் சிந்திக்கத் தொடங்கிற்று.

"இவளோ உலகறியாச் சிறுபெண்; எதையும் தனித்திருந்து துணியும் தகுதியிலாதவள்; ஆயினும் அவள் பெண்மையும், பருவமும் அவளுக்கோர் காதலனைத் தேடித் தந்துவிட்டன; அவள் காதலும் தக்க இடத்திலேயே சென்றுளது; அவ்விளைஞன் தோற்றமும், அவன் பழகும் பண்பும், இவளுக்கு ஏற்றவனே என்பதை உணர்த்துகின்றன. ஆயினும் அக்காதல் வாழ்வினை, அவர்கள் தாமாகவே வளர்த்துக் கோடல் இயலாது; அதற்கு என் துணையும் வேண்டும். மேலும், அதற்குத் துணை புரிவது, அவள் உயிர்த் தோழியாய என் கடமையுமாகும். ஆகவே, அவள் வழியாக அவனையும், அவன்பால் இவளுக்குக் காதல் ஏற்பட்ட வரலாற்றினையும் அறிந்து துணை புரிதல் வேண்டும். ஆனால், அவற்றை அவள்பால் அறிந்துகோடல் அத்துணை எளிதன்று; அவள் அதைத் தானாகவே உரைக்க முன் வராள்; தன் காதல் ஒழுக்கத்தினைப் பிறர்பால் உரைக்க எந்தப் பெண்ணும் நாணுவள்; மேலும் இவளோ, நாணம், மடம், முதலாம் பெண்மைக் குணங்

களைக் குறைவறப் பெற்றவள்; நான் அவள் உயிர்த் தோழியேயாயினும், அவள் அதை என்பால் வலிந்து வந்து உரையாள், அவள் அவன்பால் கொண்டுள்ள உறவினை யானும் அறிந்துள்ளேன் என்பதை அறியின், பின்னர் ஒருவாறு நாணம் தெளிந்து, அது நிகழ்ந்த வகையினை உரைப்பள்; ஆகவே அவர் உறவு எனக்குத் தெரியும் என்பதை எவ்வாறாயினும் அவளுக்கு அறிவித்துவிடல் வேண்டும்; ஆயினும், அதை வெளிப்படையாகக் கூறல் பண்பு ஆகாது; ஆகவே, குறிப்பினாலேயே உணர்த்தல் வேண்டும்; மேலும், தன் காதல் ஒழுக்கத்தினைத் தன் உயிர்த்தோழியாய என்னிடமே மறைக்கும் அவளுக்கு யானும் ஒரு சிறு வேடிக்கை காட்டுதல் வேண்டும். கருதிய பயன் இரண்டும் விளையுமாறு நடந்துகொள்வேன்'' என முடிவு செய்து கொண்டாள்.

பரண்மீது ஏறி அப் பெண்ணின் அருகில் அமர்ந்தாள்; காதற் சிறப்பால் கவின்பெற்று விளங்கும் அவள் கண்களையும், நெற்றியையும் கண்டு மகிழ்ந்தாள். "நின் அழகு முன்னினும் மிக்குத் தோன்றுகிறது; அதற்கு நின் காதல் ஒழுக்கமே காரணமாம்'' என்பதைக் குறிப்பால் உணர்த்துவாள் போல், "நீர் நிறைந்த குளத்தில் அன்று அலர்ந்த நீல மலர்போல் தோன்று கின்றன நின் கண்கள்; நறுமணம் நாறுகிறது நின் நெற்றி'' என அவற்றைப் பாராட்டினாள்.

தோழியின் தோற்றுவாயே அப் பெண்ணின் உள்ளத்தை ஒருவாறு அசைத்துவிட்டது, இவ்வாறு அவள் அழகைப் பாராட்டிய தோழி, அவளை நோக்கி, "அன்புடையாய்! சில நாட்களாகவே நின்பால் ஒரு செய்தி கூறவேண்டும் எனும் எண்ணம் உடையேன்;

அதை இன்று கூறுகின்றேன் கேள்" எனத் தொடங்கிப் பின் வருமாறு கூறினாள் :

"ஓர் இளைஞன், நல்ல அழகுடைய ஆண்டகை, தலையில் மாலையும், கையில் வில்லும் உடையனாய் நம் தினைப்புனம் நோக்கி வருகிறான்; அவனைப் பார்த்தால் காட்டு விலங்குகளை வேட்டையாட வந்தவன்போல் தோன்றுகிறது; ஆனால் அவன் செயலை ஊன்றி நோக்கினால், அவ்வாறு கொள்வதற்கில்லை. நாள்தோறும் நான் வரும்வழியில் என்னையே எதிர்நோக்கி யிருப்பான் போல் நிற்பன்; நான் ஆங்கு வந்ததும் என்னையே உற்று நோக்குவன்; அவ்வாறு அவன் என்னைப் பார்க்கும் பார்வை என்பால் எதையோ பெறவேண்டும் என்ற வேட்கையுடையன் என்பதை உணர்த்தும், ஆனால், அவனோ, அதைக் குறிப்பால் உணர்த்துவதல்லது வாய்திறந்து கூறுவதிலன். இவ்வாறு சில நாழிகை இருந்துவிட்டு, வறிதே சென்று விடுவன்; இது ஒருநாள் மட்டும் நிகழ்ந்தது அன்று; பல நாளாக நடைபெறுகிறது. அவனை யான் இதற்குமுன் பார்த்ததும் இல்லை. ஆயினும், அவன்பால் எனக்கும் அன்பு உண்டாகிவிட்டது; அவன் துயர்நிலை என்னையும் துன்புறுத்திற்று; அதனால் துயிலும் கொள்ளமாட்டாது துயர்உற்றேன் யானும். அவனோ, தன் குறையினை வாய் திறந்து கூறமாட்டேன் என்கிறான்; 'நின்நிலை கண்டு யானும் வருந்துகிறேன் எனக்கூறுதல் நம் பெண்மைக்கு ஏலாது. ஆதலின், யானும், என் அன்பை அவன்பால் காட்டினேனல்லன். ஆனால், எனக்கு அவன் பால் அன்பு உண்டு என்பதை அறியாமையால், அவன் இறந்து விடுதலும் கூடும் என்று அஞ்சினேன். மேலும், அவன்பால் யான் கொண்ட அன்பு தோள்மெலிந்து போமாறு கவலையை அளித்து என்னையும் வாட்டி வருத்

திற்று; அதனால், இந்நிலை மேலும் நீடிப்பின், இருவர்க்கும் கேடாம் என்பதை உணர்ந்தேன். அவ்வுணர்ச்சி என் பெண்மையை வென்றது; நாணை மறந்தேன்; அதனால், துணிந்து ஒன்று செய்துவிட்டேன்; ஒருநாள் நம் தினைப்புனத்தை அடுத்து அமைத்திருந்த ஊசலில் அமர்ந்து ஆடிக்கொண்டிருந்தேன்; அப்போது, அவ்விளைஞன் ஆங்கு வந்தான்; வந்த அவனை 'ஐய இவ்வூசலைச் சிறிது ஆட்டுக' என்றேன்; அதை எதிர்நோக்கியிருந்தவன்போல் அவன், "தையால்! நீ விரும்பியவாறே விரைந்து ஆட்டுவேன்' எனக் கூறிக்கொண்டேவந்து ஆட்டத் தொடங்கினன். அவ்வாறு அவன் ஆட்ட. ஆடிக்கொண்டிருந்த நான், திடுமெனக் கைநழுவி வீழ்வாளைப்போல் அவன்மீது வீழ்ந்துவிட்டேன்; (உண்மையில் கைநழுவவில்லை; பொய்யாக நடித்தேன்) ஆனல், (அது நடிப்பு என்பதை உணராத) அவன், என்னை விரைந்து தூக்கித் தன் மார்பில் அணைத்துக் கொண்டான்; அந்நிலையில் இன்பங்கண்ட நான், கண்விழித்துக் கொள்ளின், பண்பாடுமிக்க பெருந்தகையாய அவன், என்னை விடுத்து, வீடு செல்க எனக் கூறிப் போக விடுவன் என்ற அச்சத்தால், மெய்ம்மறந்து கிடப்பேன்போல் நெடிது கிடந்தேன்; என்னே என் செயல்!" என்று கூறினாள்.

அவ்வாறு கூறுவாள் வறிதே கூறினளல்லள்; கூறிக்கொண்டே, தான் கூறக்கூற, அதைக் கேட்கும் அப்பெண்ணின் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி அலைகளை, அவள் முகக்குறிப்பால் கண்டுகொண்டே வந்தாள்; இளைஞன் வருவதையும், அவன்பால்தான் அன்பு கொண்டதையும் கூறியக்கால், 'இப்புனம்நோக்கி வருபவன் நம் காதலன் ஒருவனேயன்றோ? அவனை இவள் கண்டு விட்டனளே!' என்ற நினைவால் அச்சம்

கொண்டாள்; 'அவ்விளைஞன் என்பால் கொண்ட அன்பு காரணமாக வருவதை அறியாமல், இவள், அவன்பால் அன்புகாட்டத் தொடங்கி விட்டனளே! என்னே இவள் அறியாமை!' என்ற எண்ணத்தால், அவள்பால் இரக்கம் கொண்டாள்; 'என்னைப் பெறப் பேராவல் காட்டித் துடிக்கும் அவ்விளைஞன், அதற்குத் துணை செய்யவல்ல என் தோழியிடத்தும் தன் குறைகூற நாணுகின்றனனே; என்னே அவன் பெருமை' என்ற எண்ணத்தால் பெருமிதம் கொண்டாள்; ஆனால், அவ்வுணர்வு உடனே மாய்ந்துவிட்டது. 'அவன்பால் யானும் அன்புகொண்டு விட்டேன்' எனத் தோழி உரைப்பக் கேட்டு, 'இவ்வாறும் ஆமோ! அவளும் என்னைப்போல் ஒரு பெண்; அவளுக்கும் காதல் உள்ளம் உண்டு; அதனால், அவள் காதல் கொள்வதில் வியப்பில்லை; ஆனால், என் காதலனை அன்றோ அவளும் காதலிக்கத் தொடங்கிவிட்டாள்; என்னே இந்நிலை' என்று எண்ணினாள்: அச்சம், அவளை மீண்டும் பற்றிக்கொண்டது. ஆனால் அது நெடிது நிற்கவில்லை. தோழி கூறிய ஊசல் நிகழ்ச்சியால் அவ்வச்சநிலை மாறிவிட்டது.' என் தோழி, என்னைப்போன்றே, பெண்மைக் குணங்களைப் பெருகக் கொண்டவள்; அவள், தன் பெண்மைவிட்டு, முன்பின் அறியாத ஓர் ஆண்மகன்பால் அவ்வாறு நடந்து கொள்ளாள்; இளைஞன் ஒருவன் வந்து தன்னைக் கண்டு செல்வதைக் கூறியவரை உண்மையே உரைத்தவள், ஊசல் நிகழ்ச்சியை வேண்டுமென்று, தானே படைத்துக் கூறியுள்ளாள்; அது அவள் கட்டிவிட்ட கதையே அன்றி, உண்மை அன்று. என் களவு ஒழுக்கத்தினை அவள் உணர்ந்துவிட்டாள்; அதை அவள்பால் நான் உரைத்திலேன் என்றதால் விளைந்த சிறுவிளையாட்டே இது' என்ற தெளிவு அவ்வச்சத்தைப் போக்கிவிட்டு

அமைதியைத் தந்தது; அதனால், என் காதல் ஒழுக்கத்தினை நான் கூறாமலே அறிந்து கொண்டனையே! என்னே நின் அறிவு! என்னே என் நல்வினை!' என்ற அவள் எண்ணத்தை உணர்த்தவல்ல, வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே கொண்ட சிறு புன்முறுவல் அவள் கடைவாயில் காட்சி யளித்தது.

இவ்வாறு, தான் கூறிய கூற்றின் வழியே, அப் பெண்ணின் காதல் ஒழுக்கத்தினை உறுதியாகக்கொண் டாள் தோழி; தோழி கூறிய அக்கூற்றையே துணை யாகக்கொண்டு, தன் காதல் ஒழுக்கத்தினை அவள் உணர்ந்து கொண்டாள் என அறிந்து மகிழ்ந்தாள் அப் பெண். பெண்ணுள்ளத்தின் பெருமைதான் என்னே!

தோழி கூறிய ஊசல் நிகழ்ச்சி பொய்யேயாயினும், அது, அப்பெண்ணின் உள்ளத்தை உணரத் துணை புரிந்தது ஆதலின் அப்பொய் பழிக்கப் பெறாது, பொருட் செறிவுடையது எனப்போற்றப் படுவதாயிற்று. புரை தீர்ந்த நன்மை பயக்கும் என்றால், பொய்மையும் வாய்மை யிடத்த என்றன்றோ கூறியுள்ளார் வள்ளுவப் பெருந் தகையார். குறிஞ்சி நிலத்துப் பழந்தமிழ்ப் பெண்களின் உள்ளப் பெருமையை உணர்த்தும் அந்தப்பாட்டு இது:

**கயமலர் உண்கண்ணாய்! காணாய்; ஒருவன்**
**வயமான் அடித்தேர்வான் போலத், தொடைமாண்ட**
**கண்ணியன், வில்லன் வரும்; என்னை நோக்குபு,**
**முன்னத்திற் காட்டுதல் அல்லது, தான் உற்ற**
**நோய் உரைக்கல்லான், பெயரும்மன் பன்னாளும்;**

**பாயல்பெறேன், படர்கூர்ந்து, அவன்வயின்**
**சேயேன்மன் யானும் துயர் உழப்பேன்; ஆயிடைக்**
**கண்நின்று கூறுதல் ஆற்றான் அவனாயின்;**

பெண்அன்று உரைத்தல் நமக்காயின் ; இன்னதூஉம்
காணுன், கழிதலும் உண்டு என்று, ஒருநாள் என்
தோள் நெகிழ்புற்ற துயரால் துணிதந்துஓர்
நாண்இன்மை செய்தேன் ; நறுநுதால் ! ஏனல்
இனக்கிளி யாம் கடிந்து ஓம்பும் புனத்துஅயல்
ஊசல் ஊர்ந்துஆட, ஒருஞான்று வந்தானை
'ஐய ! சிறிது என்னை ஊக்கி' எனக்கூறத்,
'தையால் ! நன்று' என்று அவன் ஊக்க, கைநெகிழ்பு,
பொய்யாகவீழ்ந்தேன் அவன்மார்பில் ; வாயாச்செத்து,
ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல் ;
மெய்யறியா தேன்போல் கிடந்தேன்மன் ; ஆயிடை
மெய்யறிந்து ஏற்றெழுவேனுயின், ஒய்யென
'ஒண்குழாய் ! செல்க , எனக்கூறி விடும்பண்பின்
அங்கண் உடையன் அவன்.''

தலைவியின் இயல்பிலும் செயலிலும் புதுமைகண்ட தோழி, அவள் இயற்கைப் புணர்ச்சிப் பெற்றுளாள் என்பதை உணர்ந்து, அவள் அதைத் தன்னை மறைத்தும் பயன் இல்லை ; அது தனக்கும் தெரியும் என்பதை மெய்யும் பொய்யும் கலந்த சொற்களால், அவளோடு சொல்லாடி அறிவித்தல் என்றதுறையமைய வந்துளது இச் செய்யுள்.

*1. கயம்-குளம் ; 2. வயம்-வலிமை ; தொடை மாண்ட : மாண்புறத் தொடுக்கப்பெற்ற ; 3. நோக்குபு-நோக்கி ; 4. முன்னம்–குறிப்பு ; 5. உரைக்கல்லான் ; உரையான் ; 6. படர்-துன்பம் ; 10. கழிதல்-இறத்தல் ; 12. ஏனல்-தினைப்புனம் ; 14. ஒருஞான்று-ஒருநாள் ; 15. ஊக்கி-ஆட்டு ; 16. நெகிழ்பு-நழுவி ; 17. வாய்-உண்மை ; செத்து-கருதி ; வாயாச்செத்து-உண்மையாகக் கருதி. 18. ஒய்யென-விரைவாக ; 20. ஏற்று-மயக்கம்தெளிந்து ; அங்கண்-அருள் அல்லது நாகரிகம்.*

## 2

# 'நன்மலை நாட! கேள்'

மலைச்சாரலைச் சார்ந்த ஒரு சிற்றூர்; அச்சிற்றூரில் உள்ள வீடுகள் பலவற்றுள்ளும் சிறந்து விளங்கிய ஒரு வீட்டைச் சுற்றி அமைந்துள்ளது ஒரு வேலி. அவ் வேலியின் ஒருபால் நின்றுகொண்டுள்ளாள் ஒரு பெண். அவள், அவ்வீட்டிற்குரியவளாகிய ஒரு பெண்ணின் உயிர்த்தோழி. அவள் யாரையோ எதிர்நோக்கி ஆங்கு நின்றுகொண்டுள்ளாள்; அந்நிலையில் ஆண்டு வந்து சேர்ந்தான் அழகிய ஓர் இளைஞன்.

அவன் அந்த வீட்டில் வாழும் பெண்ணின்பால் பேரன்புடையவன்; அவள் ஊரை அடுத்துள்ள ஊரில் வாழ்பவன்: அவள் தினைப்புனத்தில் காவல் புரிந் திருந்தபோது, கண்டு காதல் கொண்டவன். அக்காதல் ஒழுக்கம் தோழி ஒருத்திக்கே தெரியும்; பெண்ணைப் பெற்றோர், அதை அறியார்; அவள் ஆண்டுக்காவல் புரிந்திருக்குங்கால், நாள்தோறும் தவறாது வந்து, சிறிதுநேரம் அளவளாவிச் சென்று வந்தான். அந்நல்

வாய்ப்பு நெடிது நாள் நிற்கவில்லை. கொல்லையில் தினைக் கதிர்கள் முற்றிவிட்டமையால், பெற்ருேர், தம் பெண்ணை வீட்டிற்குக் கொண்டு சென்றுவிட்டனர். தினைப்புனத் தில் இருக்குங்கால், அவளை எளிதிற் கண்டு மகிழ்ந்தது போல், இப்போது கண்டு மகிழ்தல் இயலாது போயிற்று. அதனல் அவளைக் காண விரும்பும் அவன், அவள் பெற்ருேர் அறியாவாறு இரவில் வந்து, தோழியின் துணையால் அவளைக் கண்டு மகிழ்ந்து செல்லத் தொடங்கினன்.

அந்தப் பெண், அவன்மீது பேரன்பு கொண்டிருந் தாள்; அவனை ஒரு சிறிது பிரியினும் பெருந்துயர் கொள்வள்; ஒருநாள் காணுளாயினும் அவள் கவலைமிகும்; அதனல் அவள் உடல் தளரும்; வளைகழலத் தொடங்கி விடும்; அத்தளர்ச்சி, அயலார்க்கு அவள் ஒழுக்கத்தின் பால் ஐயம் கொள்ளச் செய்யும் தூண்டுகோலாம்; பலர் பலவாறு உரைக்கத் தொடங்கி விடுவர். அவர் அலர் உரையால் உண்டாம் துன்பம், அவனைக் காணுமையா லாகும் துயரினும் பெரிதாம். அதனல், அவன் தவருது வருதலை, நாள்தோறும் ஆர்வத்தோடு எதிர்நோக்கி யிருப்பாள்; ஆனல் அவ்வாறு அவன் வருகையை நாள் தோறும் விரும்பி நிற்கும் அவள், அவன் வரும் வழியை யும், அவ்வழியில் அவன் வரும் காலத்தையும் எண்ணி விடினே, அவன் வாராமை கண்டு வருந்துவதினும் பெரிதும் வருந்துவள்; அந்நிலையில், அவன் வாராமையே நன்று என்றும் எண்ணும் அவள் உள்ளம்.

அவன், அவளூருக்கு வரவேண்டின், இடைவழியில் காடுகளையும், மலைகளையும் கடந்தே வருதல் வேண்டும். பகலில் வந்து பயனில்லை ஆதலின், இரவிலேயே வருதல் வேண்டும். அவ்வழியோ, இரவில் வருவதற்கு மிகக் கொடுமை உடையது; காட்டு விலங்குகளும், மலை'

பாம்புகளும் மண்டிக் கிடக்கும்; காட்டாறுகள் குறுக்கிடும்; வழியில் வாழும் கானவர், கொலைத் தொழில் நாணுக் கொடியவர். இவற்ருல், வழியில் அவனுக்கு ஏதம் உண்டாதலும் கூடும். அந்த நினைப்பு அவளைப் பெருந்துயர்க்கு உள்ளாக்கும்.

இவ்வாறு, அவன் வாராதபோது, அவனைக் காணுமையாலும், வரின், அவன் வரும் வழியின் கொடுமையை நினைப்பதாலும் அவள் வருந்துவள். ஆனல் அவ்வருத்தமெல்லாம் அவனைக் கண்டவுடனே, பகலைக் கண்ட இருளே போல் பறந்தோடிவிடும்; ஆனல், அவன் அவளைப் பிரிந்தவுடனே, ஒளிமங்கிய அந்நிலையே விரைந்து வந்து சேரும் இருளேபோல், பிரிவுத்துயரம் அவளைப் பற்றிக் கொள்ளும். ஆனல், அப் பெண்ணின் இத்துயர்நிலை எதையும் அவன் அறியான்.

அவன் வந்தக்கால், அவனைக் கண்டதால் உண்டாய மகிழ்ச்சி மிகுதியால் தன் துயரை மறந்து விடுவளாதலின், அவள் தன் துயரை அவன்பால் உரைப்பதிலள் ஆதலாலும், அவன் வருகையால் அவள் கவலை அகல, அவள் உடல் தளர்ச்சி நீங்கிக் கவின் பெற்றுவிடுமாதலின், அவள் உடல் தளர்ச்சியினைக் காணும் வாய்ப்பு அவனுக்கு வாய்த்திலதாதலாலும், அவன், அவள் துயர் அறியாஞயினன். அதனல், அவன் இவ்வாறு களவில் வந்து அளவளாவிச் செல்வதையே விரும்பினன்.

ஆனல், தோழியின் நிலையோ அத்தகையதன்று; அப் பெண்ணின் துயர்க்கொடுமையினை உடனிருந்து காண்பவள் அவள். அதனல், இவ்வாறு துயருறுவதை அப்பெண் மேலும் பொருள்; இந்நிலை நீடிப்பின் அவள் இறந்து படுதலும் கூடும் என அஞ்சினள்;

ஆகவே, அதற்கு ஒரு வழி காணவேண்டும்; அவன் அவளை என்றும் பிரியாதிருத்தல் வேண்டும். அதைப் பெற்றோர் அறியாவாறு மேற்கொள்ளுதல் இயலாது. ஆகவே அவன் அவளை விரைவில் மணம் செய்து கொள்ளுதல் வேண்டும்; அதற்காம் வழிவகைகளை மேற்கொள்வது தன் கடன் எனத் துணிந்தாள். அவ்வாறு துணிந்த அவள், அப் பெண்ணின் துயர் நிலையினை எடுத்துக் கூறி, மணத்திற்காம் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அவனைத் தூண்டவே, அவள் ஆங்கு நின்றுகொண்டிருந்தாள்.

வழக்கம் போலவே வந்து, காதலியைக் கண்டு அளவளாவி மகிழ்ந்து மீள்வான். தோழியை ஆங்குக் கண்டான்; அவள் பால் சென்றான்; வந்து தன்முன் நிற்கும் அவனை, 'அன்ப! என் தோழி நின் துணைவி, இப்போது எவ்வாறு உள்ளாள்; அவள் நிலையில் யாதேனும் குறையிருப்பக் கண்டனையோ?'' என வினவினாள். அவன் அவள்பால் யாதொரு குறையையும் கண்டிலன்; மாறாக அவனைக் கண்ட மகிழ்ச்சி, அவள் மனதில் நிறைந்து நிற்பதால் அவள் மிக்க தோற்றப் பொலிவோடு தோன்றுவதையே கண்டு வந்தான். ஆதலின், "அவள் நிலை நனிமிக நன்று; 'பருவமழை பொய்யாது பெய்யப் பெற்ற பயிரே போலவும், தன்பால் வந்து இரப்பார்க்கு இல்லை யென்னாது வழங்கும் அருள் உள்ளம் உடையான்பால், குறைவுறாது மண்டிக் கிடக்கும் செல்வத்தைப் போலவும், ஒரு தொழிலைத் தொடங்குவதன் முன்னர், அதைக் குறைவற முடிக்க வல்ல வழிவகைகளைப் பலகாலும் ஆராய்ந்து அறிந்து, அதற்கு வேண்டும் கருவிகளோடு தொடங்கி முடிக்கும் திண்ணிய உள்ளம் உடையான்பால், அவன் எண்ணிய எண்ணியாங்கே சென்று சேரும் செல்வம்' போலவும் சிறந்து

விளங்குகின்றாள் அவள்; அவளுக்கு யாதொரு குறையும் இல்லை" என்றான்.

அது கேட்ட தோழி, "ஐய! நீ அப்பெண்ணின்பால் கண்ட காட்சி, நீ காணும்போது அத்தகையதே என்பதை யானும் அறிவேன்; ஆனால் அவள் எப்போதும் அந் நிலையினள் அல்லள்; அவள் உன்னைக் காணாதபோது அவளிருக்கும் நிலையினையும் கூறுகிறேன்; கேள். 'நீர் குறைவறப் பெற்ற நிலங்களை மட்டுமே கண்டவன் நீ; நீர் பெறாது வாடிய நிலத்தினை நீ கண்டிருக்க மாட்டாய்; அந்நிலம், எவ்வாறு அழகும் ஆக்கமும் கெட்டுக் கிடக்குமோ அதைப் போலவும், செல்வ வாழ்வில் சிறந்து விளங்குபவன் நீ ஆதலின், கையில் காசு இல்லாமல் கண்ணீர்விடும் இளைஞனின் கொடுமையினை அறிந்திருக்க மாட்டாய்; காசு இல்லாமையால் இன்பம் தராது கொன்னே கழியும் அவன் இளமையைப் போலவும், நிறை பொருளுடைமையால் நல்லறம் பல செய்து பழகிய நீ, அறம் செய்யாதான் ஒருவனையும், அறம் செய்யாமை யால், அவன் வாழ்நாள் பயனின்றிக் கழிவதையும், அவ் வாறு பயனின்றியே தன் வாழ்நாளைக் கழித்துவிட்டு முதுமை எய்திய ஒருவனையும், அந்நிலையில், அறம் செய்திலமே என்ற நினைவால் அவன் வருந்தும் நிலையினை யும் அறியாய்; பிறந்ததன் பயனைப் பெறாதே வந்துற்ற அவன் முதுமை போலவும் அழகும் ஆக்கமும் இழந்து காட்சி தருகிறாள் நின் காதலி'.

ஆனால், நீ வரக்கண்டவுடனே, அவள் அவ்வழிவுக் காட்சிகள் மறைய அழகுபெற்று விடுகிறாளாதலின், அவள் தளர்நிலையினை நீ கண்டிலை. ஆனால், அவளுட னிருந்து பழகும் எனக்கன்றோ தெரியும், அவள், நின் னைப்பெறாமையாலும், நீ வரும் வழியின் ஏதங்கண்டஞ்சு வதாலும் எத்துணைத் துயர் உறுகிறாள் என்பது. அவளை

இந்நிலையில் நெடுநாள் வைத்திருத்தல் ஆகாது; துயர் மிகுதியால், அவள் இறந்துபடுதலும் கூடும். அதுமட்டு மன்று, நீ வாராக்கால் வருந்தி, வந்தக்கால் மகிழ்ந்து கிடப்பதால், அவள் உடல்நிலை, தளர்வதையும் வளர் வதையும் மாறிமாறிக் கொள்கிறது. அது கண்டு அண்டை அயலில் உள்ளவர் கூறும் பழிச்சொற்களைக் கேட்கவும் பொறுக்கவில்லை. ஆகவே, அவள் தளர்ச்சி ஒழியவும், அவள் அழகு அழியாது நிலைக்கவும், அயலார் கூறும் அலர்உரை கெடவும் வழி செய்ய வேண்டுவது நின்கடன். அதற்கு வழி, அவளை வரைந்துகொண்டு பிரிவறியாப் பெருவாழ்வு பெறுதலல்லது பிறிது இல்லை. ஆகவே, இக்களவொழுக்கத்தைக் கைவிட்டுக் கடிமணம் புரிந்து கொள்வாயாக; அல்லது, அதற்கு வேறு வழி உண்டேல், அதை உரைத்துச்செல்வாயாக'' என்ருள்.

அவள் கூறிய சொற்கள், தன் களவொழுக்க இன் பத்திற்கு ஊறுவிளைவிப்பதறிந்து, இளைஞன் உள்ளம் சிறிதே கலங்கிற்று; அதைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட தோழி, மீண்டும் அவனை நோக்கி, "ஐய! நீங்கள் இருவரும் நிலைத்த இன்பம் பெற்று நெடிது வாழ வழிசெய்யும் என்சொல், இப்போது நீபெறுகின்ற இக்கள வொழுக்க இன்பத்திற்குத் தடையாக இருப்பதால், நினக்குத் துன்பம்தரும் சொல்லாகத்தோன்றும்; நல் லோர் கூறும் அறிவுரை, இன்பமே பயக்கும் என்பதை எவரும் முதலில் உணர்வதில்லை. அவ்விதிக்கு நீ மட் டும் விலக்காகுவைகொல்? மேலும் நின் நாட்டு இயற் கைப் பொருள்களின் இயல்பு நின்மாட்டும் காணப்பெறு வதில் வியப்பில்லையன்றே? நிறையப் பூத்து நிற்பதால் புலிபோலத் தோன்றும், நறுமணம் நாறும் வேங்கை மரத்தைக் கொடுமை செய்யும் புலியெனப் பிறழக்கருதிச் சினம்கொண்டு, அதன் அடியைக்குத்தி, அவ்வாறு

குத்தியதால் ஆழப் புதைந்துபோன தன் கோடுகளைப் பிடுங்கமாட்டாது, இமையத்தையே வில்லாக வளைத் தோனும், கங்கை பாய்வதால் ஈரம் பொருந்திய சடை உடையோனுமாய சிவன், உமையோடு கூடியிருந்த கைலை மலையைக் கையால் பெயர்த்தெடுக்கக் கருதித் தொடி விளங்கும் தன் கையை அம்மலைக்கீழ் நுழைத்துப்பின்னர் அக்கையை எடுக்க மாட்டாது வருந்திய இராவணனைப் போல், மலைப்பிளப்புக்களெல்லாம் எதிரொலிக்குமாறு பெருங்குரலெடுத்துக் கூவிக்கூவி அரற்றும் யானை களை நிறையக் கொண்டதன்றோ நின்நாடு. இனிய வேங் கையைக் கொடிய புலியெனக் கருதும் நின் நாட்டு யானை யின் குணம், நின்பால் இருப்பதாலன்றோ, நிறைந்த இன்பம்தரும் மணத்தினை மேற்கொள்க என யான் கூறு வதைக் கொடுமை உரைப்பதாகக் கருதித் துயர் உறு கின்றனை" என்றனள்.

தோழி கூறுவதில் உண்மையிருப்பக்கண்ட அவ் விளைஞன் மணத்திற்கு இசைந்தான். "நல்ல நாளில் அவளை மணந்துகொள்வேன்; அதற்காம் முயற்சியினை இன்னேமேற்கொள்வேன்; இனிக்கவலை ஒழிக" என உறுதி கூறிச் சென்றான். அவன் உரை கேட்டாள் தோழி; மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டது; ஓடினாள் அப்பெண்ணிடம்; "நின் காதலன், உங்கள் மணவினைக் காம் முயற்சியினை மேற்கொண்டு விட்டான். அதற்கேற்ற நன்னாளை எதிர்நோக்கி நிற்கிறான்; வேங்கை மலரும் நாள் நன்னாள் என, நம்மவர் கருதுவர்; ஆகவே, அவன் அவ்வேங்கை மலரும் நாளை எதிர்நோக்கியுள்ளான்" என்று கூறி, அது கேட்டு அவள் மகிழ்வது கண்டு, தானும் மகிழ்ந்து மன அமைதிபெற்றாள். வாழ்க அத்தோழி!

*அத்தோழி நல்லாளை நமக்கு அறிமுகம் ஆக்கும் செய்யுள் இதோ:—*

" இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனுக,
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்,
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல

உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண்டு அதன்முதல் குத்திய மதயானை,
நீடிரு விடரகம் சிலம்பக் கூய்த் தன்
கோடு புய்க்கல்லாது உழக்கும் நாட ! கேள் :
ஆரிடை என்னுய் நீ, அரவு அஞ்சாய் வந்தக்கால்

நீர் அற்ற புலமேபோல் புல்லென்றாள், வைகறை
கார்பெற்ற புலமேபோல் கவின்பெறும் ; அக்கவின்
தீராமல் காப்பதோர் திறன் உண்டேல் உரைத்தைக்காண் ;
இருளிடை என்ருய் நீ, இரவு அஞ்சாய் வந்தக்கால்,
பொருள் இல்லான் இளமைபோல் புல்லென்றாள், வைகறை

அருள் வல்லான் ஆக்கம்போல் அணிபெறும் ; அவ்வணி,
தெருளாமல் காப்பதோர் திறன்உண்டேல் உரைத்தைக்காண்;
மறம் திருந்தார் என்னுய் நீ மலையிடை வந்தக்கால்,
அறம் சாரான் மூப்பே போல் அழிதக்காள், வைகறை
திறன் சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும் ; அத்திருப்

புறங்கூற்றுத் தீர்ப்பதோர் பொருள் உண்டேல் உரைத்தைக் [காண் ;
என ஆங்கு,
நின் உறுவிழுமம் கூறக்கேட்டு
வருமே தோழி ! நன்மலை நாடன்,
வேங்கை விரிவிடம் நோக்கி,

வீங்குஇறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே "

**இரவுக்குறிவந்து நீங்கும் தலைவனைக் கண்டு, தோழி, தலைவியின் துயர்நிலைகூறி வரைவு கடாவ, அவன் வரைய இசைந்ததைத் தலைவிக்குக்கூறியது என்ற துறையமைய வந்துளது இச்செய்யுள்.**

**உள்ளுறை:** *மலர்ந்து மணம் நாறும் வேங்கையைக் கொடிய புலியெனக்கொண்டது, இல்லறப் பயனோடு கூடிய பேரின்பம் தர வழி செய்யும் வரைவுகடாய கூற்றைக் களவின்கண்பெறும் இன்பத்தை இழக்கச் செய்தல் கருதிக் கொடிதெனக் கருதுதலாம்; யானை, தலைவனும்; அது வேங்கையை அழிக்க எண்ணுதல், தோழியின் வரைவுகடாய கூற்றை மறுக்கத்துணிதலாம்: கோட்டினைப் பிடுங்கமாட்டாது கூவி அழுதல்; அவள் கூற்றைக் கொடுமை உடையதாகக் கருதியதை மாற்றிக் கொள்ள மாட்டாமல், தலைவன் வருந்திக் கூறலாம்.*

*1. வாங்கிய: வளைத்த; 4. தொடி: வீரவளை; 5. உழத்தல்: வருந்துதல்; 6. உறுபுலி: ஊக்கம் மிக்க புலி; 8. நீடு இரு விடரகம்: நீண்ட பெரிய மலையின் பிளவுகள்; சிலம்ப: எதிரொலிக்க; 9. புய்க்கல்லாது: பிடுங்கமாட்டாமல்; 10. புலம்: விளைநிலம்; புல்லென்றாள்: அழகு இழந்தவள்; 13. உரைத்தைக்காண்: கூறு; 17. தெருளாமல்: உணராமல்; (அவ்வழகு தலைவன் வருகையால் வந்தது என உணரா வண்ணம்;) 18. மறம் திருந்தார்: கொலைத் தொழிலைக்குறைவறப்பெற்ற கானவர்; 21. புறங்கூற்று: அயலார்கூறும் அலர்; 26. வீங்கு இறைபணைத்தோள்: பெருத்த முன்கையினை உடைய பெரிய தோள்.*

# 3

# வெற்பனும் வந்தனன்

மலைநாட்டுச் சிற்றூர் ஒன்றில், உயர்ந்த குடியில் பிறந்த ஒரு பெண், மலைச்சாரலின்கண் உள்ள தங்கள் தினைப்புனத்தைக் காத்துவந்தாள். ஒருநாள், தங்கள் புனத்தை அடுத்து ஓடும் காட்டாற்றில் புதுவெள்ளம் வருவது அறிந்து, அதில் ஆடிமகிழத் தன் தோழியரோடும் ஆண்டுச் சென்றாள். சென்று புனலில் பாய்ந்து ஆடிக்கொண்டிருக்குங்கால், அவள் கால்கள் தளர்ந்து போயின; அவள் நடுங்கி விட்டாள்; தாமரை மலர் போல் ஒளிவீசும் அவள் கண்கள் சோர்ந்துவிட்டன; ஆற்று வெள்ளம், அவளைத் தன்னோடே அடித்துக் கொண்டு சென்றது. அப்போது, அவ்வழி வந்த ஓர் இளைஞன், அதைக்கண்டு, ஆற்று நீரில் திடுமெனக் குதித்து, தன் மார்பில் அணிந்துள்ள புன்னைமலர் மாலை அலையுமாறு நீந்திச்சென்று, அவளைப் பற்றித் தன்மார்பு அவள் மார்போடு பொருந்துமாறு அணைத்துக் கொண்டேவந்து, கரைசேர்த்துக் காப்பாற்றினன்.

இவ்வாறு ஒரு சூழ்நிலை வாய்க்கும் என்பதை அப் பெண்ணோ அல்லது அவனோ எதிர் பார்க்கவில்லை. ஆனால், அவ்வாறு ஒரு நிலை வாய்த்து விட்டது. எதிர் பாராது நிகழ்ந்ததேயாயினும், அது அவ்விருவர் உள்ளத்தும் காதல் விதையை தூவிவிட்டது. அன்று முதல், அவன், தினைப்புனத்திற்கு வந்து, அப்பெண் ணோடு சிறிதுநேரம் அளவளாவி மகிழ்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்டு விட்டான். அவர்கள் காதல் வளர்ந்தது. ஆயின் ஆற்று நிகழ்ச்சியையோ, அவர்கள் காதல் ஒழுக்கத்தினையோ, அப்பெண்ணின் பெற்றோர் அறியார்.

சில நாட்களில், பெண்ணைப் பெற்றோர், அவளைத் தம் வீட்டிற்குக் கொண்டு சென்று விட்டனர். அதனால், அவளைக் காண்பதும் அவனுக்கு அறிதாகி விட்டது. ஆகவே, அவன் அவளை மணஞ்செய்து கொள்ள உறுதி பூண்டான். அவ்வாறே, அவன் பெற்றோர், அப் பெண்ணின் பெற்றோர் பால் மணம் பேசவந்தனர். ஆனால் அவள் பெற்றோர் யாது காரணத்தாலோ, அம் மணத்திற்கு இசைய மறுத்துவிட்டனர்.

அதை அறிந்தாள் அப்பெண்ணின் தோழி, பெற்றோர் செயலால் பெரும்பழி நேரும் என உணர்வாள் அவள். அப்பெண் மணந்துகொள்வதாயின், அவ்விளை ஞனையே மணந்து கொள்ளுதல் வேண்டும். அவன் அவளை ஆற்று நீரிலிருந்து காப்பாற்றிய அன்றே, அவனை அவள் கணவனாகக் கொண்டு விட்டாள். ஆகவே அவளை அவனுக்கே மணம் செய்து தரல் வேண்டும். அதற்கு மாறாக, அவனுக்கு மணம்செய்து தர மறுப்பரேல், அவள் உயிர்வாழாள். அதனால், அவள் பெற்றோர் பெருங்கேடுறுவர்; மேலும், தம்மகள் உயிரைக்காத்து அவன் செய்த நன்றியை மறந்த

பாவிகளுமாவர் என அஞ்சினுள். ஆனல், அவளும், அவனும் கொண்ட காதலை அவள் பெற்றோர் அறியார்; அதனலேயே, அவர்கள் மறுத்தனர்; ஆகவே, அவர் மீதும் பழியில்லை என இவ்வாறும் எண்ணிற்று அவள் உள்ளம். ஆகவே, அதை அவர்களுக்கு உணர்த்த உறுதிகொண்டாள்; உடனே, அப்பெண்ணை வளர்த்த வளும், அப்பெண்ணைப் பெற்ற தாயின் உயிர்த் தோழியுமாய தன் தாயிடம் சென்ருள்.

"அம்மா! நம் மலைநாடு, இப்போது வற்ருத வளம் பல பெற்று விளங்குகிறது; ஆனல், இனி அவ்வளம் அற்றுவிடும்; வள்ளிக்கொடி, கிழங்கு விடாது; மலை களில் உள்ள தேன் கூடுகளில் தேன் சேராது; கொல்லையில் நாம் விதைத்த தினை நன்கு கதிர் வாங்காது; காரணம், நம்மலைநாட்டு மக்கள் அறம் பிறழ்ந்து விட்டனர்; பழிதருசெயல் புரியத் தொடங்கி விட்டனர்; 'நிலவளம் அற்றுப்போய்விடின் அது பற்றிக் கவலை இல்லை: வேட்டையாடிப் பிழைத்து விடுவோம்' என்று அவர்கள் கூறலாம்; ஆனல் அதுவும் இயலாது. மலைநாட்டு மகளிர், தம் கணவரையே கடவுளாகக்கொண்டு வணங்கி வழிபடும் கற்பு நெறியில் பிறழாது நிற்பதினலேயே, அவர் கணவன்மாராய கானவர்களும் வேட்டையில் வல்லரா யுள்ளனர்; அவர்கள் எய்யும் அம்பும், குறிதவருது சென்று உயிர்களைக் கொல்கிறது; இனி, அது இய லாது; காரணம், மலைநாட்டு மகளிரின், கற்பு நெறிக்குக் கேடுவந்து விட்டது; அதுவும், அக்கானவர்களால்" என்று பலப்பல கூறினுள் தன் தாயிடம்.

தன் மகள் திடுமெனவந்து, இவ்வாறு ஏதேதோ கூறக்கேட்ட செவிலி, "மகளே! நாட்டில் நடவாதது என்ன நடந்துவிட்டது? கானவர் யாருக்கு என்ன

பிழை புரிந்து விட்டனர்? அவரால் யாருடைய கற்பிற்குக் கேடுவந்து விட்டது? அக்கேடு வந்தவாறு எவ்வாறு? எல்லாவற்றையும் விளங்கக்கூறு." என்றாள். உடனே தோழி, ஆற்று நிகழ்ச்சியை எடுத்துக்கூறி, "அம்மா! நீ வளர்த்த அவள், அவ்விளைஞனையே மணந்துகொள்ளுதல் வேண்டும்; அவள் அவனையே கணவனாகக் கொண்டு விட்டாள்; அவள் பெய்எனச் சொல்லின், மழை பெய்யும்: அவ்வளவு சிறந்த கற்புடையளாகி விட்டாள். ஆனால், அவள் பெற்றோரோ, அவனை அவனுக்குத் தர மறுத்து விட்டனர்: அதனால் அவள் ஆற்றொணாத் துயர் உறுகிறாள்; அவள் துயர் நம் குடியின் ஆக்கத்தை கெடுத்து, அழிவைத் தேடிவந்து தரும்." என்று கூறினாள். அதுகேட்ட செவிலி, "அவ்விளைஞன்யாவன்? அவன் தகுதியாது? நம்மகளை மணந்து கொள்ளத்தக்க மாண்புடையனோ?" எனக் கேட்டாள்.

அதுகேட்ட தோழி "அம்மா! அவன் ஓர் உயர்ந்த குடியில் பிறந்தவன்; அவன் நாடும், வளம் நிறைந்த நாடு. அவன் நாட்டில், தினைப்புனத்துப் பரண்மீது அமர்ந்து காவல் புரியும் மகளிர், தம்மயிர் ஈரம்போகப் புகைக்கும் அகிற்புகை, வானவெளி முழுதும் சென்று பரவ, அப்புகையுள் மூழ்கிய முழுமதியின் ஒளி மழுங்கிய அத்தோற்றத்தோடே, அது மலையுச்சியைச் சென்று அடைய, தம்நாட்டு மலைகள், எண்ணற்ற தேன்கூடு களைக் கொண்டிருப்பதால், எங்கு நோக்கினும் தேன் கூடுகளையே கண்டு பழகிய அவன்நாட்டு மக்கள், அம் மதியையும் தேன்கூடு என்றே கருதி, அதைக்கொணர் வான் வேண்டி மூங்கிலேணி இட முனைவர். அத்துணை வளம் நிறைந்தது அவன்நாடு; மேலும், துன்பத்தில் ஆழ்வார் யாவரேயாயினும், அவர் துயர் துடைத்தல்

மக்களின் தலையாயகடனும் எனக்கருதும் அருள் உள்ளம் உடையவன் அவன். அவ்வளவு சிறந்தானை நாம் எளிதில் பெற்றுவிடல் இயலாது; கிடைத்தற் கரியனாய அவனுக்கு நம் மகளை மணம் செய்துதர மறுத்தல் மதியுடையோர் செயலன்று; மேலும், அஃது அறமும் ஆகாது'' என்றாள்.

அவள் கூறியன கேட்ட செவிலி, தம் பெண்ணின் காதல் உறுதியுடைத்து, அது வாழ, வழிசெய்தலே விழுமிய அறமாம் எனத்தெளிந்து, அவளைப் பெற்ற நற்றாயிடம் சென்று, நடந்ததை நிரலே எடுத்துக் கூறினாள். தன் மகள், காதல் ஒழுக்கத்திலும், கற்பு நெறியிலும் சிறந்து விட்டாள் என்பது கேட்டு மகிழ்ந்த அத்தாய், அதை அப்பெண்ணின் தந்தையும் தமையன் மாரும் சினவாது கேட்டு இசையும் வண்ணம் எடுத் துரைக்கவல்ல வகைகளையும், அதற்கேற்ற காலத்தையும் தேர்ந்து சென்று, அவர் ஏற்குமாறு இனிது எடுத்துக் கூறினாள்.

தாங்கள் எவனுக்குத் தம் மகளை மணம் செய்துதர மறுத்தனரோ, அவனையே, தம் மகள் காதலித் துள்ளாள்; மறுத்து அனுப்பிய அவனைத்தாமே சென்று, வருந்தி அழைத்து வந்து மணம் செய்து அனுப்புதல் வேண்டும் என்பதை அறிந்தவுடனே, அவர் மானம் கெடக் கடுஞ்சினம் பிறந்தது. கண்கள் சிவப்பேறின; பெரிய வில்லும் சிறந்த அம்பும் பெற்றிருந்தும் என்னும்? இவற்றால் நம்மானத் தைக் காத்துக்கொள்ள முடியவில்லையே! இவை யிருந்து என்ன பயன்! என வெறுத்து அவற்றை நோக்கினர்; ஒரு சில நாழிகை, உள்ளம் கொதிப்பேறச் சினத்தால் ஒன்றும் புரியாது உழன்றனர். பின்னர், தம் மகளைப் பெற்ற அருமை, அவள் மாண்பு, அவள் காதற் சிறப்பு,

கற்பின் பெருமை, அவ்விளைஞன் ஆற்றல், அருள், அவன் குடிப் பெருமை, தம் கடமை ஆக இவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக உணர்ந்து, சினம் மாறித், தம் பெண்ணிடத்தோ, அவ்விளைஞனிடத்தோ குற்றம் இல்லை; இது, காலம் செய்த குற்றம் எனத் தெளிந்து, அவளை அவனுக்கே மணம் செய்துதர இசைந்தனர்.

அவர் இசைந்ததறிந்து மகிழ்ந்தாள் தோழி; ஆயினும், அவளும் அவனும் கொள்ளும் திருமணம், விரைவில், மேலும் இடையூறு எதுவும் பெறாமல் இனிது முடிய வேண்டுமே என்று கவலை கொண்டாள்; அதனால், மகிழ்ச்சி யளிக்கும் அச்செய்தியை, அப்பெண்ணிற்கு அறிவித்து, அவளையும் உடன்கொண்டு சென்று, ஊரை அடுத்துள்ள குன்றில் கோயில் கொண்டிருக்கும் குமரவேள் மகிழ்ந்து அம்மணத்திற்குத் துணைபுரிவான் வேண்டி, அவனை வணங்கி, வழிபட்டு, அவன் விரும்பும் குரவைக் கூத்தை, அவன் முன் ஆடத்தொடங்கினாள். ஆடத் தொடங்கியவள், அவ்வாடற்குரிய பாட்டாய கொண்டுநிலைச் செய்யுளைத் தொடங்குமாறு அப் பெண்ணை வேண்டிக் கொண்டாள்; அவள் தொடங்கிப் பாட, அவளைப் பின்பற்றி இவள் பாட, இருவரும் கீழ் வரும் பொருள் அமைந்த பாடலை மாறிமாறிப் பாடிப் பரவினர்.

"நான் மணங்கொள்ளும் அந்நன்னாளன்று, தாம் பண்டு மறுத்த ஒருவனுக்கே, தம் மகளை மணம்செய்து கொடுக்க நேர்ந்தமை கண்டு நாணும் நம் உறவினர், தம் நாண்கெட்ட அந்நிலையினை எவ்வாறு தாங்கிக் கொள்வரோ? உண்மையில், தாங்கற்கரிய ஒன்றைத் தாங்க வல்ல அவ்வாற்றலை, அவர் என்ன தவம் செய்து பெற்றனரோ? நிற்க, நம் திருமணம், வேங்கைப்பூவின் பொன்னிற மகரந்தப் பொடிகள், பொற்றுகளைப் பரப்

பிறைபோல் உதிர்ந்து கிடக்கும் நம்மனை முன்றிலில், நாட்டார் அறிய நடைபெறும் அன்றோ? அவ்வாறு, பலர்அறி மணத்தை மேற்கொண்ட அன்றே, அம்மணத்தையே, எப்போதும் எண்ணியிருந்தமையால், மணம் நடப்பதாகப் பலகால் கனவில் கண்டு கண்டு மகிழ்ந்த அக்கனவுத் திருமணத்தை, இனிக்காணாது விடுவமன்றோ?'' என்ற பொருள் அமைய வந்த பாட்டை அவள் முன்னுகப் பாடினுள்.

அதைத் தொடர்ந்து, "விண்ணைத் தொடும் மலை நாட்டானுய் நின்காதலனும் நீயும், திருமணத்தின்போது' ஒருவரை யொருவர், இதற்கு முன் பார்த்துப் பழகியறியாத புதியர்போல் நடிப்பீர்களோ? அவ்வாறு நீங்கள் நடிப்பின், நானும், உங்கள் இருவருக்கும் உள்ள உறவினை அறிந்தும், அறியாதாள்போல் நடிப்பன்; நிற்க மணவினை கண்டு தோன்றும் மகிழ்ச்சியால் மனத்தில் உளவாம் நாணத்தாலும், என் நடிப்பைக் கண்டு நகை பிறக்கும் என்ற அச்சத்தாலும், நீ, நின்காதலன் மணக்கோலத்தையும் காணுவாறு கண்களை மூடிக்கொள்ளுதல் கூடாது, அவன் மணக்கோலத்தைக் காணுத கண்கள், உண்மையில் காணும்கண்களாகா? காணுக் குருட்டுக் கண்களாம்'' என்றபொருள் அமைத்துத் தோழி பாடினுள்.

அதுகேட்ட "அப்பெண், அப்பாட்டைத் தொடர்ந்து "நான் என் கண்களை மூடிக்கொள்வதால், என்ன கெட்டுவிடும்? உன் கண்களையே, என் கண்களாகக்கொண்டு காண்பேன்; நீ காண்பது, நான் காண்பதன்றோ! நீ கண்டால் அதுவே அமையும்: நான் வேறு காண வேண்டுவதில்லை'' என்ற கருத்தமைந்த பாட்டைப் பாடினுள்.

அதுகேட்ட தோழி, "அதுநின் கருத்தாயின், நெய்தல் மலர்போல், மைதீட்டப் பெற்ற அழகிய நின் கண்கள், என் கண்கள் ஆகுக; அதாவது காணும் என் கண்களைப் போன்றே, நின்கண்களும் அம்மணக்கோலத்தைக் கண்டு மகிழ்க!" என்ற பொருள் பொதிந்த பாட்டைப் பாடி, ஆட்டத்தை முடித்தாள்.

சிலநாட்கள் கழிந்தன; பெண்ணின் பெற்றோர், மனம் மாறி மணவினைக்கு இசைந்தனர் என அறிந்த இளைஞனின் பெற்றோர், மீண்டும் மணம் பேச வந்தனர்; முன் போல், இம்முறையும், மணமுயற்சி தடையுறல் கூடாது எனும் கருத்தோடு. கணி நூலை நன்கு கற்றோனும், 'இவர் இருவரும் மணந்து மணமக்களாதல் தகும்' எனக் கூறும் தன் சொல், கூறியவாறே முடியுமாறு கூற வல்லோனுமாய கணி ஒருவனைக் கொண்டு நன்னாள் தேர்ந்து, அந்நாளில், எச்செய்தியையும், வகுத்தும், தொகுத்தும் கூறி வெற்றி காணும் சான்றோர்களையும் உடன்கொண்டு மணம் பேச வந்தனர்; அது கண்ட தோழி, அப்பெண்ணின்பால் ஓடி, "என் ஆருயிர் அனையாய்! நின்தோள் உற்ற தளர்ச்சியும், அத்தளர்ச்சி கண்டு அயலார் கூறும் அலரும். திருமணம் நடைபெற்றதாக, நாள்தோறும் கனவில் கண்டு கண்டு கலங்கும் கலக்கமும் எல்லாம் ஒரு சேர அழியுமாறு, அவன் அதோ வந்துவிட்டான்; இனி, நின் கவலையொழிந்து, கண் ஒளிவீசக் கவின் பெற்றுச் சிறப்பாயாக!" என வாழ்த்தினாள். வாழ வழி வகுத்து, வாழ்த்திய அத் தோழி வாழ்க! இந்நாடகத்தை, நாடறியக் காட்டும் நல்ல படம் இதோ! கண்டு களி கூர்க!

**" காமர் கடும்புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்**
**தாமரைக்கண் புதைத்து, அஞ்சி, தளர்ந்து, அதனோடு**
**ஒழுகலால்**

நீள்நாக நறும்தண்தார் தயங்கப் பாய்ந்து, அருளினால்
பூண் ஆகம் உறத்தழீஇப் போதந்தான் அகன்அகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி

அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே ;
அவனுந்தான், ஏனல் இதணத்து அகிற்புகை உண்டு
வான்ஊர் மதியம் வரைசேரின், அவ்வரைத் [ இயங்கும்
தேனின் இறால் என ஏணி இழைத் திருக்கும்
கான்அகல் நாடன் மகன் ;

சிறுகுடியீரே ! சிறுகுடியீரே !
வள்ளி கீழ்விழா ; வரைமிசைத் தேன் தொடா ;
கொல்லை குரல்வாங்கி ஈனா ; மலைவாழ்நர்
அல்ல புரிந்துஒழுக லான் ;
காந்தள் கடிகமழும் கண்வாங்கு இருஞ்சிலம்பின்

வாங்குஅமை மென்தோள் குறவர் மடமகளிர்
தாம்பிழையார், கேள்வர்த் தொழுது எழலால், தம்மையரும்
தாம் பிழையார் தாம்தொடுத்த கோல் ;
எனவாங்கு,
அறத்தொடு நின்றேனைக் கண்டு, திறப்பட

என்னையர்க்கு உய்த்து உரைத்தாள் யாய் ;
அவரும், தெரிகணை நோக்கிச், சிலநோக்கிக் கண்சேந்து,
ஒருபகலெல்லாம் உருத்தெழுந்து, ஆறி
இருவர்கண் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை ;

தெரியிழாய் ! நீயும் நின்கேளும் புணர
வரைஉறை தெய்வம் உவப்ப, உவந்து
குரவை தழீஇ யாம்ஆடக், குரவையுள்
கொண்டு நிலைபாடிக் காண் ;
நல்லாய் !

நன்னாள் தலைவரும் எல்லை நமர்மலைத்
தம்நாண்தாம் தாங்குவார் என்நோற்றனர் கொல் ;

புனவேங்கைத் தாது உறைக்கும் பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ!
நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே,
கனவிற் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ!
விண்தோய் கல்நாடனும் நீயும் வதுவையுள்
பண்டு அறியாதீர்போல் படர்கிற்பீர் மன்கொலோ!
பண்டு அறியாதீர்போல் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போல் கரக்கிற்பென் மன்கொலோ;
மைதவழ் வெற்பன் மணஅணி காணாமல்,
கையால் புதைபெறூஉம் கண்களும் கண்களோ?
என்னைமன், நின்கண்ணால் காண்பென்மன் யான்,
நெய்தல் இதழ்உண்கண், நின்கண் ஆகு, என்கண் மன;
எனவாங்கு,
நெறியறி செறிகுறி புரிதிரிபு அறியா அறிவினை முந்துறீஇ
தகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக
வேய்புரை மென்தோள் பசலையும், அம்பலும்,
மாயப்புணர்ச்சியும் எல்லாம் உடன் நீங்கச்
சேய்உயர் வெற்பனும் வந்தனன்;
பூ எழில் உண்கணும் பொலிகமா இனியே.''

**தம் மகளை, அவள் காதலித்தானுக்குத் தரப் பெற்றோர், மறுப்பதறிந்த தோழி, அப் பெண்ணிற்கும், அவனுக்கும் காதல் உண்டாய வரலாற்றினைக் கூறிச் செவிலிக்கு அறத்தொடு நிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தொடு நிற்ப, அவள் தந்தை முதலியோர்க்கு அறத்தொடு நிற்ப, அவரும் ஒருவாறு உடன்பட்டதைத் தோழி, தலைவிக்குக் கூறி, அவர் மணம் விரைவில் முடிதற் பொருட்டு வரையுறை தெய்வத்திற்கு குரவையாட, அவன் வரைய வருதல் அறிந்து தலைவிக்கு உரைத்தது எனும் துறையமைய வந்துளது இச் செய்யுள்.**

**உள்ளுறை:** *மிக்க ஒளிபொருந்திய திங்கள், புகையால் மறைப்புண்டு. ஒளி மழுங்கித் தோன்றுவதால், அதைக் கைப்பற்றிப் பயன் கொள்ளக் கருதுதல் போல், புகழ்*

மிக்க தலைவனும், தன் அருட்குணத்தால் ஆற்றில் பாய்ந்து அவளைக் காப்பாற்றியதனால் எளியனாதல் கருதி, அவனை மணந்துகொள்ளக் கருதினர் என உள்ளுறை உவமம் கொள்க.

1. காமர்: விருப்பம் தரும்; 3. நாகம்: புன்னை; தார்: மாலை; 4. போதந்தான்: வந்தவன்; 7. இதணம்-பரண்; 9. இறால்: தேனடை; 15. கண்வாங்கு இரும் சிலம்பு: பார்த்தவர் கண்களைத் தன் பாலே ஈர்த்துக் கொள்ளும், பேரழகு பொருந்திய கரியமலை; 16. வாங்கு அமை: வளைந்த மூங்கில்; 18. கோல்: அம்பு; 20. அறத்தொடு நிற்றல்: உண்மை கூறல்; 25. தெருமந்து: மனம் கவன்று; 34. நனவிற்புணர்ச்சி: நாடறிய நடைபெறும் திருமணம்; 36. கனவிற்புணர்ச்சி: கனவிற் கண்ட திருமணம்; 46. நெறியறி; கணிநூல் கூறும் முறை அறிந்த; செறிகுறி: மணமக்கள் இருவர் கூடுதற்காம் நல்ல நாள்; புரிதிரிபு: தவறுதல்; அறிவன்: கணிகூறுவோன். 48. வேய்புரை: மூங்கிலை ஒத்த; 49. மாயப் புணர்ச்சி: கனவில் கண்ட திருமணம்.

# 4

# அகவினம் பாடுவாம்

மலையும் காடும் மண்டிக்கிடக்கும் குறிஞ்சி நிலம். அந்நிலத்தில் ஆங்காங்கே அமைந்துள்ளன பல சிற்றூர்; அவற்றுள் ஓர் ஊரை அடுத்துள்ள ஒரு தினைக்கொல்லை; ஆங்கே இருபெண்கள்; ஒருத்தி, அக்குறிஞ்சி நிலத்துச் சிற்றூர்க் கோமகன் மகள்; மற்றொருத்தி, அவள் தோழி; இருவரும் தங்கள் தங்கள் தினைக்கொல்லையினைக் காக்கும் கடமை பூண்டு வந்தனர்.

அவருள் ஒருத்தி, அந்த ஊர்த்தலைவன் மகள், சில நாட்களாகக் கவலை மிகக்கொண்டு, கடமையிலும் கருத்தின்றி, எந்நேரமும் ஏதோ ஒரு சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் இருக்கத் தொடங்கினாள்; அவள் மனக் கவலைக்காம் காரணத்தை அறிவாள் அத்தோழி; அவர்கள் ஊரை அடுத்திருந்த மற்றோர் குறிஞ்சி நிலத்து ஊரில் சிறந்த குடியில் பிறந்த ஓர் இளைஞன் உளன்; அவனும், இவளும் காதல் கொண்டிருந்தனர்; காதல் கொண்டநாள் முதல், நாள்தோறும் தவறாது வந்து

அவளோடு சிறிது நேரம் அளவளாவி மகிழ்ந்திருந்து செல்லும் இயல்புடைய அவன், சின்னாட்களாக வந்திலன்; அவன் வராத காரணம் தெரிந்திலது; அதனால், அவள் கவலை அதிகமாயிற்று; அதே எண்ணமாய் எப்போதும் ஏக்கங்கொண்டிருக்கத் தொடங்கினாள்.

இவ்வாறு நாள் முழுதும் கவலைகொண்டிருத்தல், அவள் உடல்நலக் கேட்டிற்குக் காரணமாம் என உணர்ந்து, அவள், தன் கவலையைச் சிறிது நேரமாவது மறந்து மகிழ்ந்திருக்க மார்க்கம் தேடினாள் தோழி. ஆடல் பாடல், அகத்தின் கவலையை மாற்றி மகிழ்ச்சியூட்டும் என்பதை அவள் அறிவாள். அதனால், ஒரு நாள், அப்பெண்ணை நோக்கி, "எந்நேரமும் இவ்வாறு கவலை கொண்டிருத்தல் கூடாது; சிறிது நேரம் ஆடிப் பாடி அகம் மகிழலாம் வா" என, அழைத்தாள். ஆனால், ஆடல் பாடல்களில் அப்பெண்ணிற்கு ஆர்வம் உண்டாகவில்லை; ஆயினும், அவள் வேண்டுகோளை மறுக்கவும் முடியவில்லை; ஆகவே, அதற்கு இசைந்தாள்; ஆனால் வெறும் ஆடல் பாடல் மட்டும் தனக்கு ஆறுதல் அளித்துவிடாது; ஆகவே தன் உள்ளத்திற்கு ஊக்கம் ஊட்டும் வகையில் அவற்றை அமைத்துக்கோடல் வேண்டும் என விரும்பினாள்.

உடனே தோழியை அழைத்து, "தோழி! நீ விரும்பியவாறே ஆடலாம் பாடலாம்; ஆனால் ஒன்று; நாம் பாடும் பாட்டு உலக்கைப் பாட்டாக இருக்கட்டும்; அப்பாட்டின் பொருள், தான் தந்த காதல் நோய்க்குத் தானே மருந்தாவதல்லது, பிறிதொரு பொருளால் தீர்க்கலாகாக் கொடுமை வாய்ந்த காதல் நோயைக் கொடுத்துவிட்டு, மீண்டும் நம்மைக் கருதாது மறந்து போன கொடியோனை, அவ்விளைஞனுக்குரிய மலையாய் இருப்பதால், வளம் அற்று வறண்டு போகவேண்டிய

தாகவும், அவ்வாறு ஆகாது, அதற்கு மாறாக, வளம்பல பெற்று வனப்புடன், அதோ தோன்றுகிறதே அவன் மலை! அதைப்பற்றியதாகட்டும்" என்றாள்; அவளும் அதற்கு இசைந்தாள்.

உடனே அரும்பு வளருமளவு முற்றியதனால் மணம் வீசும் சந்தன மரத்தாற் செய்த ஓர் உரலையும், முத்து உதிருமளவு முதிர்ந்து நீண்ட இரு தந்தங்களையும் கொண்டு வந்தனர்; கொல்லையில், முற்றித்தலைசாய்த்துக் கிடக்கும் தினைக்கதிர்களைக் கொண்டுவரச் சென்றனர்; ஆண்டு, அவர்கள் கண்ட கதிர்க்காட்சி, அவர்கள் உள்ளத்தில் மற்றொரு காட்சியைக் கொண்டு வந்து காட்டிற்று; தம் வீடு நோக்கிவரும் விருந்தினரை, அவர் சேய்மைக்கண் வரும்போதே அகம் மகிழுமாறு, அன்போடு பார்த்து, அவர் அண்மையில் வந்தக்கால், அவர் உள்ளம் உவக்கும் இன்சொற்களை வழங்கி வரவேற்கும் நற்குடிப் பிறந்த மகளிர்பால் செருக்கு நில்லாது; அவர்பால் என்றும் நாணமே குடிகொண்டிருக்கும்; நாண் நிறை அந்நல்லார், பணிவுதோன்ற நிற்கும் காட்சியை, முற்றி வளைந்த கதிர்கள் நினைப்பூட்ட, அம் மகிழ்ச்சியால் சிறிது நேரம், தம்மை மறந்து நின்றனர். பின்னர், அக் கதிர்களிற் சிலவற்றைக் கொய்து கொணர்ந்து உரலில் இட்டனர்; யானைத் தந்தத்தாலாகிய உலக்கைகளைத் தம் கையிற் பற்றி, மாறி மாறி இடித்துக்கொண்டே பாட்டையும் பாடத்தொடங்கினர்.

கையில் உலக்கையைத் தாங்கி நிற்கும் அப் பெண்ணைக் கண்டாள் தோழி; அவள் அழகிய நெற்றி, அடர்ந்த கூந்தல், மூங்கிலைப்போல மென்மை வாய்ந்து பருத்த தோள், மலர்சூடி மணம் நாறும் தலைமுடி எனும் இவை கொண்டு நிற்கும் அவள் காட்சியைக்கண்டாள்; கண்ணிற்கு விருந்தளிக்கும் இக்கவினெல்லாம், அவனைப்

பற்றிய கவலையால் கெடுகின்றனவே என்ற எண்ணம் அவள் உள்ளத்தையும் சிறிதே துன்புறுத்திற்று; தானே கவலின் அவளும் கவல்வள் என்று அஞ்சினுள்; உடனே அச்சிந்தனையைச் சிதைத்துவிட்டு, அப் பெண்ணை நோக்கி, "தோழி! தன்பால் விளைந்துள்ள மூங்கில்களிடையே, காற்று வீசுவதால் எழும் ஒலி, நமக்கும் கேட்கும் அத்துணை அண்மையில் உள்ள அவன் மலையை, முன்போல் பழிக்காது, பாராட்டி ஒரு பாட்டுப் பாடுவாயாக! பின்னர் நான் பாடுகிறேன்" என்ருள்; ஆனல், அவள் தயங்கினுள்; பாடுமளவு அவள் உள்ளம் இன்னமும் தெளியவில்லை என்பதை உணர்ந்து, முதலில் தானே பாட்டைத்தொடங்கினுள்.

பாடத் தொடங்கியவள், "அவ் விளைஞன் உற்ருரைக் கைவிடும் ஒழுக்கம் உடையவன் என்ற உணர்விஞலேயே, இந்தப் பெண், அவனைப் பழிக்கிருள். ஆனல், அவன் அத்தகையன் அல்லன் என்பதை அவளுக்கு உணர்த்த வேண்டும்" எனக் கருதினுள்; அதனல், தான்பாடிய பாட்டில், "அவன் நாட்டு மலைகளில், தங்கள் குலக் கடவுளாம் குமரவேள் இருக்கும் குன்றை நோக்கி, அவன் மலைநாட்டு மகளிர் கூப்பித் தொழும் கைகளைப் போல மலர்ந்திருக்கும் காந்தள் மலர்களில் நிறைந்திருக்கும் உயர்ந்த இனிய தேன், கொள்வார் வந்து கொள்வதற்கு இயலாது, மலர்கள் காற்ருல் அசைப்புறுவதால், கீழ் வீழ்ந்து வீணுதலைக் காணும் அவன், தன் காதலியும், தான் வந்து மணந்து கௌ்வதற்கு முன்னரே, மனக் கவலையால், தன் நலத்தைக் கெடுத்துக் கொள்வளோ எனும் கருத்தால் விரைந்து வந்து வரைந்து கொள்வன்; அப் பண்பு அவன்பால் உண்டு; தன் அருள வேண்டித் தன்பால் அடைந்தாரின் துயர் போக்கித் துணை புரியும் பண்புடையவன் அவன்" என்ற பொருள் அமைத்துப்

பாடிவிட்டு, "ஆகவே, தோழி! அவனைப் பழித்துப் பாடுவதை விடுத்துப் புகழ்ந்து ஒரு பாட்டுப் பாடுவாயாக" என்று வேண்டிக் கொண்டாள்.

ஆனால், அவ்வாறு வேண்டிக் கொண்டும், அப் பெண் பாடினாளல்லள்; அது கண்ட தோழி, மீண்டும் தானே பாடத் தொடங்கினாள். அப் பெண் இன்னமும் மனந்தெளியாமை கண்டு, அவள் தெளியுமாறு, மீண்டும் அவன் புகழையே தன் பாடற் பொருளாகக் கொண்டாள்: "தோழி! அம் மலைநாட்டு மகன் நின்னை மறந்து விட்டான் என மனங்கவலற்க. அவன் அத்தகையான் அல்லன்; தான் காதலித்த ஒரு பெண் மனக்கவலையால் தன் இயற்கை நலம் கெட்டு வருந்துவளாயின், அவள் வருந்துவதினும் மிக வருந்தும் மாண்புடையான் அவன்; மேலும், தான் காதலித்த ஒரு பெண்ணை, எனக்கு மணம் செய்து தாருங்கள் என அப் பெண்ணின் உறவினர் பால் சென்று கேட்கும் மக்கட் சாதியினரைப் போன்றே, அவன் மலைவாழ் ஆண் குரங்கு, தான் விரும்பும் பெண் குரங்கைத் தனக்குத் தருமாறு, தன் இனக் குரங்குகள்பால் சென்று குறை கூறும்; அந்தக் காட்சியை நாள்தோறும் காண்பவன் அவன். அவன் மலைவாழ் குரங்கிடத்தே காணும் இக் குணம், மாண்பு நிறை மகனாகிய அவனிடத்தும் அமைந்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே, அவன், உன்னை மணம் செய்து தருமாறு, நம் பெற்றோர்பால் மணம் பேச விரைவில் வருவன்; இது உறுதி; ஆகவே கவலை கொள்வதோ, அவனைப் பழிப்பதோ செய்யாது, மகிழ்ந்து பாராட்டி, ஒரு பாட்டுப் பாடுவாயாக" என்ற பொருளமைத்துப் பாடி வேண்டிக் கொண்டாள்.

தோழி இவ்வளவும் கூறி, இரு முறை வேண்டியது கண்டு, அப் பெண்ணின் உள்ளமும், பாட, ஒருவாறு

இசைந்தது. பாட இசைந்ததே யாயினும், அவனைப் பாராட்ட ஒருப்பட்டிலது; அந்த அளவு, அவள் மனம் இன்னமும் தெளியவில்லை. தளர்ந்து, தன் அழகு இழந்து காணும் அவள் உடல், அது பண்டு பெற்றிருந்த பேரழகை நினைப்பூட்டிற்று; அதனால் கலங்கிற்று அவள் உள்ளம். முறுக்கற மலர்ந்து, மகரந்தம் நிறைந்து, மணம் நாறும் மலர்களால் நிறைந்து தாழ்ந்துள்ள ஒரு கிளையில், அம் மலர்களின் மகரந்தம் படியுமாறு, நெருங்கத் தழைத்த தளிரைப் போலச், சுணங்கும் மாமையும் பெற்றுப் பேரழகு தோன்ற விளங்கிய தன் பண்டைய நிலையினையும், அது, பசலை பாய்ந்து வனப்பிழந்து தோன்றும் இன்றைய நிலையினையும் கண்டு கலங்கினாள்; உடனே, இந்நிலைக்குக் காரணமாய்ப் பிரிந்து மறந்து வாழும் அவ்விளைஞன்பால் கடுஞ்சினம் தோன்றவே, அவனைப் பாடாதிருத்தல் மட்டும் போதாது; அவனைப் பழிக்கவும் வேண்டும் என்று எண்ணினாள்; அதனால் தன் தோழியை அழைத்து, "தோழி! அவன் மலைச் சாரலைப் பாடுகிறேன்; ஆனால் பாராட்டி அல்ல; பழித்து;" என்று கூறினாள்.

பழித்துப் பாடத் துணிந்ததோடல்லாது, பாடவும் தொடங்கி விட்டாள்; "தேன் நிறைந்த மலரைத் தேடிச் சென்று, அதில் உள்ள தேனை உண்டு, பின்னர், அம் மலரை அறவே மறந்து போகும் வண்டுகள் வாழும் மலை, அவன் மலை; ஆகவே, அவ் வண்டின் குணம், அம் மலைக் குரியோனாய அவனிடத்தும் பொருந்தியிருப்பதில் வியப்பில்லையன்றோ? அதனால் பெண்ணொருத்தியைக் காதலித்து, அவள்பால் பேரின்பம் நுகர்ந்துவிட்டுப், பின்னர் அவள் அழகு கெட்டு வாட, அறவே மறந்து போகும் மாண்பு அவன்பாலும் நிறைந்துவிட்டது; ஆனால், 'அவன் இயல்பு இது; அவன் மலைவாழ் வண்

டின் இயல்பு இது என்பதை அறியாது, விண்ணைத் தொடும் மலையுச்சியில் பந்தாடி இளைத்த தெய்வ மகளிர், அத் தளர்ச்சி போகக் குளிர்ந்த நீரிற் படிந்து ஆடல் வேண்டி, அதற்காக அவன் மலையிடத்து அருவியைத் தேடி வருகின்றனரே! என்னே அவர் அறியாமை!'' இவ்வாறு, பழித்துப் பாடி முடித்தாள்.

அப்பெண், அவ்விளைஞன் வந்திலனே என்ற வருத்தத்தினால் அவ்வாறு பழிதூற்றினும், அவன் அத்தகையன் அல்லன்; அவள் மாட்டுப் பேரன்பு கொண்டுள்ளான்; அவளை மணந்து, இடையறவுபடா இன்பம் பெறவே எண்ணுகிறான். அவள் விரும்புமாறு, அவளை மணந்து கொள்வான் வேண்டி, அம்மணத்திற்காம் பொருள் சேர்க்கும் பணிமேற் கொண்டுள்ளமையினாலேயே வந்திலன் என்பதைத் தோழி அறிவாள். ஆகவே, அப்பெண் பழித்துப் பாடியது கேட்டு வாளா இருந்துவிடாது, அவன் புகழ்பாடும் மற்றொரு பாட்டை மீண்டும் பாடத் தொடங்கினாள். தொடங்கியவள், அவன் அத்தகையன் என்பதை, அப்பெண் உணரவல்ல சில செய்திகளைத் தன் பாடற் பொருளாகக் கொண்டு பாடினாள்: "தான் விரும்பும் பெண் யானை, முதன் முதலாகக் கருவுற்றதாக, அஃதறிந்து மகிழ்ந்து, கருவுற்றிருக்குங் காலத்தில் அது ஆசைப்படும் பொருள் எதையும் தவறாது தருதல் வேண்டும் எனத் துணிந்து, அவ்வாறே, நீண்டு வளர்ந்து, நன்கு முற்றிச் சுவை பெற்றிருக்கும் கரும்பின்மீது அதற்கு ஆசை உண்டாக, அது கிடைக்கும் இடம், தேடிச் சென்று, முறித்துக் கொணர்ந்து தரும் ஊக்கமும், உரனும் மிக்க யானைகளை நிறையக் கொண்டது, அவன் மலை. அவன் நாட்டு விலங்குகள்பால் காணலாம் இப்பண்பு அவன் மாட்டும் பொருந்தி யிருத்தல் இயல்பே. மேலும் இயல்பாகவே

தன் காதலியை மணந்து கொள்ளும் முயற்சி மேற்கொண்டுழைக்கும் அவன், தன் நாட்டு யானையின் செயல் கண்டு, முன்னினும் முயன்று, மணவினையை விரைவில் முடிப்பன்" என்று அவன் புகழ் கூறும் பாட்டைப் பாடி, அவ்வாடல்பாடலை முடித்தாள்.

இவ்வாறு, தோழி இளைஞனைப் புகழ்ந்து பாட, அப் பெண் அவனைப் பழித்துப் பாட, அப்போது ஆங்குவந்த அவ்விளைஞன், அவ்விருவரும் அறியாவாறு, ஓரிடத்தே ஒளித்திருந்து, அப்பாட்டை முழுதும் கேட்டான்; கேட்ட அவனுக்கு, நமக்கு இன்பம்தரும் இக்களவொழுக்கம், இவளுக்குத் துன்பம் தருவதாய் உளது; ஆகவே தான், இவள் இவ்வாறு பழித்துப் பாடுகிருள் என்ற உணர்வு பிறந்தது. அதனல், அவளை விரைவில் மணந்து கொள்ளத் துணிந்தான்; துணிந்தவாறே, சின்னுட்களுக் கெல்லாம், உற்ருர் உறவினர் சூழ, அப்பெண்ணின் தந்தைபால் மணம் பேச வந்தான்; அவன் வருகை கண்ட தோழி, விரைந்து சென்று வணங்கி வாழ்த்திஞள்; அவளிடத்தில், அவர்கள் அன்று பாடிய வள்ளைப் பாட்டை நினைப்பூட்டி, அதன் பலஞகவே, இவ்வளவு விரைவில் மணத்திற்கு ஏற்பாடு செய்தேன் எனக் கூறிஞன். அது கேட்ட தோழி, அப்பெண்ணின் பால் விரைந்து ஓடி, செய்தியை விளங்கக் கூறி, மகிழ்ந்து வாழ்த்திஞள்.

அவர்கள் பாடிய வள்ளைப் பாட்டையும், அதன் பயனையும் கூறும் பாட்டு இது :

**" அகவினம் பாடுவாம் தோழி ! அமர்க்கண்,**
**நகைமொழி நல்லவர் நாணும் நிலைபோல்**
**தகைகொண்ட ஏனலுள் தாழ்குரல் உரீஇ,**
**முகைவளர் சாந்து உரல், முத்தார் மருப்பின்**
**5. வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சிப்,**

பகையில் நோய் செய்தான் பயமலை ஏத்தி
அகவினம் பாடுவாம் நாம்.

ஆய்நுதல், அணிகூந்தல், அம்பணைத் தடமென்தோள்,
தேனாறு கதுப்பினாய் ! யானும்ஒன்று ஏத்துகு ;
வேய்நரல் விடரகம் நீஒன்று பாடித்தை.

கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்
எடுத்த நறவின் குலையலம் காந்தள்
தொடுத்ததேன் சோரத் தயங்கும், தன்உற்றார்
இடுக்கண் தவிர்ப்பான் மலை.

கல்லாக்கடுவன் கணம்மலி சுற்றத்து
மெல்விரல் மந்தி குறைகூறும் செம்மற்றே,
தொல்லெழில் தோய்ந்தார் தொலையின், அவரினும்
அல்லற் படுவான் மலை.

புரிவிரி புதைவதை பூத்ததைந்த தாழ்சினைத்
தளிரன்ன எழில்மேனி தகைவாட நோய்செய்தான்
அருவரை அடுக்கல் நாம் அழித்து ஒன்று பாடுவாம்.
விண்தோய் வரைப் பந்து எறிந்த வயா விடத்
தண்தாழ் அருவி அரமகளிர் ஆடுபவே ;
பெண்டிர் நலம் வௌவித் தன்சாரல் தாதுஉண்ணும்
வண்டில் துறப்பான் மலை.

நடுங்கா எழில்வேழம் வீழ்பிடிக்கு உற்ற
கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து நெடுஞ்சினைத்
தீங்கண் கரும்பின் கழைவாங்கும், உற்றாரின்
நீங்கலம் என்பான் மலை.

எனநாம்,
தன்மலைபாட நயவந்து கேட்டருளி,
மெய்ம்மலி உவகையன் புகுதந்தான், புணர்ந்துஆரா
மென்முலை ஆகம் கவின்பெறச்
செம்மலை ஆகிய மலைகிழவோனே.''

தோழியும் தலைவியும் பாடிய வள்ளைப்பாட்டில், தோழி, தலைவன் இயல் வாழ்த்த, தலைவி, அவன் இயலைப்பழிக்க, தலைவன் சிறைப்புற

மாக இருந்து கேட்டு வரைய வருதல் அறிந்து, தோழிதலைவிக்கு உரைத்தது என்ற துறையமைய வந்துள்ளது இச்செய்யுள்.

**உள்ளுறை:** காந்தளின் தேன், அம்மலர் அலைவதால், கொள்வார் வந்து கொள்வதன் முன்னரே கீழ்வீழ்ந்து பாழாதல், தலைவியின் நலம், தலைவன் வாராக் கவலையால், அவன் வந்து வரைந்து கொள்வதற்கு முன்னரே கெடுதலாம்.

கடுவன், தன் இனத்தின்பால் சென்று, மந்தியைத்தா எனக் குறைகூறல், தலைவன், தலைவியின் பெற்றோர்பாற் சென்று, தலைவியை மணம் செய்துதர வேண்டுதலாம்.

களிறு, பிடியின் வாயாவிற்காவேண்டிக் கரும்பைத் தேடிக் கொணர்ந்து தருதல், தலைவன் தலைவியை மணந்து, அவள் கருவுற்ற காலத்து அவள் விரும்பும் பொருளைத் தேடிக்கொணர்ந்து தருதலாம்.

1. அகவினம் - குரல் எடுத்துப்பாடும் பாட்டு; மகளிர் உரல்இடிக்குங்கால் பாடும் பாட்டு; அமர்-விருப்பம் தருகின்ற; 3. தகை-அழகு: குரல்-கதிர்; 4. முகை-அரும்பு; 6. பகைஇல்நோய்-மருந்து இல்லாத நோய்; நோய்க்குப் பகை மருந்து; 8. பணை-மூங்கில்; தட-பருத்த; ஏத்துகு-பாடுகிறேன்; 10. வேய்-மூங்கில்; நரல்-ஒலிக்கும்; விடர்அகம்-மலைப்பிளவுகளையுடையமலை; பாடித்தை-பாகு (பாகு-இத்தை; இத்தை, சாரியை). 11, கொடிச்சி-குறப்பெண் 12. நறவு-தேன்; அலம்-அசையும்; 15, கடுவன்-ஆண்குரங்கு. 19. புரிவிரி-இதழ் விரியும்; புதைதுதை-மகரந்தம் நிறைந்த; ததைந்த-நெருங்கிய; 20. தகை-அழகு; 21. அழித்து-பழித்து. 22, வயா-தளர்ச்சி; 26. வீழ்பிடி-விரும்பப்பட்டபெண் யானை; 27. கடுஞ்சூல்-முதற் கருவு. வயா-கருவுற்ற காலத்து பெண்டிற்கு உண்டாம் ஆசை.

## 5

# பாடுகம் வா தோழி!

வளங்கொழிக்கும் மலைநாடு: மா, பலா, வாழை, வேங்கை, ஆசினி முதலாம் மரங்கள் நெருங்க வளர்ந்து மகிழ்ச்சிதரும் காட்சி ஒருபால்; காட்டை அழித்து உழுது விளைத்த கொல்லையில், தினைக் கதிர் முற்றிச் சாய்ந்திருக்கும் காட்சி ஒருபால்; புனத்தின் நடுவே ஓங்கி வளர்ந்திருக்கும் ஆசினி மரத்தின் உச்சியிலே பரண் அமைத்து, அதன் மீதிருந்து காவல்புரியும் கானவர்களையும், அத்தினைக்கதிரைத் தின்னும் கருத்தோடு வரும் களிறுகளையும் காணும் காட்சி ஒரு பால், காலமோ இரவு, இடியும் மின்னலும் கூடிப்பெரு மழை பெய்யும் நள்ளிருள்; ஆகவே, இவ்வேளை காவல் மேற்கொண்டிரார்; இந்நேரம், செல்லுதற்கரியதேனும், மின்னல் காட்டும் ஒளித்துணை கொண்டேனும் சென்று தினையை வேண்டுமளவு தின்று வரலாம் காலம் இதுவே எனக்கருதி ஆண்டுவரும் யானைகள்; விளைந்து முற்றிய பயிர்கள், நீரினும், காவலே நனிமிகத்தேவை என்பதை

உணர்ந்து, இடியையோ, மழையையோ பொருட்படுத்தாது இரவிலும் காவல் மேற்கொண்டிருப்பர் அக் கானவர். அவ்வாறு காத்துக்கிடக்கும் கானவர் இரவில் புகும் யானையைக் கண்ணுல் காண இயலாது, அதன் அடியோசை கேட்டே, அது வருவதறிந்து, கவண்கல் எறிந்து ஓட்டுவர்; ஆனால், இரவாதலின், குறிதவருது எறிய மாட்டாமையால், கவணினின்றும் புறப்பட்ட கல், வந்த யானையைத் தாக்குவது விடுத்து, வேங்கை மலரை வீழ்க்கி, ஆசினிப் பலாவின் பழுத்த பழத்தைப் பாழாக்கி, தேன்கூட்டை அழித்து, மாமரத்தில் பூவும்காயுமாய் காய்த்துத்தொங்கும் குலைகளை நிலைகுலைத்து, மாவை அடுத்துத் தாழ வளர்ந்திருக்கும் வாழையில், அதன் பூவை மூடியிருக்கும் மடலைக் கிழித்துக் கடைசியில் அதற்கு அணித்தே இருந்த வேர்ப்பலாவின் பழத்தைத் துளைத்துக்கொண்டு உட்சென்று தங்கும்; இத்துணை வளம் செறிந்தது அம்மலைநாடு.

அம்மலைநாட்டில், சிற்றூர் ஒன்றின் சிறந்த குடியிற் பிறந்த ஓர் இளைஞன், தன் ஊரை அடுத்துள்ள மற்றோர் ஊரில், தன்னைப்போன்றே சிறந்த குடியிற் பிறந்தாள் ஒருத்தியைக் காதலித்தான்; அவளும் இவனைக்காதலித்தாள்; அவர் காதல் ஒழுக்கம் அவர் பெற்றோருக்குத் தெரியாது: அது அப்பெண்ணின் உயிர்த்தோழி ஒருத்திக்கே தெரியும்; அவர்கள் காதல் வளரத்துணை புரிபவள் அவளே. ஆனால், அவர்கள் கொண்ட தொடர்பினை, அவர்கள் பெற்றோர் அறியார் ஆதலின், அவர்கள் ஒருவரையொருவர் கண்டு மகிழ்தல் அத்துணை எளிதில் இயலவில்லை; கண்டு மகிழப் பலமுறை முயன்றால், ஒருசிலபோதே அது நிறைவேறும்; பல முறை முட்டுப்பாடுற்று ஏமாந்து போவர். இதனால், அப்பெண் பெரிதும் வருந்தினாள்; அவ்விளைஞனை இமைப்பொழுதும் பிரியாது வாழ எண்ணும் அவள்

உள்ளம்; அவ்வாறு பிரியாது வாழ்வதாகவே, அவளைக் கண்டு காதல் கொண்ட அன்று, அவ்விளைஞன், ஆணையிட்டு உறுதி கூறினன். ஆனல், அது இயலாது போவதால், அவள் பெரிதும் வருந்தினள்; அவள் உடல் தளர்ந்தது; கைவளையும் கழன்று விழலாயிற்று; இவ்வளவிற்கும் காரணம், காதல் கொண்ட தன்னை மறந்து மறைந்து வாழும் அவ்விளைஞனை எண்ணி, அவன்மீது மாருச்சினம் கொண்டாள் அவள். நிற்க:

தன் மகளின் உடற்றளர்ச்சியைக் கண்டு வருந்தினள் அப்பெண்ணின் தாய்; அதற்குக் காரணம் யாது என்பதை அறிவதில் விழிப்பா யிருந்தாள். அதனல், தன் மகளைச் சிறிது பொழுதும் பிரியாதிருக்கத் தொடங்கினள். அப்பொழுது ஒருநாள் இரவு பெருமழை பெய்யத் தொடங்கிவிட்டது; இடியும் மின்னலும் கூடி எவரையும் வெளிச் செல்லாவாறு செய்துவிட்டது; அக்காலம் அவ்வாறு கொடுமை மிகுந்து இருப்பதால், வெளிவருவார் எவரும் இரார்; ஆகவே தன் வருகையை எவரும் காணர்; ஆதலின், அக்காலம் காதலியைக் காண்டற்கு ஏற்ற காலம் எனக் கருதி, அப்பெருமழையில் அவ்வீடு நோக்கி வந்தான் அவ்விளைஞன்; ஆனல் அந்தோ! இழந்தால் எளிதில் விளைத்துக் கொள்ளலாம் எளிமை வாய்ந்த தினையைக் காக்கும் கானவர்களே, இடியிலும், மழையிலும் தம் காவலைக் கைவிடாது மேற்கொண்டுள்ளனர் என்ருல், இழந்தால் மீண்டும் பெறலாகாப் பெருமை வாய்ந்த தன் மகள் கற்பிற்குக் களங்கம் நேர்ந்து விடுதல் கூடாதே எனும் கவலையோடு அவளைக் காத்துக் கிடக்கும் தாய், இடிக்கும் மழைக்கும் அஞ்சி அக்கவலையைக் கைவிடுவளோ? கைவிடாள் என்ற உண்மை, அவன் கொண்ட காதல் வெறியால் விளங்காது போயிற்று. அதனல், அந்நேரத்தில் ஆங்கு வந்த இளைஞன், வீட்டின்

பின்புறத்தே நின்றுகொண்டிருக்கும் அப்பெண்ணின் அருகே, அவள் தாயும் உடன் இருப்பதைக் கண்டான்; உட்புக எண்ணி வந்த அவன் உள்ளத்திற்கு பெரியதோர் ஏமாற்றம்; அதனுல், தன் காதலியை அவ் வேமாற்றம் தோன்றும் தன் கண்களால் காதல்உணர்ச்சி வெளிப்படப் பார்த்துக்கொண்டே சென்றுவிட்டான்; அவனே, அந்நேரத்தில், ஆங்கு கண்ட அப்பெண்ணின் உள்ளத்திலும், ஆர்வமும், ஏமாற்றமும் ஒருங்கே எழுந்தன; இவ்விருவர் நிலையையும் காணுதாள்போல் கண்டுகொண்டாள் தாய்.

அன்று முதல், தன் மகளின் காதல் நாடகத்தைக் குறிப்பாற் சுட்டிக் கண்டிக்கத் தொடங்கிஞள்; தாயின் கடுஞ்சொல் கேட்டு, அப்பெண்ணின் விளையாட்டுத் தோழிகள், வீட்டிற்கு வாராராயினர்; அவள் உயிர்த் தோழியும் அதுகேட்டு வருந்திஞள்; காவல், முன்னினும் அதிகமாயிற்று; இந்நிலையை எண்ணி எண்ணிக் கடுந் துயர் உற்ருள் அப்பெண்.

இந்நிலையில், ஒருநாள்: அவ்விளைஞன் இப்பெண்ணின் வீடு நோக்கி வந்தான்; வந்து அவளைக் காணலாம் இடத்தே ஒளிந்துகொண்டு, அவள் வருகையை எதிர் நோக்கியிருந்தான். அதைக் கண்டுவிட்டாள் அவளும்; தன்னை மணந்து, தன் மனைக்கு அமைத்துச் சென்று மகிழ்ச்சி தர எண்ணுது, இவ்வாறு துயர் தருகின்றனனே; முதன் முதலாகக் கண்டு காதல்கொண்ட அன்று, “உன்னை இமைப்பொழுதும் பிரியேன்; இதோ இம்மலையில் உறையும் முருகவேள்மீது ஆணை” எனச் சூளுரைத்த அவன், இன்று அது பொய்யாமாறு பிரிந்து மறந்திருக்கின்றனனே; என்னே இவன் கொடுமை! நான் படும் இக்கொடுமைக்கெல்லாம் இவனன்ருே காரணம்! ஆகவே, இவன் தன் தவறு உணர்ந்து, இக்களவு

வாழ்க்கையைக் கைவிட்டு, மணமுயற்சி மேற்கொள்ளு மாறு, இவனுக்குப் புத்தி புகட்டுதல் வேண்டும் எனக் கருதினாள்; உடனே, தோழியை அழைத்து, "தோழி! அதோ அவன் வந்துள்ளான்; அவனுக்கு நம் துயர் நிலையை உணர்த்தி, மணத்தின்பால் மனம் செல்லுமாறு செய்தல் வேண்டும்; ஆகவே அவனைக் காணாதார்போல் இருந்து, அவன் கேட்குமாறு வள்ளைப் பாட்டுப் பாடத் தொடுங்குவோம்; அதில், நான் அவனைப் பழித்துப் பாடுகிறேன்; நீ அவனைப் புகழ்ந்து பாடு; பயன் கிடைக்கும்" என்றாள்; அவளும் அதற்கு இசைந்தாள்.

உடனே, யானைத் தந்தத்தால் செய்த இரண்டு உலக்கைகளைக் கொண்டு வந்தாள் ஒருத்தி; ஒருத்தி ஓடிச் சென்று, முறம்போல் அகன்று கிடக்கும் சேம்பின் இலையில், முற்றி உதிர்ந்த மூங்கில் நெல்லை வாறிக் கொணர்ந்தாள்; அந்நெல்லை ஆங்கிருந்த கல்லுரலில் இட்டுக் கைகளில் உலக்கையைப் பற்றி இடித்துக் கொண்டே, வள்ளைப் பாட்டை மாறி மாறிப் பாடத் தொடங்கினர்.

"நல்லோர் வாழும் நாட்டிலேயே மழை மாறாது பெய்யும் என்ப; நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்ப; ஆனால் நம் அன்பனோ, தான் உரைத்த ஆணையைக் காவாதவன்; ஆணை பொய்க்கும் அறனில்லாதான் அவன் என்பதை அறிந்திருந்தும், அவன் நாட்டில் மழை பெய்கிறதே! இது என்ன வியப்போ? மழை பெய்தமையால், அவன் மலை அருவிகள், காண்பார் கண்களைப் பறிக்கும் பேரழகோடு நீர் நிறைந்து பாய்ந்தோடுவதைத், தோழி! அதோ காண்" என்ற பொருளமைந்த பாட்டை, அப் பெண் முதற்கண் பாடினாள்.

உடனே தோழி, "மலைகள் நிறைந்து வளம் பெருகும் நாட்டிற்கு உரியனாய நம் அன்பன் வாய்மை வழுவாதவனாவன். ஆதலினாலேயே அவன் நாடு அத்துணை வளம் பெற்றுளது. இயல்பாகவே வாய்மை வழுவாதோனாய அவன், 'நின்னைப் பிரியேன்; பிரிந்து மறந்து விடுவேனோ என அஞ்சும் அச்சத்தை, நீ அறவே மறந்துவிடு' என்று கூறி ஆணையிட்டு ஆட்கொண்ட தன் காதலியைக் காவாது கைவிடுவனோ? விடான்; வாய்மை வழுவாத அவன்பால் பொய் தோன்றுமாயின், அஃது இயற்கைக்கே மாறுபட்டதாம்; என்றும் தண்ணொளியே வீசும் இயல்பினதாய திங்களில் தீத்தோன்றியதற் கொப்பாம்; திங்களில், என்றேனும் தீ உண்டாமோ? உண்டாகாதன்றே? அதைப் போன்றே, அவன் உரைத்தனவும் பொய்யாகா" என்ற பொருளமைத்துப் பாடிப் பாராட்டினாள்.

அது கேட்ட அப்பெண், "தோழி! அவன் வாய்மை வழுவான்; ஆகவே நின்னை மறவான்' என்று கூறுகின்றனையே; இதோ பார், என்கை வளைகள் கழன்று ஓடுவதை; இதற்கு யார் காரணம்? அவன் என்னை மறந்தமையால் வந்த வருத்தமன்றோ இதற்குக் காரணம்? இவ்வாறு என் கைவளை கழன்று போமாறு உடல் தளர்ந்து உறுதுயர் உற்று, நான் வருந்த, என்னை மறந்து போன கொடுமையுடையனாகவும், அவன் மலைகளில் மழைதரும் மேகங்கள், நாள்தோறும் தவறாது வந்து படிகின்றனவே; இஃது என்ன வியப்போ!" எனப் பழித்துப் பாடினாள்.

அவள் பாடி முடித்ததும், தோழி! நம் அன்பன் யார் துயர் உறினும், எவ்வுயிர் துயர் உறினும், அத்துயர் காணப் பொறாது இறங்கும் அருள் நிறை உள்ளம் உடையவன்; அவ்வாறு, தன்னோடு தொடர்பில்லாத

உயிர்கள் மாட்டும் அருள் சுரக்கும் உள்ளம் வாய்ந்த அவன், தன் மாட்டு அன்புடைய தன் காதலியின் துயர் துடைக்க வாராது, வாளா இருப்பானே? வாராது நில்லான்; வந்து துயர் துடைப்பன். இது உறுதி; ஆகவே வருந்தற்க; சுற்றி அமைந்த கரை நான்கிலும் மரங்கள் நிறைந்து நிழல்தரக் குளிர்ந்த நீர் நிறைந்த குளத்தில் மலர்ந்திருக்கும் குவளை மலர், அது அக் குளத்து நீரில் இருக்கும்போதே வெம்மையில் வாடி வதங்கிப் போவதுண்டோ? இல்லையன்றே? அருள் நிறைந்த உள்ளம் உடையோனாய அவன் பால், தன் காதலி தன்னைக் காணாது வருந்தி வாட, அத்துயர் கண்டும், விரைந்து சென்று துடைக்க எண்ணாது வாளா இருத்தல் போலும் கொடுமை நிகழின், அது, குவளை மலர், குளத்து நீரிலேயே வாடியது போலாம்; ஆனால் அக் குவளையும் வாடுவதில்லை; அவன் அன்பும் குறைவ தில்லை" என்று பாடிப் பாராட்டினாள் தோழி.

உடனே, அப்பெண், "தோழி! வாராது நில்லான்; வருவன் என நாளைக்கு நடைபெறப் போவதைக்கூறு கின்றனையே; இப்போது நடந்தது என்ன? என்னைக் காதலித்த அவன், என்னை மறந்து மறைந்து வாழ் கிறான் என்பதை நீ மறுக்கமாட்டாய்; அவ்வாறு மறந்து, துறந்த மாண்பிலான் மலையாய் இருந்தும், கோடையின் கொடுமையால் வறண்டு வெளிறித்தோன்றாது, மாறாக, மழை பெற்று, மரமும் செடியும் மண்டித்தழைக்க, தொலைநின்று காணுவார்க்குப் பருநீல மணிபோலத் தோன்றுகிறதே? இது என்ன வியப்பு!" என்று பழித்துப்பாடினாள்.

அதுகேட்ட தோழி "தொடர்ந்து நிற்கும் பல சிறு மலைகளைக்கொண்ட நாட்டிற்குரியோனாய நம் அன்பன், நின்னைத்துறந்து விட்டான் எனக்கருதித் துயர் கொள்

ளற்க; அவன் உன்னைத் துறவான்: நாம் கொண்ட இத்தொடர்பு, அன்பை அடிப்படையாகக்கொண்டது; அவ்வன்புத்தொடர்பினுள், அவன் நம்மை மறந்து துறப்பதுபோலும் கொடுமை நிகழாது; அது, அவன் பெற்றுள்ள பெரும்புகழைக் கறைப்படுத்திவிடும்; புகழ் கெட வாழும் கொடியவன் அல்லன் அவன்: அவன் வாழ்க்கையில், அதுபோலும் பழிநேரின், அது வானத்தில் விளங்கித்தோன்றும் ஞாயிற்றின் இடையே, இருள் தோன்றியது போலாம்; அவ்வாறு என்றும் நடைபெறாது; ஆகவே அவனைப் பழிக்காதே'' என்று பாடினான்; அவள் பாடிய அப்பாட்டோடு, அவர்கள் பாடிய அவ்வள்ளைப்பாட்டும் முடிந்தது.

தன் காதலியைக் காணவந்த அவ்விளைஞன், ஆங்கு அவளும் அவள் தோழியரும் பாடத்தொடங்கியது கண்டு, அவர் பாட்டைக் கேட்டு மகிழ வேண்டும் எனும் விருப்போடு ஒருபால் ஒதுங்கி நின்றான்; ஆனால் அவர்கள் பாடியபாட்டு, களவொழுக்கத்திலேயே இன்பம் உளது எனக்கருதி, அதையே விரும்பும் தன் செயலால், தன் காதலி எவ்வளவு துயர் உறுகிறாள் என்பதை உணர்த்திவிட்டது; உடனே, அவ்விடத்தை விட்டகன்றான்; ஊர்சென்று, தன் உற்றார் உறவினரை, உடன் கூட்டிக்கொண்டு, அப்பெண்ணின் பெற்றோர்பால் மணம் பேச வந்தான்; வந்த அவர்களும், அப்பெண்ணின் உற்றார் பெற்றோர்களும், அவர்கள் வீட்டின் முன் புறத்தே தழைத்து வளர்ந்திருக்கும் வேங்கை மரத்தின் கீழ் அமர்ந்தனர்; மணப்பேச்சு எழுந்தது; அவளை அவனுக்கு அளிக்க இசைந்தான் அவள் தந்தை; இதைக்கண்டாள் தோழி; உடனே சென்று அவளுக்கு உரைத்து உள்ளம் மகிழ்ந்தாள்; அப்பெண்ணும், அவள் ஆருயிர்த்தோழியும், அன்று ஆடிய ஆட்டத்தையும், அவ்வாட்டத்தின் பயனையும் கூறுகிறது இப்பாட்டு.

'' பாடுகம்வா வாழி தோழி! வயக்களிற்றுக்
கோடு உலக்கையாக; நற்சேம்பின்இலை சுளகா
ஆடுகழை நெல்லை அறை உரலுள்பெய்து இருவாம் ;
பாடுகம்வா வாழிதோழி ! நல்தோழி ! பாடுற்று,
இடிஉமிழ்பு இரங்கிய இரவுபெயல் நடுநாள்
கொடிவிடுபு இருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு மேயும் செய்புன் யானை,
அடிஒதுங்கு இயக்கம் கேட்ட கானவன்,
நெடுவரை ஆசினிப் பணவை ஏறிக்
கடுவிசைக் கவணையில் கல் கைவிடுதலின்
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராத்
தேன்செய் இருஅல் துளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துள் தங்கும் மலைகெழு வெற்பனைப்
பாடுகம்வாவாழி தோழி ! நல்தோழி ! பாடுற்று ;
இலங்கும் அருவித்தே, இலங்கும் அருவித்தேதே ;
வானின் இலங்கும் அருவித்தே தான்உற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை :
பொய்த்தற்கு உரியனோ ? பொய்த்தற்கு உரியனோ ?
அஞ்சல் ஓம்பு என்றுரைப் பொய்த்தற்கு உரியனோ ?
குன்றுஅகல் நல்நாடன் வாய்மையில் பொய்தோன்றின்,
திங்களுள் தீத்தோன்றி யற்று:
இளமழை ஆடும் ; இளமழை ஆடும் ;
இளமழை வைகலும் ஆடும் ; என்முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று.
வாராது அமைவானோ ? வாராது அமைவானோ ?
வாராது அமைகுவான் அல்லன் ; மலைநாடன்
ஈரத்துள் இன்னவை தோன்றின், நிழல்கயத்துள்
நீருள் குவளை வெந்தற்று.

மணிபோலத்தோன்றும் ; மணிபோலத்தோன்றும்
மண்ணா மணிபோலத் தோன்றும் ; என் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை.
துறக்குவன் அல்லன் ; துறக்குவன் அல்லன் ;
தொடர்வரை வெற்பன் துறக்குவன் அல்லன் ;
தொடர்புள் இனையவை தோன்றின் விசும்பில்
சுடருள் இருள் தோன்றியற்று
எனவாங்கு,
நன்றாகின்றால் தோழி ! நம் வள்ளையுள்
ஒன்றிநாம் பாட, மறை நின்றுகேட்டருளி
மென்தோள் கிழவனும் வந்தனன் ; நுந்தையும்
மன்றல் வேங்கைக் கீழ் இருந்து,
மணம் நயந்தனன் நம்மலைகிழ வோற்கே.''

தலைவியும் தோழியும் பாடிய வள்ளைப்பாட்டைத் தலைவன் சிறைப்புறமாகக் கேட்டு, வரைவு வேண்டிவரத், தந்தை அவ்வரைவிற்கு உடம்பட்டமை தோழி தலைவிக்கு உரைத்தது எனும் துறையமைய வந்துளது இச்செய்யுள்.

உள்ளுறை: *தினை உண்ணவந்தயானை, தலைவியின் நலம் நுகரவந்த தலைவனாகவும், கவண் எறிந்த கானவன், கடுஞ்சொல் கூறியதாயாகவும், அக்கல், வேங்கை மலர் முதலாயினவற்றைச் சிதைத்தல், தாய்கூறியகடுஞ் சொல், ஆயத்தாரை அகற்றித் தோழியைத் துயர் செய்து, தலைவியின் உள்ளத்தில் கிடந்து வருத்தியதாகவும் கொள்க.*

*2. சுளகு-முறம் ; 3. அறை-பாறை ; இருவாம்-குற்றுவாம் ; 5. இரங்கிய-ஒலிக்கும் ; 9. பணவை-பரண் ; 11. வீ-மலர் ; 13. தேன்செய்இறால்-தேனடை ; 18. இலங்கும்-விளங்கித்தோன்றும் ; 30. ஈரம்-அருள் ; கயம்-குளம் ; 33. மண்ணா-கழுவாத ; 34. துன்னான்-சேராது ; 37. இனயவை-இவைபோன்றன ; 41. ஒன்றி-கலந்து ; 42. கிழவன்-உரிமைஉடையவன் ; 44. நயந்தனன்-இசைந்தனன்.*

3788

# 6

# ஆர்வுற்ருர் நெஞ்சம்!

மலைநாட்டிலே செல்வக்குடியொன்றிலே பிறந்த ஓர் இளைஞன், தன் ஊரை அடுத்துள்ள ஓர் ஊரின் தலைவன் மகளை, அவள் தினைப்புனம் காத்திருக்குங்கால் கண்டு காதல் கொண்டான்; அன்றுமுதல், அவளை ஒரு போதும் மறவாது, நாள்தோறும் வந்து மகிழ்ந்து சென்ருன்; இவ்வாறு சின்ஞட்கள் சென்றன; பிறகு, யாது காரணத்தாலோ, அவன், அவண்வந்திலன்; "இன்று வந்திலன்; நாளை வருவன்" என எத்தனையோ நாட்கள் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்தாள் அப் பெண்; அதனுல் அவள் துயர், அதிகமாயிற்று; அவள் உள்ளத்துயரை, உடல், தளர்ந்து காட்டிற்று. அதனுல், அவ்வூரார், அவளைக் குறித்துப் பலவாறு பேசத்தொடங்கினர்; அதை அறிந்தாள் அப்பெண்ணின் உயிர்த் தோழி; பழியுரை கேட்கப் பொருது அவள் உள்ளம்; அதனுல், "பிறர்கண்டு பழிக்குமளவு, நின் உள்ளத் துயரைப் புறங்காட்டிக்கொள்வது தகாது; அது நின் பெண்மைக்கே இழுக்காம்" எனப் பலப்பல கூறித்

தேற்றினாள்; அவ்வாறு கூறக்கேட்டும், அப்பெண், துயர்கொள்வதை விட்டாளல்லள்.

தான் எவ்வளவு கூறியும், அப்பெண் தன் துயர் தோன்றுவாறு மறைத்துவாழக் கருதாமை கண்ட தோழி, அவளைத் தேற்றும் வழியாது எனச்சிந்திக்கத் தொடங்கினாள்; அவள் சிந்தனையில் ஒரு தெளிவு பிறந்தது. அப்பெண், அவ்விளைஞன்பால் பேரன்பு கொண்டுள்ளாள்; மேலும், தன் காதலனுக்குப் புகழ் பெருகவாழ்பவளே வாழ்க்கைத் துணையாவாள், பிறர் அவனைப் பழித்தற்குத் தானே காரணமாம் வகையில் நடந்துகொள்வாள் நல்ல பெண்மணியாகாள் என்ற அறிவும் உடையாள்; அதனால், அவள் முன்நின்று, 'நீ, இவ்வாறு வருந்தப்பிரிந்து மறந்து வாழும் அவன் மாண்புடையனல்லன்' என அவள் பொருட்டு, அவனைப் பழிக்கின், 'அவன் பிரிந்தமையால் உண்டாய உள்ளத் துயரைப் பிறர் உணருமாறு நான் நடந்துகொண்டமையாலன்றோ, அவர்கள் பழிக்கின்றனர்; பிறர் அவனைப் பழிக்க, என் துயர் நிலையன்றோ 'காரணமாயிற்று; இனி, என் துயரைப் பொறுத்துக் கொள்வேன்; பிறர் உணராவாறு காத்துக்கொள்வேன்' என எண்ணி அடங்குவள்; இதுவே அவளை ஆற்றும் வழியாம் என முடிவு செய்தாள்.

உடனே அப்பெண்ணின்பால் சென்று, "தோழி! நின் காதலனுக்குரிய மலைநாட்டில் வாழும் யானை, எதிர்ப்பட்ட எப்பொருளையும் அழித்தொழிக்கவல்ல ஆற்றல் வாய்ந்த புலியைக் கொன்றுவிட்டுத் தன் பழம்பெரும் பகையை ஒழித்த அவ்வுள்ள அமைதியோடு, தழை உணவை விரும்பித்தின்று, தெளிந்தோடும் அருவியில் நீர் உண்டு, அவ்வருவிக்கரையில், அவ்வருவி ஓடுங்கால் உண்டாம் ஒலி தாலாட்ட, அச்சமோ, கவலையோ இல்லா

மல், அயர்ந்து உறங்கும் என்று கூறுவர்; தன் நாட்டு விலங்கினம் பெற்று வாழும், அவ்வமைதி நிறைந்த வாழ்க்கையைக்கண்டு மகிழும் அவன், நாம் அம்மன அமைதி பெற்று வாழத்துணை புரிந்திலன்; அவன் நாட்டுயானை, தன்பகையைக்கொன்றுவிட்டு, அமைதியாகஉணவுண்டு, அருவி தாலாட்ட அயர்ந்து உறங்குவதுபோல, நாமும், நம்மைப்பற்றி உரைக்கும் அலர் உரைகளை ஒழித்து விட்டு, அவனை மணந்து, அவன் சுற்றமும், நம் சுற்றமும் இனிது பாராட்ட இல்லறம் நடாத்த, அவன் விரைந்து வந்து வரைந்து கொண்டிலன்; இந்நிலையில், நாம் நமக்கு வேண்டியதைப்பெறும் நல்லவழி யாது என்பதை அறிந்த அறிவுடையேமாயின், அது அவன் செயலைப் பழித்து வள்ளைப்பாட்டுப் பாடுவதே யாம்; ஆகவே தோழி! யானைக்கொம்பால், மூங்கில் நெல்லைக்குற்றி அரிசி ஆக்கும் நாம், அவன் பொருளாக வள்ளைப்பாட்டுப் பாடுவோம் வா" என அழைத்துப் பாடத்தொடங்கினுள்:

"தோழி! பிறர்கண்டு பழிக்கும் செயல்களைச் செய்ய நினைக்கவும் நாணும் நல்லுள்ளம் உடையவரே பெரியார் எனப்படுவர். அவ்வாறு பழிகண்டு நாணும் பண்புடைப்பெரியோர் வாழும் நாடே பயன்மிக்க நாடாம்; 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்றுர் ஒரு பெரியார்; ஆனல், நம் அன்பைப் பெற்ற அவ்விளைஞன்பால் அப்பண்பு இல்லை; அவன் ஒரு நாண் அற்றவன்; அவன்பால் அன்புகொண்ட நாம், அவன் பிரிவுத்துயரால் பெரிதும் வருந்தவும், நம்மை அறவே மறந்து வாழும் தன் கொடுமைக்கு நாணவில்லை அவன் உள்ளம்; அவன் அன்னனுதல் அறிந்தும், அவன் நாட்டு மலையினின்றும் வீழ்ந்தோடும் அருவிகள், வெண்ணுரை சிதற விரைந்து பாய்கின்றன; இயற்கையோடு மாறுபட்ட இந்நிகழ்ச்சிக்குக் காரணம்

யாது என்பதை ஆராய்ந்து காண்போம் வா" எனப் பழித்து ஒரு பாட்டுப் பாடினாள்.

அதுகேட்ட அப்பெண், தன் தோழியைப் பார்த்து, "தோழி! அவனை நீ நன்கு அறிந்திலை; அதனால், நீ இவ்வாறு பழிக்கின்றனை; பாராட்டும் பண்புகள் பல அவன்பால் உள; ஒன்று கூறுகிறேன் கேள்; பொருள்களின் நிறையை நிறுத்துத்தருவதில், தூலாக்கோல் என்றும் தவறுவதில்லை. அதைப்போல, என்றும் அறமே விரும்பும் நல்லுள்ளம் உடையார் தம் கடமையில் சிறிதும் தவறார்; தம்பால்வந்து முறைவேண்டி நிற்பவருள், தமக்கு வேண்டியவர் உளரேல், அவர் பிழையை மறைத்து, அவர்க்கு ஆக்கம் அளிப்பதோ, வேண்டாதார் உளரேல், அவர் பிழை செய்திலராயினும், அவர்க்கு அழிவு தருவதோ அப்பெரியோர்பால் நிகழாது. நம் அன்பனும் என்றும் அறத்தையே விரும்புர்வன்; அறம் அல்லாதனவற்றை, அவன் உள்ளம் எண்ணிப்பாரப்பதும் இல்லை; அதனால், எதையும் நடுநிலைமையில் நின்றே ஆராய்ந்து முடிவு செய்வதும், அதற்கேற்ப நடப்பதும் செய்வன்; அத்தகையான் நம்மை வெறுப்பினும், அதனால், நமக்குத் துயர்தருவது செய்யான்; அவன்பால் காணலாம் இப்பண்பறியாது, அவனைப் பழிக்கத்தொடங்கினையே, என்னே நின் பேதைமை!" எனக்கூறி அவன்புகழ் பாடினாள்.

மீண்டும் தோழி தொடங்கினாள்: "நங்கை நல்லாய்! நீ கூறுவதுபோல், நின் காதலன் அறம்விரும்பும் ஆண்மகனாயின், அவன், பழியொடுபடராப் பேரின்பம் தருவதாய இல்லறவாழ்க்கையினைப் பெறுதற்காம் வழிவகைகளை, இன்னே, விரைந்து மேற்கொள்ளுதல் வேண்டும்; அதை எண்ணாது, நிலையற்றதும், பயனற்றது

மாய இக்களவொழுக்க இன்பத்தையே விரும்புகின்றனன்; 'பயன் இல்சொல் பாராட்டுவானை மகன் எனல்; மக்கட்பதடி எனல்.' என்பர் பெரியோர்; பயனற்ற சொற்களை வழங்குபவனே மகனல்லனுயின், அந்நிலைக்கும் கீழாய்ச்சென்று, பயனில் செயலைச் செய்யும் இவனை என்னென்பது! இவ்வாறு, மக்கட் பண்பற்றவனுதல் அறிந்தும், இவன் மலைநாடு, வளம்பெற்று விளங்குகிறது; கோங்கின் மலரும், மகரந்தமும் உதிர்ந்து படிந்து கிடக்கும், அவன் நாட்டு மலைகளைப்பார்; நம் ஊரில் அணிபல அணிந்து பெருமித நடைநடந்து செல்லும் அரசயானைபோல் தோன்றும் அதன் அழகைப்பார்! இயற்கைக்கே மாறுபாடான இதனை என்னென்பது!" எனக்கூறிப்பழித்தாள்.

உடனே அப்பெண், அவன்பால் காணலாம் மற்ருெரு பண்பை எடுத்துக்காட்டிப் பாராட்டத்தொடங்கினுள்; "தோழி! அவன்மலை, சுனைபல கொண்டது; அச்சுனைகள், இனிய, குளிர்ந்த நீரால் நிறைந்துள்ளன என்பதை நீ அறிவாய்; அச்சுனை நீரைக்காட்டிலும் இனிமையும், அருளும் உடையவன் அவன்; அத்தகைய பேரன்புடைய அவன், இல்லை எனக்கூறித் தன்பால் வந்து பொருள்வேண்டி இரப்பார்க்குத் தேரும், திரண்ட பொருளும் கொடுக்கும் பெருங்கொடையாளனுமாவான்; இவ்வாறு, பேரருள் உள்ளமும், பெருங்கொடைக் குணமும் குன்ருது வாய்க்கப்பெற்ற அவன், தன் பிரிவாலாய பெருந்துயர், நம்மை வருத்தக்கண்டும் வாளா இருப்பனே? இரான்; வந்து நம் துயர் தீர்ப்பான்; ஆனல், அவன் வந்திலன்; அவன் வராமைக்கு, வரைவுப் பொருள் தேடும் முயற்சி காரணமாதலும் கூடும்; இதை அறிந்துகொள்ளமாட்டாது அவனைப் பழிக்காதே" எனக்கூறி அவனைப்பாராட்டினுள்.

அவள் அவ்வாறு புகழக் கேட்டு, தோழி அடங்கினு ளல்லள்; தன் அகத்துயர் பிறர்க்குப் புலனுகாவாறு, அவள் அதை அடக்கிக் கொள்ளுதல் வேண்டும்; அந்த அளவு, அவள் உள்ளத்தில் உறுதி பிறத்தல் வேண்டும்; அது, அவள் முன் அவனைப் பலகால் பழிப்பதினுலேயே உண்டாம் என உணர்ந்து, அவனை, மேலும் பழிக்கத் தொடங்கினுள்: "தோழி! அவன் வருத்தம் தாரான் என்றும், அவன் வாராமை கண்டு வருந்துகிறேன் என்றும் கூறுகின்றனை; ஆனுல் உன் நிலைமை யாது? நின் உடலின் உறுப்பளவு அறிந்து, நம் தந்தை ஆக்கி அணிவித்த அணிகளெல்லாம், இன்று தாமே கழன்று விடுகின்றனவே; காரணம் என்ன? அந்த அளவு நின் உடல் தளர்ந்து விட்டது; அத்தளர்ச்சிக்குக் காரணம் யாது? அவன் உன்னைப் பிரிந்து மறந்து வாழ்வதால் வந்த விளைவன்றோ அது? இவ்வாறு, உடல் தளர்ந்து வாடுமாறு வருந்தப் பெருந்துயர் அளித்துப் போன அத்துணைக் கொடியவன் அவன்; அத்தகையான் மலை யாய் இருந்தும், அது, தன்வளத்தில் குறைவுற்றிலது; அவன் மலை உச்சியில் கட்டப் பெற்றுத் தேன் நிறைந்து கிடக்கும் தேனடைகளைப் பார்; மேகத்திடையே நுழைந்து, ஒளி மங்கித் தோன்றும் திங்கள் போல் காட்சி யளிக்கும் அவற்றின் அழகைக் காண்; இது என்னே உலகியல்!" என்று கூறிப் பழித்தாள்.

தோழி அவ்வாறு தொடர்ந்து பழிக்கவே, அப் பெண்ணிற்கு, அவள் மீது கடுஞ்சினம் பிறந்தது; அதனுல், "தோழி! நின் நாவை அடக்கிப் பேசு; அவன் என் உள்ளம் கவர்ந்த கள்வன்; அதை அறிந்தும் அவனை என் முன்னரே பழிக்கின்றனையே, என்ன துணிவு உனக்கு. மேலும், பழி கண்டஞ்சாப் பண்பற்றவன் அல்லன் அவன்; என்னை மணந்து, மனையறம் மேற்

கொள்ளும் தன் கடமையைக் களவொழுக்க இன்பத்தால் கருத்திழந்து, மறந்து பிறர் பழிக்க நடந்துகொள்ளான்; அவன் கடமை அறிந்தவன்; அதை பிறர் சுட்டிக் காட்டா முன்பே, பரிந்து வந்து வரைந்து கொள்வன்; அதை நான் அறிவேன்; இதையெல்லாம் அறிந்து கொள்ளாது, அவனைப் பழி தூற்றல் அடாது" எனக் கூறி அவளைப் பழித்து, அவனைப் பாராட்டினுள்.

எப்போதும் அவன் நினைவாகயிருந்து வருந்தி வாடும் அவளை ஆற்றுதல் வேண்டும்; அதற்கு அவனை அவள் முன் பொய்யாகப் பழிப்பதே வழியாம் எனக் கண்டு, அவ்வாறு அவனைக் குற்றம் சாட்டிப் பேசிய தோழி, தன் கடமையினைச் செவ்வனே செய்துவிட்டோம் என்ற அமைதியால், அம்மட்டோடு நிறுத்திக் கொண்டாள்.

அவள் அம்மட்டோடு அடங்கி விட்டமைக்கு, அவ்வுள்ள அமைதி மட்டும் காரணமாகாது; அவர்கள் பாடத் தொடங்கியதும் ஆங்கு வந்தான் அவ்விளைஞன். வந்தவன், ஒரு பால் ஒதுக்கிடமாக இருந்து, அவர் பாடியன எல்லாம் கேட்டான்; அப்பாட்டின் மூலம் வெளிப்பட்ட தன் காதலியின் பெருமை கண்டு பெரு மகிழ்ச்சி கொண்டான்; பாட்டு முடிவுற்றதும், தன் காதலி அறியாவாறு அவள் பின்புறம் சென்றுன்; அவள் முன்னே இருந்து தன் வருகையைக் கண்டு கொண்ட தோழியை, அதை அவளுக்கு உணர்ந்தாவாறு கையை ஆட்டிச் சைகை செய்தான்; மெள்ளச் சென்று திடுமெனத் தன் காதலியின் கழுத்தைப் பற்றித் தன் மார்பின் மீது சாய்த்துக் கொண்டான்; அவ்வின்பத்தால், அவளை அதுகாறும் பற்றித் துயர் செய்த பசலையும் ஞாயிறு தோன்ற, அதன்முன் நிற்க மாட்டாது

ஓடி மறையும இருளே போல், மறைந்துவிட்டது. அவள் உள்ளம் இன்பத்தால் நிறைந்தது.

மறுநாள், தனியிடத்தே இருந்து, அவ்வின்ப நிலையினை எண்ணி, எண்ணி மகிழ்ந்தாள்; அம் மகிழ்ச்சியில் அவளை அறியாமலே அவள் வாய் இப்பாட்டை மெல்ல இசைத்தது.

" மறங்கொள் இரும்புலித் தொன்முரண் தொலைத்த
முறஞ்செவி வாரணம் முன் குளகு அருந்திக்.
கறங்கு வெள்அருவி ஒலியின் துஞ்சும்
பிறங்கு இரும் சோலை நன்மலை நாடன்,
மறந்தான்; மறக்கு; இனி; எல்லா! நமக்குச்
சிறந்தன நாம் நற்கு அறிந்தனமாயின், அவன்திறம்
கொல்யானைக் கோட்டால் வெதிர்நெல் குறுவாம் நாம்
வள்ளை அகவுவம் வா; இகுளை! நாம்
வள்ளை அகவுவம் வா.

காணியவா வாழி தோழி! வரைத்தாழ்பு,
வாள் நிறம் கொண்ட அருவித்தே, நம், அருளா
நாண்இலி நாட்டு மலை!

ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ
ஓர்வுற்று ஒருதிறம் ஒல்காத நேர் கோல்
அறம்புரி நெஞ்சத்தவன்?

தண்ணறும் கோங்கம் மலர்ந்த வரையெல்லாம்,
பொன்அணி யானைபோல் தோன்றுமே, நம்அருளாக்
கொன்னாளன் நாட்டு மலை!

கூருநோய் ஏய்ப்ப விடுவானோ, தன்மலை
நீரினும் சாயல் உடையவன், நயந்தோர்க்குத்
தேர்ஈயும் வண்கை யவன்?
வரைமிசை மேல்தொடுத்த நெய்க்கண் இருஅல்
மழைநுழை திங்கள்போல் தோன்றும், இழைநெகிழ
எவ்வம் உறீஇயினான் குன்று!

எஞ்சாது, எல்லா! கொடுமை நுவலாதி ;
அஞ்சுவது அஞ்சா அறனிலி அல்லன், என்
நெஞ்சம் பிணிக்கொண்டவன்.

என்று யாம்பாட, மறை நின்று கேட்டனன்,
தாழ் இருங்கூந்தல் என் தோழியைக் கைகவியாச்
சாயல் இன் மார்பன் சிறுபுறம் சார்தர
ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்தது, என்
ஆயிழை மேனிப் பசப்பு.''

**தோழியும் தானும் பாடிய வள்ளைப் பாட்டைத் தலைவன், சிறைப் புறமாக இருந்து கேட்டு வந்து தலையளி செய்தானாக, மகிழ்ந்த தலைவி, பின்னொருகால், அம்மகிழ்ச்சியைத் தன்னுள்ளே எண்ணி மகிழ்ந்தது எனும் துறையமைய வந்துளது இச்செய்யுள்.**

உள்ளுறை: *புலியாய பழம் பகையைக் கொன்று, கவலையற்று உணவு உண்டு; அருவி ஒலியில் யானை துஞ்சல், தன்னைக் குறித்து ஊரார் கூறும் அலரைக் கெடுத்து, அவனை மணந்து, இல்லறம் மேற்கொண்டு, இருவர் சுற்றமும் பாராட்டத் தலைவி இன்பம் நுகர்தலாம்.*

*1. மறம் : வீரம்; இரும் : பெரிய; தொன்முரண் : பழம் பகை; 2. குளகு : தழை உணவு; 3. கறங்கு : ஒலிக்கின்ற; ஒலி : தாலாட்டுதல் போன்ற அருவி ஒலி; 4. பிறங்கு : வளம் பெருகும்; இரும் : கரிய; 5. மறக்கு : மறப்பானாக; 6. நற்கு: நன்கு; 7. வெதிர்: மூங்கில்; 12. நாண் இலி : நாண் அற்றவன் ; 14. ஓர்வு-உற்று : ஆராய்தலை மேற்கொண்டு ; ஒல்காத: சாயாத; 18. கொன் : பயன் இன்மை; ஆளன் : செய்பவன் ; அதாவது பயனில் செயல் புரிவான் ; 19. கூரும் நோய் : மிக்க நோய் ; ஏய்ப்ப : அடைய ; 22. நெய்க்கண் இறுல்: தேன் நிறைந்த தேனடை ; 24. எவ்வம் : துன்பம் ; உறீஇயினன் : தந்தவன் ; 25. எல்லா : தோழி.*

# 7

# வீங்கின தோள்கள்!

கண்டார் மனதை மருட்டும் பேரழகு வாய்ந்த மலை நாட்டுப் பெண் ஒருத்தியும், அவளைப் போன்றே, அம் மலை நாட்டில் பிறந்த, ஆண்மையும் அழகும், அறவுணர்வும், அருள் உள்ளமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஓர் ஆடவனும் காதல்கொண்டு, அதை, அப்பெண்ணின் தோழி ஒருத்தியின் துணைகொண்டு, பெற்றோர் அறியா வாறு வளர்த்து வந்தனர். அக்காதல் வாழ்வைப் பெற்றோர்க்கு நீண்டநாள் மறைத்து வைத்தல், அவர்க்கு அரிதாயிற்று. அதனால், எண்ணற்ற இடையூறு உற்றனர் இருவரும்; அதனால், அவளை விரைவில் வரைந்து கொள்ளுமாறு, அவ்வாடவனை, அவள் தோழி வேண்டிக் கொண்டாள்; அவனும் அதற்கு இசைந்து அத் திருமணத்திற்குத் தேவையாம் பொருள் தேடும் பணியினை மேற்கொண்டான்; அதனால் அவன், அவள் பால் வருவது தடையுற்றது. வரைவும் விரைவில் முடிந்திலது; அவன், அது காரணமாகப் பிரிந்திருந்ததால்,

அவனைக் காண்பதும் இயலாது போயிற்று. அதனால், அப்பெண் மிகவும் வருந்தினாள்; அவள் வருத்தம் காணத் தோழிக்கும் வருத்தம் மிக்கது; ஆனால், வருந்தும் அவளைத் தேற்றக் கடமைபூண்டதானே வருந்தின், அவள் துயர்மேலும் அதிகமாம் என எண்ணித், தன் வருத்தத்தை வெளிக்காட்டிக் கொள்ளாது மறைத்து, அவளைத் தேற்ற முயன்றாள்.

அவ்வாறு தேற்றத் துணிந்த தோழி, அவளை எவ்வாறு தேற்றுவது? யாது கூறித் தேற்றுவது என நெடிது சிந்தித்தாள்; தம் அன்பைப் பெற்ற ஒருவர், தம்மைவிட்டுப் பிரிந்து, வேற்றூர் சென்று, விரைவில் வாராராக, அவரைக் காணாது வருந்துங்கால், அவரோடு தொடர்புடையனவற்றைக் காண்பதாலும், அவரைப் பாராட்டிப் பிறர் கூறுவனவற்றைக் கேட்பதாலும் ஓரளவு உள்ளம் அமைதி அடையும்; அதனால், தம் துயரை மறந்து, அவரை நேரே கண்டாற்போல் மகிழ்வதும் செய்வர். மனத்தின் இவ்வியல்புணர்ந்தவள் தோழி. அதனால், அப்பெண்ணின் முன், அவன் புகழ்பாட எண்ணினாள்; ஆனால், ஆங்கு, அவ்விருவர்மட்டும் தனித்திருக்கவில்லை. அவரோடு, அவர் விளையாட்டுத் தோழியரும் உள்ளனர்; அதனால், அவனை அவர் அறியும்வண்ணம் வெளிப்படப் புகழ்தல் தகாது என உணர்ந்தாள்; அதனால், அவள் அப்பெண்ணைத் தன் அருகழைத்து, "தையால்! நம் குலக் கடவுளாம் குன்றுறை குமரவேளிற்கும், நம் அன்பனுக்கும் சில பல குணங்களில் ஒற்றுமை உளது; அதனால், அம்முருகனைப் பாராட்டிப் பாடுவது போல், நம் அன்பன் புகழைப் பாராட்டிப் பாடுவோம் வருக! அது, நின்மனத்துயரை ஓரளவு மாற்றலும் கூடும்" எனக் கூறினாள்; அவளும் அதற்கு இசைந்தாள்

உடனே, புலியைக்கொன்று வென்ற யானையைக், கானவர் தாம் கொன்று கொண்டுவந்து தந்த தந்தத்தால் செய்யப் பெற்ற ஓர் உலக்கையையும், வண்டுகள் தேன் தேடி வருமாறு மலர்கள் மலருமளவு முற்றிய சந்தன மரத்தால் செய்யப் பெற்ற ஓர் உலக்கையையும் கொண்டு வந்தனர்; மலைநாட்டில் விளையும் நெல்லினமாய ஐவனத்தைப், பாறையில் குடைந்து செய்த உரலில் இட்டு, அதை இடித்துக்கொண்டே, முருகனைப் பாடுவோர் போல், அவன் புகழ் பாடத் தொடங்கினர்.

முதலில் பாடத் தொடங்கிய தோழி, "தன் மீது பகைகொண்டு, கருதிய உயிரைத் தவறாது கைப்பற்ற வல்ல கூற்றுவனேவரினும், அவனால்தான் அழிந்து போகாது, மாறாக, அவனைத்தான் அழிக்கவல்ல பேராற்றலும், தன்பால் அன்புகொண்டு வந்தார், தன்னினும் தாழ்ந்தோரே யாயினும், அன்புடைமையால், அவரைப் பணிந்து, பணிபுரிந்து நிற்றலை நாணாப் பேரருளும் ஒருங்கே உடையவன் நம் அன்பன்; நம் சுற்றத்தார்; தாமே மனம் விரும்பி, உன்னைத் தனக்கு மணம் செய்துதர உடம்படும் காலத்தை எதிர்நோக்கி நிற்கும் அவன் உள்ளத்தை உணரவைக்கும் இயற்கைக் காட்சிகளைக் கொண்டது அவன் மலை; மலையுறையும் முருகனை வணங்கக் கூப்பிய மகளிர் கைவிரலில், நீலக்கல் இழைத்துச் செய்த விரலணி கிடந்து அழகு செய்தல்போல, மலரும் பருவம்பெற்ற காந்தளின் பேரரும்புமீது, அதன் உள்ளே உள்ள தேனை உண்ண விரும்பிய வண்டு, அது மலரும் காலத்தை எதிர்நோக்கி யிருக்கும் அம்மலைக் காட்சி, அவன் உள்ளக் கருத்தினை உணர்த்துவதாமன்றோ! இவ்வாறு சிறந்த இயல்புடைய அவனையும், எழில்மிக்க இயற்கைக் காட்சிகளைக் கொண்ட அவன் மலையையும் பாடிப் பாராட்டுவோமாக!" எனப் பாடினாள்.

அவ்வாறு பாடிய தோழி, அப்பெண், அம்மலையில் ஏறியும் இறங்கியும் ஓடி ஆடும் வருடை மான்கன்று, எதற்கும் எவ்வித இடையூறும் செய்யாது, பாறையின் ஒருபால் உட்கார்ந்திருக்கும் கருங்குரங்கைத், தன் இளமையால் மருண்டு நோக்குவதுபோல், 'சுற்றத்தார், என்னை என் அன்பனுக்கு மணம் செய்துதர மறுத்து விடுவரோ' என அஞ்சித் தம் சுற்றத்தாரைக் கண்டு மருண்ட மனத்தினளாய் நிற்பதைக் கண்டு, "தோழி! நம் சுற்றத்தார் நின்னை நம் அன்பனுக்கே மணம்செய்து தருவர்: இது உறுதி; அவரைக் கண்டு மருள்வது அறிவுடைமையன்று; ஆகவே அதைவிடுத்து, அவனை யும், அவன் மலையையும் பாராட்டி, ஒரு பாட்டுப் பாடு வாயாக" என வேண்டிக் கொண்டாள்.

தோழியின் வேண்டுகோளை ஏற்றுப் பாடத் தொடங்கிய அப்பெண், "ஆற்றல், அரும்பொருள் ஆகிய இவற்றைத்தான் பெற்றிருக்குமளவு பெறமாட்டாமை யால், தன்னினும் குறைபாடுற்று, அதனால் தன்னோடு மாறுபட்டு மனம் பொருது பழி கூறுவார் உளரேனும், அவரை, அவர்பால் காணலாம் அக்குற்றத்தைப் பல்லோர் அறியக்கூறிப் பழித்தல்அறியாப் பெருமை யுடையவன் நம் அன்பன்; மான்காது போலும் வடி வுடையனவாய், மூங்கிற் கணுக்களில் தோன்றி, அம் மூங்கிலை மூடிக்கிடக்கும் பாளைகள், கழன்று உதிர்ந்து, அம்மூங்கிலின் அகஅழகைப் புறந்தோன்றக் காட்டி, 'அன்ப! நீ விரைந்து சென்று வரைந்து கொள்ளாமை யால், நின்காதலியின் உடலில் பரந்து, பெருந்துயர் செய்யும் பசலை நோய், நீ வரைந்து கொள்ளின், அவள் உடலைவிட்டு அகலவே, பண்டு, அவள் மேனி பெற் றிருந்த பேரழகு விளங்கித் தோன்றும்' என அவனுக்கு அறிவூட்டும் மாண்புடையது அவன் மலை" என அவனை

யும், அவன் மலையையும் பாடிப் பாராட்டி, அவன் கடமையையும், தன் துயர்க்கொடுமையையும் எடுத்துக் காட்டி நினைப்பூட்டினாள்.

அப்பெண் பாடிய அப்பாட்டின் பொருள் அறிந்த தோழி, அவள் அவன்பால் சிறிது சினமும் கொண்டுள்ளாள்; அச்சினம் மாறவேண்டின், அவள் கேட்க, அவனை, யான் பழித்தல் வேண்டும்; அதுகேட்டுத், தன் காதலனைப் பிறர், தன்முன் பழித்தல் கண்டு, அவனை அவர் அறியப் பாராட்டித், தன் துயரை, அவர் அறியாவாறு அடக்கிக் கொள்வள் என உணர்ந்தாள்; உடனே, "தோழி! அவன் நாட்டு யானை, தன் பிடியோடும் கூடிச் சென்று, வளரு என்னும் தழையினை விரும்பி உண்டு, வளர்ந்து நீண்ட தன் இரு தந்தங்களும் தனக்குப் பேரழகு செய்ய, மலை நடந்து செல்வதுபோல், பெருமித நடை போட்டு நடந்து செல்லும் சிறப்புடையது அவன் நாடு; தன் நாட்டு விலங்குகள், இவ்வாறு மகிழ்ந்து வாழக் கண்டும், உன்னை மணந்து, மணம் விரும்பும் வாழ்க்கை மேற்கொண்டு, புகழ்பெருக வாழ வேண்டும் என விரும்பாத அவனைப் பாராட்டிப்பாடுவதைவிடுத்துப் பழித்து ஒரு பாட்டுப் பாடுவாயாக" எனக் கூறினாள்.

இவ்வாறு, தோழி கூறக்கேட்ட அப்பெண், "என் துயரையும், அதை அறியா அவன் கொடுமையையும் கூறியதைக்கொண்டு, அவன்மீது நான் சினங்கொண்டிருப்பதாக எண்ணிவிட்டாள் இத்தோழி; என்னே இவள் அறியாமை! அவன் தவறுடையானும் அல்லன்; அவன் தவறுகண்டு சினங்கொள்வாளும் அல்லள் நான் என்பதை, அவளுக்கு உணர்த்துதல் வேண்டும்" எனக் கருதினாள்; அதனால், அவளை நோக்கித் "தோழி! "ஈதல், இசைபடவாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்ற உண்மையை உணர்ந்தவன் நம்

அன்பன்; அதனால், வறுமையால் வாடித், தன்பால் வந்து, தம் வறுமைநிலையினை உரைத்து வருந்துவார்க்கு, அவர் வறுமைபோக வாரி வழங்கும் வளமும், வற்றாத உள்ளமும் கொண்டுள்ளான்; அவ்வாறு வந்து இரப்பார்க்கு வழங்கலாகா வறுமையுற்றுவிடின், அந்நிலையில், அதைப் பொருள்கொடுத்துப் போக்க மாட்டாது, அவர் வருத்த நிலைகண்டு வாளா வருந்தி வாழ்வதினும், இறந்து, இறவாப் பெருநிலைபெற எண்ணும் சிறப்புயர்ந்த உள்ளமும் உடையவன் அவன்; அத்தகையான், இப்போதே வந்து வரைந்து கொள்ளாமையால் கொடியவன் போல் தோன்றிடினும் உண்மையில் கொடியவனல்லன்; விரைவில் வந்து வரைந்துகொண்டு பேரின்பம் தருவன்; இதை அறியாது, அவனைப் பழிதூற்றும் நின்செயல், முற்றாத காய்களைக்கொண்ட வாழைக்குலையின் ஒரு சீப்பு, மடங்கிய விரல்களைக்கொண்ட புலியின் அடி போலத் தோன்றுவதால், அக்காய்கள் முற்றியபின்னர் பேரின்பம் தரும் பழங்களாய் மாறும் என்பதை மறந்த, அவன் மலைநாட்டு மக்களின் செயலேபோல் அறியாமை உடைத்து எனக் கூறுவாள் போல், அவனையும், அவன் மலையையும் பாராட்டிப் பாடி முடித்தாள்.

இவ்வாறு பாடிய பாட்டின் பயனாய், அவ்விளைஞன் வாராமையால் வாடிய அப்பெண்ணின் உடல், அவ் வாட்டம் ஒழிந்து வனப்புற்றது; அவனை நேரிற் கண்டதைப்போல, அவளும் அக மகிழ்ந்தாள்; அவள் மகிழ்ச்சி கண்டு மகிழ்ந்த தோழி, அவன் வாராமையால், அவள் வருந்தும் வருத்தத்தை இவ்வாறு பலப்பல வழிகளை மேற்கொண்டு போக்கவேண்டிய தன் கடமையினை எண்ணிக்கொண்டிருந்தாள் ஒரு நாள்; அப்போது, அவ்விளைஞன் அவளை நோக்கி வந்தான்; அதைக்கண்டு கொண்ட அவள், உடனே, அவனைக் காணாதாள் போல்

இருந்து, அப்பெண்ணின் வருத்தத்தையும், அவள் அவ்வருத்தத்தை மறந்திருக்கத் தான் மேற்கொள்ளும் ஆடல் பாடல்கள் போலும் பல்வேறு வழிகளையும் பொருளாகக் கொண்ட ஒரு பாட்டை, அவன் கேட்கப் பாடத் தொடங்கினாள். ஆங்கு வந்த அவன், அவள் அறியாவாறு, ஒருபால் இருந்து, அவள் பாடிய பாட்டைக் கேட்டு, தன் காதலியின் துயர் நிலை அறிந்து, அவளை விரைவில் வரைந்துகொள்ளவேண்டிய தன் கடமையில் கருத்துடையானாகிச் சென்றான்; தான் தொடங்கிய வள்ளைப்பாட்டு, தன் தோழியின் துயரத்தை ஒழித்ததோடு, வரைவிற்கும் வழி செய்தது கண்டு அகமகிழ்ந்தாள் தோழி.

தோழியும், அவள் துணைவியும் பாடிய வள்ளைப் பாட்டைக் கூறுவது இச்செய்யுள் :

"வேங்கை தொலைத்த வெறிபொறி வாணரத்து
ஏந்து மருப்பின், இனவண்டு இமிர்பு ஊதும்
சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்,
ஐவன வெண்ணெல் அறைஉரலுள் பெய்து இருவாம்
ஐயனை ஏத்துவாம் போல, அணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய்! பாடுவாம் நாம்;
தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தள்
முகையின்மேல் தும்பி இருக்கும், பகை எனின்,
கூற்றம் வரினும் தொலையான்தன் நட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன் குன்று ?
'வெருள்புடன் நோக்கி வியல் அறை யூகம்,
இருள் தூங்கு இறுவரை ஊர்பு இழிபு ஆடும்
வருடை மான் குழவிய வளமலை நாடனைத்
தெருளத், தெரி இழாய்' நீஒன்று பாடித்தை !
நுண்பொறி மான்செவி போல வெதிர்முளைக்
கண்பொதி பாளை, கழன்றுஉகும் பண்பிற்றே

மாறு கொண்டு ஆற்ருர் எனினும், பிறர் குற்றம்
கூறுதல் தேற்ருதோன் குன்று ;

புணர் நிலை வளகின் குளகு அமர்ந்து உண்ட
புணர்மருப்பு எழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்குஎழில் யானைப் பயமலை நாடனை
மணம் நாறு கதுப்பினுய்! மறுத்துஒன்று பாடித்தை ;

கடுங்கண் உழுவை அடிபோல வாழைக்
கொடுங்காய் குலைதொறூஉம் தூங்கும், இடும்பையால்
இன்மை உரைத்தார்க்கு, அது நிறைக்கல் ஆற்ருக்கால்
தன்மெய் துறப்பான் மலை ;

எனவாங்கு
கூடி அவர் திறம்பாட, என் தோழிக்கு
வாடிய மென்தோளும் வீங்கின,
ஆடமை வெற்பன் அளித்தக்கால் போன்றே."

தலைவன் விரைந்து வந்து வரைந்து கொள்ளானுகத் தலைவி வருந்திய விடத்துத், தோழி தானும் தலைவியும் பாடிய வள்ளைப் பாட்டில் முருகன் புகழ் பாடுவார் போல், தலைவன் புகழ்பாட, அதனுல் தலைவி தன் வருத்தம் நீங்கி வனப்புற்றதைப் பின்னெருகால் தலைவன் சிறைப்புறத்தானுகத், தோழி, தனக்குள்ளே சொல்லியது எனும் துறை அமைய வந்துளது இது.

உள்ளுறை: *காந்தள் மலரும்பருவம் நோக்கி வண்டு இருத்தல், மணத்திற்குச் சுற்றத்தார் மனம் நெகிழும் காலத்தை எதிர்நோக்கித் தலைவன் இருத்தலாம்; வருடை மான் கன்று, தன் இளமையால், மருளத் தகாத கருங்குரங்கைக் கண்டு மருளல், தலைவி, தன் வருத்த மிகுதியால் மயங்கிச் சுற்றத்தார் வரைவிற்கு உடம்படாரோ என அச்சுற்றத்தாரை மருளலாம்; பாளை உதிர்ந்து விடவே மூங்கில் விளங்கித் தோன்றல், தலைவன் வரைந்து கொள்ளவே, பசலை அகலத் தலைவி*

யின் உடல் வனப்புற்றுத் தோன்றலாம்; யானை, பிடியோடு தழை உண்டு இனிது வாழ்தல், தலைவன், தலைவியை மணந்து இன்பம் நுகர்ந்து, இல்லறம் ஆற்றுவன் என்பதாம்; வாழைக்குலை, புலியடிபோல் தோன்றல், வரைந்துகொண்டு பேரின்பம் தரவல்ல தலைவன், வரைந்து கொள்ளாமையால் கொடியவன் போல் தோன்றுதலாம்.

முருகனுக்குக்கூறுங்கால், சூரனை வென்றதும்,வள்ளியைப்பணிந்து பின்னிற்றதும்,தொலையாமையும் தோற்றலுமாம்; அவனும் திருமேனி கொண்டு திகழ்தலின், குற்றம் கூறுமை உண்டு; மக்கள், மாறிமாறிப் பலபிறவி எடுத்துத் துன்புற்று, வீடுபெற மாட்டாது வருந்தி வந்து தம் குறை உரைப்பின், அவர்களை வீட்டுலக இன்பத்தை அடைவித்தற் பொருட்டு, அவர்கள் உள்ளத்தே சென்று தான் தங்குதலாம்.

**1.** வெறி-மதம்; பொறி-புள்ளி; வாரணம்-யானை; **2.** இமிர்பு-ஒலித்து; **4.** இருவாம்-குற்றி; **5.** ஐயன்-முருகன்; **6.** மை-மேகம்; படு-உண்டாகின்ற; பயமலை-பயன்தரும் மலை; **8.** தகையவர்-மகளிர்; செறித்த-அணிந்த; தாள்-விரல்அணி; **9.** முகை-அரும்பு; **12.** வெருள்பு-மருண்டு; யூகம்-கருங்குரங்கு; **13.** இருள் தூங்கு-இருள்நிறைந்த; ஊர்பு இழிபு-ஏறி இறங்கி; **15.** தெருள-விளங்க; பாடித்தை-பாடு; **16.** நுண்பொறி-மெல்லிய ஒலிகளையும் கேட்கவல்ல உறுப்பு; வெதிர்-மூங்கில்; **18.** மாறுகொண்டு-மாறுபட்டு; **19.** தேற்றுதோன்-தெரியாதவன்; **20.** வளகு-ஒருவகைத் தழை; **21.** வரைபுரை-மலையை ஒத்த; **22.** வயங்குஎழில்-விளங்குகின்ற அழகு; **24.** உழுவை-புலி; **25.** கொடுங்காய்-வளைந்தகாய்; தூங்கும்-தொங்கும்; **31.** ஆடுஅமை-அசைகின்ற மூங்கில்.

## 8

# என்னையும் மறைத்தாள்!

இளைஞன் ஒருவன், அழகும் அறிவும் ஒருங்கே வாய்ந்த பெண் ஒருத்தியைக் கண்டு காதல் கொண்டான்; அவர்கள் காதல் நாடகத்திற்குத் துணைசெய்தாள் அப்பெண்ணின் தோழி. தம் மகள் இவ்வாறு காதல் உறவுகொண்டு ஒழுகுவதை அப்பெண்ணின் பெற்றோர் அறியார். தம் மகளின் நல்வாழ்வில் கருத்துடையராய்க் கவலையோடு காத்துவரும் அவர் அறியாவாறு சென்று, அவனைக் கண்டு மகிழ்தல் அவளுக்கும் அரிதாயிற்று. பலமுறை ஆங்கு வந்தும், அவனைக் காணமாட்டாது வறிதே திரும்பினான் அவனும்; அதனால், அவனைக் காணாது, அவள் துயர் உற்றாள். இந்நிலையை மாற்றி, எப்போதும் இடையறாது உடனிருந்து மகிழும் வகையில் மணஞ்செய்து கொள்ள மாட்டானா, என ஆவலோடு எதிர்நோக்கியிருந்தாள் அப்பெண்; ஆனால், கள்வனைப்போல் கரந்துவந்து மகிழ்ந்து செல்வதிலேயே பேரின்பம் உளது எனக் கருதிய அவ்விளைஞன், மணமுயற்சியை விரைவில் மேற்

கொண்டிலன். அதனால், அவள் உள்ளத்துயரும், உடல் தளர்ச்சியும் முன்னினும் அதிகமாயின.

அவன் வாராமையால் வந்துற்ற வருத்தம் ஒருபால் வருத்த, மற்றொரு பெருங்கவலை, அவளைப் பிறிதொரு பால் பற்றி வருத்தத்தொடங்கிற்று; தான்படும் துயரைத் தன் தோழியோ, தன்னோடு ஆடிமகிழும் தன் தோழியர் கூட்டமோ, தன் சிற்றூரில் வாழும் தன் சுற்றத்தினரோ அறிந்துவிடின், தன் வருத்தத்திற்குக் காரணமாய தன் காதலனைப், "பிரியேன் என அன்று கூறிய தன் ஆணையைக் காக்கமாட்டா அறனிலி" என்றும், "பெண்ணின் பெருந்துயர் கண்டும் அதைப் போக்க எண்ணாப் பண்பாடற்றவன்" என்றும் பலப்பல கூறிப் பழிப்பரே என அஞ்சினாள். தன் காதலனைத் தன் முன்னரே பிறர் பழிப்பதையோ, அதற்குத் தானே காரணமாவதையோ அவள் உள்ளம் பொறுக்காது. அவர் கூறும் பழியுரைகளைக் கேட்பதால் உண்டாம் துயரினும், அவன் வாராமையால் உண்டாம் துயர் பெரிது அல்ல என எண்ணினாள். அதனால்: பிரிவுத்துயர் அளவிறந்து பெருகித் தன்னை வாட்டி வதைக்கவும், அதைத் தன் உயிர்த்தோழியோ, உடன் ஆடும் ஆயத்தாரோ, ஊராரோ உணராவாறு உள்ளடக்கிக் காத்துக் கொண்டாள்.

அப் பெண்ணின் இப்பெருநிலைகண்டு, தன்னுள்ளே வியந்து பாராட்டிய தோழி, இவள் வருத்தம் நீங்கி வாழ்வு பெற அவ்விளைஞன் விரைந்துவந்து வரைந்து கொள்ளானோ எனும் விருப்பம் உந்த, ஒரு நாள், அவன் வருகையை எதிர் நோக்கி இருந்தாள்.

அப்போது, ஆங்கு அவள் கண்ட அவன் நாட்டு மலைக்காட்சி அவள் உள்ளத்தை ஈர்த்தது; எதிர்

எதிராக நிற்கும் இரண்டு பெரிய மலைகளையும், அவற்றின் இடைப்பட்ட பள்ளத்தாக்கில், அடிமரம் பருத்து, ஓங்கி வளர்ந்து, கிளையோ, இலையோ தெரியாவாறு மலர்களால் நிறைந்து நிற்கும் ஒரு வேங்கை மரத்தையும், அவ்விரு மலைகளினின்றும் பேரொலியோடு பாய்ந்து வரும் அருவிகளின் நீர், அம்மரத்துக் கிளைகளில் வீழ்வதையும் கண்டு கருத்திழந்திருந்தாள். அக்காட்சி, அன்றலர்ந்த தாமரை மலரில் அமர்ந்திருக்கும் திருமகள் மீது, இரு யானைகள் அவள் இருமருங்கும் இருந்து, பூவையும், நீரையும் சொரியும் காட்சியை நினைப்பூட்ட, அவ்வழகில் தன் நினைப்பிழந்து நின்றவள், தன் தோழியின் நிலையை நினைத்துக் கொள்ளவே " என் ஆருயிர் அனைய அவள், அவள் விரும்பும் அவ்விளைஞனை மணந்து, அவன் மனை புகுந்து, இவள் சுற்றத்தினரும், அவன் சுற்றத்தினரும் ஒருங்கே பாராட்டிப் பெருஞ் சிறப்புச் செய்ய, மக்களைப் பெற்று மனையறங் காத்து மகிழ்ந்து வாழுமாறு, அவன் விரைவில் வரைந்து கொண்டிலனே" என எண்ணிக் கவலையுற்றாள்.

அந்நிலையில், அவ்விளைஞனும் ஆங்கு வந்தான்: வந்தான் பால், அவன் காதலியின் துயர்க் கொடுமையையும், அதைப் பிறர் அறியாவாறு மறைத்து, அவன் பெருமையைப் பேணிக் காத்து, அவனுக்குப் புகழ் தேடித் தரும் அவள் கற்பின் மாண்பையும் எடுத்துக் கூறி, " அத்தகையாளை இனியும் வருந்தவிடல் அறமாகாது. ஆகவே, அன்ப! அவள் துயர் தீர்க்கும் அருமருந்தாய திருமணத்தை, விரைவில் மேற்கொள்ள ஆவன புரிவாயாக" என வேண்டிக் கொண்டாள்.

தோழி கண்ட அவன் நாட்டு மலைக்காட்சி, அப் பெண்ணின் பெருமை, அவ்விளைஞனுக்கு அவள்

*உரைத்த அறவுரை ஆகிய இவற்றைக் கூறுகிறது இச் செய்யுள் :*

கதிர்விரி கனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சாரல்
எதிர் எதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து
அதிர்இசை அருவிதன் அஞ்சினை மிசைவீழ.
முதிர்இணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை,
வரிநுதல் எழில் வேழம், பூ, நீர் மேல் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறுஎய்தித்
திருநயந்து இருந்தன்ன தேங்கமழ் விறல் வெற்ப ;

தன்எவ்வம் கூரினும், நீ செய்த அருளின்மை
என்னையும் மறைத்தாள் என்தோழி, அது கேட்டு
நின்னையான் பிறர் முன்னர்ப் பழிகூறல் தான்நாணி ;

கூறுநோய் சிறப்பவும், நீ செய்த அருளின்மை
சேரியும் மறைத்தாள் என்தோழி, அதுகேட்டு
ஒரும் நீ நிலையலை எனக்கூறல் தான்நாணி ;

நோய்அட வருந்தியும் நீசெய்த அருளின்மை
ஆயமும் மறைத்தாள்என் தோழி அதுகேட்டு
மாயநின் பண்பின்மை பிறர்கூறல் தான்நாணி ;

எனவாங்கு,
இனையனதீமை நினைவனள் காத்துஆங்கு
அனையரும் பண்பினால், நின் தீமை காத்தவள்,
அருந்துயர் ஆரஞர் தீர்க்கும்
மருந்தாகிச் செல்கம் பெரும ! நாம் விரைந்தே,''

**வரைந்து கொள்ளாது வந்து செல்லும் தலைவனைத், தோழி, தலைவியின் கற்புச் சிறப்பும், ஊரில் எழும் அலரும், அதனால் அவள் பெறும் துயரும் கூறி வரைவு கடாயது எனும் துறையமைய வந்துளது இச் செய்யுள்.**

**உள்ளுறை :** *எதிர் எதிர் ஓங்கிய மலைகள், தலைவியின் சுற்றமும் தலைவன் சுற்றமும் ஆம்: அவற்றிடையே உள்ள*

அப்பள்ளத்தாக்கு, தலைவன் மனையாம்; அவ்வேங்கை, தலைவியாம்; அது மலர்ந்து நிற்றல், அவன் மக்களைப் பெற்று மாண்புறுதலாம்; மலையருவிகள் இரண்டும் வேங்கைமீது வீழ்தல், இரு சுற்றத்தாரும் அவளுக்குச் செய்யும் சிறப்புக்களாம்.

1. கதிர்: ஞாயிறு; கனைசுடர்: பேரொளி; 3. அம் சினை: அழகிய கிளை; 4. இணர்: பூங்கொத்து; ஊழ் கொண்ட: நெருங்க மலர்ந்த; முழவுத்தாள்: முரசு போல் பருத்த அடி; 6. வீறு: பிறவற்றிற்கில்லாத சிறப்பு; 7. திரு: திருமகள்; 8. எவ்வம்: துயர்; கூரினும்: மிகினும்; 13. ஒரும்: அசை; 18. இனையன; இவை போலும்; நினைவனள்: பிறர் அறியாவாறு மனதால் எண்ணி; அனை அரும் பண்பு: அத்தகைய உயர்ந்த பண்பு.

# 9

# 'யாமத்தும் துயிலலள்!'

பழைய தமிழ்க்குடியிற் பிறந்த பெண் ஒருத்தி, தன்னைப் போன்றே சிறந்த குடியிற் பிறந்தான் ஒருவனைக் காதலித்தாள்; தாம் கொண்ட அக்காதல் உறவினைத் தம் பெற்றோர் அறியின், மனம் பொறார், அதற்கு இடையூறு விளைப்பர் என அஞ்சினர். அதனால், தங்கள் காதல் விளையாட்டை அவர் அறியாவாறே மேற்கொண்டு வந்தனர். செவிலியும், தாயும் எப்போதும் சூழ்ந்திருக்க வாழ்பவள் அப்பெண் ஆதலாலும், அவள் ஊரும் மனையும் அரிய காவலையுடையன ஆதலாலும், ஒருவரையொருவர் கண்டு மகிழ்தல் எளிதில் இயலுவதில்லை. அவனைக் காணாதே பலநாள் கழிக்க வேண்டி வந்தமையால் அவள் துயர் உற்றாள்; உள்ளத் துயர் மிகுதியால், அவள் உடல் தளர்ந்தது. அத்தளர்ச்சி, அவள் காதல் விளையாட்டை ஊரார்க்கு உரைத்துவிட்டது; அவர்கள் அவளைப் பற்றிப் பலவாறு பேசத் தொடங்கிவிட்டனர்; அவர் கூறிய அவ் வலர், அவள் தாயின் காதிற்கும் எட்டிற்று. பிறர் பழி கூறும்

அளவு பண்பிழந்து விட்டனளே பெண் என்ற நிலையினைப் பொறுத அத்தாய், அவளைக் கடுஞ்சொல் வழங்கிக் கண்டிக்கத் தொடங்கினாள்; "இவ்வாறு பிறந்த ஊரும், பெற்ற தாயும் பழிக்கும் பழிச்சொற் கேட்டு, வருந்துமாறு, என்னைப் பிரிந்து, மறைந்து வாழ்கின்றனனே என் காதலன்' என எண்ணி எண்ணி வருந்தினாள் அவள். அதனால் அவள் துயர் முன்னினும் மிக்கது; கவலையால் கண் ஒளி இழந்தது; தோள் தளர்ந்தது; பொன் போலும் நிறம் பெற்றுப் பேரழகு தோன்ற விளங்கிய உடலும் பசலை படர்ந்து அழகு கெட்டது; இவ்வாறு அவள் வருந்தினாள்.

அவள் வருத்த நிலையினைக் கண்டு கண்ணீர் உகுத்து வருந்தினாள் அவள் தோழி; 'இந்நிலைக்குக் காரணமாவான், அவ்விளைஞனே; இவள் உள்ளத்திற் காதற் கனலை மூட்டிவிட்ட அவன், இவளை என்றும் பிரியாது, எப்போதும் உடனிருக்குமாறு, திருமணம் புரிந்து கொண்டு, தன் மனைக்குக் கொண்டு சென்றிருப்பின், இவள் இவ்வாறு துயர் உறாள்; அவன் அதைச் செய்யாததாலேயே இவ்வளவும் நேர்ந்துவிட்டது; ஆகவே. அவன் வரின் அவன் செய்த இத்தவற்றினை எடுத்துக் காட்டி இடித்துரைத்து வரைவிற்கு வழி செய்தல் வேண்டும் எனத் துணிந்து, அவன் வரவை எதிர்நோக்கியிருந்தாள்.

அவ்வாறு எதிர்நோக்கி இருந்தாள்பால், ஒரு நாள் அவன் வந்தான்; வந்தானை வணங்கி, "அன்ப! ஞாயிற்றின் ஒளியையும் உட்புகாவாறு தடுத்து நிறுத்துமளவு நெருங்கி வளர்ந்த மூங்கிற் காட்டையும், மூங்கில் வளர்ந்த அம்மலையின், இடையிடையே உள்ள, மணம் நாறும் நிறைந்த சுனையையும், அச்சுனையில் அழகு தோன்ற மலர்ந்திருக்கும் காந்தட் பூக்குலையினையும், நீரில்

மலர்ந்து நிற்கும் அக்காந்தட் காட்சி நீர் உண்டு கிடக்கும் நாகம் போலும் தோற்றம் அளிப்பதையும் பலகால் கண்டு, கருத்திழந்து, மகிழ்ந்திருப்பையன்றோ? காண்பார்க்கு அக்காட்சி, கவின் உடையதாய்த் தோன்றினும், அக்காட்சியை, உண்மை நாகம் ஒன்று நீர் குடித்துக் கிடப்பதாகவே கருதிய இடியேறு, பெரிய மலைகளையும் கீழ் மேலாக்கவல்ல கொடிய காற்றோடும், பெரும் மழையோடும் தோன்றி இடிக்கத் தொடங்கவே, அவ்விடியால் எழுந்த பேரொலி, அம்மலையை அடுத்துள்ள ஊரெல்லாம் பரந்து ஒலிக்க, அவ்வொலிகேட்ட அவ்வூர்வாழ் மக்கள், அச்சத்தால் உறக்கம் ஒழித்துத் துயர் உறுவர்; இதையும் நீ அறிவையன்றோ?''

"காந்தட்குலை பாம்பு போல் தோன்றியதைக் கொண்டே இடி இடிக்க, அதனால் அத்தனைக் கேடுகள் உண்டாதலை அறிந்த நீ, பின்னர் இல்லறமாம் நல்லறப் பயனை நல்கும் இயல்பால், இக்களவொழுக்கம், நல்லது போல் நமக்குத் தோன்றினும், அது கரந்து ஒழுகும் ஒழுக்கமே என்ற கருத்துடையராய், ஊரார் கூறும் அலரும், அதைக் கேட்டுத் தாய் கூறும் கடுஞ்சொல்லும், அக் கடுஞ்சொல் கேட்டு, உறக்கம் ஒழிந்து இவள் படும் வருத்தமும் எவ்வளவு கொடியவாம் என்பதை அறிந்து கொள்ள மாட்டாமையால், இவ்வாறு நடந்துகொள்கின்றனையோ? அல்லது அறிந்தும், இவள் பால் உனக்குக் கருணை இல்லாமையால் இவ்வாறு நடந்து கொள்கின்றனையோ?

"உன்னைப் பிரியாது வாழ்ந்து பேரின்பம் நுகர்தல் வேண்டும் எனும் வேட்கை நிறைவேறாமையால் வருந்திய என் தோழியின் கண்கள், அவை பண்டு பெற்றிருந்த, நீலமலர் நிகர்க்கும் பேரழகு கெட்டு, ஒளி இழந்து தோன்றுவதை நீயே காண்; அவை, அவ்வாறு அழகிழந்து

அழியுமாறுவிடல், 'அவை, நீர்அறு அருவிகள் நீண்டு ஓடும் நம் மலையிடத்துச் சுனைகளில் மலர்ந்த நீல மலர்க்கு நிகராய் உள்ளனவே!' என்ற நினைவால் நின் உள்ளத்து எழுந்த பொருமையின் விளைவுதானே? நின் பிரிவாலாய துயர் அளவிறந்து பெருகவே, 'இனி என் உயிர் இவ்வுடலில் வாழாது, இதுவே என் வாழ்நாளின் இறுதிக்காலமாம்' எனக் கூறிப் பெருந்துயர் கொள்ளு மளவு, அவள் தோள்கள், பருத்துத் திரண்டிருந்த தம் பண்டைய நிலைஇழந்து, மெலிந்து தளர்ந்து அழ கிழந்து தோன்றுவதை, அன்ப! நீயே காண். அவை அவ்வாறு அழகிழந்து தளர்ந்தது, 'அவை, யானையை வென்று புலி உலாவும் என் மலையில் வளர்ந்திருக்கும் மூங்கில்போல் தோன்றுகின்றனவே' என, எண்ணும் நின் உள்ளப் பொருமையின் விளைவுதானே? நீ வரைந்து கொள்ளாமையால் வந்துற்ற துயரையும், அதைக்கண்டு தாய் கூறும் கடுஞ்சொல்லையும் தாங்கமாட்டாது, ஊரெல் லாம் உறங்கும் நள்ளிரவிலும் உறக்கம் கொள்ளாது வருந்தியதால், அவள் உடல், தான் பண்டுபெற்றிருந்த பொன்னிறம் இழந்து, பசலை படர்ந்து தோன்றுவதை யும் நீ காண்பாயாக! அவள் உடலழகை இவ்வாறு உருக்குலைத்துச் சிதைத்ததும், 'அவள் மேனி, ஞாயிற் றைத் தீண்டும் உயர்ச்சியையும், வண்டுகள் ஒலிக்கும் குகைகளையும் உடைய நம்மலையில், எரிபோலும் நிறத்த வாய் மலரும் வேங்கையின் மலரை ஒத்துளதே' என்ற பொருமையின் விளைவுதானே? எனப் பலப்பல கூறி அவன் பிழையினைச் சுட்டிக்காட்டினாள்.

இவ்வாறு, அப்பெண்ணின் கேட்டிற்கும், அவள் துன்பத்திற்கும், அவ்விளைஞன் மனத்திடையே தோன் றிய பொருமையே காரணமாம் எனும் கருத்துப்படக் கூறி னாளேனும், அவன் பொருமை கொள்ளும் அத்துணைப்

புல்லியன் அல்லன்; ஆகவே, வரைவு முயற்சி மேற்கொள்ளாது வாளா இருத்தற்கு, அவள்பால், அவனுக்கு அன்பின்மையே காரணமாம் என்பதைக் குறிப்பால் உணர்த்தி, அவனை 'அன்பற்றவன், அருளற்றவன், ஆற்றவும் கொடியவன்' என்றெல்லாம் கூறிக் கடிந்தாள்.

தோழி, இவ்வாறு கடுஞ்சொல் பல வழங்கி, அவளை வரைந்துகொள்ளா அவன் தவற்றினை எடுத்துக் காட்டவே, கண்டு காதல்கொண்ட அன்று, அவளுக்கும் அவனுக்கும் இடையே தோன்றிய அன்பு, அவன் வரைந்துகொள்ள வாராமையால் குறைதல் கண்டு, களவொழுக்கத்தைக் கைவிட்டுக் கடிமணம் புரிந்து வாழத் துணிந்தான் அவ்விளைஞன்; உடனே ஊர் சென்று, உற்றாரையும், ஊர்ப்பெரியோரையும் மணம்பேசி வருமாறு, அப்பெண்ணின் பெற்றோர்பால் அனுப்பினான். அவள் பெற்றோரும், அவன் விரும்பும் அன்றே, அவளை அவனுக்கு மணம் முடிக்க இசைந்தனர். இதை அறிந்து அகம் மகிழ்ந்த தோழி, தான் அவனைக் கண்டதையும், கண்டு கடுஞ்சொற் கூறி, அவன் பிழையை எடுத்துக் காட்டியதையும், அதன் பயனாக, அவன் வரைவு வேண்டி வர, அவள் பெற்றோர் அதற்கு இசைந்ததையும், அப்பெண்ணிற்கு அறிவித்து அவள் கவலையைப்போக்கினாள்.

தோழி, அவ்விளைஞனுக்குக் கூறிய அறவுரையினையும், அதன்பயனையும் அழகாக அமைத்துப் பாடுகிறது இப்பாட்டு:

**விடியல் வெங்கதிர் காயும் வேய்அமல் அகல்அறைக்**
**கடிசுனைக் கவினிய காந்தளங் குலையினை**
**அருமணி அவிர்உத்தி அரவுநீர் உணல் செத்துப்**
**பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கனைபெயல்**
**உருமுக்கண் உறுதலின் உயர்குரல் ஒலிஓடி**

நறுவீய நனஞ்சாரல் சிலம்பலின், கதுமெனச்
சிறுகுடி துயில் எழூஉம் சேண் உயர் விறல் வெற்ப !

கால்பொர நுடங்கல கறங்கு இசை அருவி, நின்
மால்வரை மலிசுனை மலர் ஏய்க்கும் என்பதோ !
புல்லாராப் புணர்ச்சியால் புலம்பிய என்தோழி,
பல்இதழ் மலர்உண்கண் பசப்ப நீசிதைத்ததை ?

புகர்முகக் களிறொடு புலி பொருது உழக்கும் நின்
அகன்மலை அடுக்கத்த அமை ஏய்க்கும் என்பதோ !
கடை எனக்கலுழும் நோய் கைம்மிக என்தோழி
தடையின திரண்டதோள் தகைவாடச் சிதைத்ததை ?

சுடர்உற உறநீண்ட சுரும்புஇமிர் அடுக்கத்த
விடர்வரை எரிவேங்கை இணர் ஏய்க்கும் என்பதோ !
யாமத்தும் துயிலலள் அலமரும் என்தோழி,
காமரு நல்லெழில் கவின்வாடச் சிதைத்ததை ;

எனவாங்கு,
தன்தீமை பலகூறிக் கழறலின் என்தோழி
மறையில் தான் மருவுற மணந்த நட்பு அருகலான்
பிறைபுரை நுதல் ! அவர்ப்பேணி, நம்
முறை வரைந் தனர் அவர் உவக்கும் நாளே."

தலைவன் வரைந்து கொள்ளாமையால் தலைவி வருந்த, தோழி, அவள் துயர்கூறி அவனை வரைவு கடாவ, அது கேட்டு அவன் வரைவொடுவரத், தமர் வரைவு நேர்ந்தமை, தோழி தலைவிக்கு உரைத்தது எனும் துறையமைய வந்துளது இச்செய்யுள்.

**உள்ளுறை :** *மலைப்பாறை, தலைவியின் மனை ; சுனையிடத்துக் காந்தள், சுற்றத்தார் பேணவளரும் தலைவி ; மணம்தரும் காந்தள் பாம்புபோல் தோன்றல், இல்லறப் பயனைத்தரும் களவொழுக்கம் பிறர்க்குத் தீங்குபோல் தோன்றல் ; இடியேற்றின் ஒலி மலையிடமெல்லாம் ஒலித்தல், அயலார் கூறிய அலர் கேட்ட தாய் வழங்கிய கடுஞ்சொல் ; ஊரார் உறக்கம் ஒழிந்தது, தாயின் சுடுசொல் கேட்ட தலைவி உறக்கம் ஒழிந்தது.*

*1.* வேய்: மூங்கில்; அமல்: நிறைந்த; *2.* கடி: மணம். *3.* அருமணி: அரிய மாணிக்கம்; அவிர்: விளங்குகின்ற; உத்தி: பாம்பின் படத்தில் உள்ள வளைந்த கோடு; செத்து: கருதி; *4.* மிளிர்த்தல்: கீழ் மேலாகப் புரட்டல்; *5.* உருமு: இடி; *6.* வீ: மலர்; வீய: மலர்களை உடைய; சிலம்பல்: ஒலித்தல்; *8.* கால்: காற்று; நுடங்கல: அசையா; கறங்கு: ஒலிக்கும்; *10.* புல்ஆராப் புணர்ச்சி: புல்லப்புல்ல வேட்கைமிகும் புணர்ச்சி; *12.* புகர்: புள்ளிகள்; *13.* அமை: மூங்கில்; *14.* கடை என; இதுவே என் வாழ்நாளின் இறுதிக் காலமாம் என; கலுழும்: வருந்தும்; *15.* தடையின: பருத்த; *16.* சுடர் உற: ஞாயிற்றைத் தீண்ட; உறநீண்ட: மிகநீண்ட *17.* எரி வேங்கை: நெருப்புப் போலும் நிறம் பொருந்திய பூக்களைப் பூக்கும் வேங்கை மரம்; *21.* கழறல்: இடித்துக் கூறல்; *22.* மறையில்: களவொழுக்கக் காலத்தில்; *23.* புரை: ஒத்த; *24.* முறை: உறவினர்.

## 10

# ‘பைதலேன் யானே’!

அறிவு, உரு, திரு ஆகியவற்றால் சிறந்த ஆண்மகன் ஒருவன், பேரழகும் பெருங்குணமும் படைத்த பெண்ணொருத்தியைக் கண்டு காதல்கொண்டான். அவர்கள் காதல் வளரத் துணைபுரிந்தாள் அப்பெண்ணின் தோழி. ஆயினும் அவர்கள் காதல் வாழ்க்கையை, அத்தோழி ஒருத்தி நீங்கப் பிறர் எவரும் அறியார். ஆதலின், தாம் விரும்பும்போதெல்லாம் ஒருவரையொருவர் கண்டு மகிழ்தல் அவர்க்கு இயலாதாயிற்று.

தன் காதலியைக் காணப் பலநாள் முயற்சிசெய்தான் அவ்விளைஞன்; ஆனால், ஒவ்வொருநாளும், அவன் முயற்சி வீணாயிற்று; ஒருநாள், ஊர்க்காவல் கடுமையாக இருந்தது; அதனால், அன்று ஊருள் நுழையாமலேயே திரும்பிவிட்டான்; மறுநாள், அவன் அவ்வூருக்குப் புதியவன் ஆதலின், அவ்வூர் நாய்கள் அவனைக் கண்டதும் குரைத்துத் துரத்தத் தொடங்கவே, தன் வருகையை ஊரார் உணர்ந்து கொள்வர் என அஞ்சி அகன்றுவிட்டான்; பிறிதொருநாள், காவலர் கண்ணிலும்படாது, ஊர்நாய்கள் உணர்தலினின்றும் தப்பி, அப்பெண்ணின்

வீட்டிற்கருகே வந்து சேர்ந்தான்; ஆனால், ஆங்கு, அவள் தாய், உறங்காது விழித்துக்கொண்டிருந்தமையால், அப்பெண் வெளிவந்திலள்; அதனால், கருதிவந்த காரியம், அன்றும் கைகூடப் பெறுமையால் கலங்கி மீண்டான். வேறொருநாள், காவலர் கண்ணிற்கும் அகப்படாமல், நாய்களின் தொல்லையையும் கடந்து, வந்துவிட்டான்; அப்பெண்ணின் தாயும் உறங்கிவிட்டாள்; ஆனால், அந்நிலையில், வெண்திங்கள் வெளிப் போந்து, பேரொளி பரப்பத் தொடங்கிவிட்டது; அதனால் களவொழுக்கத்திற்குத் தகுதியுடையதன்று அக்காலம் எனக் கருதி, ஊர்திரும்பிவிட்டான். ஒருநாள், அவன் வருகைக்கு எவ்விதத் தடையும் உண்டாகவில்லை; அவ்வாறு வந்துசேர்ந்த அவன், அப்பெண்ணிற்குத் தன் வருகையை அறிவிக்கும் குறியாக, முன்னரே அறிவித்திருந்தவாறு, நொச்சிமலரைப் பறித்து எறிந்து சிறு ஒலி எழுப்பினான். ஆனால், அவன் வருதற்கு முன்னர், நொச்சி மலர் ஒன்று, எவ்வாறோ காம்பற்று வீழ, அதனால் எழுந்த ஒலியை, அவன் வருகை அறிவிக்கும் குறியாகக் கருதி, அப்பெண், ஆங்குவந்து, அவனைக் காணாது கலங்கி, வறிதேமீண்டனளாதலின், இம்முறை அவனே வந்து ஒலி எழுப்பிக் குறிசெய்தானாகவும், அதையும், முன்னதைப் போன்றதாகவேகொண்டு வாராதே நின்றுவிட்டாள்; அதனால், அன்றும் அவளைக் காணாது மீண்டான்.

இவ்வாறு, பல நாள் வந்து வந்து, அவளைக் காண மாட்டாது, வறிதே மீண்டு, இளைஞன் ஒருபால் வருந்த, அப்பெண்ணும் அவன் வருகையை எதிர்நோக்கி, ஒவ்வோர் இரவும், அவன் வந்து, தன் வருகையை அறிவிக்கும் குறியாகப் பறித்துப் போடும் நொச்சிப்பூ விழும் ஒலி கேட்காதா எனக் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு,

விழிப்பாயிருந்து, அது கேளாமையால், அவன் வந்திலன் எனக் கொண்டு வருந்தியும், வரும் வழியில் அவனுக்கு யாதேனும் ஏதம் உண்டாயிருக்குமோ என அஞ்சியும் உயிர் வாழ்ந்துவந்தாள்.

ஒருநாள் தன் தோழியினிடம், "தோழி! காதலனைக் கண்டு மகிழவேண்டும் எனும் வேட்கை மிகுதியால், மழைத்துளி உண்டு உயிர்வாழ்வதாய வானம்பாடிப் பறவை, அம்மழை மாருது பெய்து, தன்னைக் காத்தல் வேண்டும் என்னும் கருத்தால், அம்மழையைப் பாடி வாழ்வதைப்போல், அவன் அன்பே என்னை வாழ்விக்க வல்லது ஆதலின், அவ்வன்பைப் பெறுதல் வேண்டி, அவன் வருகையை எதிர்நோக்கியும், என்னைக் காணும் ஆர்வம் உந்த வரும் அவன், வந்து என்னைக் காணுத விடத்து, வருந்தும் அவன் வருத்த நிலை எண்ணியும், இரவெல்லாம் உறங்காதிருந்து வருந்துகின்றேன் யான். இதையெல்லாம் அறியாத அவன், 'பேய் மழை பெய்யும் மாரிக் காலத்தில், இடியேறு இடிக்கும் இரவில், காட்டுக் கொடு விலங்கும், காட்டாறும், அணங்கும், ஆறலைக் கள்வரும் குறுக்கிடும் வழியை, இவள் அன்பால் அஞ்சாது கடந்து வந்த என்னை வரவேற்று மகிழாது, ஏமாற்றி விட்டனளே' எனப் பிழையை என் மீதேற்றி வருந்துவதை அறியப் பெரிதும் வருந்துகிறது என் உள்ளம்; இதற்கு யாது செய்வேன் தோழி!" எனக் கூறி வருந்தினுள்.

அப்பெண்ணின் துயர்நிலை கண்ட தோழி, 'இவ்வாறு இவளைக்காணமாட்டாது அவன்வருந்துதற்கும், அவனைக் காண மாட்டாது இவள் வருந்துதற்கும், அவ்விளைஞன், இவளைப் பலர் அறிய மணந்து மனையறம் மேற்கொள்ளும் கருத்திலனுய், இவ்வாறு மறைந்து ஒழுகும் இக்களவொழுக்கக் கருத்துடையனுய், இரவிலும் பகலிலும்

வந்து செல்வதே காரணமாம். ஆதலின், இம்முறையினைக் கைவிட்டு, மணத்திற்கு வழி செய்யுமாறு அவனை வற்புறுத்துதல் வேண்டும்' எனத் துணிந்தாள்.

அவ்வாறு துணிந்த தோழி, ஒரு நாள் அவ்விளைஞன் வந்தானாக, அவனை அன்போடு வரவேற்று, "ஐய! தனக்கு இன்பம் அளிக்கவல்ல தேன் நிறைந்த மலர், அத்தேனை உண்ணத் தான் வாராமை கொண்டு வருந்த, தேன் உள்ள அம்மலரிற் கிடந்து தேன் உண்டு மகிழக் கருதாது ஓடிய ஒரு தும்பி, இடைவழியில் ஒரு புலியும் ஒரு யானையும் போரிடுதல் கண்டு, புள்ளிகள் நிறைந்த புலியின் உடலை, மலர்கள்நிறைந்த வேங்கை மரக்கிளையாகவும், யானையின் முகத்துப் புள்ளிகளை, அவ்வேங்கை மரக்கிளையில் மலர்ந்துகிடக்கும் மலராகவும் கருதி மயங்கி, அவற்றில் தேன் உண்ணவேண்டி, முதலில் புலியின் உடலை அடுத்து நோக்க, அங்கு மதுதரும் மலர் இன்மை கண்டு, அதை விடுத்தும், யானையின் முகத்திற்சென்று நோக்க, ஆங்கும் ஏமாற்றமே உற்று, அதையும் விடுத்தும், இவ்வாறே, பகைத்து நிற்கும் இரு பேரரசர்களை, அவர் பகை யொழித்து வாழ்விக்க விரும்பிய சான்றோர் ஒருவர், அவர்க்கு வேண்டும் அறிவுரை வழங்கி, அதை முடிப்பான் வேண்டி, அவ்வரசர்களிடையே பலமுறை மாறிமாறிச் சென்று மீள்வதைப்போல், புலியின் உடலிற்கும், யானையின் நுதலுக்குமாக, மாறி மாறி அலைந்து திரியும் அழகிய காட்சிகளையும், பள்ளத்தே பாய்ந்தோடும் அருவிகளையும் கொண்ட மலைநாட்டிற்குரியனை நீ, நாள்தோறும் தவறாது வருகின்றனை; ஆகவே, அவள் வருத்தத்திற்கு நீயும் காரணம் அல்லை; அவளும், நின் வருகையை எதிர்நோக்கி, ஒவ்வொருநாளும் உறக்கம் கெட்டு விழித்துக்கொண்டுள்ளாள், ஆதலின், அதற்கு அவளும் காரணம் அல்லள்; ஆயினும், 'கருதி வந்த

இன்பம் கைகூடப் பெருமைக்கு, என்னைக் காணவராது, ஏமாற்றிய அவளே காரணமாம்' என, நீ கருதுவதாக அறிந்து 'என்மீது பழியில்லையாகவும், என்னை அவன் பழிக்கின்றனனே, இதற்கு என் செய்வேன்?' எனக்கூறி வருந்துகின்ருள் நின்காதலி. அன்ப! அவள் வருத்தம் போக்கிப் பேரின்பம் நுகர வேண்டின், அவள்பாற் சென்று, 'நாம் இருவரும் ஒருவரையொருவர் கண்டு மகிழாவகைப் பிழை புரிந்தாள் நீயும் அல்லை; பிழை புரிந்தோன் யானும் அல்லன்; அப்பிழை புரிந்தாள் நின் தோழியே' எனப் பொய்யொன்று கூறுவாயாக; நின் எண்ணமே, அவள் எண்ணமாம்; நீ கூறியதையே அவளும் கூறுவள்; ஆதலின், நீ கூறியதை உண்மையெனக்கொண்டு உளம்தேறுவள்'' என்று கூறி நிறுத்தினுள்.

அவ்வாறு கூறக் கேட்ட அவ்விளைஞன், "இன்பம் இருப்பதாக எண்ணி யான் விரும்பும் இவ்விரவுக்குறி, பகற்குறிகளால் என் காதலி இவ்வளவு துயர்உற நேர்ந்ததே; என்னே என் அறியாமை! யான் செய்த தவற்றினை, தன்மேல் ஏற்றுக்கொண்டு, தன் தோழியின் துயர்துடைக்கத் துணியும் இத்தோழியின் அன்பினை எவ்வாறு பாராட்டுவேன்; யான் செய்த தவற்றினை, என் மலைநாட்டு மாண்பினைப் பாராட்டு வாள்போல், அன்ப! நீயும் நின்காதலியும் இணைபிரியாதிருந்து இன்பம் துய்த் தற்குத் துணைபுரியவல்ல திருமணம் செய்துகொள்ளும் கருத்திழந்து, இன்பத்திற்கு இடையூறு பல பயக்கும் இரவுக் குறியிலும், பகற் குறியிலும் எண்ணத்தை விடுத்து, இன்பம் பெற மாட்டாது வருந்தும் நின்அறியாமையினை என்னென்பேன்' எனக் கூறுமறக் கூறி இடித் துரைக்கும் இவள் அறிவின் திறத்தை என்னெனப் புகழ்வேன்'' என்றெல்லாம் எண்ணி, இறுதியில்,

*"அவள் வருந்த. இவள் இடித்துரைக்கக் காரணமாய இக்களவொழுக்கத்தை இன்றே கைவிட்டு, வரைவிற்கு ஆவனவற்றை விரைந்து மேற்கொள்வேன்" எனும் துணிவோடு தன் ஊர் சென்றான்.*

*இளைஞன் மனத்தை மாற்றிய தோழியின் மாண்பு நிறை சொற்களைச் சுவைபடக் கூறுகிறது இச்செய்யுள்:*

"வீயகம் புலம்ப, வேட்டம் போகிய
மாஅல் அம்சிறை மணிநிறத் தும்பி,
வாய் இழி கடாத்த, வான் மருப்பு ஒருத்தலோடு
ஆய்பொறி உழுவை தாக்கிய பொழுதில்,
வேங்கையஞ் சினை என, விறற்புலி முற்றியும்,
பூம்பொறி யானைப் புகர்முகம் குறுகியும்,
வலிமிகு வெகுளியால், வாள்உற்ற மன்னரை
நயன் நாடி நட்பு ஆக்கும் வினைவர்போல், மறிதரும்
அயம் இழி அருவிய அணிமலை நன்னாட !

ஏறு இரங்கு இருளிடை இரவினில் பதம்பெறாஅன்
மாறினென் எனக்கூறி மனங்கொள்ளும் தான் என்ப ;
கூடுதல் வேட்கையால் குறிபார்த்துக் குரல் நொச்சிப்
பாடு ஒர்க்கும் செவியோடு பைதலேன் யானாக ;

அருஞ்செலவு ஆரிடை அருளிவந்து அளிபெறாஅன்
வருந்தினென் எனப்பல வாய்விடூஉம் தான் என்ப ;
நிலை உயர் கடவுட்குக் கடம்பூண்டு தன்மாட்டுப்
பலசூழும் மனத்தோடு பைதலேன் யானாக ;

கனைபெயல் நடுநாள் யான் கண் மாறக் குறிபெறாஅன்
புனையிழாய் ! என்பழி நினைக்கு உரைக்கும் தான் என்ப
துளிநசை வேட்கையால் மிசைபாடும் புள்ளில்தன்
அளிநசைஇ யார்வுற்ற அன்பினேன் யானாக ;

எனவாங்கு,
கலந்தநோய் கைம்மிகக் கண்படா என்வயின்,

புலந்தாயும் நீ ஆயின் பொய்யானே வெலகுவை ;
25. இலங்குதாழ் அருவியோடு அணிகொண்ட நின்மலைச்
சிலம்பு போல் கூறுவ கூறும்
இலங்கு ஏர் எல்வளை இவளுடை நோயே.''

அல்ல குறிப்பிட்டுத் தலைவன் மீள, 'அதனை என் பிழையாகக் கருதுவன்' எனக்கவன்று ஆற்றுளாகிய தலைவியது நிலைமை, தோழி, தலைவர்க்குக் கூறி, 'இது நின்தோழியால் ஆயிற்று' என, எனது பிழைப்பாக்கி, அவளை ஆற்றுவிப்பாய் எனக்கூறி, வரைவு கடாயது எனும் துறையமைய வந்துளது இது.

**உள்ளுறை :** *பூ, திருமணம்; அதை விடுத்துச் சென்ற தும்பி, மணம்செய்து கொள்ளக் கருதாத தலைவன்; தும்பி, புலியையும், யானையையும் வேங்கையாகக்கொண்டு திரிதல், தலைவன், இன்பம் தாராத, இரவுக்குறி, பகற் குறிகளை இன்பம் தருவனவாகக்கொண்டு, அவற் றிடையே உழலல்.*

*1. வீ : மலர் ; 2. மாஅல் : பெருமை ; சிறை : சிறகு; 3. கடாம் : மதநீர் ; மருப்பு : தந்தம் ; ஒருத்தல் : யானைத் தலைவன் ; 4. உழுவை : புலி ; 8. நயன்நாடி: நட்பாக்கும் வழியை ஆராய்ந்து ; வினைவர் : சான்றோர் : மறிதரும்: மாறி மாறித்திரியும் ; 9. அயம் : பள்ளம் ; 10. ஏறு : இடி; பதம் : காணும் வாய்ப்பு ; 12. குரல் : கொத்து; 13. பாடு: விழும்ஒலி ; ஓர்க்கும் : நுணுகிக்கேட்கும். பைதல், துன்பம் ; 15. வாய்விடுஉம்: வாய்திறந்து கூறும்; 16. நிலைஉயர் கடவுள் : தம்நிலைஉயரத் துணைபுரியும் கடவுள் ; கடம் : விரதம் ; 20. துளி : மழைத்துளி ; மிசை: வானம் ; 21. நசைஇ : விரும்பி ; 24. பொய்யானே புலந் தாயும் ஆயின் வெல்குவை என மாற்றுக. 26. சிலம்பு: பக்கமலை ; 27. எல் : ஒளி.*

# 11

# நல்லறம் உணர்ந்த நம்பி

உலக மக்களுக்கு உறுதுணையாய உயர்ந்த நீதிகளை உரைக்குங்கால், 'அறம் அறிந்தவன் நான்; ஆகவே, நான் கூறுவதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்' என, ஆணவம் தோன்ற ஆணையிட்டுரைக்காது, அவற்றை, உலகோர் உள்ளம் விரும்பி ஏற்குமாறு, இனிய சொற்களால், இரந்து நிற்பார்போல், எடுத்து இயம்பவல்ல சொல்லின் திறன் அறிந்தவன்; உண வின்றி வருந்திய உலகத்து உயிர்கள் எல்லாம் ஒருங்கே வந்து இரப்பினும், அவ்வனைத்துயிர்க்கும் உணவு முதலாயின அளித்துக் காக்கவல்ல அருள்உள்ளமும், அதற்கேற்ற ஆற்றலும் உடையான்; வாழ்க்கைக்கு வழி காட்டும் அரிய நூல்களை ஐயந்திரிபறக்கற்று, கற்ற அந் நூல்களைக் கேட்பார் உளங்கொள்ளுமாறு உரைக்கவல்ல பேராசிரியர்களைத் தேடிச் சென்று, வணங்கி வழிபட்டு நின்று, அவர்பால் அந்நூற் பொருள்களை அறிந்த பேரறிவாளன்; நற்குண, நற்செய்கைகளால் நிறைந்த நல்லோர்களிடத்துமட்டுமே காணலாம் தீயனஎண்ணு

மன அடக்கமும், தீயன உரையா நாவடக்கமும், தீயன புரியாச் செயலடக்கமும் வாய்க்கப்பெற்றவன்" பொருள் இல்லாது, வருந்துவார்தம் வருத்தத்தை அவர் விரும்பும் பெரும் பொருள் அளித்துப் போக்கவல்ல உள்ள உறுதியும், அதற்குத் துணையாய பெரும் பொருளை ஈட்டவல்ல செயல் திறனும் சேரப் பெற்றவன்; அத்தகையான் ஓர் இளைஞன், பெண்மைக் குணங்களைக்குறைவறப் பெற்றாள் ஒருத்தியைக் கண்டு காதல் கொண்டான்; அவளும் அவனைக் காதலித்தாள். ஆயினும், அவர்கள் கொண்ட காதல், அப்பெண்ணின் உயிர்த்தோழியின் துணையினைப் பெற்றாலன்றி நிலையாது; நிறைவேறாது என்பதை அவன் அறிந்தான்.

அதனால், அவளைக்கண்டு காதல் கொண்ட மறு நாள், அத்தோழி தனித்திருக்கும் அமயம் நோக்கி, அவள்பால் சென்று, தன் ஆண்மை, அறிவுடைமை முதலாம் பெருமைகளை, அப்பெண்ணின்பாற் கொண்ட பெருங்காதலால் மறந்து, பணிந்து, பின்னின்று, தான் அப்பெண்ணைக் காதலிப்பதையும், அவளும் தன்பால் அன்பு கொண்டிருப்பதையும் கூறி, 'எங்கள் காதலை வாழ்த்தி வளர்க்கும் வழித்துணையாய் விளங்குமாறு நின்னை வேண்டிக்கொள்கிறேன்' என்றான். இவ்வாறு அவன் வேண்டிக்கொண்டது ஒருநாள் இருநாள் அல்ல; ஒரு முறை இருமுறை அல்ல; பலநாள் வந்து பலமுறை வேண்டிக்கொண்டான்.

அவ்விருவர்க்கும் இடையிடையே ஏற்பட்ட அக் காதல் உறவினை, அப்பெண், அவள்பால் அறிவித்திலள் ஆயினும், அவள் நிழல் போல் நின்று காக்கக் கடமைப் பட்டவளாய அத்தோழி, அதனை அறிந்து கொண்டுள்ளாள் ஆதலாலும், அதனால், அன்று முதலாகவே, அவ்விளைஞன் யாவன்? அவன் உற்றார் யார்? உறவி

னர் யாவர்? யாது அவன் பண்பு என்பன போலும் செய்திகளை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டுள்ளாள் ஆதலாலும், ஒருநாள், அவன் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து, அதற்குத் துணை செய்வதாக வாக்களித்து விட்டாள்.

குறை கேட்டுத் துணை புரிய, அவ்விளைஞனுக்கு உறுதியளித்த தோழி. அப்பெண்ணின் பாற் சென்று, காதல் கொண்டு, உள்ளத்தே அவ்வுணர்வு தோன்றினமையால், நெற்றி மணம் நாறுகின்றனை எனக்கூறுவாள் போல், நறுமணம் நாறும் நுதலினை உடைய நல்லாய்! என விளித்து, அவள் பால், அவ்விளைஞனைப் பற்றியும், அவன் பால் காணலாம் நற்பண்புகளையும், அவன் தன் பால் வந்து கூறும் குறைகளையும் கூறி, 'அவனை ஏற்றுக் கோடல் வேண்டும்' எனக் கூறினள். தன் தோழி அவ்வாறு கூறக் கேட்ட அப்பெண், தான் கொண்ட காதல் உறவினைத் தோழி அறிந்துகொண்டாள்; ஆகவே, இனி அதற்கு அவள் துணை கிடைக்கும் என உள்ளம் ஒருபால் மகிழினும், அவள் பெண்மைக் குணம், தோழி கூறியவாறு, அவனை அப்போதே ஏற்றுக் கொள்ளச் சிறிதே தயங்கிற்று. அத்தயக்கம் கண்ட தோழி, அப்பெண் தன்முன் இருக்கவும், அவளைப் பிறர்போலக் கொண்டு பின் வருமாறு கூறத் தொடங்கினள் :

"அவ்விளைஞனே, 'உன்னைப் பெறாது என் உயிர் வாழாது' என்று கூறுகிறான்; ஆனல், இங்குள்ளவர்களோ, 'அவ்வாறு, பெறுதற்கரிய தன் உயிரையே பேணாது இழக்கத் துணியும் ஒருவன் சொல்லை எவ்வாறு நம்புவது' என்று கூறுகின்றனர்; இந்நிலையில் இடை நிற்கும் யான் அன்றோ வருந்துகின்றேன்; என் வருத்தம் இங்குள்ள எவர்க்கு உளது?

"அவ்விளைஞனே, 'நின் அன்பைப் பெறமாட்டாது வருந்துகின்றேன்; இதனை நீ அறிந்திலை' எனக் கூறி இரக்கின்றான்; அவன் யாவன்? யாது அவன் இயல்பு? அவன் அன்பு உண்மை அன்புதானோ? அவனை நம்புதல் ஒண்ணுமோ? என்பனவற்றைப் பெண் ஒருத்தி, தனியே இருந்து ஆராய்ந்து முடிவு காணல் அரிதினும் அரிதாம்; ஆகவே, அவள், தனக்கு வேண்டிய தோழியோடு கூடிக் கலந்து இருவருமாக ஆராய்ந்து முடிவு காணல்வேண்டும். ஆனால், அவள், அதைச் செய்யாது வாளா இருக்கின்றனள்; இந்நிலையில், அவ்விளைஞன் அன்பிற்குக் கட்டுப் பட்ட என் போல் வருந்துவாரும் உலகில் இருப்பரோ? உறுதியாக ஒருவரும் இரார்; என்னே இக் கொடுமை!

"அவ்விளைஞனே, 'நீ என் அன்பை ஏற்றுக் கொண்டு அருள் புரியாயாயின், யான் உயிர் வாழேன்' என்று கூறுகின்றான்; ஆகவே, அவ்வாறு அன்பு பூண்டானை ஏற்றுக் கொள்வதே அறிவுடைமை; அதை நின் பெண்மை தடை செய்கிறது; அது கண்ட பிறர், உன்னை, அறிவிலி எனக் கூறுகின்றனர். பேரவு பெற்ற வளாய உன்னை அறிவிலி என அழைத்தல், நினக்குப் பழியாகத் தோன்றுகிறது; இந்நிலைக்கு யாது செய்வது என்பதை அறியமாட்டாது வருந்துகின்றேன்; ஆகவே, அன்புடையாய்! நாம் இருவரும் கூடி ஆராய்ந்து ஒரு நல்ல முடிவு காணலாம் வருக!"

இவ்வாறு கூறியவள், சிறிது இடையிட்டு, மீண்டும் தொடங்கிப் "பெற்ற தாயினும் பெரிதாகப் பேணிக்காக்க வேண்டிய நாண், நம்பால் இருந்து வருத்துவதால், அவனை ஏற்றுக் கொள்ளாது, போகவிடுதல், 'நின்னைப் பெற இயலாது போயின், இறப்பதே இனிதாம்' எனத் துணிந்து நிற்கும் அவன் நிலைகண்ட நமக்குப் பொருந் தாது; அவ்வாறு போகவிடாது, ஏற்றுக் கொள்வோம்

எனிலோ, 'அயலான் ஒருவனைப் பெண் ஒருத்தி ஆட்கொண்டாள்' எனப் பிறர் பழி கூற நடந்து கொள்ளுதல் நம் பெண்மைக்குப் பொருந்தாது; நம் நிலைமையோ இது; ஆனால் அவ்விளைஞனோ, இதை யெல்லாம் எண்ணிப் பாராது, நின் நெஞ்சைத் தனதாக்கிக் கொள்ளத் துணிந்துவிட்டான்; ஆகவே; இனி எதையும் எண்ணிப் பாராது, அவனை ஏற்றுக் கொள்வதே அறிவுடைமையாம்'' எனக் கூறினாள்.

அவள் அவ்வாறு கூறியும், அப்பெண் அவனை ஏற்றுக் கொள்ளத் தயங்குவது கண்டு, "இனித் தயங்குவதில் பயனில்லை; அவன் வேண்டுகோளுக்கு இசைந்துவிட்டேன்; அவனை, ஓரிடத்தே இருத்திவிட்டு வந்துள்ளேன்; ஆங்குச் சென்று, அவன் குறையேற்று, அன்பு செய்வதே அறிவுடைமை'' என்று, தன் துணிவினைக் கூறுவாள், அதை அவளை நோக்கிக் கூறாது தன்நெஞ்சை நோக்கிக் கூறுவாள் போல், 'நெஞ்சே! அவ்விளைஞன்பால் சென்று, 'அன்ப! நின்குறையினை ஏற்றுக்கொண்டேன்! ஆகவே வருக!' எனக் கூறி, அவன் விரும்பும் இடத்தே சென்று இருப்பாயாக!'' எனக் கூறினாள். தோழி, இவ்வளவும் கூறவே, இனியும் தயங்குவது கூடாது எனும் கருத்தினளாய், அப்பெண் அவன் அன்பினைச் சென்று ஏற்றுக் கொண்டாள்.

இளைஞன் குறையேற்றுக் கொண்ட தோழி, அதைக் குறைவற முடித்தற்பொருட்டு, நடித்த நாடகத்தின் நல்ல காட்சிகளை, அழகொழுகும் ஓவியமாக வரைந்து காட்டுகிறது இச் சொல்லோவியம் :

"ஒன்று, இரப்பான் போல், எளிவந்தும் சொல்லும்; உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்;
வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல்,
நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன்;
இல்லோர் புன்கண் ஈகையில் தணிக்க :

வல்லான் போல்வதோர் வன்மையும் உடையன் ;
அன்னான் ஒருவன், தன் ஆண்தகை விட்டு, என்னைச்
சொல்லும் சொல் கேட்டீ, சுடர் இழாய் ! பன்மாணும்.

'நின் இன்றி அமையலேன் யான்' என்னும் அவனாயின் ;
அன்னான் சொல் நம்புண்டல் யார்க்கும் இங்கு அரிதாயின்,
என்உற்ற பிறர்க்கும் ஆங்கு உளகொல்லோ ? நறுநுதால் ?

'அறியாய் நீ வருந்துவல் யான்' என்னும் அவனாயின் ;
தமியரே துணிகிற்றல் பெண்டிர்க்கும் அரிதாயின்,
அளியரோ எம்போல ஈங்கு இவன் வலைப்பட்டார் !

'வாழலேன் யான்' என்னும் நீ நீப்பின் அவனாயின்,
ஏழையர் எனப்பலர் கூறும் சொல் பழியாயின்,
சூழுங்கால் நினைப்பதொன்று அறிகிலேன், வருந்துவல் ;
சூழுங்கால், நறுநுதால் ! நம்முளே சூழ்குவம் ;

அவனை
நாண்அடப் பெயர்த்தல் நமக்கும் ஆங்கு ஒல்லாது,
பேணினர் எனப்படுதல் பெண்மையும் அன்று ; அவன்
வௌவினன் முயங்கு மாத்திரம் வா எனக்
கூறுவேன் போலக் காட்டி,
மற்றுஅவன் மேளவழி மேவாய் நெஞ்சே !''

**தலைவனுக்குக் குறை நேர்ந்த தோழி, அவன் இயல்பினைத் தலைவிக்குக் கூறி, அவன் குறை நயப்பத் தன்னுள்ளே சொல்லியது எனும் துறை கொண்டுளது இது.**

*2. மதுகை: வன்மை; 5. புன்கண்: துன்பம்; 7. ஆண்தகை: ஆண்மைத் தன்மை; 8. பன்மாணும்: பலகாலும்; 14. அளியர்; இரங்கத்தக்கார்; 15. நீப்பின்: ஆட்கொளாது கைவிடின்; 16, ஏழ்மை: ஈண்டுஅறிவுக் குறைபாடு; 17. சூழ்தல்: ஆராய்தல்; 20. அட: வருத்த; பெயர்த்தல்: போக்குதல்; ஒல்லாது: பொருந்தாது; 22. வௌவுதல்: மேற்கொள்ளுதல்; 24.மேளவழி: தங்கி உள்ள இடம்; மேவாய்: சென்று சேர்வாயாக.*

## 12

# களிறும் புலியும் மயங்கிய காடு

ஒளி உட்புகாவாறு ஓங்கியும், உயர்ந்தும், அடர்ந்தும் வளர்ந்த மரங்களைக்கொண்ட ஒரு பெருமலை; அம்மலையில் தோன்றிப் பெருக்கெடுத்தோடும் ஒரு பேராறு; அவ்யாற்றின் இடையிடையே அடர்ந்த காடுகள், அம்மலைக் காடுகளையும், ஆற்றிடைக் குறைக்காடுகளையும் இடமாகக் கொண்டு வாழும் யானைக் கூட்டங்கள்; 'வேங்கை மலர்போலும் புள்ளிகளையும், மழையென ஒழுகும் மதநீரையும் பெற்றுள்ளமையால், தேன்உண்ணும் வண்டுகள் திரண்டு மொய்க்கும் நெற்றியுடையன; எட்டுத் திசைகளையும் காக்கவல்லன; பகைத்தவை எவையும் எதிர்நிற்க மாட்டாது அஞ்சி ஓடவல்ல வன்மை வாய்ந்தன' என, அக்களிறுகளின் ஆற்றல் கண்டு அஞ்சாது, கழுத்துப் பருத்துப் பெருவலிகொண்ட புலிகள், அவற்றைத் தாக்கிப்போரிடும் காட்சிகள்; இவ்வாறு ஆறும் மலையும், மாவும், மரமும் பெற்று வளம் நிறைந்து விளங்கும் நாட்டிற்கு உரியான் ஓர் இளைஞன், தன்

நாட்டை அடுத்திருந்த மற்றொரு மலைநாட்டிற்கு உரியா னொருவன் மகளைக் கண்டு காதல் கொண்டான்; அவளும், அவனைக் காதலித்தாள்.

இவர்கள் காதலை, இருவர் பெற்றோரும் அறியார்; அதனால், அவ்விளைஞன், எவரும் காணாவாறு, இரவில் மறைந்துவந்து, அப்பெண்ணைக் கண்டுமகிழ்ந்து செல்வா னாயினன்; அவன் வருகை ஒருநாள் தவறினும் அப் பெண் வருந்துவள்; அவன் வாராமைகொண்டு வருந்து வாளைப், பிறிதொரு எண்ணமும்பற்றிப் பெருந்துயர் தந்தது; அவன் வரும் வழி, காடுகளையும், காட்டாறுகளை யும், மலைகளையும், மடுக்களையும் கொண்டது; புலியும் களிறும் போரிட்டு வாழும் பொல்லாங்கு நிறைந்தது; அவ்வழி வருவார், ஆங்கு இடையூறு ஏதும்பெறுது, அவ்விடத்தைக் கடத்தல் அரிதினும் அரிதாம்; வழியின் இக்கொடுமைகளை அறிந்த அவளை, இவ்வெண்ணம் பெருந்துயர்க்கு உள்ளாக்கும்; அதனால். அவன் வாரா திருப்பினும் நன்று, என ஒருகால் எண்ணுவள்; ஆனால், அவன் பிரிவுத்துயர், அவளைப் பெரிதும் வருத்தவே, அவன் வருகையை, நாள்தோறும் ஆர்வத்தோடு எதிர் நோக்கி யிருந்தாள்.

பெரு மழையும், பேய்க்காற்றும் கலந்து கொடுமை செய்யும் மாரிக்காலம் என்றோ, அக்காலத்து இரவின் இடையாமம் என்றோ, எண்ணுது, உறங்காதிருந்து அவன் வருகையை எதிர்நோக்கி யிருப்பள்; வந்து, தன் வருகையை அறிவிக்க அவன் எழுப்பும் ஒலிகளை எதிர் நோக்கி எதிர்நோக்கி ஏமாறுவள்; அவ்வாறு ஏமாறி யவள் ' என்னைக் காண வந்து, இடைவழியில் ஏதம் உற்றனனோ? அல்லது என்பால் அன்பு அற்றுப்போக, வாராதே இருந்து விட்டனனோ' என எண்ணித்துயர் உறுவள்; இதனல், அவள் துயர் பன்மடங்காய் வளர்ந்

தது; அவள் தோள்கள், முன் கையில் அவள் அணிந்திருந்த ஒளிவீசும் அழகிய வளைகள் தாமே சுழன்று ஓடுமாறு மெலிந்தன; கண்கள் எப்போதும் நீர் நிறைந்து கலங்கி ஒளி இழந்தன; உடல் பசலை படரவே, பொன் னிறம் வென்ற தன் நிறம் கெட்டுக் காட்சி அளித்தது;

அவள் தோளின் தளர்ச்சியையும், கலங்கிய கண்ணின் நீரையும், மேனிப் பசலையையும் கண்டு, அவள் களவொழுக்கம் உணர்ந்த ஊரும், சேரியும் அவள் ஒழுக்கம் குறித்துப் பலவாறு கூறத்தொடங்கினர். அது கேட்ட தாய், அவளைச் சிறையிட்டுக் காத்தாற் போல், இணைபிரியாதிருந்து காக்கத் தலைப்பட்டாள். ஊரார் உரைக்கும் அலராலும், தாய் மேற்கொண்ட காவலாலும், அப்பெண்ணின் கவலையும் கலக்கமும் கண்டாள் அவள் தோழி! அந்நிலை மேலும் நீளின், அவள் உயிர்வாழாள் என உணர்ந்தாள்; அதனால், அவ்விளைஞன் ஆண்டு வருங்கால், அவன்பால் அவள் நிலை உணர்த்தி, வரைவிற்கு வழிசெய்தல் வேண்டும் என முடிவு செய்தாள்; அதனால் அவன் வரவினை எதிர் நோக்கியிருந்தாள்.

அப்பெண், இவ்வாறு துயர்உழக்கின்றாள் என்பதை உணராமையால் அவளை மணந்து, என்றும் பிரியாது உடன் இருந்து, அவள் துயர் துடைக்க எண்ணாது, களவில் வந்து கண்டு மகிழ்ந்து செல்வதையே மனங் கொள்ளும் அவ்விளைஞன், தோழி எதிர்நோக்கியிருந்த வாறே, ஒருநாள் ஆங்கு வந்தான; வந்தானைத் தோழி எதிர்சென்று வணங்கி வரவேற்று, வாழ்த்திய பின்னர், "அன்ப! இரவென்றோ, பகலென்றோ, மழையென்றோ, பனியென்றோ பாராது, நின் வருகையை எதிர்நோக்கி யிருந்தும், காட்டுக் கொடுவிலங்குகளாலும், காட்டாற்று வெள்ளத்தாலும், இடைவழியில் உண்டாம் ஏதத்தை

எண்ணி நடுக்கங்கொண்டும், உறங்காது, உணர்விழந்து கிடக்கிருள் இப்பெண். உன் மலைச்சாரலில் வரிசை வரிசையாக மலர்ந்து மணம்நாறும் வெண்காந்தள் மலர்கள், வெய்யிலால் வாடிக் காம்பற்றுக் கழன்று, தாமே உதிர்தல்போல், இவள் கைவளைகள், தோள் தளர்ந்து போகவே, அக்கையை விட்டுத் தாமே சுழன்று ஓடுகின்றன ; உன் மலைச் சுனைகளில் மலரும், கருநில மலர்கள் நீர் நிறைந்து நிற்றல்போல், இவள் கண்களும் நீர் நிறைந்து கலங்கிக் காட்சியளிக்கின்றன ; தெளிந்த நீர் சிறிதே ஓடி ஒலிக்கும் காலமாய இளவேனிற்காலத்தில், நிறங்கெட்டுத் தோன்றும் தளிர்கள்போல், இவள் மேனி, தன் பொன்னிறம் இழந்து பசலைபாய்ந்து தோன்றுகிறது. இவ்வாறு வருந்தும் இவளைத் தேற்றும் வழியினை யான் அறியேன் ; எந்நேரமும் நின் நினைவே கொண்டு, உறங்காதிருந்து துயரமிகக் கொள்வதனுலேயே, இவள் உடல் தளர்கிறது ; ஆகவே, இவள் சிறிதே உறங்கின், அக்காலத்தே அவள் உணர்வு அடங்க, உள்ளத்துயர் சிறிதே குறைதலும் கூடும் என எண்ணி, இவளை உறங்க வைக்கலாம் எனிலோ, எப்போதும் நின் நினைவாகவே இருப்பவளாதலின், உறக்கத்தில் நின்னைக்கண்டு கலந்து உரையாடி மகிழ்ந்ததாகக் கனவு காணலும் கூடும் ; அவ்வாறு கனவு கண்டவள், உறக்கம் தெளிந்ததும், நின்னைக் காணமாட்டாது ஏமாற்றம் அடைவள் ; அதனுல், அவள் துயர் முன்னினும் அதிகமாம் ; அதனுல், அவள் உறக்கம் கொள்வதையும் யான் அஞ்சுகின்றேன் ; இவள் இவ்வாறு வருந்தக் கண்டும், நீ வாளா இருக்கின்றனை : இவள் உனக்குச் செய்த தவறு யாதேனும் உண்டோ ; இல்லையாகவும், இவளை நீ வருத்துவது ஏனே ? அன்ப ! வருத்தியது போதும் ; வரைந்து, வாழ்க்கைத்துணையாகக்

கொண்டு, வருத்தம் போக்கி, நெடிது வாழ்வாயாக! இதுவே அவள் ஆசையும், என் வேண்டுகோளுமாம்'' எனக்கூறி, வந்தானை வரைவொடு வருமாறு கூறி வழி அனுப்பினாள்.

*தோழியின் வழியனுப்பு உரையினை வழங்குகிறது இச்செய்யுள்:*

'' ஆம் இழி அணிமலை அலர்வேங்கைத் தகைபோலத்
தேம் மூசு நனைகவுள், திசை காவல் கொளற்கு ஒத்த,
வாய் நில்லா வலி முன்பின், வண்டு ஊது புகர்முகப்
படுமழை அடுக்கத்த ; மாவிசும்பு ஓங்கிய
கடிமரத் துருத்திய, கமழ்கடாம் திகழ்தரும்
பெருங்களிற்று இனத்தொடு வீங்கு எருத்து, எறுழ் முன்பின்
இரும்புலி மயக்குற்ற இகன்மலை நன்னாட!

வீழ்பெயல் கங்குல் நின் விளி ஓர்த்த ஒடுக்கத்தால்
வாழும் நாள் சிறந்தவள் வருந்து தோள் தவறுண்டோ ?
தாழ்செறி கடுங்காப்பின் தாய் முன்னர் நின்சாரல்
ஊழுறு கோடல் போல் எல்வளை உகுபவால் !

இனைஇருள் இதுஎன ஏங்கி நின் வரல் நசைஇ
நினைதுயர் உழப்பவள் பாடில்கண் பழிஉண்டோ ?
இனையள் என்று எடுத்து அரற்றும் அயல் முன்னர் நின் சுனைக்
கனைபெயல் நீலம்போல் கண்பனி கலுழ்பவால் !

பன்னாளும் படர்அடப் பசலையால் உணப்பட்டாள்
பொன் உரை மணியன்ன மாமைக்கண் பழி உண்டோ ?
இன் னுரைச் செதும்பு அரற்றும் செவ்வியுள் நின்சோலை
மின்உடு தளிர் அன்ன மெலிவு வந்து உரைப்பதால் !

எனவாங்கு,
பின் ஈதல் வேண்டும் நீ பிரிந்தோள் நட்பு என நீவிப்
பூங்கண் படுதலும் அஞ்சுவல் தாங்கிய
வருந்துயர் அவலம் தூக்கின்,
மருங்குஅறி வாரா மலையினும் பெரிதே!''

வரையாது வந்து செல்லும் தலைவனுக்குத், தோழி, தலைவியின் ஆற்றுமையும், இவ்வொழுக்கம் அலராயினமையும் கூறி வரைவு கடாயது இது.

உள்ளுறை: *மலையிடத்தும், ஆற்றிடைக்குறையிடத்தும் வாழும் இருவகை யானைகளோடும் புலி மாறுபட்டுப் பொருதல், தலைவியின் தந்தை சுற்றம், தாய் சுற்றம் ஆகிய இருவகைச் சுற்றத்தாரையும் அஞ்சாது, அயலார், அலர் கூறுதலாம் என்க.*

*1. ஆம்-நீர்; இழி-வீழ்கின்ற; தகை-அழகு; 2. தேம்-தேனீக்கள்; மூசு-மொய்க்கும்; நனைகவுள்-மதநீரால் நனைந்த கன்னம்; 3. வாய்-இடம்; வாய்நில்லா-எதிர் நிற்க மாட்டாத; முன்பு-வலி; 4. அடுக்கம்-மலைச்சாரல்; அடுக்கத்த-மலைச்சாரலைச் சார்ந்த யானைகள்; 5. கடிமரம்-மிக்க மரங்கள்; துருத்தி-ஆறுகளின் இடையிடையே அமைந்த திட்டுகள்; ஆற்றிடைக்குறை-அரங்கம் எனவும் அழைக்கப்பெறும்; 6. எருத்து-கழுத்து; எறுழ-மிக்க; 8. விளி-அழைக்க எழுப்பும் ஒலி; ஓர்த்தல்-ஒலி கேட்கிறதா என்பதை நுணுகி இருந்து ஆராய்தல்; 10. தாழ்செறி-தாழ்ப்பாள் இட்டு அடைத்தாற்போல்; 11. ஊழ்-வரிசை; கோடல்-வெண்காந்தள்; எல்வளை-ஒளிவீசும் கைவளைகள்; உகுப-கழன்று வீழும்; 12. இனை-வருந்துதல்; இனைஇருள்-உயிர்கள் வருந்துதற்காம் மிக்கஇருள்; நசைஇ-நச்சி; 13. நினைதுயர்-நினைப்பதால் உண்டாம் துயர்; பாடு இல்கண்-உறக்கம் இல்லாதகண்; 14. அரற்றும்-அலர்கூறும்; 15. கலுழ்ப-சொரியும்; 18. செதும்பு-சிறிதே ஓடும் அருவி நீர்; செவ்வி-காலம்; 19. மின்-ஒளி; உகு-கெட்ட; 21. பின்னாதல்-உறவு ஒன்றுபடுதல்; நீவி-போக்கி.*

## 13

# இரவில் வாரல்

அன்பும் அருளும் ஆற்றலும் அழகும் வாய்ந்த ஓர் இளைஞன், கரு நீல மலரை வென்றகண்கள், இருளையும் பழிக்குமளவு கருத்து இருண்டு நீண்ட கூந்தல்; இவை போல்,ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையால் உயர்ந்து விளங்கும் உறுப்புக்களைப் பெற்ற பெண்ணொருத்தியை, அவள், அவளுக்குரிய தினைக்கொல்லையில் காவல் மேற் கொண்டிருந்த காலத்தில் கண்டு காதலித்தான்; அவளும் அவனைக் காதலித்தாள். இருவரும், ஒருவர் இன்றி ஒருவர் வாழமாட்டா உயர்ந்த அன்புடைய ராயினர். அன்றுமுதல், நாள்தோறும் அவன், அத் தினைப்புனத்திற்கு வந்து, அவளைக் கண்டு அகமகிழ்ந்து செல்வானாயினன். இவர்கள் உறவினை, அப்பெண்ணின் உயிர்த்தோழி ஒருத்தியே அறிவாள்; அவள் உற்றார் உறவினர் எவரும் அறியார்; இந்நிலையில், தினை முற்றி விடவே, இனிக் காவல் தேவையில்லை என உணர்ந்த பெண்ணின் பெற்றோர், அவளை வீட்டிற்குக் கொண்டு

சென்று விட்டனர்; அதனால், தான் வேண்டும் பொழுதெல்லாம் வந்து மகிழ்ந்து சென்ற அவனுக்கு, அவளைக் காணலும் அரிதாயிற்று; இரவில் எவரும் அறியாவாறு வரத்தொடங்கினான். அவன் வருகை ஒருநாளும் தவறியதில்லை எனினும், அவளைக் காண்டல் ஒருநாளும் வாய்க்கவில்லை.

அவ்வூருக்குப் புதியனாய அவனைக் கண்டு அவ்வூர் நாய்கள் குரைப்பதால், தன் வருகையினை ஊரார் உணர்ந்துவிடல் அஞ்சி ஒருநாள்; நடு இரவிலும் உறங்காதிருந்து நகர்க்காவல் மேற்கொண்டு வாழும் ஊர்க் காவலர் உலாவக்கண்டு ஒருநாள்; நிலாப்புறப்பட்டு ஒளி வீசுவதால் மறைந்து செல்லமாட்டாமையால் ஒரு நாள்; கூறிய இடையூறு எதுவும் இன்றி, அவள் வீடு சென்றடையினும் ஆங்கு அப்பெண்ணின் தாய் துயிலாது விழித்திருப்பதால், அப்பெண் வெளிவர மாட்டாமையால் ஒருநாள்; வந்து முன்கூட்டியே அறிவித்திருந்தவாறு, அவள் வீட்டை அடுத்திருந்த நீர்நிலையில் கல்லிடுவதாலும், மரத்தில் கல்லெறிந்து, ஆங்கு வாழும் பறவைகளை எழுப்புவதாலும் ஒலி எழுப்பித் தன் வருகையை அறிவிப்பவும், அவன் வருதற்குச் சிறிது நாழிகை முன்னரே, மரத்துக் காய் ஒன்று, காம்பற்றுத் தானே வீழ்ந்ததாலும், வேறுயாது காரணத்தாலோ பறவைகள் தாமே எழுந்து அடங்கியதாலும், இயல்பாக எழுந்த ஒலிகேட்டு, அதை அவன் செய்த குறியாகக் கொண்டு, வெளிச்சென்று, ஆங்கு அவனைக் காணாது, கலங்கி வறிதே மீண்ட அப்பெண், இம்முறை, அவனே வந்து எழுப்பிய ஒலியையும் முன்னவற்றைப் போன்றே, இயல்பாக எழுந்ததாகக் கொண்டு வாராதே இருந்து விடுவதால் ஒருநாள்; என்ற வகையில், அவளைக் காணமாட்டாது வறிதே மீள்வன். இதனால்,

தொடர்ந்து பலநாள் காணமாட்டாமையால், அப்பெண் கவலையும் கண்ணீரும் கொண்டு துயர் உற்ருள்.

அதுமட்டு மன்று; அவன் வரும்வழி கொடுமைகள் மிக்கது; தன்னை வந்து தாக்கிய புலியொடு போரிட்டு வென்றயானை, அப்போரால் உற்ற வருத்தம் வருத்த ஓய்ந்து உறங்கியிருந்தபோது, புலியொடு தான் செய்த போரை நினைத்துக்கொண்டே உறங்கியமையால், புலி யொன்று தாக்க வருவதாகக் கனுக்கண்டு, திடும் என உறக்கம் கலைந்து எழுந்து நின்று நோக்க, ஆங்குப் புதிய மலர் பூத்துப் பார்ப்பதற்குப் புலிபோலக் காட்சி யளித்து நின்ற வேங்கை மரத்தைக்கண்டு, புலியைப் பற்றிய எண்ணமே தலைதூக்கி நின்றமையால், அதைப் புலியெனவே கருதிக் கோட்டாற் குத்தி அழித்துப் பின்னர்ச் சினம் சிறிது ஆறியதும், அது, வேங்கைப்புலி யன்று, வேங்கைமரம் என உணர்ந்து, சினத்தால் அறி யாது செய்த தன் சிறுசெயல் நாணி, அம்மரத்தைக் காணவும் வெட்கித் தலைகுனிந்து செல்லும் கொடுமை மிக்கது அக்காட்டு வழி. அம்மட்டோ! மழைதரு மேகங்கள் வந்து தங்குமளவு உயர்ந்த அம்மலைகள், கண்டாரைப்பற்றி வருத்தும் சூரரமகளிர் வாழ்விடமாகக் கொண்டு வாழும் கொடுமையும் உடையது.

இத்தகைய கொடிய கானகத்தில், இடியும் மின்ன லும் கூடிப் பெருமழை பெய்யும் இராக்காலத்தில், மணம் வீசும் மலர்மாலை அணிந்து, கையில் ஏந்திய வேல் ஒன்றே துணை செய்ய, மின்னல் காட்டும் ஒளியல்லாது, வழிகாட்டவல்ல விளக்கம் வேறு எதுவும் இன்றித் தனித்துவரின், காட்டாறுகளாலும், கனையிருளாலும், கண்ணிற்பட்ட பொருளையெல்லாம் பகையெனக்கொண்டு பாயும் களிறுகளாலும், மலர் மணம் விரும்பும் அத் தெய்வ மகளிராலும் அவனுக்கு இடையூறு உண்டாமே

என்ற எண்ணம், அவள் துயர்க்கொடுமையை அதிகரித்தது. அதனால், அவன் இக்களவொழுக்கம் கைவிட்டுக் கடிமணம் புரிந்துகொள்ள மாட்டானோ என எண்ணி எண்ணி ஏங்கினாள். இவ்வச்சமும் கவலையும் அவள் உடல் நலனைக்குறைத்து, உருவிழக்கச் செய்துவிட்டன.

தளர்ந்த அவள் உடல்நிலை கண்ட அயலார், அவள் ஒழுக்கத்திற்கு இழுக்கம் கற்பித்து அலர்தூற்றத் தொடங்கினர். அதுகேட்ட அவள் அன்னையும், அன்புடைச் செவிலியும், அவளை அவ்வலர் குறித்து வினவ, அவர்க்கு, 'நீர்ஆடினேன் கண் சிவந்தது; ஊசல் ஆடினேன் உடல் தளர்ந்தது' என்பனபோல்வன, கூறித் தளர்ச்சிக்குக் காரணம் பிறிது கற்பித்துக் காதலை மறைத்து ஒருவாறு தேற்றித் துயிலச் சென்றாள். இளைஞனைக்காணாது வருந்திய வருத்தமும், அயலார் கூறும் அலரும், அதுகேட்டுத் தாய் கூறும் கடுஞ் சொல்லும், அவளுக்குத் தான் உரைத்த பொய்யும் நினைவிலே நிற்க உறங்கச்சென்றவள், அந்நிகழ்ச்சிகள் கனவிலும் நிகழக்கண்டு அஞ்சி எழுந்தாள். எழுந்தவள், தன்முன் தோழி நிற்கக்கண்டு, 'நான் இவ்வாறு துயர் உறவும், என் துயர் துடைக்கும்வழியாம் திருமணத்திற்கு வழி செய்யாது, களவொழுக்கத்திற்குத் துணைபோவாள் இத்தோழியன்றோ?' என்ற எண்ணம் எழ, அவளைச் சினந்து கொண்டாள். சினம் சிறிது தணிந்த பின்னர், 'என் பெண்மையும் பெருமையும் கற்பும் காதலும் ஒருங்கே வாழ உறுதுணை புரியும் இவளை, என் அறியாமையாற் சினந்துகொண்டேன்! என்னே என் மடமை' என்ற எண்ணம் எழவே, வெட்கித் தலைகுனிந்து தோழியைக் காணவும் நாணினள்.

இவற்றை யெல்லாம் அறிந்தாள் தோழி. இனி வரைதற்கு வழிச் செய்யாது போயின், இவள் உயிர்

நில்லாது; ஆகவே, வரைந்து கொள்ளும் எண்ணம் இன்றி, வந்து செல்லும் இளைஞன் வருகைக்குத் தடை விதித்து, வரைவிற்கு வழிசெய்தல் வேண்டும் எனத் துணிந்தாள்; துணிந்தவள், அன்போடு வருவானை, வாய்திறந்து 'வாரற்க' எனக் கூறல் நாகரிகமாகாது; காண்பார்க்கு, 'வருக! வருக!' என வரவேற்பது போன்றே தோன்றுதல் வேண்டும்; அதைக் கேட்கும் அவனுக்கு, 'வாரற்க' என அவன் வருகையைத் தடை செய்வதே கருத்தாம் என்பதை உணர்த்துவனவாதலும் வேண்டும்; இவ்விரு பயனையும் தரவல்ல சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கூறுதல் வேண்டும் எனக் கருதி, அவன் வருகையை எதிர்நோக்கி யிருந்தாள். அவள் எதிர்நோக்கி யிருந்தவாறே, ஒருநாள் இரவு இளைஞன் ஆங்கு வந்தான்; அவனை அன்புரை கூறி வரவேற்ற தோழி, "அன்ப! இவள்பால் நீ கொண்டுள்ள காதலைக் கண்டு மகிழ்கின்றேன்; அப்பேரன்பால், இடியும் மின்னலும் கலந்து கொடுமை செய்யும் இரவுக்காலமாயிற்றே எனக் காலத்தின் கொடுமையினையோ, கண்ணிற்பட்ட பொருள்களை அழிப்பதே கருத்தாய்க் களிறுகள் வழங்குவது, ஆடவரைப்பற்றி வருத்தும் பெண் தெய்வங்கள் வாழும் மலைகளை அடுத்துச் செல்வது என வரும் வழியின் கொடுமையினையோ மனத்திற் கொள்ளாது, வருகின்றனை. அத்தகைய நின்பேரன்பைப் பாராட்டுகின்றேன்; அது 'வாழ்க! வளர்க!' என வாழ்த்துகின்றேன். ஆனல், அவ்வன்பின் மிகுதியால், கொடுமைகள் நிறைந்த காட்டு வழியில், மாரிக்காலத்து இரவில், துணையும் இல்லாமல், தனித்து வருதல் தவறு என்பதையோ, ஆங்கு, நினக்கு யாதேனும் ஏதம் உண்டாயின், அக்கணமே, உயிர்விடத் துணிந்து நிற்கும் இவள் துயரையோ, அத்துயர் நிலைகண்டு அயலார் கூறும் அலரையோ, அது கேட்டுத் தாய் வழங்கும் வன்சொற்

களேயோ நீ அறிந்திலே. ஆகவே அன்ப! இனி, இரவில் வாரற்க! இவளேக்கண்டு மகிழவேண்டின், மலேச்சாரலில், பாறைகள்மீது, கோலம் இட்டாற்போல் மலர்ந்து உதிர்ந்து கிடக்கும் மலர்களேக் கொணர்வான் வேண்டி, ஆங்குச் செல்லும் வழக்கம் உடையேம் யாம். ஆதலின், ஆங்குவரின், இவளேக் கண்டு மகிழ்தல் எளிதிற் கைகூடும்; நினக்கும் ஏதம் இன்ரும்; ஆகவே, ஆங்குப் பகற்காலத்திலேயே வந்து செல்க!'' எனக் கூறினள்.

இவ்வாறு தோழி கூறக்கேட்ட இளேஞன், "இரவில் வாராதே எனக்கூறிய இவள், பகலில், மகளிர் மலர் கொய்யும் மலேச்சாரலுக்கு வருமாறு கூறுகின்ருள்; மலேச்சாரலுக்கு, இவர்களேப் போன்றே, வேறு பல மகளிர் வருதலும் கூடும்; அதனல், ஆங்கு இவளேக் கண்டு மகிழ்தல் இயலாது; இதை அறிந்தும், இவள் இவ்வாறு கூறுகிருள்; காரணம், இரவில் மட்டுமல்லா மல், பகலில் வருவதையும் இவள் விரும்புகிலள்; மறைந்து மறைந்து வந்து மகிழ்ந்து செல்லும் இக்கள வொழுக்கத்தைக் கைவிட்டு, மணந்து மனேயறம் மேற் கொண்டு வாழவேண்டும் என்ற இவர்கள் வேட்கையின் விளேவேயாம்; அதை விளங்க உணர்த்தமாட்டாமை யால், 'பகலில் வாராதே; இரவில் வருக என்றும், 'இரவில் வாராதே; பகலில் வருக' என்றும் மாறிமாறிக் கூறுகின்றனர்; அவ்வாறு அவர்கள் கருதுவதும் ஒரு வகையில் ஏற்றுக்கொள்ளத் தக்கதே'' என்று இவ்வாறு எண்ணி முடிவுசெய்து, மணத்திற்கு வழி செய்யும் மனத்தினனுய், ஆங்கிருந்து மீண்டான்.

அவனே, அவ்வெண்ணம் கொள்ளுமாறு தூண்ட வல்ல தோழியின் சொற்களேச் சுவைதரும் தொடராக்கி அளிக்கிறது இச்செய்யுள்.

"கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கில் துஞ்சும் யானை,
நனவில் தான்செய்தது மனத்தது ஆகலின்,
கனவிற் கண்டு, கதும்என வெரீஇப்,
புதுவதாக மலர்ந்த வேங்கையை
அது என உணர்ந்து அதன் அணிநலம் முருக்கிப்
பேணா முன்பின் தன்சினம் தணிந்து அம்மரம்
காணும் பொழுதில் நோக்கல் செல்லாது,
நாணி இறைஞ்சும் நன்மலை நன்னாட !

போது எழில் மலர் உண்கண் இவள் மாட்டு, நீ இன்ன
காதலை என்பதோ இனிது ; மற்று இன்னாதே,
மின் ஓரும் கண்ணாக, இடி என்னாய், பெயல் என்னாய்,
இன்னதோர் ஆரிடை ஈங்கு நீ வருவதை ;

இன்புற அளித்தனை இவள் மாட்டு நீஇன்ன
அன்பினை என்பதோ இனிது ; மற்று இன்னாதே,
மணங்கமழ் மார்பினை, மஞ்சு இவர் அடுக்கம் போழ்ந்து
அணங்கு உடை ஆரிடை ஈங்கு நீ வருவதை ;

இருள் உறழ் இருங் கூந்தல் இவள் மாட்டு நீ இன்ன
அருளினை என்பதோ இனிது ; மற்று இன்னாதே,
ஒளிறு வேல் வலன் ஏந்தி, ஒருவன்யான் என்னாது
களிறு இயங்கு ஆரிடை ஈங்கு நீ வருவதை ;

அதனால்,
இரவில் வாரல் ; ஐய ! விரவுவீ
அகல் அறை வரிக்கும் சாரல்
பகலும் பெறுவை இவள் தடமென் தோளே."

தோழி, இரவு வருவானை, இடை வழியின் ஏதம்கூறிப் பகல் வருக எனப் பகற்குறி நேர்வாள் போல், அதுவும் மறுத்து வரைவு கடாயது எனும் துறையமைய வந்துளது இச்செய்யுள்.

**உள்ளுறை :** *புலியைவென்று துயிலும்யானை, அயலார் கூறிய அலர் கேட்டுச் சினந்த தாயை, அது பொய்யெனக்*

கூறித்தேற்றிய தலைவி; யானை கனவிற்கண்டுவெருளல், தலைவி அந்நிகழ்ச்சியைக் கனவிலும் கண்டு கலங்கியது; அது வேங்கையை அழித்தல், தலைவி, களவிற்குத் துணை செய்வதால் கொடியள்போல் தோன்றிய தோழியைச் சினந்துகொண்டது; அது சினம் தணிந்து நாணியது, சினம்தணிந்த தலைவி, தோழியின் உண்மை அன்பை உணர்ந்து, அத்தகையாளைச் சினந்த தன் தவறு நினைந்து, அவளைக் காணவும் நாணியதாம்.

*1*, கொடுவரி - வளைந்த கோடுகளை உடைய புலி; *4*. வெரீஇ - மருண்டு: *6*. முருக்கி - அழித்து; *7*. முன்பு-வலி. *10*. போது - மலரும் நிலையில் உள்ள பேரரும்பு. *12*. மின் - மின்னல்; ஓரும்: ஆராய்ந்து பார்க்கும்; *17*. அணங்கு - ஆடவரை வருத்தும் பெண்தெய்வம்; சூரரமகளிர் என்பார் இவரே: *18*. உறழ் - சிறப்புடைமையால் மாறுபட்ட: இருங்கூந்தல் - கரியகூந்தல்: *23*. வீ - மலர்; *24*. வரிக்கும் - அழகு செய்யும்;

# 14

# மறவற்க இவளை

வரையாது வழங்கும் வள்ளல்கள் வழிவந்த ஓர் இளைஞன், வாழையின் கீழ்க் கன்றும் கனியுதவுவது போல், பொருள் வேண்டித் தன்பால் வந்து நிற்கும் புலவர்க்குக், காற்றினும் கடுகச் செல்லும் தேர்களையும், களிறுகளையும், செல்வத்தைத் தன் இரு கைகளாலும் ஓய்வறியாவாறு வழங்குபவன்; பயன் கருதாப் பெருங் கொடையாளனாய அவனை, மழையினும் மாண்புடைய வன் என மக்கள் பாராட்டுவர்; இவ்வாறு, அருள் சிறந்த அவன் கைகள், ஆண்மையிலும் சிறந்தன வாம்; அவன் வலக்கை, வருவார்க்கு வாரி வாரி வழங்கும் எனின், இடக்கை, பெரும் படையையும் நடுங்கப் பண்ணும் பாம்பின் படம் பொறித்ததும், பகை வர்க்கு அச்சம் ஊட்டுவதுமாய பெரிய வில்லைப் பற்றிக் கிடக்கும்.

அருளும், ஆண்மையும் ஒருங்கே வாய்ந்த உரவோ னாய அவ்விளைஞன், ஒருநாள், வேட்டைமேற் சென்

திருந்தான்; அக்காலை, ஆங்குத், தினைப்புனம் காத்திருந்த ஒரு பெண்ணைக் கண்டான்; இயற்கையின் பயனும் பலா முதலாம் பழவகைகளையும், உழுது விளைத்துப் பெறும் நெல் முதலாம் உணவுப்பொருட் குவியல்களையும், குறைவறக் கொண்ட, குறிஞ்சிநிலச் செல்வன் ஒருவன், மகப்பேறின்றிப் பல்லாண்டு வருந்திப், பேரறம் பல புரிந்து பெற்றெடுத்த சிறப்புடையாள் அவள்.

வில்லேந்தி வேட்டைக்குச் சென்ற அவ்விளைஞன், ஆங்குத் தினைப்புனக்காவல் மேற்கொண்டிருந்த அப் பெண்ணைக் கண்டு, அவள் அழகில் அறிவிழந்து, தான் மேற்கொண்டு வந்த வேட்டைத் தொழிலையும் மறந்து, வில்லைக் கீழே ஊன்றி, அதன்மீது வைத்த கையனாய், அப்புனத்தருகே நின்று, அவளைக் காதற்கருத்தோடு பலகால் நோக்கினான். அந்நிலையில் நிற்கும் அவனையும், வில்லின்மீது வைத்த கையனாய்க் காட்சியளிக்கும் அவன் பேரழகையும், அருளும் அன்பும் புறம்போந்து புலப்பட நோக்கும் அவன் கண்வழிக் கருத்தையும் கண்ட அப்பெண்ணும், தன் கருத்திழந்து, அவன்பாற் காதல் கொண்டாள். காதல் மிகுதியால் தன் கடமையை மறந்தாள்; புனத்தில் கிளிகளும் குருவிகளும் புகுந்து கதிர்களைக் கொய்துகொண்டு செல்லவும், அவற்றைக் கவண் கல்லெறிந்து ஓட்டுதலைச் செய்திலள். அவள், அவன்மீது கொண்ட பெருங்காதல், அவள் கருத்தையும், கடமையையும் ஒருங்கே சிதைத்தது. அவ்விருவர்க்கிடையே. இவ்வாறு அன்று தோன்றிய காதல், இடையூறு எதுவும் இன்றி வளரத் தொடங்கிற்று.

அப்பெண்ணின் செவிலித்தாய் வயிற்றில் மகளாய்ப் பிறந்து, அப்பெண்ணோடு உடன்வளர்ந்து, உடன் உண்டு, உடன் ஆடி வருபவளாய உயிர்த் தோழி ஒருத்தி இருந்

தாள் ; ஒழுக்கம் உடையவள் ; உலகியல் உணர்ந்தவள்; அப்பெண்ணின்நல்வாழ்வில் நாட்டம்உடையவள்;அவள் நல்வாழ்வு வாழ வழித்துணை புரிவதே தன் வாழ்வின் கடமையாம் எனக் கொண்டவள் ; கொண்ட கருத்தைக் குறைவின்றி முடிக்கவல்ல அறிவுத்திறனும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவள். இத்தகையாளாய அத்தோழி, இவர்கள் காதல் உறவினை அறிந்தாள் ; இளைஞன் எல்லா வகையாலும் சிறந்தானாதல் அறிந்து, அக மகிழ்ந்து, அவர்கள் காதல் வளரப் பெருந்துணை புரிந்தாள். பெண்ணின் இன்ப வாழ்வே, தன் இன்ப வாழ்வாம் எனக் கருதும் அவள், அப்பெண் துயர் அறியாத் தூய வாழ்வினளாதல் வேண்டும் என விரும்பினாள்.

மலைச்சாரலில், மகிழ்ந்து ஆடித்திரியும் வருடைமான் கன்றைப் பற்றிக் கொணர்ந்து வளர்க்கும் கானவர், அதன் மென்மையும் மருட்சியும் உணர்ந்து, அதைத் தம் குழந்தையை வளர்ப்பதினும், அருமையாகப் பேணி வளர்ப்பர் ; அது போல், பெற்றோரால் பேணி வளர்க்கப் பட்டவள் அப்பெண் ; அவளை அவர்கள் சிறிது பிரியினும், அங்கிலையே, தன் அழகெல்லாம் அழிந்து போமளவு பெருந்துயர் கொண்டு விடுவள் ; அத்துணை மெல்லிய இயல்புடையவள் அவள் ; அவளோடு பிறந்த நாள்தொட்டுப் பழகி அறிந்த இவ்வியல்பினை, இளைஞனுக்கு அறிவித்து, அவன் அவளைச் சிறிது பொழுதும் பிரியாதிருந்து பேணிப் பாராட்டுமாறு வேண்டிக்கொள்ளுதல் வேண்டும் எனக் கருதினாள்.

ஒருநாள், அவ்விளைஞன் வந்திருந்தபோது, அவனை அழைத்து, " அன்ப ! மழையென வழங்கும் நின்கொடை வளத்தையும், அக் கொடைக்குணம் குன்றுவாறு நின்று காக்கும் நின் அருள் உள்ளத்தையும் யான் அறிவேன் ; 'கொடுமையினை ஒரு சிறிதும் உளங் கொள்ளாக் குணம்

உடையை என்பதை அறிந்தும், நினக்குச் சில அறிவுரை கூற விரும்புகின்றேன். அன்ப! தேரிற்பூட்டிய குதிரைகள், இயல்பாகவே விரைந்து செல்லும் என்றாலும், கருதிய இடத்தை விரைந்தடைதல் வேண்டும் எனும் தன் வேட்கை மிகுதியால், தேர்ப்பாகன், அக்குதிரைகளைத் தாற்றுக்கோல் கொண்டு துரத்துவது போல், பிறர்க்கு இன்பமல்லது துன்பம் செய்தறியாக் குணத்தை நீ இயல்பாகவே பெற்றுள்ளாய் எனினும், என் தோழி, நின் காதலி, துன்பம் அறியா இன்ப வாழ்வினளாதல் வேண்டும் என்ற என் வேட்கையின் மிகுதியால், அறிவன அறிந்த ஆன்றோனாய நினக்கே, அறிவுரை கூற முன் வந்துவிட்டேன்; அதற்காக, முதற்கண், என்னை மன்னிக்கவும். அன்ப! நின் மலைநாட்டுப் பெண் யானை, முற்றி முதிர்ந்து இயல்பாகவே வளைந்து கிடக்கும் மூங்கிலின் தழையையும் நெல்லையும் ஆர உண்டு, இலைகள் பல விட்டு நெருங்க வளர்ந்திருக்கும் வாழைக்காட்டினுள் புகுந்து, ஆங்கு வருடை மான் குட்டிகள் மருண்டு நோக்காது, மகிழ்ந்து விளையாடி, ஒருபால் கிடந்து அயர்ந்து உறங்கும் காட்சியினைப் பல கால் கண்டு களிக்கும் நினக்கு ஒன்று கூறுகின்றேன்: அன்ப! குணத்தாலும், கொற்றத்தாலும் சிறந்து, எம் போல்வார்க்கு அரியனாய நீ, இவள்பால் கொண்ட அன்பால், எளியனாகவே, என் தோழி, நின் நட்பை எளிதிற் பெற்றுவிட்டாள்; நின் அன்பைப் பெற்ற அவள், நின்னை மணந்து, நின் மனை புகுந்து, அலர்கூறிப் பழிப்பாரைக் காணாது, நின் உற்றாரும் பெற்றோரும் உடனிருந்து பாராட்ட, இல்லறம் மேற்கொள்ள விரும்புகின்றாள்; அன்புடைய நின்னைச் சிறிதுபோதும் பிரிந்து தனித்து வாழாள்; நின்பாற்கொண்ட காதல் மிகுதியால் தன் கடமையையும் மறந்துபோகும் மாண்புடையளாய அவளைச் சிறிது பிரியினும், அப்பிரிவுத் துயரம், அள

*வின்றிப் பெருகத், தன் நலம் கெட்டு நலிவள் ; ஆகவே, அன்ப! தம் கைப்பட்ட மான் கன்றைக் கானவர் சிறிதும் பிரியாது பேணி வளர்த்தல் போல், இவளை எக்காலத்தும் பிரியாது, என்றும் இவள் நலத்தையே நினைத்துக் காத்தல் வேண்டும் ; இதுவே என் விழைவும், வேண்டுகோளுமாம்'' எனக் கூறினாள்.*

*தோழியின் இவ்வன்புள்ளத்தை ஓவியமாக்கி உணர்த்துகிறது இச்செய்யுள் :*

'' வாங்குகோல் நெல்லொடு வாங்கி வருவைகல்
மூங்கில் மிசைந்த முழந்தாள் இரும்பிடி,
தூங்கு இலைவாழை நனிபுக்கு ஞாங்கர்
வருடை மடமறி ஊர்விடைத் துஞ்சும்
இருள் தூங்கு சோலை இலங்குநீர் வெற்ப!

அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த
உரவுவில் மேல் அசைத்த கையை ஓராங்கு
நிரைவளை முன்கை என் தோழியை நோக்கிப்
படிகிளி பாயும் பசுங்குரல் ஏனல்
கடிதல் மறப்பித்தா யாயின், இனி நீ
நெடிது உள்ளல் ஓம்புதல் வேண்டும்; இவளே,
பல்கோட் பலவின் பயிர்ப்புஉறு தீங்கனி
அல்கறைக் கொண்டு ஊண் அமலைச் சிறுகுடி
நல்கூர்ந்தார் செல்வ மகள் ;

நீயே, வளியின் இயல்மிகும் தேருங்களிறும்
தளியிற் சிறந்தனை, வந்த புலவர்க்கு
அளியொடு கைதூ வலை ;

அதனால்,
கடுமா கடவுறூஉம் கோல்போல் எனைத்தும்
கொடுமை இலையாவது அறிந்தும் மடுப்பல்,
வழை வளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி

உழையிற் பிரியின் பிரியும்
இழையணி அல்குல் என் தோழியது கவினே,"

தோழியிற் கூட்டம் நிகழ்ந்த பின்னர், முன்னர்த் தலைவியைத் தருமாறு தன்னைப் பணிந்து நின்ற தலைவனைத், தோழி, தான் பணிந்து ஒழுகியது எனும், துறையமைய வந்துளது இச்செய்யுள்.

உள்ளுறை: *மூங்கில் மிசைந்த பிடி, தலைவன் அன்பைப் பெற்ற தலைவி; யானை, வாழைத் தோட்டம் புகுந்தது, தலைவி, தலைவனை மணந்து அவன் மனை புகுந்தது; புலி முதலியன இன்றி, மறி விளையாடும் இடத்தே உறங்கியது, அலர்கூறும் அயலாரைக் காணாது, தன் நலம் பாராட்டும் தலைவன் சுற்றத்தாரிடையே மனையற மாண்பில் ஆழ்ந்துவிடல்.*

*1. வாங்கு - வளைந்த; கோல் - மூங்கில்; வைகல் - விடியற்காலம்; 3. தூங்கு - செறிந்த; நளி - நெருங்க வளர்ந்த தோட்டம்; ஞாங்கர் - ஆங்கு; 4. மறி - குட்டி; ஊர்வு இடை - ஆடும் இடம்; 7. உரவு - வன்மையும் உறுதியும்; 9. குரல் - கதிர்; ஏனல் - தினை; 11. உள்ளல் - நினைத்தல்; ஓம்புதல் - மேற்கொள்ளுதல்: 12. பயிர்ப்பு - மரப்பிசின்; 13. அல்கு - வீழ்ந்து கிடக்கும்; அமலை - பெருஞ்சோற்றுத்திரள்; 14. நல்கூர்ந்தார் - ஈண்டு மகப்பேறில்லா வறுமை உற்றவர்; 15. வளி - காற்று; 16. தளி - மழைத்துளி; 17. அளி - அருள்; கைதூவல் - கைஒழியாமை; 19. கடுமா - இயல்பாகவே விரைந்து செல்லும் குதிரை; கடவுறூஉம் - செலுத்தும்; எனைத்தும் - சிறிதும். வழை - சுரபுன்னைமரம்; 23. உழை - இடம்; உழையின் - இடத்தினின்றும்.*

15

# என் கை பற்றினன்!

தமிழ்நாட்டுப் பேரூர் ஒன்றின் தெரு; சிறுவர்களும் சிறுமியர்களுமாகத் தமிழ்நாட்டின் வருங்காலச் செல்வச் சிறுர்கள், ஒன்றுகூடி ஆடியும் பாடியும் அகமகிழ்ந்து திரிகின்றனர். அவர்களுள் செல்வச் சிறப்புத் தோன்ற விளங்குவாள் ஒரு பெண், தலைவாரி முடித்து; அதில் பன்னிற மலர்கொண்டு தொடுத்த மாலையை அழகாகச் சூடிக்கொண்டு, கையில் பந்தேந்தி வந்தாள். வந்தவள், தன்னைப் பிரியாது வாழும் பேரன்புடைய தன் தோழி துணைசெய்ய, மணல்வீடு கட்டி மகிழ்ந்தாடத் தொடங்கினாள்; அந்நிலையில் ஆங்கு வந்தான் ஒரு சிறுவன்; பெற்றெடுத்த தாய் தந்தையர்க்கோ, பிறந்த ஊரில்வாழ் பெரியோர்க்கோ அடங்காது ஆடித்திரியும் இயல்புடையான் அச்சிறுவன். ஆங்குவந்த அவன், அம்மகளிர் கட்டிய மணல் வீட்டைக் காலால் சிதைத்தான். அவள் அணிந்திருந்த கூந்தல் மலரைப் பிய்த்து எறிந்தான். அவள் கைப்பந்தைக் கவர்ந்தோடி மறைந்

தான். அவன் செயலால், அன்றெல்லாம் அழுது அழுது, ஆறாத்துயர் உற்றாள் அப்பெண்; இந்நிகழ்ச்சி நடைபெற்றுப் பல்லாண்டுகள் கழிந்தன.

அவன் வளர்ந்து பெரியவனாயினான்; அவளும் வளர்ந்து பெரியவளாயினாள். அவன் அவளை மறந்திலன்; மாறாக அவள்மீது மாறாத அன்புகொண்டான். அவ்வன்பு நாள்தோறும் வளர்ந்தது; அவளைக் கண்டு, தன் காதல் உள்ளத்தைத் திறந்துகாட்டி, அவள் அன்பைப் பெறத் துடிதுடித்தான். ஆனால், அவள் வீடு செல்வம் கொழிக்கும் சிறப்புடைத்து ஆதலின், ஆங்குச் செல்லுதல் அத்துணை எளிதன்று. மேலும், தன் மகளைத் தன் நிழல்போல் பிரியாதிருந்து பேணிவளர்ப்பவள் அவள் தாய். அவள் அறியாவாறு, அப்பெண்ணைக் காண்டலும் இயலாது. அதனால், அவளைக் காணப் பல முறை முயன்றும், அவனால் இயலாது போயிற்று. ஆயினும் தன் முயற்சியைக் கைவிட்டானல்லன். இறுதியில், அவளைக் காணலாம் வழியொன்று அவனுக்குப் புலப்பட்டது: அவள் வீட்டார், தம் வீடு நோக்கிவரும் விருந்தினரை வரவேற்றுப் பேணும் வேளாண்மைக் குணம் வாய்க்கப்பெற்றவர் ஆதலின், அவர்கள் உணவுண்ணும் காலத்தே அவர் வீடு செல்லின், தன்னை விரட்டாது வரவேற்பர்; அதைப் பயன்கொண்டு, அவளைக் கண்டு, தன் காதலை அறிவித்து, அவள் அன்பைப் பெற்றுவிடலாம் என எண்ணினான்.

அவ்வாறே, ஒருநாள், உணவுண்ணும் நண்பகற் காலத்தே, அப்பெண்ணின் வீட்டிற்குச் சென்றான். சென்று வாயிற்கண் நின்றவாறே, வீட்டில் உள்ளாரை விளித்து, உண்ணுநீர் வேண்டினான். அக்காலை, வீட்டில் குற்றேவல் புரிவாரோ, வேறு உற்றார்களோ இலர்; அப்பெண்ணும், அவள் தாயுமே இருந்தனர்; தாய் தன்

மகளை அழைத்து, மகளே! வாயிற்கண் நீர் வேண்டி நிற்கின்றான் ஒரு மகன்; பொற்கலத்தில் நீர் மொண்டு சென்று அவனுக்கு ஊட்டிவா" எனப் பணித்தாள். தாய் இட்ட பணியை மறுக்கமாட்டாமையாலும், வாயிற்கண் நிற்போன், பண்டு, தன் ஆட்டத்தைக் கலைத்து அல்லல் புரிந்த அப்பட்டி மகன் என்பதை அறியமாட்டாமையாலும், அவளும் நீர் கொண்டு வந்தாள்.

வந்தவள், வாயிற்கண் நின்றான்பால், உண்ணுநீர்க் கலத்தை நீட்ட அவ்விளைஞன், அவள் தந்த கலத்தை வாங்கிக்கொள்ளாது, அதை நீட்டி நின்ற கையைத் திடுமெனப் பற்றிக் கொண்டான்; இதை அவள் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாரா வகையில் அயலான் ஒருவன் தன் கையைப் பற்றவே அவள் சிந்தை கலங்கிவிட்டது; அந்நிலையே, "அம்மா! இவன் செய்வதைப் பாரேன்" என்று கதறிவிட்டாள்; அது கேட்ட தாய், என்ன கேடு நிகழ்ந்து விட்டதோ என்னும் அச்சம் அலைக்கழிக்க, அலறிப் புடைத்துக்கொண்டு ஆங்கு ஓடிவந்தாள். இதற்கிடையே, அவன் இன்னான் என்பதை அவள் அறிந்துகொண்டாள்; மேலும், அவன் பார்த்தபார்வை, அவன் அவள்பால் கொண்டுள்ள பேரன்பையும், அப்பேரன்பு மிகுதியால் தகாதன செய்த தன்னைத் தாய்முன் காட்டிக்கொடுத்துவிடாதே என்று கூறுமாற் கூறி அவன் கொள்ளும் அச்சத்தையும் அவளுக்கு உணர்த்திற்று. அந்நிலையில், அவனைக் கண்ட அவளுக்கும், அவன்பால் அன்பு பிறந்துவிட்டது. மேலும், 'அயலான் ஒருவன் தன் கையைப் பற்றினான் எனக் கூறல் பெண்மைக்கு இழுக்காம்' என உணர்த்திற்று அவள் பெண் உள்ளம்; ஆகவே, தாய் ஆங்கு வந்தவுடனே, நடந்ததை மறைத்துவிட்டு, "அம்மா! உண்ணு நீரை விக்கினான் இவன்" எனத் துணிந்து பொய் கூறினாள். அது கேட்ட தாய், அவன் அண்மையிற் சென்று, அவன் மார்பை அன்

போடு தடவிக் கொடுத்துக்கொண்டே, "தம்பி! உண்ணும் நீரை மெல்ல உண்பதற்கென்ன? விரைந்து உண்ணல் வேண்டுமோ?" என்பன போலும் அன்புரை வழங்கி, அவனைக் கண்டித்தாள். தாய் அது செய்து கொண்டிருக்க, அவன், துணிந்து தான் செய்த செயலையும், அதுகண்டு அவள் நடுங்கிய நடுக்கத்தையும், தன்னையும் தன் அன்பையும் அறிந்துகொண்ட அந்நிலையே அவள் தன்னைக் காத்தற்பொருட்டுத், துணிந்து ஒரு பொய் உரைத்துத் தன் தாயையே ஏமாற்றத் துணிந்ததையும், கண்டு, தன் நன்றியையும், அவள்பால் கொண்டுள்ள தன் காதலையும் ஒருங்கே உணர்த்துமாறு, அவளைக் கடைக்கண்ணுல் நோக்கிஞன். அந்நிலையே அவளும், அவன்பால் காதல்கொண்டாள்.

அன்று தொடங்கிய அவர்கள் காதல், நாள்தோறும் வளர்ந்தது. அவளும் தன் காதல் நிறைவேறத், தன் தோழியின் துணை இன்றியமையாதது என்பதை உணர்ந்தாள். அதஞல், ஒருநாள் தன் தோழியை அழைத்து, அவள்பால், அவனையும் பட்டியாய்த் திரிந்த பிள்ளைப் பருவத்தில், அவன் செய்த சிறு செயலையும், அத்தகையான் இன்று காட்டும் பேரன்பையும், அப்பேரன்பைப் புலப்படுத்தும் அவன் பண்பாட்டினையும், அவன் அன்று செய்த சிறுமையை மறந்து, இன்று, அவன்பால் தானும் காதல்கொண்டுவிட்டதையும் கூறி, அவள் துணை வேண்டிஞள்.

அவள், தன் தோழிபால் கூறிய அச்சொற்களை, அழகிய இனிய ஓவியமாக்கி உணர்த்துகிறது இச் செய்யுள் :

**சுடர்த் தொடீஇ! கேளாய்; தெருவில் நாம் ஆடும்**
**மணற்சிற்றில் காலிற் சிதையா, அடைச்சிய**
**கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி,**

நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்.
அன்னையும் யானும் இருந்தேமா, ' இல்லிரே !
உண்ணுநீர் வேட்டேன் ' என வந்தாற்கு, அன்னை,
' அடர் பொன் சிரகத்தால் வாக்கிச், சுடர் இழாய் !
உண்ணுநீர் ஊட்டிவா ' என்றாள் ; என யானும்,
தன்னை அறியாது சென்றேன் ; மற்று, என்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு,
' அன்னாய் ! இவன் ஒருவன் செய்தது காண் !' என்றேனா,
அன்னை அலறிப் படர்தரத், தன்னையான்
' உண்ணுநீர் விக்கினான் ' என்றேனா ' அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்று, என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி, நகைக்கூட்டம்
செய்தான் அக் கள்வன் மகன்."

தலைவி, தோழிக்கு அறத்தொடு நின்றது இது. இதற்கு விதி : தொ. பொ : 10

*1. அடைக்கிய - கூந்தலில் வைத்த ; 3. பரிந்து - அறுத்து ; 4. பட்டி - காவல்இன்றி வளர்ந்தவன், கேட்பார் அற்றவன் ; 7. சுடர் - ஒளிவீசும் ; சிரகம் - நீர் உண்ணும் கலம்; வாக்கி - வார்த்து ; 10. தெருமந்திட்டு - மருண்டு ; 14. புறம்பழித்து - ' மெதுவாக உண்பதற்கென்ன ' என்பதுபோல்வன கூறிக் கண்டித்து ; நீவ - தடவிக் கொடுக்க ; 15. நகைக்கூட்டம் - மனமகிழ்ச்சி தரும் நட்பு. 16. கள்வன் - திருடனாகிய அவன்.*

## 16

# மணக்கோலம் கண்டு மகிழ்வேன்

மரங்கள் மண்டி வளர்ந்த ஒரு மலைச்சாரல்; அம் மலைச்சாரலில் மதம் மிக்க யானையொன்று, பெருமிதம் தோன்றச் சென்றுகொண்டிருந்தது; அதைக் கண்ணுற்ற ஒரு புலி, அதைக் கொன்று, அதன்நுதலைப் பிளந் துண்ண விரும்பிற்று. ஆனால், அவ்யானையின் முன் சென்று தாக்க அதற்கு அச்சம்; அதனால், அடித்து வீழ்த்தற்கேற்ற இடத்தையும் காலத்தையும் எதிர் நோக்கி, அதைப் பின்தொடர்ந்தது. முறம்போலும் தன் இருகாதுகளும், பின்தொடரும் அப்புலியை மறைத்து விட்டமையால், யானை அதை அறிந்து கொள்ளவில்லை. யானை சிறிதுதூரம் பின்தொடர்ந்து சென்றதும், அப்புலி, யானைமீது திடுமெனப் பாய்ந்து தாக்கிற்று; அதனால் கடுஞ்சினம் கொண்ட யானை, அப் புலியை, அதன் மார்பில் தன் கோடுகளாற் குத்தி, துரி யோதனனை, அவன் துடையில் கதைகொண்டு தாக்கி, உயிரைப்போக்கி வென்ற பீமசேனனைப்போல், கொன்று வென்றது. பின்னர், வென்ற அப்பெருமிதம் தோன்ற,

கம்சன் ஏவ வந்து போரிட்ட சாணூரன் முதலாம் மல்லர் களை வென்று, அவ்வெற்றியால் மகிழ்ந்து ஆரவாரிக்கும் தன் இனத்தாரிடையே மகிழ்ந்து செல்லும் கண்ணனைப் போல், தன் வெற்றி கண்டு மகிழும் தன் யானைக்கூட்டங் களோடு சேர்ந்து, அம்மலைச்சாரலில் உலாவந்தது.

இத்தகைய வளமிக்க நாட்டிற்கு உரியான் ஓர் இளைஞன், தன் ஊரை அடுத்திருந்த மற்றொரு மலை யரசன் மகளைக்கண்டு காதல்கொண்டான்; அவளும் அவன்பால் காதல்கொண்டாள். அவளை, அவள் பெற்றோர், புறம் போகவிடாது பேணிக் காத்து வந்தன ராதலின், அவன் நாள்தோறும், அவள் பெற்றோர் அறியாவாறு, அவளூருக்குச் சென்று, கண்டு மகிழ்ந்து வரத்தொடங்கினான்.

ஒருநாள், மணம் நாறும் சந்தனம் பூசிய மார்பில், தாமரை மலர்கொண்டு தொடுத்த மாலை கிடந்து அணி செய்ய, அவன் வந்தான்; அவ்வாறு வந்தானை, அவ்வூரார், மணம்நாறும் மாலை அணிந்து, மலையிற் கோயில்கொண்டு, பூவும் புகையும் பலியாகப்பெறும் முருகன் திருமேனிகொண்டு உலாவருவதாகக் கருதி அவனை அணுகவும் அஞ்சி அகன்றனர். அதனால், அன்று இடையூறு ஏதும் இன்றி, அவளைக்கண்டு மகிழ்ந்து மீண்டான்.

மற்றொருநாள், நீராடி, ஈரம்புலராத ஆடைமீது, தன்னைப் பிறர் அறிந்துகொள்ளாவாறு மறைக்கவல்ல கருநிறப் போர்வை போர்த்து வந்தான். அவனை அந்தக்கோலத்தில் இரவிற்கண்ட அவ்வூர் மக்கள், அவனைத் தங்கள் புனத்திற்புகுந்த யானையெனப் பிறழ உணர்ந்து, அதை விரட்டுதற்கு வேண்டும் ஒளிவீசும் பந்தமும், கவணும் கல்லும், வில்லும் அம்பும் கொணர் வான் விரைந்தனராதலின், அவர்கள், அவனை இன்னான்

என அறிந்துகொண்டிலர்; அதனுல், அவன் அன்றும் தடையேதும் இன்றித் தன் காதலியைக்கண்டு மகிழ்ந்து சென்ருன்.

பிறிதொருநாள், அழகிய ஆரங்கள் மார்பிற்கிடந்து மின்ன, காதலியைக் காணவேண்டும் எனும் ஆர்வம் ஒருபால் உந்த, இவ்வாறு இரவில் வந்து செல்லும் தன்னைக் கண்டுகொண்டால், அவளுக்கு ஏதம் உண்டாமே என அவள்பாற் பிறந்த அருள் உள்ளம் ஒருபால் ஈர்ப்ப, பிறர்கண்ணிற் படாவாறு ஒளிந்து ஒளிந்து முன்னேறிச் சென்ருன். செடிகொடிகளுக் கிடையே மறைந்து செல்லும் அவன் காலடியோசை கேட்டு விலங்குகள் மருண்டு ஓடும் ஓசையாலும், அவன் அவ்வாறு மறைந்து செல்லுங்கால், இடையிடையே, அவன் கழுத்திற்கிடக்கும் ஆரம் வீசும் ஒளி, புலியின் கண்ணொளிபோல் தோன்றியதாலும், தம்மூருள் புலி புகுந்துவிட்டதோ என, அவ்வூர்வாழ் மக்கள் அஞ்சி அகன்றனர்; அதனுல், அவன், அன்றும் அவர்களால் அறியப்பெருதே வந்து, அவளைக்கண்டு மகிழ்ந்து சென்ருன்.

இவ்வாறு, அவன் வருகைக்குத் தடையொன்றும் நேர்ந்திலது ஆயினும், அத்தடை நேராமைக்கு - அவ் ஊரார் அவனை அறிந்துகொள்ளாமைக்கு - அவர்கள் அவனை அணங்கென்றும், களிறென்றும், புலியென்றும் பிறழ உணர்ந்ததே காரணமாம் என்பதை அவன் அறியான்; ஆனுல், இவ்வாறே, எவரும் அறியாவாறு, இரவினும் பகலினும் வந்து செல்வதையே வழக்கமாகமேற்கொள்ளத்தொடங்கினுன்.

ஆனுல், அவன் வருகையை, ஒவ்வொருநாளும் ஊரார் உணர்கின்றனர் என்பதையும், ஆனுல். அவன் தோற்றமும், அவன் வரும் முறையும் கண்டு, அவனை

ஒருநாள் அணங்கென்றும், ஒருநாள் களிறென்றும், ஒருநாள் புலியென்றும் பிறழ உணர்ந்து விடுவதால், உண்மை வெளிப்படாது உளது என்பதையும், அவர்களை இவ்வாறே என்றும் ஏமாற்றி விடுதல் இயலாது, ஒருநாள் உண்மை வெளியாகி விடுதல் உறுதி, அவர்கள் அவனைக் கண்டுகொண்டு, அவனோடு தான் கொண்டுள்ள இக்காதல் ஒழுக்கத்தை உணர்ந்து விடுவாராயின், அவர்கள்முன் தான் உயிர்வாழ்தல் இயலாது என்பதையும் அப்பெண் உணர்ந்தாள். அதனால், அவள் பெரிதும் வருந்தினாள்; அவள் வருத்தம் கண்டு, அவள் தோழியும் வருந்தினாள்; அவனும், அவளும் கொண்ட காதல் வளரத்துணை புரிந்தவள் இத்தோழி. அவள், இவ்விடர்ப் பாட்டிற்கு ஒரு முடிவு காணல் வேண்டும் எனக் கருதினாள்.

ஒருநாள், அவ்வூர் மக்கள் கண்ணிற்படாது வந்து சேர்ந்தான் அவ்விளைஞன். அவனைக்கண்ட தோழி, அவன்பால், அவன் மறைந்து மறைந்து வருவதையும், அதை ஊரார் அன்றுவரை உணராமையினையும், அவர் உணராமைக்காம் காரணம் இவை என்பதையும் விளங்க உரைத்துவிட்டு, “அன்ப! இவ்வாறே மறைந்து வாழ்தல் இனியும் இயலாது; உண்மை ஒருநாள் வெளிப்பட்டுவிடும்; அந்நிலையில், இக்களவொழுக்கத்தைக் காரணமாகக்கொண்டு, இதுகாறும் எங்கள்முன் நிற்கவும் நாணும் இவ்வூரார், அலர் தூற்றித் துயர் விளைக்கத் துணிவர். ஊரில் அலர் எழின், இவள் உயிர் வாழாள்; இவள் நலமே என்நலம்; இவள் வாழ்வே, என்வாழ்வு ஆதலின், இவளை இழந்த பின்னர் யானும் உயிர் வாழேன்; ஆகவே, அன்ப! இவள் நின்னைப் பலர் அறிய மணந்துகொண்டு, அதனால், அலருரைக்கும் ஊராரை வாயடங்கப் பண்ணி, நின் மனைபுகுந்து, நின் சுற்றத்தாரிடையே பெருமித வாழ்வுவாழ வகைபுரியு

மாறு, நீ இன்றே மணமுயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்; வரைந்துகொள்ளுதல் வேண்டும் என யான் வேண்டிக்கொள்வதற்கு, ஊரார் உரைக்கும் அலரை ஒழிக்க வேண்டும் என்பது மட்டும் காரணமாகாது; உங்கள் மணவிழா நாளன்று, எம்மை இதற்கு முன்னர் அறியாத புதியவன்போல் நீ நடந்துகொள்வதையும், திருமண நிகழ்ச்சியால் பிறந்த நாண் தலைதூக்கத், தன்னிரு கைகளால் தன் முகத்தை மூடிக்கொள்ளும் இவள் அடங்கிய நிலையையும் கண்டு மகிழ்தல் வேண்டும் எனும் என் ஆர்வமும் ஒரு காரணமாம். ஆகவே, அன்ப! இக்களவொழுக்கத்தை இன்றோடு கைவிட்டு, மணந்து மனையறம் மேற்கொள்ளுதற்காம் முயற்சியினை மகிழ்ந்து மேற்கொண்டு, எம்பெற்றோர்பால் மணம் பேசி, அவர் மகளை வேண்டிப் பெறுவாயாக " எனக்கூறி அனுப்பினாள்.

தோழி, அவனுக்குக் கூறிய அக்கூற்றினைப் பொருளாகக்கொண்டு பாடப்பெற்ற அழகிய செய்யுள் இது:

"முறஞ்செவி மறைப் பாய்பு முரண் செய்த புலிசெற்று
மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கு அறுத்திடுவான் போல், கூர்நுதி மடுத்து அதன்
நிறம் சாடி முரண் தீர்ந்த நீள்மருப்பு எழில் யானை,
மல்லரை மறம்சாய்த்த மால்போல் தன்கிளை நாப்பண்
கல்லுயர் நனம் சாரல் கலந்து இயலும் நட! கேள்:

தாமரைக் கண்ணியைத், தண்நறும் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீ வரின்:
மணம் கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கு என அஞ்சுவர் சிறுகுடியோரே;

ஈர்ந்தண் ஆடையை, எல்லி மாலையை,
சோர்ந்து வீழ் கதுப்பினாள் செய்குறி நீ வரின்,
ஒளிதிகழ் நெகிழியர், கவணையர், வில்லர்
களிறு என ஆர்ப்பவர் ஏனல் காவலரே;

ஆர மார்பினை, அண்ணலை, அளியை,
ஐது அகல் அல்குலால் செய்குறி நீ வரின்
கறிவளர் சிலம்பில் வழங்காலானைப்
புலி என்று ஓர்க்கும் இக்கலிகேழ் ஊரே ;

எனவாங்கு,
விலங்கு ஓரார், கமய் ஓர்ப்பின், இவள் வாழால் ; இவளன்றிப்
புலம் புகழ் ஒருவ ! யானும் வாழேன் ;
அதனால், பொதி அவிழ் வைகறை வந்து நீ குறைகூறி
வதுவை அயர்தல் வேண்டுவல் ; ஆங்குப்
புதுவை போலும் நின் வரவும், இவள்
வதுவை நாண் ஒடுக்கமும் காண்குவல் யானே.''

இரவுக்குறியது ஏதமும், தன் உள்ளத்து விழைவும் கூறித், தோழி, தலைவனை வரைவு கடாயது இது.

உள்ளுறை : *செவி மறைப்பப் பாய்ந்த புலி, களவொழுக்கம் காரணமாக அலர் உரைத்த ஊரார் ; புலியை யானை வென்றது, மணந்துகொள்வதால், ஊரார் அலரைத் தலைவி அடக்கியது ; யானை தன் கிளை நடுவே கலந்து செல்லுதல், தலைவி, மணந்து, தலைவன் மனை புகுந்து, அவன் சுற்றத்தாரிடையே மகிழ்ந்து வாழ்தலாம்.*

*1. செற்று - சினந்து ; 3. குறங்கு - துடை ; மடுத்து - குத்தி ; 4. நிறம் - மார்பு ; சாடி - திறந்து ; 6. நனம் - அகன்ற ; 11. எல்லி - இருட்டு ; மாலை - இயல்பு; எல்லி மாலையை - இருண்ட தன்மை வாய்ந்து அதாவது கருநிறப் போர்வை மேற்கொண்டு ; 13. நெகிழி - தீப்பந்தம் ; 17. கறி - மிளகு ; 18. ஓர்க்கும் - கருதும் ; 20. விலங்கு - பிறிது ஒன்றாக ; ஓரார் - கருதாராய் ; 21. புலம்புகழ் ஒருவ - அறிவால் புகழப்படும் ஒப்பற்றவனே ; 22. பொதி அவிழ் - அரும்புகள் மலர்கின்ற.*

# 17

# கண்டாள் கவின் பெற்றுள்

வளம்மிக்க ஒரு மலைநாடு ; அந்நாட்டிடை நின்ற மலையொன்று, வானுற ஓங்கி வளர்ந்திருந்தது ; அதனல், மழைதரும் மேகங்கள், அதன் உச்சியில் என்றும் படிந்து கிடக்கும் ; மழைதரு மேகங்கள் உண்மையால், அம்மலையினின்றும் பிறந்து ஓடும் அருவிகள் எல்லாம், பேரொலி எழப் பெருக்கெடுத்தோடும். அதனுல், அவ்வருவிகள் பாயும் இடங்களில் உள்ள பள்ளங்களெல்லாம் நீர் நிறைந்து வழியும் ; அவை என்றும் நீர் அருமையால், ஆங்குக் காந்தட் செடிகள், நாள்தோறும் புதிய புதிய அரும்புகளை விட்டு அணிசெய்யும். மழைபெருது வறுமையுறுதலை அறியாத அந்நாட்டில், சுரபுன்னை மரங்கள் வளர்ந்த மலைச்சாரலில். தான் விரும்பும் பெண் யானை தன்பால் இருக்கக்கண்டு, அதன்மீது கொண்ட ஆசையால் தன்மீது பகை கொண்ட பிறிதொரு வேழத்தைத், தன்கோடுகளால் அதன் நுதலைக்குத்திப்பிளந்து கொன்றது ஒரு களிறு ; அவ்வாறு குத்தி வாங்கிய அக்களிற்றின் கோடுகள், செந்நீர் படியச் சிவந்து

தோன்றுவதைப்போல், காட்சிதரும் அக்காந்தள் மலர்க் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாம்!

அத்தகைய வளமிக்க மலைநாட்டில் வாழ்வானோர் இளைஞன், ஒரு பெண்ணைக்கண்டு காதல் கொண்டான்; அவளும் அவனைக்காதலித்தாள்; பிறர் அறியாவாறு அவளை மணந்துகொண்டான்; மணந்து அவளுக்கு மகிழ்ச்சி அளித்தான்; தானும் மகிழ்ந்தான்; "இம் மகிழ்ச்சி கெட்டுவிடுமோ? அவன் மறந்து விடுவனோ? என அவள் அஞ்சியவிடத்து, "உன்னைப்பிரியேன்; பிரியின் உயிர்வாழேன்" என ஆணையிட்டுக்கூறி அவளைத் தேற்றினன். அவ்வாறு தேற்றியவன், இடையே, ஒருசில நாட்கள் அவளைக் காணவந்திலன்; அதனால், அவள் துயர் உற்றாள்; பிரிவுத்துயர் அளவில தாயிற்று; மனத்துயர் மிகுதியால், அவள் உடல் நலனும் கெட்டது; அவள் தோள்கள் தளர்ந்தன; அதனால், அவள் கைவளைகள் தாமாகவே கழன்று விழத்தொடங்கின; கயல்மீன்போலும் அவள் கண்கள், அக்கயல்கள், உணவுண்ணுங்கால் தாம் உண்ட நீரைப் பின்னர் உமிழ்தல்போல், இடையறாது நீர் சொரியத் தொடங்கின. அவள் உடல் தன் பண்டைய ஒளி கெட்டது; பீர்க்கம்பூப்போலும் பொன்னிறப் பசலை படர்ந்து பொலிவிழந்தது; பகற்காலத்தில், தன்னைச் சூழ நிகழும் நிகழ்ச்சிகளாலும், காணும் காட்சிகளாலும், தன் துயரை ஒருவாறு மறத்தல் இயலுமேனும், ஒவ்வோர் இரவிலும் காதலனைக் கனவிற்கண்டு கலங்கினா ளாதலின் அவள் துயர் குறைதற்கு மாறாக அளவின்றி வளர்ந்தது.

தன் மகள்பால் காணலான இம்மாற்றம் கண்ட தாய்; அவள் நோய், தெய்வம் தந்தது எனக்கொண்டு, அது போக, அத்தெய்வத்தை வழிபடத் தொடங்கினாள்;

தெய்வ வழிபாட்டிற்குப் பின்னரும் அவள் நோய் தணியாமை கண்ட ஊரார், அவள் ஒழுக்கம் குறித்து அலர் உரைக்கத் தொடங்கினர்; அதனால், அவள் துயர் மேலும் மிக்கது; இவ்வாறே செல்லவிடின் அவள் உயிர் வாழாள்; இந்நிலையினை உணர்ந்த அவள் உயிர்த்தோழி, அவள் காதலனைக் கண்டு, அவள் துயர்நிலை கூறி, அதைப்போக்கி அவள் நலம் மிகத் துணை செய்யும், பிரியாமைக்கு வழிசெய்யும், வரைவினை மேற்கொள்ளு மாறு வேண்டுதல் வேண்டும் எனக் கருதினாள். சின்னாட் கழித்து அவ்விளைஞன் ஆங்கு வந்தான்; வந்தானைத் தோழி கண்டு, அவன் காதலியின் நிலையினை அவனுக்கு எடுத்துரைத்தாள்; அப்போது, அவ்விருவர்க்கிடையே கீழ்க்கண்ட உரையாடல் இடம் பெற்றது :

இளைஞன் : "வருத்தம் மிகுதியால் வாட்டம் உற்றாள்; வளை கழன்றது; வளை கழலவே, இவள் தளர்ச்சியைத் தாய் உணர்ந்தாள் எனக் கூறுகின்றனையே; கழலும் வளைகளைக் கையிலே சிறிது மேலேற்றிச் செறித்துவிடின் அவள் தளர்ச்சியை மறைத்திருத்தல் இயலாதோ?"

தோழி: "அன்ப! அவள் கைவளைகளைக் கழலாமல் மேலேற்றிச் செறித்துவிடலாம்; ஆனால், அதனால் பயனில்லையே; அவள் கண்கள் தாம் நீர் சொரியத் தொடங்கி விட்டனவே; கைவளைகளைச் செறிப்பது போல் கண்ணீரைத் தடுத்தல் எம்வசம் இல்லையே அதற்கு யாம் என் செய்வோம்?"

இளைஞன் : "அவள் உடல் தளர்ந்து விட்டதாயினும், அதைக்கொண்டு தெய்வத்தை வழிபடவேண்டுமோ? தெய்வத்தை வழிபட்டதாலன்றோ, ஊரார் இவள் களவொழுக்கத்தை உணர்ந்தனர்; தளர்ச்சிக்கு வேறு காரணம் கற்பித்துக் கூறித் தெய்வ வழி

பாட்டை மேற்கொள்ளாவாறு தாயைத் தடுத்திருத்தல் கூடாதோ?''

தோழி: "அன்ப! தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளாவாறு தாயைத் தடுத்திருத்தல் இயலும்; ஆனால், அதைச் செய்துவிடுவதால்மட்டும், இவள் ஒழுக்கம் ஊரார்க்குத் தெரியாதிருந்துவிடாது; இவள் நெற்றி, பிறைபோலும் தன் பண்டை அழகிழந்து பீர்க்கம்பூ நிறம்போலப் பசலைபெற்றுவிட்டதே; அதற்கு யாம் என் செய்வோம்? அந்நெற்றிப் பசலை, இவள் ஒழுக்கத்தை ஊரார்க்குப் பறைசாற்றியன்றோ உரைக்கத் தொடங்கிவிட்டது! இந்நிலையில் தெய்வ வழிபாட்டைத் தடுப்பதால் யாது பயன்?''

இளைஞன்: யான் சிறிது அலுவல் மிகுதியால் வாராதேனாயினேன்; அதற்காக அதையே எண்ணி எண்ணித் துயர்உறல் வேண்டுமோ? வேறு வினைமீது சென்ற சிந்தனையால், உங்களை நான் சிறிதே மறந்திருந்ததுபோல், நீங்களும் என்னைச் சிறிதே மறந்து, மனந் தேறி யிருத்தல் கூடாதோ?''

தோழி: "அன்ப! அவ்வாறு மறந்திருத்தல் எம்மாலும் இயலும்; ஆனால், இரவில் தனித்திருக்கும் இவளை, நின்னைப்பற்றிய எண்ணங்கள், கனவில்வந்து மருட்ட ஒருநாளும் தவறிற்றிலதே; அதற்கு யாம் என் செய்வோம்; ஒவ்வோர் இரவிலும், கனவில் நின்னைக் கண்டு துயர்உறும் நாங்கள், பகற்காலத்தில் மறந்திருத்தல் எவ்வாறு இயலும்?''

இவ்வுரையாடலின் பயனாய் வாயடைத்து நின்ற அவன், அந்நிலையில் ஆங்கு வந்த தன் காதலி, தோழி கூறிய தளர்ச்சியேதும் இன்றிப், பண்டு தான் கண்ட பேரழகோடு தோன்றக் கண்டு, தோழியை நோக்கி,

"ஆமாம், 'இவள் இவ்வாறு வருந்தினாள்; தோள் தளர்ந்தது; வளைகழன்றன; கண்ணீர் சொரிந்தாள்; பசலைபூத்தது இவள்மேனி என்றெல்லாம் கூறினையே. இதோ பார், இவள்பால் நீ கூறிய குறையேதும் இல்லா திருப்பதை! நீ இவ்வளவும் கூறியன பொய்யன்றோ?" என்றான்.

அதுகேட்ட தோழி, "அன்ப! நின்நாட்டில் வளரும் தினை, மழைபெறாது வறட்சி உற்ற காலத்தில் அது காட்டும் வாடிய நிலையினை, அது பெருமழை பெற்று வளமுற வளர்ந்திருக்கும் காலததில் அதுகாட்டும் கவின்மிகு காட்சியைமட்டும் கண்டவர் அறிவரோ? அது முளைவிட்டெழுந்து வளரத் தொடங்கிய காலம் முதல், அது வளர்ந்து பயன் அளிக்கும் காலம்வரை, அதனுடன் இருந்து பேணி வளர்ப்பவர் அன்றோ, அதன் வாடிய நிலையினைக் கண்டு வருந்தியிருப்பர்; அதைப்போல், நின் அன்பைப் பெற்ற அந்நிலையே, தன் தளர்ச்சியெல்லாம் அகல, வனப்புற்று விளங்கும் இயல்புடையளாய இவள், நின் அன்பைப் பெறாத காலத்தில், எவ்வாறு வாடி வனப்பு இழப்பள் என்பதை, நீ அறிந்து கொள்ளுதல் இயலாது. அதை அறிதல், அவள் பிறந்தநாள்தொட்டு அவளுடன் இருந்து, அவள்நலம் பேணும் என்னால் மட்டுமே இயலும். ஆகவே, அன்ப! அத்தகைய நலக்கேடு இனியும் நேராவண்ணம் இவளை மணந்து கொள்ள, இன்றே வரைவொடு வருவாயாக!" எனக்கூறி வழியனுப்பினாள்.

தோழிக்கும் அவ்விளைஞனுக்குமிடையே நடைபெற்ற அவ்வுரையாடலை, உணர்ச்சியோடு எடுத்துரைக்கிறது இச்செய்யுள்:

**"வறன் உறல் அறியாத வழைஅமை நறும் சாரல்**
**விறல்மலை வியல் அறை வீழ்பிடி உழையதா**

மறம் மிகு வேழந்தன் மாறுகொள் மைந்தினால்
புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல
உயர்முகை நறுங்காந்தள் நாள்தோறும் புதிதுஈன,
அயம் நந்தி அணிபெற அருவி ஆர்த்து இழிதரும்
பயமழை தலைஇய பாடுசால் விறல் வெற்ப!

மறையினில் மணந்து ஆங்கே மருவறத் துறந்தபின்
இறைவளை நெகிழ்பு ஓட ஏற்பவும் ஒல்லும் மன்
அயல் அலர் தூற்றலின் ஆய்நலன் இழந்த கண்
கயல் உமிழ் நீர் போலக் கண்பனி கலுழாக்கால்;

இனிய செய்து அகன்றுநீ இன்னாதாத் துறத்தலின்,
பனி இவள் படர் எனப் பரவாமை ஒல்லும் மன்;
ஊர் அலர் தூற்றலின் ஒளிஓடி, நறுநுதல்
பீர்அலர் அணிகொண்டு பிறைவனப்பு இழவாக்கால்;

அஞ்சல் என்று அகன்று நீ அருளாது துறத்தலின்,
நெஞ்சழி துயர்அட நிறுப்பவும் இயையும் மன்;
நனவினால் நலம் வாட நலிதந்த நடுங்கு அஞர்,
கனவினால் அழிவுற்றுக் கங்குலும் ஆற்றாக்கால்;

எனவாங்கு,
விளியா நோய் உழந்து ஆன என் தோழி நின்மலை
முளிவுற வருந்திய முளைமுதிர் சிறுதினை
தளிபெறத் தகை பெற்றாங்கு, நின்
அளிபெற நந்தும் இவள் ஆய்நுதற் கவினே."

தோழி, தலைவியது ஆற்றாமையும், ஆற்றுவித்தல் அருமையும் கூறி வரைவு கடாயது இச்செய்யுள்-

**உள்ளுறை:** *மணம்நாறும் காந்தள், கொடிய கோடு போல் தோன்றல், நல்லோனாய தலைவன், வரைந்து கொள்ளாமையால் கொடியன்போல் தோன்றலாம்; பள்ளங்கள் நீர்நிறைந்து அழகு பெறுமாறு அருவிகள் பெருக்கெடுத்து ஓடி வருவதற்குக் காரணமான மழை,*

அயலார் வாயில் அலர் எழுமாறு அவன்வந்து செல்லற்காம் அவன் பேரன்பாம்.

1. வறன்உறல் - மழை இன்றி வாடுதல்; வழை - சுரபுன்னை; 2. விறல் - சிறப்பு: வியல் - அகன்ற: அறை - பாறை; வீழ்பிடி - தான் விரும்பும் பெண்யானை: உழை - பக்கம்; 3, மைந்து - பலம்; 4. புய்கோடு - பிடுங்கிய கொம்பு; 5. முகை - அரும்பு; 6. அயம் - பள்ளம்; நந்தி - நீர்நிறைந்து; 7. பயமழை - பயன்மிக்க மழை: தலைஇய - உச்சியிற்கொண்ட: 8. மறை - களவொழுக்கம்; மருவுதல் - கூடுதல்; அற - நீங்குமாறு; 9. இறை - முன்கை: நெகிழ்பு - கழன்று; ஒல்லும் - இயலும்; மன் - அசை: பயன் இல்லாமையால் அது இயலாதாயிற்று எனும் பொருள்தரும்; 13. பனி - நோய்; படர் - நோய்; பரவுதல் - வழிபடுதல்; 14. ஒளிஓடி - ஒளிகெட்டு; 15. பீர் அலர் - பீர்க்கமலர்; 17. அட - வருத்த; நிறுப்பவும் - உயிரைப்போக்காது நிறுத்தவும்; 18. நலிதந்த-வருத்திய; விளியாநோய் - அழைக்காமல் தானேவந்த காதல்நோய்; 22. முளிவுற - உலர்ந்து போம்படி; 23. தளி - மழைத்துளி; தகை - அழகு; 24. நந்தும் - பெருகும்.

# 18

# அல்லல் அகற்றினன்

குன்றில்வாழ் குறவர் மகள் ஒருத்தி, கொடிப்பூப் போலவும், கோட்டுப் பூப்போலவும் பொன்னாற் செய்த பொற்பூமாலை மார்பிற்கிடந்து மின்ன, வளைகளும், அவ் வளைகள் ஒன்றோடொன்று நெருங்கி விளங்குமாறு கட்டப் பெற்ற கட்டுவடமும், அணைபோல் பருத்த அவள் தோளின் அழகிய முன்கையிற் கிடந்து அணிசெய்ய, மகரமீன் வாய்போற் பொன்னாற்செய்த வனப்புமிக்க தலையணியும், பல வடங்களாகக் கட்டப்பெற்ற பன்னிற மலர் மாலையும், கஸ்தூரி மணங்கமழும் அவள் கூந்தற்கண் கிடந்து பேரழகு செய்யத், தன் தினைப்புனத்தை அடுத்த ஓரிடத்தே, ஒருநாள் தனித்திருந்தாள். அப்போது வேட்டைமேற்கொண்டோ, அல்லது வேறு பணிமேற் கொண்டோ, ஆங்குவந்த ஓர் இளைஞன், அவளை அந்நிலையிற் கண்டான். அவள் பேரழகால் கட்டுண்டு காதல் கொண்டான். காதல் கொண்டானாயினும், அவள் கருத்தறியாது, அவளை அணுக அஞ்சினன். அந்நிலையில்

அவளும் அவனைக் கண்டாள்; அவன் தன்பால் காட்டும் காதலுணர்ச்சியை அவன் கண்காட்டக் கண்டுகொண்டாள்; அவளும் அவனைக் காதலித்தாள்.

அவள் உள்ள நெகிழ்ச்சியை அவள் கண்கள் உணர்த்திவிட்டன; தான் அவளைக் காதலிப்பது போன்றே, அவளும் தன்னைக் காதலிக்கிறாள் என்பதை உணர்ந்துகொண்ட அவன், துணிந்து முன்வந்து அவளை அணைத்துக்கொண்டான். அவனை அவள் காதலித்தாளாயினும், பண்டறியாத ஒருவன் தன்னைப் பற்றிக்கொண்டதை அவள் பெண்ணுள்ளம் தாங்காதாயிற்று; அவனைக் காணவேண்டும் எனும் வேட்கையினும், அயலான் ஒருவன் அணைப்பில் கிடத்தல் தன் பெண்மைக்கு ஏலாதே என்ற எண்ணத்தாற் பிறந்த மனக்கலக்கம் மிகப் பெரிதாயிற்று. அவள் உள்ளக் கலக்கத்தால், அவள் உடலும் சிறிதே நடுங்கிற்று.

அவள் மனத்தடுமாற்றத்தை அவன் அறிந்துகொண்டான்; அதனால் அவளைநோக்கி, "நின்பேரழகால், நின்பெண்மை நலத்தால், செயலற்றேன் நான்; நின்பால் அன்புகொண்டேன்; நின்அன்பிற்கு அடிபணிந்து வாழ்வதல்லது பிறஎதையும் அறியேனாயினேன்; இந் நிலையினை ஏற்றுக்கொண்டு அருள்புரியாது அஞ்சி அகலல் நினக்கு ஏற்புடையதாமோ?" என உரைத்துக் கொண்டே, அவள் கூந்தலிற் கிடந்து தொங்கும் மாலையுள் ஒருவடத்தைப்பற்றித், தன் விரல்களிற் சுற்றிப் பிடித்து அம்மலர் மணத்தை நுகர்ந்தான்; அகலமலர்ந்த நரவம்பூப் போன்ற மெல்லிய விரல்களைக் கொண்ட அவள் அழகிய கையை, அருளொளி வீசும் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு நெடுமூச் செறிந்தான்; காமவெறி கொண்ட களிறுஒன்று, அக்காம மயக்கத்தால், தான் விரும்பும் பிடியானையின் உடலெல்லாம் தடவி மகிழ்தல்

போல், அவள் மேனி முழுவதையும் தன் கைகளால் தடவிக்கொடுத்தான். அவன் செய்த இச்செய்கைகளால்' அவள் கலக்கம் சிறிது சிறிதாக மறைந்தது. அவனோடு மகிழ்ந்துறைவதை, மனம்நிறை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டாள்; அன்று தொடங்கி, அவர்கள் இருவரும்' பிறர் அறியாவாறு, கண்டு கலந்து மகிழ்ந்து வந்தனர்.

அந்நிலையில், அவளை மணம்பேச அயலார்' சிலர் அவள் விட்டிற்கு வந்தனர்; அச்செய்தி கேட்ட அவள், தான், ஒருவனைக் காதலித்திருப்பதை அறியாத தன் பெற்றோர், தன்னை அவ்வயலாற்கு மணம்செய்துதர இசைந்து விடுவரோ? அதனல் தன் கற்பிற்குக் கேடுண் டாய்விடுமோ? என நடுங்கினள்; அந்நடுக்கம், அவள் பெண்மை யொழுக்கத்தையும் ஒரு சிறிது தகர்த்தது; தன் இன்ப துன்பங்களிற் பங்குகொள்ளும் பெருங் குணம் படைத்தவளாய தன் தோழியிடம் ஓடினள்; தன் நாணை மறந்து, அவள்பால், தனக்கும் அவ்விளைஞனுக் கும் ஏற்பட்ட காதல் தொடர்பை விளங்க எடுத்துக் கூறி, "நாளை நடைபெறப் போகும் திருமணம், எனக்கும் அவ் விளைஞனுக்குமேயாதல் வேண்டும்; அதற்கு நின் துணை யல்லது வேறறியேன்; நம் தாய்க்கும் தமர்க்கும் இதை எடுத்துக் கூறி. அதற்கு ஆவன, உடனே மேற்கொள்ள நின்னை வேண்டுகின்றேன்; இதை முடித்துத் துணை புரிவாயேல். 'தான் விரும்பிய காதலனையே மணந்து தன் கற்பினைக் காத்துக்கொண்டாள் இவள்' என என்னை நோக்கியும், 'அவள் கற்பு நெறி கெடாவாறு, உற்றது உரைத்து உறுதுணை புரிந்தாள் இவள்' என நின்னைப் பற்றியும், இவ்வூரும் உலகமும் உரைக்கும் புகழுரை, நிலை யற்ற இவ்வுலகில் என்றும் நிலைத்துவாழும்; ஆகவே அதை இன்றே புரிக; இன்றேல், இவ்வுலகம் நிலை யற்றது என்பதை அறிந்த யான், நிலையற்ற இவ்வுடலைத்

*தாங்கிக், 'கற்புநெறி கெட்டாள்' என உலகம் உரைக்கும் நிலைத்த பழியை மேற்கொள்ளேன்'' எனக் கூறினாள். அப்பெண் அவள் தோழிபால் உரைத்த, அவளின் காதல் தோன்றி வளர்ந்த வரலாற்றினையும், அவள் அவள்பால் விடுத்த வேண்டுகோளையும் விளங்க உரைக்கிறது இச் செய்யுள் :*

"'கொடியவும் கோட்டவும் நீரின்றி நிறம்பெறப்
பொடிஅழல் புறந்தந்த பூவாப்பூம் பொலன் கோதைத்,
தொடிசெறி யாப்பு அமை அரிமுன்கை, அணைத் தோளாய்!
அடியுறை அருளாமை ஒத்ததோ நினக்கு ?' என்ன,
நரந்தம்நாறு இருங் கூந்தல் எஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம் பெறச் சுற்றிய குரலமை ஒருகாழ்
விரல் முறை சுற்றி மோக்கலும் மோந்தனன் ;
நறுஅ அவிழ்ந்தன்ன என்மெல் விரற்போது கொண்டு
செறுஅச் செங்கண் புதைய வைத்துப்
பறுஅக் குருகின் உயிர்த்தலும் உயிர்த்தனன் ;
தொய்யில் இளமுலை இனிய தைவந்து
தொய்யலம் தடக்கையின் வீழ்பிடி அளிக்கும்
மையல் யானையின் மருட்டலும் மருட்டினன் :
அதனால்,
அல்லல் களைந்தனன் ; தோழி ! நம்நகர்
அருங்கடி நீவாமை கூறின் நன்று என
நின்னொடு சூழ்வல் தோழி ! நயம் புரிந்து
'இன்னாது செய்தாள் இவள்' என
மன்னா உலகத்து மன்னுவது புரைமே."

**வேற்று வரைவு வரக்கண்ட தலைவி, தோழிக்கு, இன்னவாறு கூட்டம் நிகழ்ந்தது எனக்கூறி, அதனை நமர் அறியக் கூறல் வேண்டும் என வேண்டிக் கொண்டது இச்செய்யுள். விதி: தொல்: களவு : 20, 21.**

1. நீர் இன்றி நிறம்பெற - பொன்னாற் செய்த பூவாதலின் நீரின்றியே நிறம் பெற்றது; 2. பொடி அழல் - நீறு மூடிய நெருப்பு; புறந்தந்த - பண்ணிய; பூவாப்பூ - செய்த பூவாதலின் பூவாதபூ எனப்பட்டது; 3. யாப்பு - வளையல்களைச் சேர்த்துப் பிணிக்கும் கட்டுவடம்; 4. அடி உறை - அடியின்கண் கிடந்து வாழ்தல்; 5. நரந்தம் - கத்தூரி; 6. பொலம் - பொன்; மகரவாய் - மீன்வாய் போல் பண்ணிய தலையணி; நுங்கிய - விழுங்கிய; 7. காழ் - வடம்; 9. நரு - நரவ மலர்; 10. செரு அச் செங்கண் - சினவாத கண்; அருள் புரியும் கண்; 11. பரு அக்குருகு - பறவாக்குருகு; அதாவது கொல்லன் உலைக்கண் உள்ள துருத்தி; 17. கடி - திருமணம்; நீவாமை - நீங்காமல்; அவனை விட்டு நீங்காமல்; 18. நயம் புரிந்து - கற்பு நெறிநிற்கும் நல்லதையே விரும்பி; 20. மன்னு - நிலையற்ற; புரைமே - புரையுமே என்பது புரைமே என வந்துளது; பொருந்தும் என்பது பொருள்.

# 19

# யானை அனையன்!

மூன்றும் பிறைபோல் வளைந்து சிறுத்து ஒளிவீசும் நெற்றி; மறுவற்ற முழுத்திங்கள் போல் அகன்று பேரொளி வீசும் முகம்; மலைவளர் மூங்கிலின் பருமையும் மென்மையும் வாய்ந்த தோள்கள்; நீர் நிறைந்த சுனையில் நின்று மலரும் நீலோற்பலத்தை நிகர்த்த கருநில விழிகள்; மயிலின் நடைபோன்ற சாயல்; கிளிமொழிபோலும் இனிய சொற்கள். இத்தகு நலமுடையாள் ஒரு பெண், மலைச்சாரலை யடுத்துத், தன் தந்தை உழுது விளைத்த தினைக்கொல்லையில் காவல் மேற்கொண்டிருந்தாள்.

வேட்டையாடும் விருப்பம் உடையனாய், அக்காட்டுட் புகுந்த அயலூர் இளைஞன் ஒருவன், அவள் ஆங்குத் தனித்திருக்கக் கண்டான்; அவள் பேரழகிற்கு அடிமையாகி, அவளைக் காதலித்தான். காதல் மிகுதியால், தானோர் இளைஞன்; முன்னிற்பாள் ஓர் இளம் பெண்; தன்னோடு தொடர்பேதும் இலாதவள்; அவளோடு, அந் நிலையில், ஆங்குநிற்றல் அறிவுடைமை யாகாது என உண

ரும் உணர்வையும் இழந்துவிட்டான்; அதனுல் அவள் அழகைக் கண்டு மகிழ்ந்ததோடன்றி, வாய்விட்டுப் பாராட்டி வாழ்த்தவும் தொடங்கிவிட்டான்; தன் புனத்தருகேஅயலான் ஓர் இளைஞன் நிற்பதையும், அவன் தன்னையே நோக்குவதையும் கண்ட அப்பெண், நாணி, அவ்விடம் விட்டு அகலத் தொடங்கினுள்.

அவ்வாறு செல்வாளை, அவ்விளைஞன், "யாண்டும் செல்லற்க; ஈண்டே நிற்க" எனக்கூறி நிறுத்தினுன்; பின்னர் அவள் அண்மையிற் சென்று நின்று, "நெற்றி பிறர் கண்டு வியக்குமளவு தேய்ந்து ஒளி வீசுகிறது; ஆனுல், மூன்ரும் பிறைத் திங்களோ என்று நோக்கினுல், அன்று. முகம், களங்கமற்றுக் காட்சி அளிக்கிறது; ஆனுல் முழு நிலாத்திங்களோ என்ருல், அன்று. தோள்கள் பருமையும், பெருமையும் உடையன; ஆனுல், மலையிடத்து வளரும் மூங்கிலோ என்ருல், அன்று. கண்கள் நீரும் நீலநிறமும் பெற்றுச் சுடர் வீசுகின்றன; ஆனுல், சுனையிடத்து மலரும் கருநீல மலரோ என்ருல், அன்று. பையப் பைய அடியெடுத்து வைக்கும் நடையின் அழகே அழகு! ஆனுல், சாயலிற் சிறந்த மயிலோ என்ருல், அன்று. வாயினின்றும் வெளியாம் ஒவ்வொரு சொல்லும், என் உள்ள உரத்தைத் தகர்த்தெறியும் சுவை மிக்கதாம்; ஆனுல், இனிய சொல் வழங்கும் கிளியோ என்ருல், அன்று" என்பன போலப் பலப்பல கூறிப் பாராட்டினுன்.

இவ்வாறு பாராட்டிய அவன், அப்பாராட்டிற்கிடையே, வலைவீசிக், காட்டு விலங்குகளைக் கைப்பற்றும் கானவர், அவ்விலங்குகள் சோர்ந்துவீழும் நிலைமையை ஆர்வத்தோடு எதிர்நோக்கி நிற்றல் போல், அவனைக் கண்டும், அவன் சொற் கேட்டும், அவன்மீது காதல் கொண்டு, அவள் கருத்திழக்கும் நிலையை ஆர்வத்தோடு

எதிர்நோக்கினன். அதற்கேற்ப அவள் உள்ளமும் நெகிழ்ந்தது; அவன் அன்பிற்கு அவளும் அடிபணிந்து விட்டாள்; காதலுணர்வு, அவள் கருத்திலும் வேரூன்றி வளரத் தொடங்கிவிட்டது; அவள் அகநெகிழ்ச்சியை, அவள் கண்கள் அவனுக்கு அறிவித்துவிட்டன; அதை அவன் கண்டுகொண்டான். உடனே, கொலை யஞ்சாப் புலையர், தம் கைப்பட்ட விலங்குகளைக், கொல்லும் ஆர்வம் வழியத் தோன்றுவது போல், அவளைக் காதல் உணர்வு வருத்த நோக்கிக்கொண்டே, அவள் அணித்தே சென்றான்; சென்று அவளைத் தொழுதான்; அம்மட்டோ! அவளைப்பற்றி அணைத்துக் கொள்வதும் செய்தான்; ஒரு முறை, இரு முறையன்று; மதம் மிக்குக் கட்டுக் கடங்காது திரியும் களிறே போல், காதலாற் கருத்திழந்த அவன், அவளைப் பலகால் தொழுதான்; பல முறை அணைத்துக் கொண்டான்.

அறிவிழந்து அவன் அவ்வாறு செய்யினும், அவள் அசைவற்றே நின்றாள்; அவன்மீது அவள் காதல் கொண்டாளாயினும், நாணும், மடனும் முதலாம் பெண்மைக் குணங்கள், அவளைவிட்டு நீங்காமையால், அவன் பாராட்டையும் பணிதலையும் ஒரு சிறிதே வெறுப்பாள் போன்றே காணப்பட்டாள்.

அன்று தொடங்கிய அவர்கள் காதல் தொடர்பு, தொடர்ந்து வளரலாயிற்று; ஆனால், அப்பெண் எப்போதும் தனித்திராள்; அவளை வளர்த்த செவிலித் தாயின் மகளாய்ப் பிறந்து, அவள் நலம் பேணி, அவளைப் பிரியாதிருக்கும் தோழி ஒருத்தி, எப்போதும் அவளுடனேயே இருப்பள்; அத்தோழியின் துணையின்றி அவளைக் காண்பது அரிதாம்; இதை, அவள் குறிப்பாக அவனுக்கு அறிவித்தாள்; அதை அறிந்துகொண்ட அவனும், அதனால், அத்தோழி தனித்திருக்கும் சமயம்

நோக்கிப், பலநாட் பலமுறை சென்று, தனக்கும் அவள் ஆருயிர்த் தோழிக்கும் உண்டான அன்பின் தொடர்பினை அறிவித்து, அவளைக் கண்டு மகிழ, அவள் துணையை வேண்டினன்; தோழியும், அவன் பிறப்பும் நிலையும் ஆராய்ந்து, அவற்றால் அவன் நல்லனாதல் அறிந்து, அவன் குறைபோக்கித் துணை புரிய வாக்களித்தாள்; அவ்வாறு வாக்களித்தவள், அப்பெண்ணின் பால் சென்று, தனக்குத் தெரியாது என அவள் கருதும் அவள் காதல் ஒழுக்கத்தை தான் அறிந்து கொண்டதையும், அவள் காதலன், அவளைக் காணமாட்டாது வருந்தும் கொடுமையினையும் கூறி, அவனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டாள்.

தன்முன் நிற்கும் தோழியை அப்பெண் கண்டாள்; கருமேகத்திடையே தோன்றும் மின்னற்கொடிகள் போல், பொன்னால், பலபிரிவு தோன்றப் பண்ணிய தலைக்கோலங்கள் கருநிறக் கூந்தலிற் கிடந்து அணி செய்ய, தாழம்பூ இதழ்களை இடையிடையே வைத்துத் தொடுக்கப்பெற்ற மாலையும், இளம் முறுவலும், வெண்பல்லும், இன் சொல்லும், பவளம் போற் சிவந்த வாயும், பிறைபோல் ஒளிவீசும் நுதலும் அழகு செய்யாநிற்கும் அவள்நலனைப் பாராட்டினாள். பின்னர், தன்னை அவன் கண்டு, காதல் கொண்டு பாராட்டிக் கூறிய சொற்களையும், பணிந்து மேற்கொண்ட செய்கைகளையும் எடுத்துக்கூறி, 'தோழி! அவன் அவ்வாறு அறிவிழந்தன செய்துழியும், நான் அவன் அறியாமை கண்டு, உள்ளூர எள்ளி நகைத்த தல்லது, நாண் மடம் முதலாம் பெண்மைக் குணங்களை இழவாது பெருமிதமாகவே நடந்து கொண்டேன்'' எனக்கூறி; அவ்வாறு கூறுமுகத்தான், அவள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டாள்.

**மின்ஒளிர் அவிர்அறல் இடைபோழும் பெயலே போல்**
**பொன்அகை தகைவகிர் வகைநெறி வயங்கிட்டுப்**

போழ் இடை யிட்ட கமழ் நறும் பூங்கோதை,
இன்நகை, இலங்கு எயிற்றுத், தேமொழித், துவர்ச்செவ்வாய்
நன்னுதால்! நினக்கு ஒன்று கூறுவாம் ; கேள் இனி ;

நில் என நிறுத்தான் ; நிறுத்தே வந்து
நுதலும், முகனும், தோளும்; கண்ணும்
இயலும், சொல்லும் நோக்குபு நினைஇ
ஐ தேய்ந் தன்று ; பிறையும் அன்று ;
மை தீர்ந் தன்று ; மதியும் அன்று ;
வேய் அமன் றன்று ; மலையும் அன்று ;
பூ அமன் றன்று ; சுனையும் அன்று ;
மெல்ல இயலும் மயிலும் அன்று ;
சொல்லத் தளரும் கிளியும் அன்று ;
எனவாங்கு,
அனையன பலபா ராட்டிப், பையென
வலையர் போலச் சோர்பதன் ஒற்றி, என்
நெஞ்சு நெகிழ்ந்த செவ்வி காணூஉம்,
புலையர் போலப் புன்கண் நோக்கித்
தொழலும் தொழுதான் ; தொடலும் தொட்டான் ;
காழ்வரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்
தொழூஉம் ; தொடூஉம் ; அவன் தன்மை
ஏழைத் தன்மையோ, இல்லை தோழி !"

தலைவிக்குக் குறை நேர்ந்தது, தன்னைக் குறை நயப்பக் கூறிய தன்பால் வந்த தோழிக்குத் தலைவி, தலைவன் இத்துணை இளிவந்தன செய்யவும், யான் நாணும் மடனும் இழந்திலேன் எனத் தன் பெருமை கூறியது இது. இதற்கு விதி : தொல் : பொருள் : **111.**

*1. மின்-மின்னல்; ஒளிர்-விளங்குகின்ற; 2. அவிர்-விளங்குகின்ற ; அறல் - ஈண்டு மின்னற் கொடிகள் ; போழும் - பிளந்துசெல்லும் ; பெயல் - மேகம் ; 2. அகை-வெட்டி வேருக்கிய ; தகை - அழகு ; வகிர் - தலைக்கோலம் என்னும் அணி ; வகை - ஐந்துவகைக்கூந்தல் ; நெறி - அடர்ந்த மயிர் ; வயங்கிட்டு - விளங்கச்சூட்டி ; கருமேகத்-*

திடையே தோன்றும் மின்னற் கொடிகள்போல், பொன்னைவெட்டிப் பல பிரிவுகளாகப் பண்ணிய தலைக் கோலம் என்னும் அணியைத் தலைமயிர்மீது சூட்டி என்பதே. முதலிரண்டு அடிகளின் பொருளாம். 3. போழ் - தாழம்பூவின் துண்டுசெய்த இதழ்கள்; 4. எயிறு - பல்; துவர் - பவளம்; 9. ஐ - வியப்பு; ஐதேய்ந் தன்று - கண்டார் வியக்குமாறு தேய்ந்து விட்டது; 10. தீர்ந்தன்று - அற்றுளது; 11. வேய் - மூங்கில்; அமன் றன்று - தன்மையை மிகப் பெற்றுளது; 17. ஒற்றி - விழிப்பாய் இருந்து நோக்கி; 18. செவ்வி - காலம்; 19. புன்கண் - துன்பம்; 21. காழ் - மதம்மிக்க யானையை அடக்கத் துணை புரியும் குத்துக்கோல்; வரை - எல்லை அதாவது அதன் ஆட்சிக்கு; 23. ஏழைத்தன்மை அறிவால் ஏழ்மையுற்ற தன்மை அதாவது அறிவின்மை.

# 20

# அறம் தவறினுன் அரசனே

தமிழ் நாட்டுச் சிற்றூர்த் தலைவன் ஒருவன், மகப் பேறின்றிப் பலநாள் வருந்தி, பேரறம் பல புரிந்ததன் பயனாய், அவனுக்கு மகளாய் வந்து பிறந்தாள் ஓர் இளம் பெண்; பிறந்து பல்லாண்டு கழிந்த பின்னர், ஒருநாள், அவள், தன்னூரின் நடுவேயிருந்த பூஞ்சோலையுள் புகுந்து, அச்சோலையின் இடையே ஓடிய வாய்க்காலின் கரையில், வளமுற வளர்ந்திருந்த புலிநகக் கொன்றை மரத்தில், பெரியவாக மலர்ந்திருந்த பூங்கொத்துக்களைப் பறித்துக்கொணர்ந்தாள்; அம்மலர்களைத் தன் மயிரின் இடையிடையே வைத்து முடித்துக்கொண்டாள்; அவ்வாறு ஒருசேரப் பின்னிமுடித்த அவள் தலைமுடி, அம்மலரின் மகரந்தப் பொடிகளோடே, அவள் தோளிலே கிடந்து அழகு செய்தது, முழுமதி தன் கதிர்களையெல்லாம் பரப்பிக் காய்ந்தாற்போல், பேரொளி வீசும் முகத்தினளாய அவள், இவ்வாறு தன் தலைக்கோலத்தை முடித்துக்கொண்ட பின்னர், பூத்தொழில் அமைந்த

மெல்லிய ஆடை உடுத்து, அவ்வாடைமீது, எண் கோவையாலாகிய மேகலை அணிந்து, தன் ஊர்ப்புறத்தே, தென்றற் காற்றில் மெல்ல ஆடி அசையும் பூங்கொடி போல், உலாவிக்கொண்டிருந்தாள்.

அவளை அந்நிலையில் கண்டான் ஓர் இளைஞன்; அத்துணை அழகுவாய்ந்த ஒரு பெண்ணை, அவன் அதற்கு முன்னர் யாண்டும் கண்டதில்லை; அதனால், "அவள் மக்கள் இனத்தில் பிறந்த ஒரு பெண்தானோ?" என ஐயுற்றான்; "சிற்பநூல் வல்லான் ஒருவன், அரிதின் முயன்று ஆக்கிய ஓவியப்பாவையோ? உலக மகளிர் அழகையெல்லாம் ஒன்று திரட்டி, ஓர் உருவாக் கித் தந்த அழகின் திருவுருவோ? ஆடவர்மீது கொண்ட ஆருச்சினத்தால், கூற்றுவன், அவரை அழிக்க விரும்பி மேற்கொண்ட வடிவமோ?" என்றெல்லாம் எண்ணி இடர் உற்றது அவன் உள்ளம்; "இத்தகைய பேரழகுடையாளை இதுகாறும் புறம்போக விடாமல், வீட்டினகத்தே வைத்துக் காத்ததுபோல் மேலும் காவாது, இப்போது புறம்போகவிட்ட அவள் பெற்றோர் செயல் ஆற்றவும் கொடிதாம்" என்று கருதினான்; அவள் அழகைக் கண்டு, அத்துணை ஆர்வமும், ஆராமையும், அவன் உள்ளத்தில் உருவெடுத்தாடின; அவள்பால் அவன்கொண்ட காதல், அவனை, இவ்வாறெல்லாம் எண்ணி, ஏக்கமுறச் செய்ததோடு விடவில்லை; அவளை அணுகித், தன் அகத்தெழு ஆசையை அவளுக்கு அறிவிக்கவும் தூண்டிற்று; அதனால், அவளை அடுத்து, மேற்செல்லாவாறு தடுத்து நிறுத்தினான்.

நிறுத்தியவன், முதற்கண், காணும் ஆடவரைக் காதல்கொள்ளத் தூண்டும் மான்போலும் விழிமுதலாம் அவள் உடல் உறுப்புக்களின் நலனைப் பாராட்டினான்; பின்னர், அவளை நோக்கி, "அழகிய தோகையினை

யுடைய அன்னம்போலும் நடையும், பெடையினைக்கண்டு பெருமிதங் கொள்ளும் மயில்போலும் சாயலும், கறகளைப் பொறுக்கி உண்பனவாய புறுப்போலும் மடப்பமும் ஒருங்கே பெற்று விளங்கும் நின்பேரெழில், நின்னைக்காண்பவர் அறிவினை மயக்கும் என்பதை அறிவாயோ? அறியாயோ?'' என்றும், “உருவாலும், நிறத்தாலும் மூங்கில் போன்றும், காமக்கடலைக் கடப்பார்க்குத் துணை புரிதலான், கடல்நீரைக் கடக்க உதவும் தெப்பம் போன்றும் காட்சிதரும். அழகிய, பருத்த, மெல்லிய நின்தோள்கள், கண்டார் உள்ளத்தைக் கடுந்துயர்க்குள்ளாக்கும் என்பதை அறிவாயோ? அறியாயோ?'' என்றும், “கோங்கின் பேரரும்பு போலவும், அடிபருத்துத் தோன்றும் தென்னையின் முற்றாத இளநீர்க் குரும்பை போலவும், மழைத்துளி வீழ்தலால் நீரிடை உண்டாம் மொக்குள் போலவும் காட்சிதரும் நின்கொங்கைகள், கண்டார் உயிரைவாங்கும் என்பதை அறிதியோ? அறியாயோ?'' என்றும் பலப்பல கூறிப் பாராட்டினான்.

அவன் அவ்வாறு பலப்பல கூறவும், அவள், அவன் கூறிய எதையும் கேளாதாள்போலவும், அவனைக் கண்டு, அவன் அடையும் பெருந்துயரை அறியாதாள் போலவும், அவனுக்கு விடையேதும் அளியாதும், ஆங்குச் சிறிதுபோது நிற்பதும் செய்யாதும் செல்லத் தொடங்கினாள்;

தன்னையோ, தன் காதலையோ பொருட்படுத்தாது சென்ற அவள் செயல்கண்டு, வெறுத்த உள்ளத்தனாய், “நின்பேரழகைக் காட்டி என்னைக் காதற் கடுந்துயர்க்கு உள்ளாக்கிச் செல்லும் நின்மீதும் குற்றம் இல்லை; இவ்வளவு பேரழகு உடைய உன்னைப் புறம்போக விடாது, வீட்டினுள்ளேயே வைத்துக் காவாது, என் போல்வார் கண்டு, காதல்கொண்டு வருந்துமாறு, ஊர்

திரியவிட்ட நின்பெற்றோர்மீதும் குற்றம் இல்லை : 'கண்டார் உயிரைக் கொள்ளைகொள்ளும் இவள்போலும் பேரழகுடைய பெண்கள், புறஞ்செல்ல வேண்டின், கட்டுத்தறியை முறித்துக் காணும் பொருள்களை அழித்துத் திரியும் கொடிய யானையை வெளியே கொண்டு செல்ல வேண்டின், "மதமிக்க யானை வருகிறது; மக்காள்! ஓடி ஒதுக்கிடம் தேடிக்கொள்ளுங்கள்" எனப் புறப்படு முன்னர் பறையறைந்து அறிவித்துப், பின்னர் விடுத்தல்போல், "கண்டாரை மயக்கும் கட்டழகி வருகிறாள்; காளைகாள்! காணா இடந்தேடிக் கண்மூடி ஒதுங்குங்கள்!" எனப் பறையறைந்து அறிவித்த பின்னரே, வெளிச் செல்லுதல் வேண்டும்' என ஆணையிடா இந்நாட்டு அரசனே குற்றம் உடையனாவன்; ஆகவே, நின்னையோ, நின் தமரையோ நோகேன்; இந்நாட்டு அரசனையே நோவேன்" எனக் கூறி உளம் குன்றினான்.

இளைஞன் காதற் கடுந்துயர் காரணமாய்வந்த சொற்களைச் சுவைமிக்க கோவையாக்கிக் கொடுக்கிறது இப்பாட்டு :

"ஊர்க்கால் நிவந்த பொதும்பருள், நீர்க்கால்
கொழு நிழல் ஞாழல் முதிர் இணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவல்மிசைத் தாதொடு தாழ, அகல்மதி
தீங்கதிர் விட்டதுபோல முகன் அமர்ந்து,
ஈங்கே வருவாள் இவள் யார் கொல்? ஆங்கே ஓர்
வல்லவன் தைஇய பாவை கொல்? நல்லார்
உறுப்பெலாங் கொண்டியற்றி யாள் கொல்? வெறுப்பினால்
வேண்டுருவம் கொண்டதோர் கூற்றம் கொல்? ஆண்டார்,
கடிது; இவளைக் காவார் விடுதல்; கொடி இயல்,
பல்கலைச், சில்பூங் கலிங்கத்தள்; ஈங்கு இதோர்
நல்கூர்ந்தார் செல்வ மகள்;

இவளைச், சொல்லாடிக் காண்பேன் தகைத்து ;

நல்லாய் ! கேள் :
ஆய்தூவி அனம் என, அணிமயில் பெடை எனத்
தூதுணம் புறவு எனத் துதைந்த நின் எழில் நலம்,
மாதர்கொள் மான்நோக்கின் மடநல்லாய் ! நிற்கண்டார்ப்
பேதுறூஉம் என்பதை அறிதியோ ? அறியாயோ ?

நுணங்குஅமைத் திரள் என, நுண்இழை 'அணைஎன,
முழங்குநீர்ப் புணை என, அமைந்த நின் தடமென் தோள்,
வணங்கு இறை, வால் எயிற்று, அம் நல்லாய் ! நிற் கண்டார்க்கு
அணங்கு ஆகும் என்பதை அறிதியோ ? அறியாயோ ?

முதிர் கோங்கின் முகைஎன, முகம் செய்த குரும்பை எனப்
பெயல்துளி முகிழ் எனப் பெருத்த நின் இளமுலை
மயிர் வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் ! நிற்கண்டார்
உயிர் வாங்கும் என்பதை உணர்தியோ ? உணராயோ ?

எனவாங்கு,
பேதுற்றாய் போலப் பிறர் எவ்வம் நீ அறியாய்,
யாதொன்றும் வாய்வாளாது இறந்து ஈவாய் ! கேள் இனி :
நீயும் தவறிலை ; நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர் ;
' நிறை அழி, கொல் யானை நீர்க்கு விட்டாங்குப்
பறை அறைந்தல்லது செல்லற்க ' என்னா
இறையே தவறுடையான்.''

இது கைக்கிளை. இதற்கு விதி : தொல் : பொருள் : **50**

*1. நிவந்த-வளர்ந்த; பொதும்பர்-சோலை; 2. ஞாழல்-புலிநகக் கொன்றை எனும் மரம்; இணர் - கொத்து; 3. கழும் - ஒன்றோடொன்று மயங்க; கூழை - கூந்தல்; 4. சுவல் - தோள்; 7. பாவை-கொல்லிப் பாவை; 11. பல் கலை - எண்கோவை மேகலை; கலிங்கம் - ஆடை ; 13. தகைத்து - தடுத்து; 15. தூவி - தோகை; அனம் - அன்னம்; 16. தாது - கல் ; தாதுணம் - கல்லை உண*

வாகக் கொண்ட; துதைந்த - மிகப்பெற்ற; 17. மாதர்- காதல்; 18. பேதுறூஉம் - மயங்கச் செய்யும் ; 19. நுணங்கு - நுண்ணிய; அமை - மூங்கில் ; 20. புணை - தெப்பம்; 21. வணங்கு இறை-வளைந்த முன்கை; 22. அணங்கு-வருத்தம்; 23. முகை - அரும்பு; குரும்பை - தேங்காய்ப் பிஞ்சு; 24. முகிழ் - மொக்குள் ; இறந்து ஈவாய் - கடந்து செல்கின்றவளே ; 31. போதரவிட்ட - போகவிட்ட; 32. நிறைஅழி - மதத்தால் அறிவு இழந்த.

## 21

# அகன்றுள் அவள்

பாண்டி நாட்டில், பொதிய மலையை அடுத்த ஒரு சிற்றூர்; அச்சிற்றூரின், மிகப்பழைய குடிகளில் பிறந்த பெருமையோடு, செல்வ வளமும் சிறக்கப்பெற்ற ஒருவன், வானளாவ உயர்ந்து, அவ்வுயர்ச்சிக்கேற்ப அகன்ற பெரு மனையில் வாழ்ந்திருந்தான்; அவனுக்கு அழகே உரு வாய் வந்த ஒரு மகள் இருந்தாள்; அவள் தோள்கள், மூங்கில் போல் திரண்டிருக்கும்; ஐவகையாகப் பிரித்துப் பின்னப் பெற்ற அவள் கூந்தல் பெருமணம் வீசும்; விழி, மான் விழியை நிகர்க்கும்; அழகிய மயிலின் சாயல், அவள் சாயல்; இத்தகைய பேரழகு உடையாள், ஒரு நாள், தன் காலிற் கட்டிய சிலம்பு ஒலிக்க, அணிந்த அணிகள் மின்னி ஒளிவிட, ஆடும் பந்தோடு வெளியே ஓடிவந்து ஆடத் தொடங்கினுள்.

இயற்கை அழகும், செயற்கை நலனும் ஒருங்கே கொண்டு, ஆடிமகிழும் அவளைக் கண்டான் ஓர் இளைஞன்; அவள் அழகு உள்ளத்தைக் கவர, அவன் அவள்

மீது காதல் கொண்டான்; அசைவால் கொடி எனவும், ஒளியால் மின் எனவும், கண்டார் கருத்தை ஈர்த்துக் கொடுமை செய்தலின் அணங்கு எனவும் தோன்றும் அவள் அழகு கண்டு தன் அறிவிழந்தான்; அறிவிழந்த அவன், தக்க இன்ன, தகாதன இன்ன என்பதை அறியானாகி, ஆடும் அவள் அருகிற் சென்றான்.

சென்று, "நிறத்தாலும், மணத்தாலும் வேறுபட்ட பற்பல மலர் கொண்டு தொடுத்த இனிய மாலையுடையான்; தன் பொதிகை மலையில் தோன்றியது எனும் மாண்புடைய சந்தனம் பூசிய மார்புடையான்; மழையென வாரி வழங்கும் வண்மையுடையான்; உயர்ந்த உச்சிகளைக் கொண்ட பொதிய மலையுடையான்" எனத் தான் வாழும் பாண்டி நாடாளும் பெரியோனை முன்னர் வாழ்த்தினான், பின்னர், மாவின் இளந்தளிர் நிறத்தினை வென்ற அவள் மேனி அழகையும், அம்மேனியின் இடையிடையே, வேங்கைமலர் நிறங்கொண்டு மாண்புறத் தோன்றும் தேமல் அழகையும் கண்டு பாராட்டினான்.

முடிவாக, அவளை நோக்கி, "அழகே உருவாய் வந்த ஆரணங்கே! பாண்டியன் தலைநகராம் கூடல்மாநகரை அடுத்த திருப்பரங்குன்றில், தேன்சிதறிப் பாயுமாறு மலர்கின்ற கருநீல மலரைவென்ற நின்கண்கள், யானைப் படையுடைமையால் செருக்கித் தன்னைப் பகைத்துவந்த பகைவர் உடலிற் பாய்ந்து, அவர் இரத்தக்கறை படிந்து செந்நிறம் பெற்றுத் தோன்றும் அப்பாண்டியன் வேற் படையைக் காட்டிலும் சிவந்து, என்னைக் கொல்லும் கொடுமை வாய்ந்து தோன்றல் நினக்கு ஏற்புடைத்தோ? பந்தியில் வரிசை வரிசையாக நிற்கும் பெரிய குதிரைப் படை உடைமையால் பகைத்து வந்தாரின் மார்பில் பாய்ந்து, ஊடுருவிச் சென்ற அப்பாண்டியன் கை அம்பைப் போல், நின் கண்கள் என் உள்ளத்தில்

பாய்ந்து, உறுநோய் விளைத்தல், கொடுமையிற் கொடிய கொடுமையாமன்றோ? ஆரம் கிடந்து அணி செய்யும் நின் இள முலைகள், மதம் மிக்கு வலிபெற்ற, பாண்டியன் படை யானையின் கோடுகளைக் காட்டிலும் கொடுமை உடையவாதல் நினக்குப் பொருந்துமோ?'' என, அவள் பேரழகால் தான் படும் துயரத்தை அவள் உளம் புகுமாறு எடுத்துரைத்தான்.

அவன் அருகிருந்து அவ்வளவும் கூற, அப்பெண். தலை கவிழ்ந்து நிலம் நோக்கி நின்று, அவன் கூறியன வெல்லாம் கேட்டிருந்து, பின்னர், யாதோ ஒன்றை நினைத்துக் கொண்டாள் போல், தன் விளையாடும் தோழியரைக் காணும் ஆவல் மிக்கவளாய், அவ்விடம் நீங்கி ஓடிவிட்டாள். ஓடியவள்பால் தன் அறிவைப் பறிகொடுத்துவிட்ட அவ்விளைஞன், மெல்ல அவ்விடத்தை விட்டகன்று தன் ஊர் மீண்டான். தன் நண்பனை அடுத்து, ஆங்கு உற்றதெல்லாம் உரைத்து, அப்பெண்ணின்பால் தான் கொண்ட காதல் நிறைவேற, அவன் துணை வேண்டினான்.

வேய்எனத் திரண்ட தோள், வெறி கமழ் வணர் ஐம்பால்,
மாவென்ற மடநோக்கின், மயில் இயல், தளர்பு ஒல்கி,
ஆய்சிலம்பு அரி ஆர்ப்ப, அவிர் ஒளி இழை இமைப்பக்,
கொடி என, மின் என, அணங்கு என, யாதொன்றும்
தெரிகல்லா இடையின்கண் கண்கவர்பு ஒருங்கோட,
வளமைசால் உயர் சிறப்பின், நுந்தை தொல்வியன் நகர்,
இளமையான் எறிபந்தோடு இகத்தந்தாய் கேள்இனி :

பூந்தண் தார்ப் புலர்சாந்தின் தென்னவன் உயர்கூடல்
தேம்பாய அவிழ்நீலத்து அலர்வென்ற அமர்உண்கண்,
ஏந்துகோட்டு எழில்யானை ஒன்னாதார்க்கு அவன்வேலின்
சேந்துநீ இனையையால் ஒத்ததோ? சின்மொழி!

பொழிபெயல் வண்மையான் அசோகம்தண் காவினுள்,
கழிகவின் இளமாவின் தளிர்அன்னாய்! அதன்தலைப்

பணைஅமை பாய்மான்தேர் அவன்செற்ருர் நிறம்பாய்ந்த
கணையினும் நோய்செய்தல் கடப்புஅன்ருே ? கனங்குழாய் !

வகையமை தண்தாரான் கோடுஉயர் பொருப்பின்மேல்
தகைஇணர் இளவேங்கை மலர்அன்ன சுணங்கிஞய் !
மதவலி மிகுகடாஅத்து அவன் யானை மருப்பினும்
கதவவால் தக்கதோ, காழ்கொண்ட இளமுலை ;

எனவாங்கு,
இனையனகூற, இறைஞ்சுபு நிலம்நோக்கி ;
நினையுபு, நெடிதொன்று நினைப்பாள்போல் மற்றுஆங்கே,
துணைஅமை தோழியர்க்கு அமர்த்த கண்ணள்,
மனையாங்குப் பெயர்ந்தாள் என்அறிவு அகப்படுத்தே.''

**இது கைக்கிளை. இதற்கு விதி : தொல் : பொருள் : 50.**

*1. வேய் - மூங்கில்; வெறி - மணம்; வணர் - கடைகுழன்ற; 2. தளர்பு - தளர்ந்து; ஒல்கி - ஒதுங்கி; 3. அரி - சிலம்பின் உள்ளே இடும் மணிகள்; அவிர் - விளங்குகின்ற; இழை - அணிகள்; 5. தெரிகல்லா - தெரியாத; கவர்பு - விரும்பி; 7. இகத்தந்தாய் - புறப்பட்டவளே ! 8. தார் - மாலை; தென்னவன்-பாண்டியன்; 9. தேம் - தேன்; 10. ஒண்ணுதார் - பகைவர்; 11. இனையையால் - இத்தன்மை உடையை; 13. கழிகவின் - பேரழகு; 14. பணை - பந்தி, குதிரைக் கொட்டடி; மான் - குதிரை; நிறம் - மார்பு; 15. கடப்பு-மிக்கது, அதாவது மிக்க கொடுமை; 16. கோடு - மலைஉச்சி; பொருப்பு - மலை; 17. தகை - அழகு; சுணங்கு - தேமல்; 18. மத வலி - மதத்தால் பெற்ற பலம்; 19. கதவ - கோபம் உடைய, கொடுமை உடைய; காழ் - ஆரம்; 21. இறைஞ்சுபு - கவிழ்ந்து; 23. அமர்த்த - பொருந்தின, விரும்பிய என்றுமாம்; 24. அகப்படுத்து - கைப்பற்றிக்கொண்டு.*

22

# மன்றத்து மடலேறுவேன்

வாரி முடித்து வகை வகையாகப் பின்னிவிட்ட கூந்தல்; வளைந்த முன்கை, முழங்கால் அளவும் செல்லு மாறு நீண்டு மெத்தென்ற தோள்கள்; பேரழகு பொருந் திய மலர் போன்ற மை தீட்டிய கண்கள்; அழகிய பெண் மானின் பார்வை போலும் மருண்ட பார்வை; மழை மாருது பெற்றுத் தளிர்த்த மாந்தளிர் மேனி; பிறைத் திங்கள் போல் ஒளி திகழும் நெற்றி; முல்லை அரும்பை வென்ற கூறிய வெண்ணிறப் பற்கள்; கொடி போல் சிறுத்த இடை, இவை போலும் உறுப்பு நலன்களால் ஆய இயற்கை அழகு வாய்க்கப் பெற்ருள் ஓர் இளம் பெண்; இத்தகு இயற்கையழகுடையாளை, அவள் பெற்ருேர், தம் செல்வ வாழ்விற்கேற்ப, வகை வகையான வனப்பு மிக்க ஆடை அணிகளால் மேலும் அழகு செய்தனர். இயற்கையழகும், செல்வச் சிறப்பாலாய செயற்கையழகும் வாய்க்கப் பெற்ற அவள், காலில் சிலம் பொலிக்க, கைவளை கலகலவென நடந்து செல்லும் நடை யழகு நாவினுல் நவிலும் தரமன்று.

இத்தகு பேரழகு வாய்ந்த பெண்ணின் நல்லாளைக் காணும் பேறு ஓர் இளைஞனுக்குக் கிடைத்தது; அவளை அக்கோலத்தில் பல நாள் கண்டு கண்டு மகிழ்ந்தான் அவன். அழகின் திருவுருவாம் அவள்பால் அவன் உள்ளம் சென்றது; அவள் பேரழகிற்குப் பணிந்துவிட்டான்; அவன் உள்ளத்திலே அவள் இடம் பெற்றுவிட்டாள். ஆயினும், செல்வ வாழ்வில் வாழும் அவளைப் பெற்று மகிழ்தல் அவனால் இயலவில்லை; அதனால், அவன் துயர் உற்றான்; அக்காதல் நோய், கட்டுக் கடங்காது வளர்ந்தது; அதன் பயனாக, அவன் உடல் நலம் குன்றிற்று; கெட்ட அந்நலத்தை மீண்டும் பெற எவ்வளவோ முயன்றான்; அவன் பண்ணிய மருத்துவம் அத்தனையும் பயனிலவாயின; அவள் அன்பைப் பெற்றாலன்றி, அவன் நலம்பெற இயலாது; அவன் உயிர் வாழாது என்ற நிலை வந்துற்றது; அவன் தன் பொருட்டு அடையும் துயர் எதையும் அவள் அறிந்திலள்; அதை அறியும் பருவமும் அவளுக்கு இல்லை; அதனால், அவள் என்றும் போல், தன் பேரழகு புறம் தோன்ற, பெருமிதமாக ஊர்ப்புறம் நோக்கி உலாவச் சென்றாள். அவ்வாறு செல்வாளை, அவள் நினைவால் வருந்தும் அவ்இளைஞன் கண்டான்; அவளைத் தொடர்ந்து சென்று, ஓரிடத்தே தடுத்து நிறுத்தி, அவள் உடலழகையும், பொன்னாலாய அணிகலச் சிறப்பையும் வாயாரப் புகழ்ந்தான், பின்னர்; அவள்பால் பின்வருமாறு கூறினான் :

“ உன்மீது காதல்கொண்டு, அக்காதல் நிறைவேறப் பெருமையால், கடுந்துயர் உற்று, உயிர் ஊசலாட நான் வருந்துகின்றேன்; அதை நீ அறிந்திலை; ‘ அறியாமை என் குற்றம் அன்று; அதை அறிந்து கொள்ளும் பருவம் பெற்றிலேன் யான்; ஆகவே, என் மீது குற்றம் இல்லை ’ என்று கூறுவையாயின், அதை வேண்டுமானால்

ஒப்புக்கொள்வேன்; ஆனால் உன்னைக் கண்டவர் உள்ளத்தில் தந்த நோயை நீயே வந்து தீர்ப்பதல்லது, வேறு எவராலும், எம்மருந்தாலும் தீர்க்காலாகாக் காதல் நோயை வளர்த்துவிட வல்ல பேரழகை, நீ இயல்பாகவே பெற்றிருப்பதை அறிந்தும், அம்மட்டோடு அமையாது, தம் செல்வச் செருக்கால், உயர்ந்த ஆடை அணிகளால் மேலும் ஒப்பனை பல செய்து வெளியே அனுப்பிய உன் பெற்றோர் மீதும் குற்றம் இல்லை எனக்கூறி மறுப்பின் அதை யான் ஏற்றுக் கொள்ளேன்."

"நின்பால் கொண்ட காதல் மிகுதியால் யான் என் அறிவை இழந்தேன்; ஆண்மையை இழந்தேன்; அருளை மறந்தேன்; ஒழுக்கம் குன்றினேன்; இவ்வாறு யான் நிலை கெட்டு அழியுமாறு என் உள்ளத்தில் காதல் வேட்கையை எழுப்பிவிட்ட நீ, அதை அறிந்துகொள்ளும் அறிவு வாய்க்கப் பெறா நின் இளமையால், அதை அறிந்திலை; ஆதலின், வேண்டுமானால் 'இது என் குற்றம் அன்று' என்று கூறு; அதை யானும் ஏற்றுக் கொள்கிறேன்; ஆனால், நின் உடற்பாரத்தையே தாங்க மாட்டாது தளர்ந்து போகுமளவு சிறுத்த இடை உடைமையால் பெற்ற நின் பேரழகைக் கண்டு, அம்மட்டோடு அமையாது, தம் செல்வச் செருக்கால் உனக்கு அழகிய ஆடை உடுத்தும், உயர்ந்த அணிபல அணிவித்தும் மேலும் அழகுடையளாக்கி வெளியே உலாவ அனுப்பிய உன் பெற்றோர்மீதும் குற்றம் இல்லை எனக் கூறுவையாயின், அதை யான் ஏற்றுக்கொள்ளேன்."

"உன் காதல் நினைவால் உள்ளம் அழிந்து, நான் வருந்துகின்றேன்; அவ் வருத்தம் நாள் தோறும் வளர்ந்து கொண்டேயுளது; அதை நீ அறிந்திலை; பலமுறை உனக்கு எடுத்துக் கூறினேன்; அப்போதும் நீ அறிந்து கொண்டாயில்லை; 'அதை அறிந்துகொள்

ளும் அறிவு இன்னமும் வாய்க்கப் பெறவில்லையே! அதற்கு யான் என் செய்வேன்?' எனக் கூறி நின் அறியாமைக்கு, இளமையைக் காரணம் காட்டி, நீ தப்பித்துக் கொள்ளலாம்; ஆனால் காண்பார் உயிரைக் கண்ட அப்போதே கவர்ந்து கொள்ள வல்லது நின் காட்சி யழகு என்பதை அறிந்தும், தம் செல்வ மிகுதியால், அழகிற்கு அழகு செய்யும் அறியாதார் செயல்போல், நின்னை, ஆடை அணிகளால் மேலும் அழகுடையவளாக்கி அனுப்பிய, நின் பெற்றோர்மீதும் குற்றம் இல்லை எனக் கூறுவையோ? அவ்வாறு நீ கூறினும், அதை யான் எவ்விதம் ஏற்றுக் கொள்வேன்.''

"ஆக, நான் குறை கூறுவதெல்லாம் நின் பெற்றோரையே யல்லது, நின்னையன்று. அவரைப் பழிப்பதையும் இனி யான் செய்யேன்; இந்நோயைத் தாங்கும் வரையில் தாங்குவேன்; தாங்க இயலாவாறு பெரிதாயின், அந்நிலையில், அந்நோயைப் போக்கவல்லள் நீயேயாதல் அறிந்து, நின்னைப்பெறவே வழி செய்வேன். என்பால் அன்புகொண்டு, என்னை ஆட்கொள்ளாயாயின், நின்னைப் பலர் அறியப் பெற்று மணந்துகொள்ளுதற் பொருட்டு, என்குறையை, உன் ஊர்வாழ் பெரியோர்க்கு அறிவிக்கும் வழியாகப் பனைமடலால் ஆய குதிரைமீது இவர்ந்து வந்து, உன் ஊர் மன்றத்தே இருந்து உயிர் விடுவன்; ஆகவே, 'இவ்வாறு செய்தான் இவன்' எனப், பின்னர் என்மீது குறைகூறுது என்னை இன்றே ஆட்கொள்வாயாக! என் அன்பை ஏற்றுக்கொள்வாயாக!'' என்றெல்லாம் கூறினான்.

அவன் அவ்வளவு கூறியும், அதை அவள் அறிந்தாளல்லள்; அவன் கூறிய சொல்லின் பொருளறியாப் பருவத்து மெல்லியலாள் அவள்; அவள் அன்னள் என்பதை அறிந்தும், அவள் பேரழகைக் கண்டு, காதல்

கொண்டு கருத்திழந்தான் அவன்; அக்கருத்திழந்தவன் கூறிய, காதற் சுடர்வீசும் சொல்லோவியம் இச்செய்யுள்.

" வார்உறு வணர்ஐம்பால் ; வணங்குஇறை நெடுமென்தோள்;
பேரெழில் மலர்உண்கண் ; பிணைஎழில் மான் நோக்கின் ;
கார்எதிர் தளிர்மேனி ; கவின்பெறு சுடர்நுதல் ;
கூர்எயிற்று முகைவெண்பல் ; கொடிபுரையும் நுசுப்பினாய் !
நேர்சிலம்பு அரியார்ப்ப, நிரைதொடிக்கை வீசினை,
ஆருயிர் வௌவிக்கொண்டு அறிந்து ஈயாது இறப்பாய்கேள் :

உளனாஎன் உயிரைஉண்டு உயவுநோய் கைம்மிக,
இளமையான் உணராதாய் ! நின்தவறு இல்லானும்,
களைநர்இல் நோய்செய்யும் கவின்அறிந்து அணிந்துதம்
வளமையால் போத்தந்த நுமர்தவறு இல்லென்பாய் ?

நடைமெலிந்து அயர்வுறீஇ நாளும்என் நலியும்நோய்
மடமையான் உணராதாய் ! நின்தவறு இல்லானும்,
இடைநில்லாது எய்க்கும் நின்உருவறிந்து அணிந்துதம்
உடைமையால் போத்தந்த நுமர்தவறு இல்லென்பாய் ?

அல்லல்கூர்ந்து அழிவுற அணங்காகி அடரும்நோய்,
சொல்லினும் அறியாதாய் ! நின்தவறு இல்லானும்,
ஒல்லையே உயிர்வௌவும் உருவறிந்து அணிந்துதம்
செல்வத்தால் போத்தந்த நுமர்தவறு இல்லென்பாய்?

எனவாங்கு,
ஒறுப்பின், யான்ஒறுப்பதுநுமரை ; யான் மற்றுஇந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயின், பொலங்குழாய் !
மறுத்துஇவ்வூர் மன்றத்து மடல்ஏறி,
நிறுக்குவென் போல்வல்யான் நீ படுபழியே."

இதுவும் கைக்கிளை : விதி : தொல் : பொருள் : 50.

*1. இறை - முன்கை ; 2. பிணை - பெண்மான் ; 3. கார் - மழை ; எதிர் - பெற்ற ; 4. புரையும் - ஒக்கும் ; நுசுப்பு - இடை ; 7. உயவுநோய் - காமநோய் ; கைம்மிக - அளவின்றிப் பெருக ; 8. இல்லானும் - இல்லையாயினும்*

எனவிரிக்க; 9. அறிந்து - அறிந்தும் என உம்மை கொடுத்து விரிக்க; 10. போத்தந்த - அனுப்பிய; 11. நடை - அறிவு, ஒழுக்கம் முதலாயின; 13. எய்க்கும் - இளைக்கும், தளரும்; 17. ஒல்லையே - விரைவாக; 20. ஒறுப்பின் - தண்டிப்பின்: 20. மடல் - தான்விரும்பிய பெண்ணைப் பெறுதற்பொருட்டு, பனைமடலால் குதிரை செய்து அதன்மீது, நீறுபூசி, எருக்கம்பூ மாலை அணிந்து, தன் காதலியின் உருவம் எழுதிய படம் கையேந்தி அமர்ந்து, ஊர்ச்சிறுவர் ஈர்த்துவந்துவிட, அப்பெண்ணின் ஊர்ப்பொதுவிடத்தே இருத்தல். அது கண்டு, அவ்வூர்ப் பெரியவர், அவன்குறை கேட்டறிந்து, இரங்கி, அவளை அவனுக்கு மணம் முடிப்பர்.

23

# பற்றுது விடாது

வீட்டை மறந்து, வெளியிலே திரிந்து விளையாடும் பருவத்தினளாய ஓர் இளம்பெண், கண்டார் மயங்கும் கவின் உடையளாதல் கண்டு காதல் கொண்டான் ஓர் இளைஞன். கண்ட மகளிர்மீது ஆசைகொள்ளும் காமுகன் அல்லன் அவன்; கற்கவேண்டிய நூல்களைக் கசடறக் கற்றவன்; கற்ற அந்நூல்கள் கூறும் ஒழுக்க நெறி நிற்கும் உரவோன்; செல்வ வாழ்வுடையான்; சிறந்த ஆண்மையாளன்; இவ்வாறே, எல்லா வகையாலும், பிறர்க்கு எடுத்துக்காட்டாகக் காட்டவல்ல உயர்ந்தோன்; அத்தகையான், அப்பெண்மீது காதல் கொண்டான்; காதல் உணர்ச்சியினை அறிந்து கொள்ளாக் கன்னிப்பருவத்தள் அவள் என்பதை அவன் அறிவான்; அறிந்தும் அவளைக் காதலித்தான்; அவள் அழகு அத்துணை ஆற்றல் வாய்ந்த பேரழகு, அதனால், அவள் பேரழகிற்கு அவன் அடிமையாகி, அவள் செல்லும் இடந்தோறும், அவள்பின் திரிந்து,

ஆங்காங்கு அவள் மேற்கொள்ளும் ஆடல் கண்டு அகம் மகிழ்ந்து வந்தான்.

தம் வாழ்வில், தாம் விரும்பும் நல்ல கணவரைத் தாம் பெறுதற்பொருட்டும், தாம் வாழும் நாடு மழை பெற்று மகிழ்தல் வேண்டியும், பழந்தமிழ் மகளிர், சில நோன்புகளை மேற்கொண்டிருந்தனர்; அம்மகளிரைப் போன்றே, இவ்விளம் பெண்ணும், தைத்திங்களின் போது வைகறையில் எழுந்து, தன் தாயோடும், தன்னை ஒத்த ஆண்டினராய தன் ஊர்ப்பெண்களோடும், ஊரை அடுத்து ஓடும் ஆற்றிற்குச் சென்று, நீராடி, ஆற்று மணலில், அம்மணலாற் பாவை செய்து, தாய் முன்னின்று வழிகாட்ட வழிபட்டு வருவாள்.

துறந்து, தவநெறி மேற்கொண்ட முனிவர்கள், இறைவனைப் பரவும் இனிய பாக்களைப் பாடிக்கொண்டே மனைகள்தோறும் சென்று, ஐயம் ஏற்று உண்டு, எஞ்சியதைப் பிறர்க்கு ஈந்துவாழும் பெருவாழ்வை, ஒருசில நாட்கள் தாமும் மேற்கொள்வதால், அம்முனிவரைப் போன்றே, தாம் கருதும் பயனும் தக்க கணவரைப் பெறுதல் தமக்கும் வாய்க்கும் எனக் கருதும் அக்கால மகளிரைப்போன்றே, இவளும், தன் தோழியரோடும் கூடி, தவசிகள் வேடம்பூண்டு, பிறர் மனைதோறும் சென்று பாடி, ஐயம் ஏற்று, அதைத் தானும் உண்டு, தன் உடன் ஏகும், தோழியர்க்கும் ஈந்து, ஆடும் ஆடலை ஆடி மகிழ்வள்.

தமக்கு வாய்க்கும் கணவர் நல்லவராதல் வேண்டும் என விரும்பிய பழந்தமிழ் மகளிர், ஆணும், பெண்ணுமாய் மரத்தால் பாவை பண்ணி, வனப்புடன் வண்ணம் தீட்டி, ஆடை, அணிகளால் அழகு செய்து, அவற்றைக் கணவனும் மனைவியுமாய் வைத்து மணம் செய்து, மண

விருந்து அளித்து ஆடி மகிழும் ஆடலை, அவரைப் போன்றே, இவளும் ஆடி மகிழ்வாள்.

அவள் ஆடி மகிழும் இவ்வாடல்களை, அவ்விளைஞன், அவற்றைக் காணும் சேய்மைக்கண், அவள் அறியா வாறு இருந்து கண்டு மகிழ்ந்தான்; அதனால், அவன் அவள்மீது கொண்ட காதல் மேலும் வளர்ந்தது; அக் காதல் வளர வளர, அவளை அடைந்து அக்காதற் பயனைத் துய்க்க முடியவில்லையே என்ற ஆற்றுமை மிக்க அவன் உள்ளம், காதல் நோயால் துடித்தது; அதனால் அவன் அறிவு நெறிபிறழ்ந்தது; செய்வன, தவிர்வன அறியமாட்டாது தடுமாறிற்று; இவ்வுள்ளத் தடுமாற்றம், அவன் உடல் நலனைக் குலைத்தது; அவன் முகம் ஒளி குன்றிற்று.

இவ்வாறு அவள் நினைவால் வருந்தி வாடும் அவன், ஒருநாள்; அவள், தான் இருக்கும் இடத்தைக் கடந்து செல்வதைக் கண்டான்; அப்போதைய அவள் தோற்றம், அவன் ஆசையை மேலும் அதிகரிக்கச் செய்தது; காந்தள் மலர்போன்ற முன்கையில், முத் திழைத்துப் பண்ணிய பொன்தொடி அணிந்திருந்த அவள், அக்கையில் மரத்தால் பண்ணிய பாவையும் பானையும் முதலாம் விளையாட்டுப் பொருள்களை வைத்தி ருந்தாள்; அழகாக வாரி, ஐந்து பகுதியாகப் பின்னிவிட்ட கூந்தல், அவள் பின்புறத்தே கிடந்து பேரழகு செய்தது; காலிற் கிடக்கும் சிலம்பு, கலீர் கலீர் என ஒலிக்க, மெல்ல மெல்ல அடிவைத்து நடந்துகொண்டிருந்தாள்.

அந்நிலையில், அப்பெண்ணைக்கண்ட அவன், அவளைப் பின்தொடர்ந்து சென்றான்; தன் ஆடிடம் அடைந்தாள் அவள்; அவளோடு ஆடும் அவ்வூர்ப் பெண்கள், ஆங்கு, அதுகாறும் வந்திலர்; அதனால், அவள், அவரை எதிர்நோக்கிச் சிறிது நேரம் தனித்

திருந்தாள்; அத்தனிமையைப் பயன்கொண்டு, அவளைக் கண்டு, தன் காதல் உள்ளத்தைத் திறந்து காட்டி விடுவது எனத் துணிந்தான்; விரைந்து அவளை அணுகினன்; அவள் கையழகு, அக்கைவளை, காற்சிலம்பு, தலையணி முதலாம் சிறப்புக்களைப் பாராட்டினன்; பின்னர், "பெண்ணே! நின்பாற் கொண்ட அன்பால், யான் இதுகாரும் பேணிக்காத்துவந்த என் அறிவு, ஆண்மை, ஒழுக்கம், உயர்குணம் ஆகியவெல்லாம், என்னைக் கைவிட்டு எங்கோ சென்றுவிட்டன; செய்வதறியாது, சித்தம் கலங்கிச், சீரழிகின்றேன். நின் அழகால், என்னை இவ்வாறு ஆட்டி, அலைக்கழிக்கும்நீ, அதைச் சிறிதும் அறிந்திலை; என்னை நோக்குவதும் செய்யாது செல்கின்றனை; இவ்வாறு புறக்கணித்தல் நினக்குப் பொருந்தாது. உள்ளம் கலங்கி, உடல்நலம் கெட்டு, யான்வருந்த, நிலைகெட்டுத் திரியும் என் நிலைகண்ட இவ்வூரார், "இவள் பொருட்டு இவன் இவ்வாறு வருந்தவும், 'இவனைப்பற்றி வருத்தும் நோய் யாது? அந்நோய்வரக் காரணம் என்ன?' என்பதை அறிந்துகொள்ளும் அருள்உள்ளமும் இவட்கு இல்லையே!" என உன்னைப் பழிதூற்றுவதை நீ அறிந்திலையோ? இவ்வாறு உன்பொருட்டு யான்துயர்உற, அதைஅறிந்து, அத்துயர் போக்கத் துடிக்கும் அருள் உள்ளம் அற்றநீ, எதிர்கால வாழ்வில், நின்நிலை உயர்தற்பொருட்டு, தைந்நீராடல், தவம்மேற் கொள்ளுதல், பாவைத்திருமணம் முதலாம் நோன்புகளை மேற்கொள்வதால் மட்டும் அப்பயனைப் பெற்றுவிடுதல் இயலுமோ? அருள்உள்ளம் இல்லார்க்கு அவர் செய்யும் நோன்புகள் பயன்தாரா என்பதை நீ அறியாய்கொல்? அதுமட்டுமன்று, நின்பொருட்டு வருந்தும் என்நிலை கண்டு இரங்காக் கொடுமையால் நினக்கு உண்டாம்கேடு, நின்னைப் பற்றுதுவிடாது; இதை நீ உணர்தல்வேண்டும்" என்று

*கூறினன் ; அந்நிலையில் அவள் தோழியர் அவண் வந்து விடவே, மேற்கொண்டு எதுவும் கூற மாட்டாது மீண்டான்.*

*அவன், ஆங்கு அவளுக்குக் கூறிய அக்காதலுரைகளை அழகாகக் கூறுகிறது இச்செய்யுள் :*

'' தளைநெகிழ் பிணி நிவந்த பாசடைத் தாமரை,
முளைநிமிர்ந்தவை போலும் முத்துக் கோல் அவிர் தொடி,
அடுக்கம் நாறு அலர் காந்தள் நுண்ஏர்தண் ஏர் உருவின்,
துடுப்பெனப் புரையும் நின் திரண்டநேர் அரிமுன்கைச்
சுடர்விரி வினைவாய்ந்த தூதையும் பாவையும்
விளையாட அரிப்பெய்த அழகுஅமை புனைவினை
ஆய்சிலம்பு எழுந்து ஆர்ப்ப, அஞ்சில இயலும் நின்
பின்னுவிட்டு இருளிய ஐம்பால் கண்டு என்பால்
என்னைவிட்டு இகத்தர இறந்தீவாய் கேள் இனி :
மருளி, யான் மருளுற ''' இவன் உற்றது எவன் ?' என்னும்
''அருள் இலை இவட்கு'' என அயலார் நிற் பழிக்குங்கால்,
வைஎயிற்றவர் நாப்பண் வகை அணி பொலிந்து நீ,
தையில் நீராடிய தவம் தலைப் படுவாயோ ?

உருள்இழாய் ! ஒளிவாட, ''' இவன் உள்நோய் யாது ?' என்
''அருள்இலை இவட்கு'' என அயலார் நிற் பழிக்குங்கால்,[னும்
பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ
எய்திய பலர்க்கூஉத்த பயம் பயக்கிற்பதோ ?

ஆய்தொடி ! '' ஐதுஉயிர்த்து, '' இவன் உள்நோய் யாது ?' என்
நோய்இலை இவட்கு '' என நொதுமலர் பழிக்குங்கால், [னும்
சிறுமுத்தனைப் பேணிச், சிறுசோறு படுத்துநீ,
நறுநுதலவரொடு நக்கது நன்கு இயைவதோ ?

எனவாங்கு,
அனையவை உளையவும், யான்நினக்கு உரைத்ததை
இனையநீ செய்தது உதவாயாயின், சேயிழாய் !
செய்ததன் பயம் பற்று விடாது ;
நயம்பற்று விடின், இல்லை ; நசைஇயோர் திறத்தே.''

**தலைவியைப் பின்சென்று, இரந்து குறைகூறும் தலைவன், 'இங்ஙனம் வருந்துவையாயின், நீசெய் தவம் பயன்தராது' எனக் கூறியது இது.**

*1. முதல் இரண்டு அடிகள், தாமரைக்கொடிபோல், முத்திழைத்துப் பண்ணிய பொன்தொடியைக் குறிக்கின்றன ; 5. வினை - ஓவியத் தொழில் ; தூதை - பானை ; 7. அம்சில : அழகிய சிலஅடிகள் ; 8. என்பால - என்பால் உள்ள அறிவு, ஆண்மை முதலாம் பண்புகள் ; 9. இகத்தர - போகும்படி ; இறந்தீவாய் - செல்கின்றவளே ; 10. மருளி - மயக்கமுற்று ; 12. வைஎயிறறவர் - கூரிய பற்களை உடைய மகளிர் ! நாப்பண் - நடுவே ; 13. தலைப்படுவாயோ - பெறுவையோ ; 14. உருள் - தலைப்பாளை என்னும் தலை அணி ; 16. பொய்தல மகள் - விளையாட்டு மகள் ; 17. எய்திய - யாசித்துப்பெற்ற உணவு ; பயக்கிற்பதோ - பயன்தருமோ ; 18. ஐது உயிர்த்து - மெல்ல உயிர்த்து ; 20. சிறுமுத்தன்: பாவைத் திருமணத்தில்வரும் ஆண்பாவை ; சிறுசோறு- நிலாச்சோறு ; மடுத்து-சமைத்து விருந்திட்டு ; 23. உளையவும் - வருந்தவும் ; உரைத்ததை - கூறியது; 24. செய்தது - செய்த கொடுமைக்கு ; 25. பற்றுவிடாது - பற்றுதல் விடாது ; அதாவது பற்றும் ; 26. நயம் - அருள் ; நயம்பற்றுவிடின் - அருளைப் பற்றுதல் விடுவையாயின்; இல்லை - நினக்கு நின்நோன்பு பயன்தருவது இல்லை ; நசைஇயோர் - நின்னை விரும்பினோர்.*

# 24

# நாண் நினைந்து கைவிடேல்

உருவாலும் திருவாலும் அறிவாலும் ஆண்டாலும் ஒத்தவுயர்வுடையராய ஓர் இளைஞனும் ஒரு பெண்ணும், ஒருவரையொருவர் கண்டு காதலித்தனர்; அன்றுவரை, அவர் ஒருவரை யொருவர் அறிந்திலராயினும், கண்ட அந்நாழியே, அவர்இருவர் உள்ளமும் ஒன்றுபட்டு விட்டன; அன்று எவரும் காணாவாறு தனித்திருந்து கண்டு காதல்கொண்டது எவ்வாறோ வாய்த்துவிட்டதாயினும், என்றும், அன்று போலவே தனித்துவந்து கண்டு மகிழ்தல் அவர்க்கு இயலாது; உலகியல் அறிவும், உள்ளத்தூய்மையும் வாய்ந்த ஒருத்தி, அப்பெண்ணின் தோழியாய் உள்ளாள்; அத்தோழி, அவளை அவள் நிழல்போல் ஒரு சிறிதும் பிரியாதிருந்து பேணிக் காத்து வந்தாள்; அதனால் அவள் அறியாவாறு, அப்பெண், தன் காதலனைக் கண்டு மகிழ்தல் இயலாது; ஆகவே, அதற்கு அவள் துணை இன்றியமையாததாயிற்று; இவ்வுண்மை உணர்ந்த அப்பெண், அவ்விளை

ஞன்பால் "இனி வருங்கால், அத்தோழியின் துணை பெற்று வருக" எனக் குறிப்பாகக் கூறி அனுப்பினுள்.

மறுநாள், அப்பெண்ணிருக்கும் இடந்தேடிவந்த அவ்விளைஞன், ஆங்கு ஒருபால், அத்தோழி தனித்திருக்கக் கண்டான்; கண்டு அவள்பால் சென்று, அப்பெண்ணைத் தான் கண்டது; காதல் கொண்டது, அவளும் தன் காதலை ஏற்றுக்கொண்டது ஆகிய நிகழ்ச்சிகளை விளங்கக் கூறி, தங்கள் காதல் வாழ்வு விளங்க அவள் துணை வேண்டி நின்றுன்; சின்னுட்களாகவே, அப்பெண்ணின் தோற்றத்திலும் செயலிலும் புதுமை நிகழக்கண்டு, அவள் உள்ளத்தில் காதல் உணர்வு அரும்பியுள்ளதைக் குறிப்பால் அறிந்திருந்தாள் அத்தோழி; "அப்பெண்ணின் மார்புதேமல் படர்ந்து பேரழகு செய்தது; நெற்றி காதல் மணம் கமழ்ந்தது; கூந்தலில் ஒரு புது மணம் புலனுயிற்று; அதன் தோற்றத்திலும் ஒரு தனிச் சிறப்புக் காணப்பட்டது; நுணுகி நோக்கினர்க்கே புலனும் பேரழகும், மென்மையும் பெற்றது அவள் இடை; வளையல் விளங்கும் அவள் முன்கைகள்: அழகாக வளர்ந்து, வரிபலபெற்று வனப்புடையவாயின; அவள்பால் காணலாம் இவைபோலும் தோற்ற நாற்றங்களின் புதுமையால், அவள் ஒழுக்கத்தை ஓர் அளவு உணர்ந்திருந்த தோழி, இளைஞன் கூறியனகொண்டு, அதை உறுதியாக்கிக் கொண்டாள்; இளைஞன் காதலிப்பது அவளையே என்பதை அறிந்து, அவர் காதல் வளரத் துணைபுரிவதாக அவனுக்கு வாக்களித்து அனுப்பினுள்.

இளைஞனுக்கு வாக்களித்த தோழி, சென்று அப்பெண்ணைக் கண்டாள்; காதல் ஒழுக்கம் உண்மையால், பண்டினும் பேரழகு தோன்ற நிற்கும் அவள் தோற்றப் பொலிவைக் கண்டு பாராட்டினுள்; அவ்வாறு பாராட்டிய

தன் பாராட்டுரை கண்டு, "நம் காதல் ஒழுக்கத்தைத் தோழி அறிந்துவிட்டாள்; ஆகவே, அதை அவளுக்கு மறைப்பது இனியும் ஆகாது" என உணர்ந்து, அதை அவளாகவே முன்வந்து அறிவிப்பள் என எதிர்பார்த்தாள்; ஆனல், அவள் ஏதும் அறியாதாள்போல் நடந்துகொண்டாள்; அதனல், "உடன்பழகும் உயிர்த் தோழியாய என்னையே ஏமாற்றப் பார்க்கின்றனளே!" என்ற எண்ணம் எழவே, தோழிக்குச் சிறுசினமும் சிறிது உண்டாயிற்று; அதனல், அவள் காதலையும், காதலனையும் தான் கண்டுகொண்டதை அவள்பால் அறிவித்திலள்; அறிவியாதே, அப்பெண்ணைப் பார்த்து, "தோழி! நம் தெருவில் எவனே ஓர் இளைஞன் நிற்கின்ருன்; தோற்றத்தால், பெரிய போர் யானை போன்ற அவன், யாது காரணத்தாலோ, அவ்வாண்மையிழந்து, உள்ளத்தே உறுதுயர்கொண்டு உருகுவான்போல் உள்ளான்; அவன், அவ்வழிவந்த என்னைக் கண்டவுடனே, விரைந்துவந்து என்னைத் தொழுதான்; தொழுது, 'காண்பார் கண்ணிற்கு விருந்தளிக்கும் கவின் மிக்க மகளிர், தன்னைக்கண்ட அவ்வாடவர் உள்ளத்தில் காதல்நோய் தோன்றி, அளவின்றிப் பெருக்கி, அவர் உயிரை விரைந்து கொள்ளைகொள்ளும் வண்ணம் பெருந்துயர் விளைத்துவிட்டுப், பின்னர் மறந்து வாழ்தல் பெண்மைக்குப் பொருந்தாது, எனக்கூறிக் கண்ணீர் விட்டுக் கலங்கினன், எவனே ஒருவன், நம்மிடத்தே வந்து என்னகாரியம் செய்துவிட்டான்? அவன் ஈங்கு வந்து அவ்வாறு கலங்கக் காரணம் என்னையோ? அதை நீ அறிவைகொல்?" என்று மட்டும் கூறி வைத்தாள்.

அதுகேட்ட அப்பெண், அப்பொழுதும் தான் காதல்கொண்டதைக் காட்டிக்கொள்ளாதே, "தோழி!

தெருவில் எவனெவனோ கிடந்து கலங்குவன்; அவர் கலக்கத்திற்காம் காரணம் எவ்வளவோ இருக்கும்; அவர் கலக்கத்திற்கும் நமக்கும் என்ன தொடர்பு? காரணம் இன்றி, நம் தெருவில் நின்று, கலங்குவானைக் கண்டு, நீ கலங்குவது ஏன்? உன்னோடு தொடர்பில்லாதனவற்றையெல்லாம், உன்மேல் ஏறட்டுக்கொண்டு ஏன் வருந்துகின்றனை? பிறர்படும் துயரத்தைத் தம் துயரமாகக்கொள்வது, வாரணவாசியில் வாழும் வடவர் வழக்கமன்றோ? அதை நீ மேற்கொண்டு, தெருவிற் கிடந்து கலங்குவான் கலக்கம் கண்டு கலங்கும் நின் செய்கையால், நமக்கு என்ன கேடு வந்துறுமோ?'' எனக்கூறி வெறுத்தாள்போல் நடித்தாள்.

அவள் அவ்வாறு கூறக்கேட்ட தோழி, தான் அவள் காதலனைக் கண்டு வந்து, அவன் கலக்க நிலையைக் கூறிய பின்னரும், தன் காதல் ஒழுக்கத்தை ஒப்புக் கொள்ளாது மறைக்கப்பார்க்கின்றனளே! என்னே இவள் நெஞ்சழுத்தம்! என்ற எண்ணங்கொண்டு, “தோழி! உன் காதல் நாடகத்தை நீ மறைத்தாலும், நின் உடல் உறுப்புக்களும், காதற் கிளர்ச்சியால் தம் நிலையில் திரிந்து மாறுபடும் அவ்வுறுப்புக்களுக்கேற்ற வாறு, தேர்ந்து அணியும் அணிவகைகளும் அதைப் புலப்படுத்துகின்றனவே; உன்னோடு உறவுடையவாய் இருந்தே, உனக்குத் துணைபுரியாது, உன் மறையைப் புலப்படுத்திவிடும் அவற்றின் செயலை அறியமாட்டாது, என்னை ஏமாற்றிவிட்டதாக எண்ணுகின்றனையே, என்னே நின் பேதைமை!'' என்று எள்ளிக்கூறுவாள் போல், “அலர்முலை ஆய்இழை நல்லாய்'' என விளித்தாள்.

அவள் காதல் ஒழுக்கத்தைத், தான் அறிந் திருப்பதை அவ்வாறு குறிப்பால் உணர்த்தியவள்,

அம்மட்டோடு நின்றாளல்லள்; அப்பெண்ணை நோக்கி, "தோழி! தெருவில் நின்று வருந்துவான் யாவனோ? அவன் வருத்தத்திற்கு நாம் காரணம் ஆகோம்' என நீ கூறுகின்றனை; ஆனால், அவனோ, அவ்வழி வருவார் எல்லோரையும் தடுத்து நிறுத்தாது, என்னைத் தடுத்து நிறுத்தினான்; பின்னர், 'ஒண்தொடி!' எனவிளித்து, என்னையும், என் கையிற்கிடந்து அணிசெய்யும் தொடி முதலாம் அணிகளையும் பாராட்டினான்; அவ்வாறு, அவன் என்னைப் பாராட்டுவதால், அவன் என்பால் யாதோ ஒன்றை எதிர்நோக்குகிறான் என்பதை அறிந்து, அவன் எதிர்நோக்குவது யாதோ எனச் சிந்தித்திருக்கும் போதே, நின்னைத் தோழியாய்ப் பெற்ற பெரும்பேறுடைய அப்பெண், என்னைக் காதற் கருத்தோடு நோக்கினாள்; அவ்வாறு நோக்கி அவள் தந்த காதல்நோய், என் உயிரை வாங்குகிறது; இந்நோய் தீரும் மருந்தை அளிக்குமாறு நின்னை வேண்டுகிறேன்; அந்நோய், நின்முகம் நோக்கி, நின் அருளைப்பெறின் நீங்கும் என அறிந்தேன்; அம் மருந்தளித்து, என் துயர்போக்கி மகிழ்விப்பாயாக' என்று கூறினான்; ஆகவே தோழி! அவன் கவலை நின்பாற்கொண்ட காதலால் வந்துற்றதே; அது நின்முகத்தைக்கண்டு நின் அன்பினைப் பெற்றாலன்றித் தீராது; அவன்நோய் தீர்க்கும் மருந்து அது வல்லது பிறிது ஒன்றும் இல்லாயின், அதற்கு நாம் செய்யக்கடவது யாது?" என்று வினவுவாள்போல், "தெருவில் நிற்பவன் நின் காதலனே; அவன்பால் நினக்கும் அன்புளது; அவனை நீ ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்; நாணம் மிகுதியால், என்னிடம் ஒப்புக்கொள்ள அஞ்சி, அவனைப் புறக்கணிப்பின், அவன் நோய் மிகும்; நோய்மிகின் உயிர் அழியும்; ஆகவே அதற்கு உடனடியாக ஒன்று செய்தே ஆகவேண்டும்' எனும், தன்கருத்தைக் கூறாமல் கூறி உணர்த்தினாள்.

தோழி அவ்வாறு கூறிய பின்னரும், தான் காதல் கொண்டுவிட்டதை ஒப்புக்கொள்ள அப்பெண்ணின் உள்ளம் நடுங்கிற்று; அவள் நாணம் இடைநின்று தடுத்தது; அதனால், தோழி கூறியதை ஏற்றுக் கொள்ளாது, அவள்மீது சினங்கொள்வாள்போல், "தோழி! நீ கூறுவதை நோக்கின், நான் அவனை ஏற்றுக்கொண்டு, அன்புகாட்டி மகிழ்வித்தல் வேண்டும் என நீ எண்ணுகின்றனை; அதுவே நின் கருத்துமாம் எனத்தோன்றுகிறது; நன்று! அங்ஙனே ஆகட்டும்!" எனத் தன் இசையாமையினை இசைந்த வாய்பாட்டால் அறிவித்துவிட்டு, "ஒழுக்கநெறி கெட்டு, ஒருவன், நடுத் தெருவில் நின்று, வாயில் வந்தன வழங்குகின்றான்; அவன் கூறும் அவற்றை நாம் உண்மை என ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்? அவன் கூறுவதில் எவ்வளவு உண்மை உளது என்பதை ஆராமையாலே, அதை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்? அதுதானே உன் எண்ணம்? நன்று நன்று நின்கருத்து!" எனக்கூறி நையாண்டி செய்தாள்.

அதுகேட்ட தோழி! "அங்ஙனமாயின், அவ்வாறு உண்மையில் துயர் உற்று உரைக்கும் அவன் சொற்களை நம்புதல் கூடாது; அது அத்துணை எளி தன்று; ஆனால், தன் காதல்நோய் தணியப்பெறுமல், அவன் இறந்துபோதல் நன்று; அது அவ்வளவு எளிது, என்று கூறுகின்றனை நீ! என்னே நின் நெஞ் சழுத்தம்!" எனக்கூறி மனம் உழைந்தாள்.

அவன் இறந்துபடுவன் என்று தோழி கூறக்கேட்ட அப்பெண், "தோழி! அவன் இறந்துவிடுவன் என்று நீ அஞ்சுகின்றனை; அவ்வச்சம் நினக்கு வேண்டாம்; அவனை நான் நன்கு அறிவேன்; அவ்வளவு உயர்ந்த பண்பேதும் அவன்பால் இல்லை; நான் அவன்பால்

காதல்கொண்டிருப்பதை, இவ்வூரார் உணர்ந்து என்னை அலர்தூற்றிப் பழிப்பதற்கு வழிசெய்து, தெருவில் நின்று கலாம் விளக்கும் அவன்பால், செய்யத்தகாதன செய்ய நேர்ந்தவிடத்து உண்டாம் மனநடுக்கமோ, சிந்தையை, அது சென்றவிடத்தில் செல்லவிடாது அடக்கி ஆளவல்ல அறிவுத்திறனோ, உயர்ந்த குடியில் பிறந்தார்பால் காணலாம் ஒழுக்கமோ இருக்கும் என எண்ணற்க; அவன்பால் அவை அறவே இல்லை; நாணும், நிறையும், நல்லொழுக்கமும் அற்றவன் காதல் நோயால் இறந்து விடுவன் என நீ அஞ்சற்க'' என்றாள்.

"அவன் நாணும் நிறையும்போலும் நற்பண்பற்றவன்; அதனால், தன் காதல் உள்ளத்தைக் கண்டவரிடத்தில் காட்டிவிட்டான்; ஆனால் நானோ, அந்நாணை இழவாது பெற்றுள்ளேன்; அதனால், என் காதலை நீ அறிந்துவிட்ட இந்நிலையிலும், அதை ஒப்புக்கொண்டு உண்மை உரைக்கத் தயங்குகின்றேன்; என்னோடு பழகிய நீ, இதை அறிந்திலையே! என்னே நின் பேதைமை!'' எனக்கூறியதாகக் கொண்டாள் தோழி! அதனால், பெண்ணே! நின் அன்பைப்பெற்று மகிழ்ந்துவாழ வேண்டும் எனும் வேட்கை நிறைவேறப் பெருமையால், உறக்கம் ஒழிந்து, உறுதுயர் உற்று, நம் நட்பினை நயந்து வந்திருப்பானை, நாணம் முதலாம் நம் பெண்மைக் குணங்கள் இடைநின்று வருத்துவதால், ஏற்றுக்கொள்ளாது போக்கும் பண்பு, நம்பால் பொருந்துவதில்லை'' என்று கூறி அவளை இசையுமாறு செய்தாள்.

**சுணங்குஅணி வனமுலை, சுடர்கொண்ட நறுநுதல்.**
**மணம்கமழ் நறுங்கோதை, மாரிவீழ் இருங்கூந்தல்,**
**நுணங்குஎழில் ஒண்தித்தி, நுழைநொசி மடமருங்குல்,**
**வணங்குஇறை வரிமுன்கை, வரிஆர்ந்த அல்குலாய்!**

**5. 'கண்ணார்ந்த நலத்தாரைக் கதும்எனக் கண்டவர்க்கு,**
**உள்நின்ற நோய்மிக உயிர்எஞ்சு துயர்செய்தல்**

பெண்அன்று ; புனைஇழாய் !' எனக்கூறித் தொழூஉம் ; தொழு
கண்ணும் நீராக நடுங்கினன்; இன்நகாய் ! [தே,
என்செய்தான் கொல்லோ ! இஃதுஒத்தன் ; தன்கண்
பொருகளிறு அன்ன தகைசாம்பி, உள்ளுள்
உருகுவான்போலும் உடைந்து ;

தெருவின்கண், காரணம்இன்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரணவாசிப் பதம் பெயர்த்தல் ; ஏதில
நீ நின்மேல் கொள்வது எவன் ?

' அலர்முலை, ஆய்இழை நல்லாய் ! கதுமெனப்
பேரமர் உண்கண் நின்தோழிஉறீஇய
ஆர்அஞர் எவ்வம் உயிர்வாங்கும் ;
மற்று இந்நோய்தீரும் மருந்தருளாய் ; ஒண்தொடி !

நின்முகம் காணும் மருந்தினேன் ; என்னுமால் ;
நின்முகம் தான்பெறினல்லது, கொன்னே
மருந்து பிறிதுயாதும் இல்லேல், திருந்துஇழாய் !
என்செய்வாம் கொல்இனி நாம் ?

பொன்செய்வாம் ;
ஆறுவிலங்கித் தெருவின்கண் நின்று, ஒருவன்
கூறும்சொல் வாய் எனக் கொண்டு, அதன் பண்பு உணராம்,
தேறல் எளிது என்பாம் நாம் ;

ஒருவன் சாமாறு எளிதுஎன்பாம் மற்று ;

சிறிதுஆங்கே ; மாணூஊர் அம்பல்அலரின் அலர்கென,
நாணும் நிறையும் நயப்பில் பிறப்பிலி ;
பூணாகம் நோக்கி, இமையான், நயந்துநம்
கேண்மை விருப்புற் றவனை எதிர்நின்று,
நாண்சுடப், பெயர்த்தல் நயவர வின்றே.''

**தலைவற்குக் குறைநேர்ந்த தோழி, தலைவியது குறைநயப்ப அவளோடு உறழ்ந்து கூறியது இது.**

*2. வீழ் - விரும்புகின்ற ; 3. தித்தி - தேமல் : 6. எஞ்சு- போகும் : 10. தகை - அழகு ; சாம்பி - கெட்டு; 13. வாரண*

வாசிப்பதம் - பிறர்துயரைத் தம் துயராகக் கொள்வதை, வாரணவாசியில் உள்ளார் பதம் என்ப. 16. உறிஇய - செய்த; 17. அஞர் - மனக்கவலை: எவ்வம் - துயரம்; 23. பொன் செய்வாம் - காதலனைப் பெற்றுப் பேரழகு பெறுவாம் என்பதைக் குறிக்க மகளிர் வழங்கும் ஒரு குறியீட்டுச் சொல்; 24. ஆறு - ஒழுக்க நெறி; 25. வாய் - உண்மை; 28. சிறிது ஆங்கே - ஆங்கே சிறிது என மாற்றி, அவ்வாறு அவன் இறந்துபடுதல் இல்லை எனப் பொருள் கொள்க. அம்பல் - ஒருத்தியின் காதல் ஒழுக்கத்தைப் பிறர் அறியாவாறு தமக்குள்ளே கூறிப்பழித்தல்; அலர் - அதைப் பலர் அறியக் கூறிப் பழித்தல்; 29. நயப்புஇல் - விரும்பாதவன்; பிறப்பிலி - நற்குடிப் பிறப்பிற்கேற்ற நல்லொழுக்கம் இல்லாதவன்; 32. நய வரவு இன்று - பொருந்தாது.

## 25

# குறித்ததை முடிப்பவன்

பெரும்பொருளும், அப்பொருளை வறியார்க்கு வாரி வழங்கும் பேரருளும் வாய்க்கப் பெற்ற வளமார் குடியிற் பிறந்த பெண்ணொருத்தி, தங்கள் தினைப்புனத்தைக் காத்திருந்தாள்; அவளை இரவிலும், பகலிலும் பிரியாது உடனிருந்து ஆடிமகிழும் தோழியர், ஒருநாள், அவளைத் தனித்திருக்க விடுத்து எங்கோ சென்றிருந்தனர்; அக்காலை ஆங்கு வந்தான் ஓர் இளைஞன்; அன்பு, அருள், அறம் உணர் அறிவு, பழியஞ்சும் பண்பு, வாய்மை, வள்ளன்மை முதலாம் குணங்களைக் குறைவறப்பெற்ற அவ்விளைஞன், அப்பெண்ணின் பேரழகைக் கண்டு காதல் கொண்டான்; அவளும் அவனைக் காதலித்தாள்; அவனைச் சிறிதுபோதும் பிரியாதிருந்து பேரின்பம் நுகர விரும்பிற்று அவள் உள்ளம்; ஆனால் அவளை அவள் தோழியர் இமைப்பொழுதும் பிரியார் ஆதலின், அவர் அறியாவாறு அதை அடைதல் இயலாது என உணர்ந்தாள்; தோழியருள், தன்னை வளர்த்த செவிலித்தாயின்

மகளும் ஒருத்தி ; அவளே, அவருள் சிறந்தவள் ; ஆடும் நேரம் ஒழிந்த நேரங்களிலும், அவளைப் பிரியாது, அவள் உண்ணும்போதும், உறங்கும்போதும் உடனிருப்பவள் அவளே ; ஆகவே, அவள் துணை கிடைத்துவிடின், தன் காதலுக்குக் கேடு நிகழாது என உணர்ந்தாள் ; அதனால், தன் காதலை அவளுக்கு உணர்த்தி அவள் துணை பெற விரும்பினாள் ; ஆனால், பிறர்க்குத் தன்காதலை உணர்த்த அவள் பெண்ணுள்ளம் நாணிற்று ; அதனால், அதைத் தான் அறிவியாது, அவன்வழி அறிவிக்க விரும்பினாள்; தோழிக்கும் தனக்கும் உள்ள உறவை, அவனுக்குத் தெரிவித்து, "நாளை வருங்கால், அவளைக்கண்டு, நம் காதல் உணர்வை உணர்த்தி, அவள் துணைபெற்று அவளோடு வருக" என வேண்டிக் கொண்டாள்; அவனும் அதற்கு இசைந்து சென்றான்.

மறுநாள், தன் காதலியைக் காணவந்த அவன், இடைவழியில் தோழியைக் கண்டான், தன் காதல் வாழ்வு பயன்கொள்ளத் துணைபுரிவாள் அவள்; துணை புரியும் அருள் உள்ளமும் உடையாள் என அறிந்து, அவள்பால் குறை கூறத் துடித்தது அவன் உள்ளம்; ஆனால், "ஒரு பெண்ணின்பால் காதல்கொண்டேன் நான்" எனத், தனக்கு அறிமுகம் இல்லாதாரிடத்தே, அதுவும், அறிமுகம்அற்ற ஒரு பெண்ணிடத்தில், கூற நாணிற்று அவன்நா ; மேலும் வேண்டுவார்க்கு வேண்டு வன அளிக்கும் வண்மையும், அவ்வாறு அளிக்கப்பெரும் பொருள் ஈட்டும் வன்மையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற தான், ஒரு பெண்ணின் முன்நின்று," என் காதல் நிறை வேற நின்துணை வேண்டி நிற்கின்றேன்" என்று கூற நாணிற்று அவன் ஆண்மை; அதனால், அவன் நாவி லிருந்து சொல்லேதும் பிறந்திலது ; ஆசை அவளைப் பணிந்து, குறைகூறி அவள் துணைவேண்டத் துணிய,

பண்பு, பணிந்து பின்சென்று இரத்தல் இழிவு எனக் கூறித் தடுக்க, அவன் ஏதும் உரையாளுயினன். ஆனல், அவன் ஆசையோ, அடங்கிற்றிலது; அதனல், அவன் அவள் முகத்தைப் பலமுறை நோக்குவன்; அவள் தன்னை நோக்கியவிடத்து, நாணித் தலைகுனிந்துகொள்வன்; இவ்வாறே, உரைக்கத் துணிந்து, அவள் முகத்தை நோக்குவதும், அவள் நோக்கியவழித் தலைகுனிந்து கொள்வதுமாக, நெடிதுநேரம் அங்ஙனே நின்றிருந்தான்;

அவன் நிலையைக் கண்டாள் தோழி; அவள் அகக் கண்ணிற்கு மற்றொரு காட்சி புலனுயிற்று; செல்வ வாழ்வில் சிறக்க வாழ்ந்த சான்றோர் ஒருவர், எக்காரணத் தாலோ, தம் செல்வமெல்லாம் அழிந்துபோக, வறுமை யுற்று வாடினர்; அக்காலை, அவர் உறவினர் சிலர், சிறந்த செல்வமும், அச்செல்வத்தை அதுஇல்லார்க்கு ஈந்து துணைபுரியும் சீரியசிந்தையும் உடையராய் வாழ்ந் திருந்தனர்; அதை அறிந்த அச்சான்றோர், அவர்கள் பாற்சென்று, தம் வறுமை நிலை கூறி வாழ்வுபெற்று வர விரும்பினர்; அவ்வாறே அவர்பால் சென்றார்; ஆனல், தம் உள்ளம் தம்குறை கூறத் துணிந்தபோழ்து, "கொள்ளுதல் இது கொடுப்பது நன்றால்" எனஉணர்ந்த தம் நல்லறிவு இடைபுகுந்து தடுக்கக், கூற எண்ணிய தைக் கூறமாட்டாதே வருந்தி நின்றார்; இளைஞன்நிலை, அச்சான்றோர் நிலையையே நினைப்பூட்டிற்று; அவன் நிலையால், அவன் பெருந்தன்மையினையும், அவன் அப் பெண்ணின்பால் கொண்டுள்ள பேரன்பினையும் கண்டு, உள்ளம் வியப்பும் மகிழ்ச்சியும் கொள்ள, நடந்து, அப் பெண்ணிருக்கும் இடம் சென்றடைந்தாள்.

செல்வாளைப் பின் தொடர்ந்தான் இளைஞனும்; அவன் தன்னை நோக்கி வருவதை, அப்பெண்ணோடு உட னிருந்து கண்ட தோழி, வருவானை அவளுக்குக் காட்டி,

அவள் சற்றுமுன், தன்பால்வந்து நடந்துகொண்ட முறையையுங்கூறி, "ஏடி பெண்ணே; சிந்தையும் செயலும் தம் நிலை கெட்டுப் போக வருந்திவரும் அவனைக் காண்; அவனை அவ்வாறு வருத்தும் அவன் மனக் குறைதான் யாதோ?" என்று வினவினாள்.

அவள் அப்பெண்ணோடு, அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே, அவனும் ஆங்குவந்து சேர்ந்தான்; தன்னைவிடாது பின்தொடர்ந்து வந்துளான் எனினும், தன்குறையை வாய்திறந்து கூறும் வன்மை அவனுக்கு இல்லை என்பதை அறிந்தவளாதலின், இதுகாறும் அவன் செய்கைகளை வாளா பார்த்திருந்த அவள், தானே முன்வந்து, "ஏடா! செல்லும் இடந்தோறும் நின்நிழல், நின்னைவிட்டுப் பிரியாது தொடர்ந்து வருதல் போல், நீ என்னைத் தொடர்ந்து வருகின்றனை; 'உள்ளத்தில் ஒரு குறையுடையேன்; அதைத் தீர்க்கும் வழியறியாது வருந்துகின்றேன்' என்பதை, நின்முகக் குறிப்பால் உணர்த்துகின்றனை; என்பால் பெறவேண்டியது யாதேனும் உளகொல்?; 'என்குறை இது; எனக்கு வேண்டுவது இது'; என, வாய்திறந்து விளங்கக் கூறுவாயாக" என, நயம்படக் கூறினாள்.

அவள் அவ்வாறு கூறக் கேட்ட அவ்விளைஞன், "அன்புடையாய்! நின்பால் கூறத்தக்க குறையேதும் இல்லை; யான்விரும்பும் பொருளும் நின்பால் இல்லை; நான் குறைகூற வேண்டுவது, இதோ நிற்கும் இப்பெண்ணினிடத்தில்; நான் விரும்பும் பொருளும் இவளிடத்திலேயே உளது; கேட்டால், இவள் மறுக்காது அளிப்பாளோ? முன்னர் அதைக் கூறு; என் குறை யாது என்பதைப் பின்னர் கூறுகிறேன்" என்றான்.

இளைஞன், "இவள்பால் கொடைக்குணம் உளதோ, இல்லையோ" என ஐயுறுகின்றனன், என்பதை அறிந்து

கொண்ட தோழி, "அன்ப! தம்பால் வந்து, வறுமையின் கொடுமை காட்டி இரந்து, நிற்பார்க்கு, அவர் வேண்டும் பொருளை வழங்கி வாழமாட்டா வறுமை ஒருவர்க்கு வாய்த்திடுமாயின், அந்நிலையில், உயிரோடிருந்து வாழ்தலினும், மாண்டு மறைந்து போதலே மாண்புடைத்து; இவ்வுயர்ந்த பண்பாட்டை அறிந்தவர் நாங்கள்; இதோ நிற்கும் இவள் தந்தை, ஈகைச் சிறப்பையும், ஈயாமையின் இழிவையும் உணர்ந்தவன்; தன்பால் வந்து இரப்பர் எவராயினும், அவர்க்கு அவர் விரும்பும் பொருளைப் பெரும் அளவில் தந்து, அன்புரை வழங்கி அனுப்பும் அருள் உள்ளமும், அதற்கேற்ற செல்வ வளமும் வாய்க்கப் பெற்றவன்; அவன் பெற்ற மக்கள் நாங்கள்; வாழையின் கீழ்க்கன்றும் வழங்கும் என்பதை நீ அறிவை; ஆகவே, எங்கள் கொடைக் குணத்தை ஐயுறுது, நீ வேண்டுவது யாது என்பதை விளங்கக் கூறு" எனக் கூறினுள்.

அது கேட்ட அவ்விளைஞன், "நான் அப்பெண்ணின் பேரருள் வேண்டி நிற்க, இத்தோழி, 'தந்தை பெரும் பொருள் அளிப்பன்' எனக் கூறுகின்றனளே; என்னே இவள் பேதைமை!" எனத் தனக்குள்ளே எண்ணியவனுய், "பெண்ணே! பிறர்பாற் சென்று, பல்லைக்காட்டி நின்று, பொருளிரக்கும் வறுமையில் உழல்பவன் அல்லன் நான்; உலகமே வந்து இரப்பினும், அவர் விரும்பின எல்லாம் வாரி வழங்கவல்ல பெரு வாழ்வுடையேன்; ஆகவே, பொருள் வேண்டி வந்திலன் நான்; நான் வேண்டி வந்ததை அளிக்க வல்லவன் நின் தந்தையல்லன்; அதை அளிக்க வல்லவள், இதோ நிற்கும் இவள்; காதல் உணர்வு உள்ளத்தைக் கலக்க, மருண்டு மருண்டு நோக்கி நிற்கும் இவள் அருளை—அன்பை வேண்டி நிற்கின்றேன் நான்; இவள் என்மீது அருள் கொண்டு,

என்னை ஆட்கொள்ளுதல் வேண்டும்; அதுவே யான் இரக்கும் பொருள்" என்று. தன் உள்ள வேட்கையை வெள்ளென உணர்த்தினன்.

அவன் கருத்து அதுவே என்பதைத் தோழி, அவனைக் கண்ட அப்போதே அறிவாள் எனினும், அதை அவன், தன் வாயால் விளங்க உரைத்தல் வேண்டும், அதுவும், இவள் முன்னிலையில் எனும் எண்ணத்தால், இதுகாறும் ஏதேதோ கூறி வந்தவள், மீண்டும், அவர் களவொழுக்கத்தை அறியாதாள் போன்றே நடித்து, இறுதியாக, "அன்ப! இதுவோ நின்குறை? நன்று நன்று நின் கூற்று! பேராற்றல் காட்டி வந்தெதிர்க்கும் பகைவர் பெரும்படையைப் பாழ் செய்து வெல்லவல்ல பேராண்மை மிக்க யானை போலும் ஓர் ஆண்மகனை, அருள் செய்து ஆட்கொள்ள வேண்டு வாள் ஒரு பெண்ணோ? இதுவோ நின் நிலை?" எனக் கூறிப் பழித்த வாய்ப்பாட்டால், அவன் ஆண்மைச் சிறப்பையும், அத்தகையான் தன் தோழிபாற் காட்டும் அன்பின் பெருமையையும், அத்தகையானைக் காதல னாகப் பெற்ற அவள் ஆகூழ் ஆற்றலையும், உள்ளுக் குள்ளே உணர்ந்து, உவந்து மகிழ்ந்தாள்.

"ஓர் ஆண்மகனைப் பெண்ணொருத்தி ஆட்கொள் வதோ?" எனக்கூறித் தோழி நகைப்பது கண்ட அவ் விளைஞன், "இவள் துணை வேண்டி நான் இதை உரைக்க, இவள் அது கேட்டுத் துணை புரிவது செய்யாது, என் நிலை கண்டு எள்ளி நகையாடுகின்றனளே" என்ற எண்ணம் எழச், சினம் கொண்டு, "தோழி! இவளைப் பெற நின் துணை வேண்டினேன்; ஆனால் நீயோ, என் நிலைகண்டு நகைக்கின்றனை; ஒன்று கூறுகிறேன் கேள்: இவள் என்னை ஆட்கொள்ளாது, தன் அன்பை மறந்து விடுவாளாயின், இவளைப் பலரும் கண்டு பழித்து

நகைக்குமாறு செய்வேன்; என் குறையினை நின் ஊர்ப் பெரியோர்க்கு உணர்த்தி, அவர் உறுதுணை பெறுவான் வேண்டி, உங்கள் ஊர் மன்றத்தே, மடல்மா ஏறிவந்து நிற்பன்; இது உறுதி'' என உரைத்துவிட்டுத் தன்னூர்க்கு மீண்டான்.

செல்வானைச் சிறிது நேரம் கண்டு நின்ற தோழி, அவன் தன்னோடு உரையாடிக் கொண்டிருக்கும் போதே, தாம் களவாடக் கருதிய பொருளிற்கு உரியார், அதன் அணித்தே இருப்பக் கண்டு, அப்பொருளை நேரே நோக்காது, வேறு எதையோ நோக்குவார் போல், அப்பொருளையே பலகாலும் நோக்கும் கள்வரைப் போல், அவன், அப்பெண்ணை நோக்காதான் போல், பலகால் அவளையே நோக்கிய காட்சியையும், அக்காட்சி வழியே, அவன் அப்பெண்ணின்பாற் காட்டும் பேரன்பையும், அவன் அவரை விடுத்துச் செல்லுங்கால் சொல்லிய சொல்லிற் சுடர்விடும் அவன் உள்ள உறுதியையும் உணர்ந்தாள். பின்னர், அப்பெண்ணின் அருகிற் சென்று அமர்ந்து, ''தோழி! காதல் வெறி இவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது; இந்நிலையில், அவன் எதையும் செய்யத் துணிவன்; நம் தந்தை நின்னை மணம் செய்து தருதற்பொருட்டு வேண்டுவ எவையேயாயினும், அவற்றை, அவன் குறை காணுவாறு கொடுத்து, நின்னை மணம் செய்து கொள்வன்; நின்னை மணந்துகொண்டல்லது அவன் மனம் அமைதி காணாது; அத்தகையான், அவன் கூறிச் சென்றவாறே மடலேறி வரினும் வருவன்; ஆகவே, அவன் வேண்டுகோளை மறுத்தல் மதியுடைமை யாகாது. அவனை ஏற்றுக்கொள்வதே இனி நீ செய்யக் கடவதாம்'' எனக் கூறி, அவளை, அவனை, ஏற்றுக் கொள்ளுமாறு செய்தாள்:

எல்லா ! இஃது ஒத்தன், என்பெறான் ? கேட்டைக்காண் ;
செல்வம் கடைகொளச் சாஅய்ச், சான்றவர்,
அல்லல் களைதக்க கேளிர் உழைச்சென்று,
சொல்லுதல் உற்று, உரைக்கல்லா தவர் போலப்,
பல்லூழ் பெயர்ந்து என்னைநோக்கும் ; மற்றுயான் நோக்கின்,
மெல்ல இறைஞ்சும் தலை.

எல்லா ! நீ, முன்னத்தான் ஒன்று குறித்தாய்போற் காட்டினை ;
நின்னின்விடாஅ நிழல்போல் திரிதருவாய் ;
என்நீ பெறாதது ? ஈது என்.
சொல்லின், மறாது ஈவாள்மன்றோ இவள் ?

செறாஅது, ஈதல் இரந்தார்க்கு ஒன்று ஆற்றாது வாழ்தலின்
சாதலும் கூடுமாம் மற்று.
இவள்தந்தை' காதலின் யார்க்கும் கொடுக்கும் விழுப்பொருள்;
யாதுநீ வேண்டி யது ?

பேதாய் ! பொருள்வேண்டும் புன்கண்மை ஈண்டில்லை ; யாழ,
மருளி, மடநோக்கின் நின்தோழி, என்னை
அருளீயல் வேண்டுவல் யான் ;
அன்னையோ ! மண்டமர் அட்ட களிறு அன்னான்தன்னை, ஒரு
பெண்டிர் அருளக் கிடந்தது எவன்கொலோ !
ஒண்தொடி ! நாண்இலன் மன்ற ; இவன்.

ஆயின் ஏஎ !
பல்லார்நக்கு எள்ளப் படுமடல்மா ஏறி,
மல்லல்ஊர் ஆங்கண் படுமே, நறுநுதால் !
நல்காள், கண்மாறிவிடின் எனச்செல்வான் ; நாம்
எள்ளிநகினும் வரூஉம் ; இடைஇடைக்
கள்வர்போல் நோக்கினும் நோக்கும் ; குறித்தது
கொள்ளாது போகாக் குணன்உடையன், எந்தைதன்
உள்ளம் குறைபடாவாறு.''

தலைவனுக்குக் குறைநேர்ந்த தோழி, தலைவியோடிருப்புழி ஆங்கு வந்த தலைவனோடு உறழ்ந்து உரையாடி அனுப்பிவிட்டு, அவனை ஏற்றுக்கொள்ளுமாறு ஏற்பன கூறியது இது.

*1. எல்லா - ஏடி; இஃது ஒத்தன் - இவன் ஒருவன்; 2. கடைகொள - அழிந்துபோக; சாஅய் - வறுமையுற்று; 4. உரைக்கல்லாதவர்-சொல்லமாட்டாதார்; 5. பல்லூழ்-பலமுறை; 7. முன்னம் - குறிப்பு; 11. செரு அது - சினவாது, வெறுக்காமல்; 15. யாழ-அசை; 16. மருளி - மருண்டு; 17. அருள்ஈயல்-அருள் செய்தல்; 18. மண்டு-நெருங்கிய; 23. மல்லல் - வளம்; 24. கண்மாறிவிடின் - அன்பை மறந்துவிடின்; 28. குறைபடாவாறு கொடுத்து கொள்ளாது போகான் எனக் கொடுத்து என ஒரு சொல் இடையே வருவித்து முடிக்க. 21. ஏஎ - இகழ்ச்சிப் பொருள் உணர்த்தும் ஓர் இடைச்சொல்.*

# 26

# மாறுண்டோ நெஞ்சே!

ஓர் இளைஞன் ஒரு பெண்ணின்மீது காதல் கொண்டான்; அப்பெண்ணும் அவ்விளைஞனும் ஏனையோரைப்போல் அல்லாது, சிறிது புதுமை வாய்ந்தவர்கள்; நல்லது எனத் தன் உள்ளம் எண்ணிய ஒரு செயலைத் துணிந்து மேற்கொள்ளும் இயல்புடையான் அவ்விளைஞன்; தன்னோடும், அச்செயலோடும் தொடர்புடையார், தான் அது செய்வதை ஏற்றுக் கொள்ளுகின்றனரா இல்லையா என்பதை எண்ணிப் பாரான். தனக்கு ஒரு பொருள் வேண்டும் என எண்ணி விட்டால் அப்பொருளை எவ்வாற்றானும் அடைந்துவிட எண்ணும் அவன் உள்ளம்; அம்முறை தவறு எனத் தடை கூறுவாரை, ஏற்றகாரணங்களை எடுத்துக் காட்டித் தன் வயமாக்கும் தகுதியுடையான்; இதனால், அவன் தகாதனவற்றையே செய்வான் என்பது பொருள் அன்று. ஒருவர் நல்லனவே செய்யினும், அவற்றை நல்லன என எல்லோரும் ஒப்புக்கொள்வது உலகியலன்றே; சிலர் அவன் செய்யும் நல்லனவற்றையும் நல்லன ஆகா எனக்கூறுவர்; அவ்வாறு கூறுவார்க்கும்

ஏற்பன சொல்லி, அவை நல்லனவே என்பதை அவரும் ஏற்குமாறு செய்யும் ஆற்றலன்; ஆனால், அவன்பாற் காணலாம் குறை ஒன்றும் உண்டு; அவன் செய்வது நல்லதாகவே இருக்கும்; ஆனால், அது பலர்க்குத் தீது போல் தோன்றும். அவ்வாறு, அதைத் தீது என்று கருதுவார்க்கு, அது தீதன்று என்பதை விளக்கி, அவர் ஒப்புதலையும் பெற்றுப், பின்னரே செய்தல் வேண்டும் எனும் பொறுமை அவன்பாற் பொருந்த வில்லை; நன்று எனப்பட்டதைத் துணிந்து முதலிற் செய்துவிடுவன்; பின்னர் அது குறித்துக் கூறுவாரைக் கண்டு, காரணம் காட்டித் தெளிவிப்பன்; இதுவே அவன்பால் காணலாம் குறை; ஆனால், இதையும் ஒரு வகையாய் நோக்கின், குறையாகத் தோன்றாது; " நல்ல ஒரு செயலை விரைந்து முடித்தலே நன்று; நாலு பேர் கருத்தை அறிந்து, மாறுபடுவார் உளரேல், அவர்க்கு ஏற்பன கூறி இசைவித்துப் பின்னர்ச் செய்வது என்றால் இயலாது; அதற்குள், அச்செயல் தன் பயன் இழந்து போதலும்கூடும்; ஆகவே, அதுவே நன்று என்பது நன்கு புலனாகிறது. ஆகவே, முதலில் செய்து முடித்து விடுவோம்; பிறகு, தடை சொல்வாரைக் காரணம் காட்டிச் சரி செய்துகொள்ளலாம் " இவ்வாறு எண்ணும் அவன் எண்ணத்திலே குறையிருக்கக் கண்டிலம்,

அவனைப் போன்றே, அவளும் ஒரு புதுமைப் பெண்; யாரேனும் தவறு செய்தால், அத்தவறு செய்தவன் தன்னைக் காதலிக்கும் தன் அன்பிற்குரிய ஆடவனே யாயினும், அவன் செய்வது தவறு என்பதை, அவன் முன்னின்று துணிந்து கூறும் இயல்புடையாள். ஓர் ஆடவன் முன் பெண்ணொருத்தி நின்று பேச்சுக் கொடுப்பது நாணுடைய பெண்ணிற்கு நன்றன்று என எண்ணாது அவள் புதுமை யுள்ளம்; தவறு எனத் தன்

உள்ளம் உணர்ந்ததைத் தன் தோழிபாற் கூறி, அவளைக் கொண்டு, அத்தவறு புரிந்தார்க்கு உணர்த்தல் வேண்டும்; இதுவே, பெண்ணொருத்தி நடந்துகொள்ளும் முறையாம் என எண்ணினாள் அவள்: அவ்வாறு சுற்றி வளைத்துச் செல்வதற்குள். தவறு நிகழ்ந்துவிடுமே எனும் அச்சத்தால், தவறு கண்டவுடனே, அது நிகழ்ந்த அப்போதே துணிந்து கூறிவிடுவாள் அவள்; மேலும், தவறு செய்தாரையே தண்டித்தல் வேண்டும் என அவள் உள்ளம் எண்ணாது; ஒருவர் செய்த செயல் நன்றே ஆயினும், அதைச் செய்யும் முறை அறிந்து செய்தல் வேண்டும்; மாறாக அவரைக் கலவாது செய்யினும், முறைபிறழச் செய்யினும் அது குற்றமாம்; அவரும் தண்டித்தற்கு உரியரே எனக் கருதும் உள்ளம் உடையாள் அவள்.

இவ்வாறு புதுமை நெறிநிற்கும் அவ்விளைஞன், தன்னைப் போன்றே, புதுமை விரும்பும் அப்பெண்ணைக் காதலித்தான்; மாசற்ற மதிபோல் விளங்கும் அவள் முக அழகு, அவனை அடிமையாக்கிவிட்டது. மெய், வாய், கண் மூக்கு, காது எனும் ஐம்பொறிக்கும் ஒருங்கே இன்பம் அளிக்க வல்லாள் அவள் என அறிந்து, அவ் வைம்புல இன்பங்களையும் ஆரத்துய்க்கத் துடித்தது அவன் உள்ளம். அவ்வாறு துடித்துக் கொண்டிருந்தான், ஒருநாள் அவள் ஓரிடத்தே தனித்திருக்கக் கண்டான்; கண்டதும், அவள்பால் அவன் கொண்டிருந்த காதல் கரைபுரண்டு பெருகிற்று; அவளிடத்தில் அதைக் கூறி, அவள் இசைவினையும் பெறவேண்டும் என்பதையும் எண்ணிப் பார்க்க இயலவில்லை. அதனால், அவள் அருகில் விரைந்து சென்று, அன்போடு பற்றி அணைத்துக் கொண்டான்.

இளைஞன் தன்னைப்பற்றி அணைத்துக் கொள்ளும் வரை, காதல் என்பதை அறியாதிருந்த அவள் உள்ளத்

தில், அவன் அணைத்துக்கொண்ட அப்போதே, அக் காதல் அரும்பின்று மலரத் தொடங்கிவிட்டது. அதனால், அவன் அணைப்பினை அவள் வெறுத்திலள்; ஆயினும், அவன் தன்னைக் காதலிப்பதைத் தனக்கு அறிவித்துத் தானும் இசைந்த பின்னர் அணைத்துக் கொள்ளாது, தன் கருத்தறியாதே அது செய்தது காண, அவள் உள்ளத்தில், அக்காதலோடு சிறிது சினமும் பிறந்தது; அதனால், அவன் அணைப்பினை அகற்றி, அகல நின்ற வாறே, அவனை நோக்கி, "ஏடா! என்மீது நீ காதல் கொண்டாய்; ஆனால், அவ்வாறே, உன்மீது எனக்குங் காதல் உண்டா இல்லையா என்பதை அறிந்துகொண்ட னையோ? நீ என்னை விரும்புவது உண்மை; ஆனால், அதைப் போன்றே, நான் உன்னை விரும்புகின்றேனா இல்லையா என்பதை அறிந்துகொண்டனையோ? இல்லை; இதை அறிந்து கொள்ளாதே, என் கைபற்றி அணைக் கும் நீ ஒரு மானம் கெட்டவன்" எனக் கூறிச் சீறினாள்.

அவள் அவ்வாறு சீறிவிழக் கண்டும், அவன் வருந்தினானல்லன்; மாறாக நகைத்துக்கொண்டே, "ஏடி! பெண்ணே! உனக்கு என்பால் காதல் உண்டா இல்லையா? நான் நின் கைபற்றியது பொருந்துமா பொருந்தாதா என்பனவற்றையெல்லாம் நீயே ஆராய்ந்து பார்த்துக்கொள்; அவற்றையெல்லாம் ஆராயும் அறிவோ, அதற்கு வேண்டும் மன அமைதியோ எனக்கு இல்லை. நிறையப் பூத்து, பூத்தமலர் ஒன்றும் உதிர்ந்து போகாதே, அழகாக ஆடி அசையும் மலர்க்கொடி போன்ற நின் பேரழகைக் கண்டேன்; அவ்வழகு, என் அறிவையும், அது கருவியாக வரும் ஆராய்ச்சியையும் அழித்துவிட்டது; கட்டி அணைத்துக் கொள்வதில் பேரின்பம் உளது என உணர்ந்தேன்; அணைத்துக் கொண்டேன்; அவ்வளவே!" என அமைதியாக விடை யளித்தான்.

அது கேட்ட அப்பெண். "ஏடா! 'நின் அணைப்பில் இன்பம் கண்டேன்; ஆகவே அணைத்துக்கொண்டேன்' என்று கூறுகின்றனையே, நீ அணைத்துக் கொள்வதால், எனக்கு உண்டான கேட்டினை உணர்ந்திலையே, என்னே நின் தன்னலம்! நமக்கு இன்பம் தருகிறது என்பதால், பிறர்க்குத் துன்பம் தரும் ஒரு செயலைச் செய்வது பேரறிவுடையார்க்குப் பொருந்துமோ?" எனக் கூறிப் பொருமினள்.

அவள் அவ்வாறு வினவக் கேட்ட அவன், "பேரொளி வீசும் பொற்றொடி அணிந்து நிற்கும் பெண்ணே! 'தமக்கு இன்பம் என்று பிறர்க்குத் துன்பம் தருவன செய்தல் நன்றாமோ?' என்பன போலும் அறிவாராய்ச்சி மேற்கொள்வதை விடுத்து, நான் கூறுவதைக் கேள்:

"மக்கள் நீர் உண்ணுகின்றனர்; அவ்வாறு உண்ணுவார், 'எமக்கு நீர்வேட்கை உளது, அது தணிக்கும் இனிமை நீர்க்கு உண்டு என்று கருதி உண்பரேயல்லது, இதை உண்ணுவதால் அந்நீர்க்கு நன்மை உண்டு; இன்பம் உண்டு' எனக் கருதி உண்ணுவதில்லை. இதை அறியாது, நீ அவ்வாறு கேட்பது ஏனோ? அது மட்டுமன்று; ஐவாய் நாகத்தின் வாயில் அகப்பட்டு, அல்லற்படும் உயிரைப்போல், நின்னைக் கண்டு காதல் கொண்டு, மெய், வாய், கண், மூக்கு, காது முதலாம் என் ஐம்பொறிகளும் உன்பால் இன்பம் பெறத் துடித்துக் கொடுமை செய்ய, அறிவிழந்து, செய்வதறியாது போனேன். அதனால், நின் இசைவினைப் பெறாதே, நின்னைப் பற்றி அணைத்துக்கொண்டேன். ஆனால், அவ்வாறு பற்றிக்கொண்டதும் பிழையுடைத்தன்று. தம்மால் கண்டு காதலிக்கத் தக்க மகளிரைக் கண்டக்கால், அவரைக் காதலிக்கும் ஆடவர், அவரை அவர் இசை

விளைப் பெருதே, வலிந்து கைப்பற்றிக் கொள்வதும் ஒரு மணமுறையே என அறநூல்கள் கூறுகின்றன; ஆகவே, நான் செய்தது எவ்வழிநோக்கினும் பிழையுடைத்தன்று'' என்று கூறி நிறுத்தினன்.

தன் இசைவு பெருது தான் கைப்பற்றியது அறனெடு பட்டதே என இளைஞன் கூறக் கேட்ட அப் பெண், " அறநூலும் அவ்வாறு கூறுமாயின், இவன் யான் எவ்வளவு கூறி மறுப்பினும், கேளாதே, என்னை வலிதிற்பற்றிக் கொள்ளவே துணிகின்ருனாயின், " இப் பிறவியிலேயே யல்லது, முன் பிறவியிலும், இவளும் நானும் வேறல்லேம்; மனைவியும் கணவனுமாகவே மகிழ்ந்து வாழ்ந்தேம்; ஆகவே, இவளை இப்பிறவியில் பற்றிக்கொள்வதில் குற்றமில்லை'' என, அவன் மனத்தில் ஒரு கருத்து இருக்குமாயின், நெஞ்சே! நீ மட்டும அதை மறுத்தல் எவ்வாறு பொருந்தும்? அவன் காதலை ஏற்றுக் கொள்வதே நின் கடமையாம்'' எனத் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவாள் போல் கூறி, அவன் கூட்டத்திற்கு இசைந்தாள்:

ஏஎ! இஃது ஒத்தன் நாணிலன்; தன்னெடு
மேவேம் என்பாரையும் மேவினன் கைப்பற்றும்;
மேவினும் மேவாக்கடையும் அஃது எல்லாம்
நீ அறிதி; யான் அஃது அறிகல்லேன்; பூ அமன்ற
மெல்லிணர் செல்லாக் கொடி அன்னுய்! நின்னையான்,
புல் இனிதாகலின் புல்லினென்; எல்லா!

தமக்கு இனிது என்று வலிதில் பிறர்க்கு இன்ன
செய்வது நன்ருமோ மற்று?
சுடர்த்தொடீ! போற்ருய்; களை, நின் முதுக்குறைமை; போற்றிக் கேள்:
வேட்டார்க்கு இனிதாயினல்லது, நீர்க்கு இனிது என்று
உண்பவோ நீர் உண்பவர்?

செய்வது அறிகல்லேன்; யாது செய்வேன் கொலோ!
ஐவாய் அரவின் இடைப்பட்டு நைவாரா
மையில் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலும் அறன் எனக் கண்டன்று;
அறனும் அது கண்டற்றாயின், திறன் இன்றிக்
கூறும் சொல் கேளான் நலிதரும், பண்டுநாம்
வேறல்லம் என்பது ஒன்று உண்டால், அவனொடு
மாறுண்டோ நெஞ்சே! நமக்கு?

காம மிகுதியானே எதிர்ப்பட்டுத் தலைவனும் தலைவியும் உறழ்ந்து கூறித் தலைவி கூடக்கருதிய பெருந்திணை: விதி: தொ. பொருள். **51**

*2. மேவேம் - பொருந்தேம்; 3. மேவாக்கடை - பொருந்தாவிடத்து; 4. அமன்ற - நெருங்கிய: 6. புல்- அணைத்துக்கொள்ளுதல்; 9. போற்றாய் - அவ்வாராய்ச்சியில் ஆழ்ந்துவிடாதே; முதுக்குறைமை-பேரறிவு: 10. வேட்டார் - நீர்வேட்கை உடையார்; 13. நைவாரா - வருத்தம்கொண்டு; 15. அறனும் - அறவழிநிகழும் மணமே; கண்டன்று - அறநூல்கள் அறிந்துகூறும்.*

## 27

# கால்நிலங் கிளற நின்றாள்

அறிவும் ஆண்மையும் வாய்ந்த ஓர் இளைஞனும், அன்பும் அழகும் வாய்ந்த ஒரு பெண்ணும், ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்டனர். காதல் கொண்டனராயினும், தாம் விரும்பும்போதெல்லாம் கண்டு, கலந்து உரையாடி, மகிழ்ந்துவாழும் வாய்ப்பு அவர்க்கு வாய்த்திலது; அப்பெண் பெருஞ்செல்வர் மகளாதலினாலும், அவர் அவளைத் தம் கண்மணிபோல் காத்து வந்தனராதலானும், உயர்குணமும், உலகியல் உணர்வும் உடைய தோழியொருத்தி, அவளைப்பகலிலும் இரவிலும் பிரியாதிருந்தாள் ஆதலாலும் அவளை எளிதிற்காண்டல் அவனால் இயலவில்லை. ஆயினும், அவளைக்காணாது ஒருநாளைக்கழித்தலும் அவனுக்கு அரிதாயிற்று; அதனால், அவளைத் தான் விரும்பும் போதெல்லாம் கண்டு மகிழ்தற்காம் வழியாது எனச் சிந்திக்கத்தொடங்கினான். அவளைச் சிறிதுபோதும் பிரியாது, அவள் நிழல்போல் நின்றுகாக்கும் அத்தோழியின் துணை கிடைத்தால் அது இயலும் என அறிந்தான்.

ஒருநாள், அத்தோழி தனித்திருக்கக்கண்டு, அவள்பாற் சென்று வணங்கி நின்றான்; அவள் ஒரு பெண்; தான் ஓர் ஆண்தகை, தன்னை வணங்கத் தக்காளைத் தான் வணங்கி நிற்றல், தன் பெருநிலைக்கு இழுக்காம் என்பதையோ, பெண்ணொருத்தியைத் தான் வணங்கி நிற்பதைப் பிறர் காணின் பழிப்பரே என்பதையோ அவன் எண்ணிப்பார்த்தானல்லன்; அவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்கும் நிலையில், அவன் அப்போது இல்லை; அப்பெண்ணின்மீது அவன்கொண்ட அளவிறந்த காதல், அவன் அறிவுக்கண்களை அவித்து விட்டது; அதனால், தோழியைத் தேடிச்சென்று, அவள் இருக்கும் இடத்தைச்சூழ வருவன்; அவளையே நோக்கி நிற்பன்; அவள் பார்வை தன்மீது வீழ்வதை எதிர்நோக்கி இருப்பன் அவள் தன்னைப் பார்க்குந்தோறும், கைகூப்பி அவளை வணங்குவன்; அயலான் ஓர் ஆடவன், தன்னருகிருந்து வணங்கி நிற்பதைப் பிறர்காணின், தனக்குப் பழியாமே எனும் அச்சத்தால், அத்தோழி! "வணங்கி இவண் நில்லாதே; வந்த வழியைப் பார்த்துச்செல்" என வாயால் கூறாது, கையை ஆட்டி அறிவித்துப் போமாறு பணிப்பின், கருதி வந்ததைப் பெறாது வறிதே மீளும் தன்னைக், காதல்நோய் பற்றிப் பெரிதும் வருத்துமே என்பதை எண்ணிப், போகாது அவ்விடத்திலேயே நிற்பன்.

இளைஞனின் இந்நிலையினைக் கண்டாள் தோழி; அவனை அங்கு வாராமல் தடுத்துத் தன்னைக் காத்துக் கொள்வது இயலாது என்பதை உணர்ந்தாள். இளைஞன், அப்பெண்ணைக்கண்டு காதல் கொண்டதையும், அவளும் அவனைக்காதலிப்பதையும், அவர்கள் ஒருவரையொருவர் முதன் முதலாகக் கண்டு காதல் கொண்ட அன்றே, அத்தோழி அறிவாள். எனினும்,

அதை, அப்பெண், தானே தன்பால் அறிவிப்பள் என எதிர்நோக்கினாள்; ஆனால், அவள் அதை அறிவித்திலள்; பெற்ற தாயினும் பெரிதாகப் பேணிக்காக்கும் அவள் நாண், அவளை அது கூறுவாறு தடுத்து விட்டது; பெண்ணுள்ளத்தின் பண்புணர்ந்த தோழி, அதற்காக வருந்தினாளல்லள்; மாறாக, அவள் காதலை வாழ்விக்கும் வழிவகைகளை ஆராய்ந்துகொண்டிருந்தாள். இடையே, தன்பால்வந்து குறைகூறி நிற்கும் இளைஞனின் தகுதிப்பாட்டினையும் ஆய்ந்து அறிந்துகொண்டு வந்தாள்; இறுதியாக, அப்பெண், அவன்மீது பேரன்பு கொண்டுள்ளாள் என்பதையும், அவ்விளைஞன், அவளை மணந்து கொள்ளற்காம் மாண்புடையனே என்பதையும் அறிந்துகொண்டாள்; அதுகாறும் வாய்திறவாதிருந்தவள், அவற்றைத் தெளிவாக அறிந்துகொண்ட அன்று, அவனை அழைத்து, "நின்குறை யாது? என வினவி, நின்னைத்தோழியாய்ப்பெற்ற பேறுடையளாய அப்பெண்ணைக்கண்டு காதல் கொண்டேன்; அக்காதல் பயன் அளிக்க நின் துணைவேண்டி வந்துளேன்" என அவன் கூறியதை ஏற்றுக்கொண்டு, அவர்கள் காதல் நிறைவேறத் துணை புரிவதாக வாக்களித்து அனுப்பினாள்.

அவனை அனுப்பிய பின்னர், அவள் அப்பெண்ணின்பாற் சென்றாள்; சென்று, தன்னை விடாது தொடர்ந்துவரும் அவ்விளைஞன், தன்முகம் நோக்கித் தொழுது நிற்பதை விடுத்து, எவ்வளவு கூறினும், அவ்விடத்தின் நீங்கிப்போக மறுக்கும் மனவுறுதி உடையன் ஆதலை அறிவித்து, "பெண்ணே! இனி, அவனிடத்தினின்றும் தப்பிப்பிழைத்தல் நம்மால் இயலாது; இதற்கு நாம் செய்யக்கூடியது யாது என்பதை நீயே ஆராய்ந்து கூறு" என அவளைக் கேட்டாள்; அவள் அதற்கு யாதும் விடையளியாதே வாய்மூடி வாளா இருந்தாள்.

வாய் திறவாது நிற்கும் அவள்நிலே, தன் வேண்டுகோளே ஏற்றுக்கொண்டாள் என்பதை உறுதி செய்வதாகக் கொண்டாள் தோழி; அதனுல், அவளே நோக்கி "தோழி! உன்னைப் பெறமாட்டாமையால் உள்ளத்துயர் மிக்கு உழலும் அவ்விளைஞனை அடைந்து, அவனுக்கு இன்பம் தந்து, நீயும் இன்பம் அடைதலே யானும் விரும்புகின்றேன்; அவனை அடையும் ஆசையால் அவன்பால் நீயே வலிதின் வந்ததாக அவன் கருதா வண்ணம், உன்னைப் பலகால் வருந்தி அழைத்துச் சென்று அவன்பால் நானே கொண்டுவிட்டதாக அவன் கருதுமாறு ஆவன செய்துவிடுவ்ன்; ஆகவே, அவன் பால் செல்வதை நீ நாணற்க; கரும்பு முதலாம் ஓவியங் களைத்தோளில் வரைதற்கு வேண்டும் தொய்யிற்குழம்பு கொணரச்செல்வாளைப்போல் நான் சென்று விடுகிறேன்; நீ, "என்னைத் தனியே இருந்து தவிக்க விடுத்து, இங்கே வந்து தங்கிவிட்டனையோ? தோழி!" எனக் கூறிக்கொண்டே, என்னைத் தேடிவருவாள்போல், அவன் நிற்கும் அக்குறியிடத்திற்குச் சென்று சேர்வாயாக; ஆங்கு நின்னைக்கண்ட அவ்வளவே, தன் காதல்நோய் தீர்க்கும் கைகண்ட மருந்து நீயே ஆதல் அறிந்து, அவன் நின்காலில் வீழ்ந்து, தன்னை ஏற்றுக்கொள்ளு மாறு வேண்டிப்பணிவன்" என்று கூறினுள்.

தோழி அவ்வாறு கூறி முடிக்குங்காறும், அவளுக்கு மறுமொழி எதுவும் தராது, கால் விரல்கள் மண்ணைக் கிளறக் கேட்டு நின்றுகொண்டிருந்தாள் அப்பெண்; தோழி தன் காதலே உணர்ந்துகொண்டாள்; இனி, அதற்கு அவள் துணையும் கிடைக்கும் என்ற எண்ணத் தால், அவள் உள்ளம் மகிழ்ந்தது; ஆயினும் அவள் ஒரு பெண்; அதிலும், அச்சம், மடம், நாணம் முதலாம் பெண்மைக்குணங்களைக் குறைவறப்பெற்ற உயர்குலப்

பெண்; காதல் இன்பத்தில் பெருவேட்கை எழினும், உள்ளம் அதில் விரைந்து ஆழ்ந்து விடுவதில்லை, அயலான் ஒருவனை அடைந்து, பலர் அறிய வாழ்தலை; பெண்கள் பேணிக்காக்கும் நாண், விரும்புவதில்லை; எளிதில் ஏற்றுக்கொள்வதில்லை; நாணல் நிறைந்த அந்நல்லாள் உள்ளத்திலும், அவ்வெறுப்புணர்வு ஓரளவு இடம்பெற்றிருந்தமையால், தோழியின் வேண்டுகோளை விரைந்தேற்றுகொள்ளத் தயங்கினாள். அதனால், தோழியை அழைத்து, "தோழி! மறுவலும், அவ்விளைஞன்பால் சென்று, அவள் நின்காதலை ஏற்றுக்கொள் வதைத் தன் கடமையாகக்கொண்டுவிட்டாள்' என்று கூறுதே; அவ்வாறு கூறவில்லை என்பதற்கு ஆணையாக, என்மெய்யைத் தொட்டுச்சூளுரைத்துச்சொல்" என்றாள்.

அப்பெண்ணின் செயலும் சொல்லும் காணத் தோழிக்கு உள்ளூர மகிழ்ச்சி கலந்த நகை; "நான் இவள்பால் இவ்வளவும் கூறுங்கால், அதற்கு வாய்திறந்து ஏதும் தடை கூறவில்லை; கால்விரல்கள் மண்ணைக் கிளறக் கேட்டுக்கொண்டிருந்தாள்; அவ்வமைதி, அவள் இசைவினையன்றோ புலப்படுத்தியது? அற்றாகவும், இப்போது, இவ்வாறு பொய்ச்சினம்காட்டிக் கூறுவதைக் கேட்டு யானோ ஏமாறுபவள்?" என எண்ணியவளாய் அப்பெண்ணை நோக்கி, "தோழி! நான் அவ்வாறு கூறியது குற்றமோ? நான் ஏன் அவ்வாறு கூறினேன் என்பதற்காம் காரணத்தைக் கூறுகிறேன் கேள்; அவ்விளைஞனைப்பற்றி, நான் நின்னோடு பேசிக்கொண்டிருக்குங்கால், நீ யாது செய்துகொண்டிருந்தனை; என் அண்மையில் நீ அமைதியாக நின்று கொண்டிருக்க, நின்கால்கள் நிலத்தைக் கிளறிக் கொண்டன்றோ இருந்தன, அந்நிலை, நீ என் கருத்தினை ஏற்றுக்கொண்டனை என்பதையன்றோ உணர்த்திற்று; இதை நீ மறுத்தல் ஒண்

*ணுமோ? உன் உள்ளம் அவன் தரும் இன்ப உணர்வில் ஆழ்ந்து கிடக்க, அதை ஏற்றுக்கொள்ளாதாள்போல் நடந்து கொள்ளுதல் நினக்கு என்பால் எளிது; நின் உள்ளக் கருத்துணர்ந்த நான் அதைப் புரிந்துகொள் வேன்; ஆனால், அவனை அடைந்தவிடத்தும், என்பால் நடந்துகொண்டதுபோல், வெறுத்த உள்ளத்தளாய் நின்றுவிடாதே; அவனோடு ஒன்று கலந்துவிடு'' என்று கூறி அவளை அவன்பாற் கொண்டுசென்று விடுத்தாள்.*

நோக்குங்கால் நோக்கித் தொழூஉம்; பிறர் காண்பார்
தூக்கிலி; தூற்றும்பழிஎனக் கைகவித்துப்,
போக்குங்கால் போக்கும் நினைந்து இருக்கும்; மற்றுநாம்
காக்கும் இடம் அன்று இனி;
எல்லா! எவன் செய்வாம்?

பூக்குழாய்! செல்லல் அவனுழைக் கூஉய்க் கூஉய்
விரும்பி, யான் விட்டேனும் போல்வல்; என்தோள்மேல்
கரும்பு எழுது தொய்யிற்குச் செல்வல்; 'ஈங்காக
இருந்தாயோ? என்று ஆங்கு இற;
அவன் நின்திருந்தடிமேல் வீழ்ந்துஇரக்கும், நோய்தீர்க்கும்
மருந்துநீ ஆகுதலான்!

இன்னும், கடம்பூண்டு ஒருகால், நீவந்தை, உடம்பட்டாள்
என்னாமை என்மெய்தொடு;
இஃதோ, அடங்கக் கேள்.
நின்னொடு சூழுங்கால், நீயும் நிலங்கிளையா
என்னொடு நிற்றல் எளிதன்றோ? மற்றுஅவன்
தன்னொடு நின்றுவிடு.''

**தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி, அவன் நிலைமை தலைமகட்குக்கூறி, அவளைக் குறைநயப்பித்தது இது.**

*2. தூக்கிலி - ஆராய்ந்து பாராதவன்; கைகவித்து - கையைஆட்டி; 3. போக்கும்நினைந்து - வறிதேமீள்வ*

தால் வருத்தும் காதல் நோயை நினைத்து; *6.* செல்லல் - வருத்தம்; செல்லல் அவன் - வருந்தும்அவன்; கூஉய்க் கூஉய் - பலகால் கூப்பிட்டு; *9.* ஆங்கு - அவள்நிற்கும் இடம்; இற - சென்று சேர்வாயாக; *12.* கடம்பூண்டு - கடமையாக மேற்கொண்டு; வந்தை - வாராய்; வந்து இதைக்கேள் எனும் பொருள் தருவது; *13.* என்னுமை - என்று சொல்லாமைக்கு; மெய்தொடு - மெய்தொட்டுச் சூள் உரை: நீவந்தை; இன்னமும், ஒருகால், உடம் பட்டாள் என்னுமை என்மெய்தொடு என மாற்றிப் பொருள்கொள்க. *14.* இஃதோ - நான்செய்த குற்றம் இதுவோ? அடங்கக் கேள் - சுருங்கச் சொல்லுகிறேன் கேள்; *15.* நிலங்கிளைத்தல்-உள்ள ஒப்புதல் உணர்த்தும் குறி; *16.* என்னொடு நிற்றல் - என்னோடு மாறுபட்டாள் போல் நிற்றல். *17.* தன்னொடு நின்றுவிடு - தலைவனோடு மாறுபடாது, கலந்து விடு.

# 28

# முத்தேர் முறுவலாய் !

ஓர் இளைஞன், ஒரு பெண்ணைக் கண்டு காதல்கொண்டான்; நாநயம் நன்குவாய்க்கப் பெற்றவன் அவ்விளைஞன்; தன்னோடு சினந்து மாறுபட்டிருப்பாரையும், தன் நகைமொழியால், தன்வயமாக்கவல்லவன், சொல்லாடல் வன்மையில்; அவளும் அவனைப் போன்றே தேர்ந்து விளங்கினாள்; பிறப்பு, குலம் முதலாம் ஏனைய சிறப்புக்களைப் போன்றே, இவ்வகையாலும், ஒத்த இயல்பு வாய்ந்த அவ்விருவரும் ஒருவரையொருவர் காதலித்தனர். அவள் விரும்பும் மலரும், மரத்தழையால் ஆய ஆடையும் அளித்தும், அவள் தோளிலும் மார்பிலும் சந்தனக்குழம்பால், கரும்புபோலும் ஓவியங்கள் வரைந்தும் அவளை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்தான்; அம்மகிழ்ச்சியால், அவள், பண்டினும் பேரழகு பெற்றுத் தோன்றினாள்; அவ்வழகைக் கண்டு அகமகிழ்ந்திருந்த அவன், சிலநாட்களாக, யாது காரணத்தாலோ ஆங்கு வந்திலன்; அதனால் அவள் வருந்தினாள்; அவ்வருத்தம் அவள் அழகைக் கெடுத்தது; மாசற்ற கண்ணாடியில்

கண்டாற்போலும் பேரழகு தோன்ற நின்ற நிலை கெட்டது: அக்கண்ணுடிமீது, வாயால் ஊதிய ஆவி படர்ந்த வழித்தோன்றும் உருவம்போல், பசலை படர்ந்து, பண்டை வனப்பிழந்து போக, வருந்தி யிருந்தாள்.

சின்னாட்கள் கழித்து அவன் வந்தான்; தன்னை மறந்து சென்று, காண இயலாவாறு மறைந்து வாழ்ந்த அவன்மீது. அவளுக்குக் கடுஞ்சினம்; அதனால், அவனை மலர்ந்த முகங்காட்டி மகிழ்ந்து வரவேற்காது, வெறுத்த உள்ளத்தளாய், அவன் முகத்தைக் காணவும் விரும்பாது, தன் பின்புறம் காட்டி நின்றாள்; அச்செயல் கண்டு அவன் வருந்தினானல்லன்; இதுகாறும் காணாதிருந்த அவள் கூந்தல் அழகை, அன்று கண்டு மகிழ்ந்தான்; மறுவற்று விளங்கும் முழுமதிபோல், பேரழகு செய்யும் அவள் முகம் தோன்றாவாறு, அம்மதியை மறைக்கும் கருமேகம்போல் மறைத்துத் தோன்றும் அவள் மயிர், கரியபாம்பின்கண்கிடந்து, அதன் கரியநிறம் பின்னணியாகப், பேரொளி வீசும் கார்த்திகை எனும் விண்மீன் கூட்டங்கள்போல், நுண்ணிய நூலாற் கட்டப்பெற்று, பின்னலைச் சுற்றிக் கிடந்து அணிசெய்யும் பன்னிற மலர்கள் ஆகிய இவற்றால் கண்டார் மனத்தைக் கொள்ளை கொள்ளும் அவள் கூந்தல் அழகைக் கண்டு மகிழ்ந்தான்; அவ்வழகால் மகிழ்ந்த அவன், தன் சொல்லால் அவளை மகிழ்விக்க எண்ணினான்; எண்ணியவன் அவளை அணுகி, "பெண்ணே, நீ பண்டிருந்தது போலாது, இப்போது பேரழகு பெற்று விளங்குகின்றனை; இப்பேரழகு, உன்னைக் காதலித்து, நான் காட்டிய அன்பின் விளைவேயன்றோ? என் அன்பால் அழகு பெற்று விளங்கும் நீ, அவ் அன்பிற்கு ஈடாக எனக்குப் பெரும் பொருள் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளனை, யன்றோ? எனக் கேட்க விரும்பினான்; விரும்பியவன், 'பண்டு, என்னால் அழகு பெற்றனை' என்ற பொருளும்,

'எனக்குப் பொன்தரக் கடமைப்பட்டுள்ளனே' என்ற பொருளும் ஒருங்கே தோன்றுமாறு, "பண்டு பெரும் பொன் படுகுவை" என்ருன்.

அதுகேட்ட அப்பெண், தன் நெஞ்சைப் பார்த்துக் கூறுவாள்போல், "நெஞ்சே! இவனுல், நான் அழகு பெற்றேன் எனவும், அதனுல், இவனுக்குப் பொன்தரக் கடமைப்பட்டுளேன் எனவும், இவன் கூறுவதைக் கேளேன்!" என்று கூறியவள், அவனைப் பார்த்து. "ஏடா! கனவில் காண்பதுபோல், ஒரோவொருகால் வந்து, என் தோளில் தொய்யில் எழுதிச் சென்றதால், நான் ஓரளவு அழகு பெற்றேன் என்பது உண்மை; ஆனுல், நான் பெற்றுள்ள. இப்பேரழகிற்கெல்லாம் நீயே காரணமாகாய்: மேலும். அவ்வாறு, ஒரோவொருகால் வந்து, மகிழ்ச்சி அளித்தமையால், நானும் சிறிதுமகிழ்ந்த தல்லது, நின்மார்பை விடாது புல்லி, அதனுல் பேரழகு பெற்றேனல்லன்; உன் அன்பிற்கு அடிமைப்பட்டு, ஒரோவொருகால் பணியாற்றிச் சிறிதே பயன்பெற்ற தல்லது, நின்கீழ், தொடர்ந்து பலநாள் பணியாற்றிப் பெரும்பயன் பெற்றேனல்லன்; உண்மை அதுவாகவும், உனக்குப் பெருங்கடன்பட்டுள்ளேன் எனக் கூறல் எவ்வாறு பொருந்தும்?" எனக் கூறினுள்; இதை விளங்கிய சொற்களால் கூருது, "நின்மார்பைவிடாது புணர்ந்தேன்கொல்? நின்கீழ்விடாது பணியாற்றினேன் கொல்? எனும், இருபொருளும் தரும் 'உழுவது உடையமோ யாம்?" எனும் குறிப்புத் தொடரால் கூறினுள்.

அவள் அவ்வாறு வினவக் கேட்ட அவன், "நான், இடையே சின்னுட்கள் வந்து காணுமையால், வருந்துகிருள் இவள்; இடைவிடாது வந்து மகிழ்ச்சி யூட்டவேண்டும் என விரும்புகிருள்" என்பதறிந்தான். அதனுல், அவளைத் தான் மறந்திலன் என்பதையும்.

இனியும் மறவான் என்பதையும் உணர்த்த விரும்பினான்; விரும்பியவன், "பெண்ணே! நான் என்றும் மறவாது, இவண் வந்து சென்றமையால், என்னை இடைவிடாது பெற்று மகிழ்ந்தாய்; அதனாலன்றோ, நான் நின் தோளில் சந்தனக் குழம்பால், கரும்பு போலும் தொய்யில் வரைந்து மகிழ்ந்தேன், கருங்குவளைபோல் கருத்துத் தோன்றியநின் கண்கள், செந்நிறமும் சிறந்த அழகும் பெற்றுத் தாமரை மலர்போல் தோன்றி அழகு செய்வதும் அவ்விடை விடாப் புணர்ச்சியாலன்றோ? இவ்வாறு நான் இடைவிடாது வந்து, மகிழ்ச்சியூட்டி யுள்ளதை நின்தோளின் தொய்யிலும், தாமரைபோலும் தனியழகு பெற்று விளங்கும் நின் கருங்குவளைக் கண்களும் உறுதிசெய்வன வாகவும், "நீ வந்திலை; நின்னால் பெரும்பயன் கொண்டிலேன்" என்று கூறல் எவ்வாறு பொருந்தும்? என்னால், நீ பெரும்பயன் கொண்டுள்ளனை; ஆகவே, நீ எனக்குப் பொன் தரவும் கடன்பட்டுள்ளனை; நிற்க, 'நீ அளித்த மகிழ்ச்சி போதாது; நினக்குப் பெரும்பொன் அளிக்க, நின்பால் நான் பெற்ற இன்பம் போதாது; அதற்கு நீ மேலும் மகிழ்ச்சியளித்தல் வேண்டும்; நான் நின்னிடத்தில் பேரின்பப் பெரும்பயன் கொள்ளுதல் வேண்டும்' என்பது நின் கருத்தாயின், அவ்விருப்பத்திற்கு நான் தடை கூறேன்; இனி, உன்னைப் பிரியேன்; வரைந்து கொள்ளத் துணிந்துவிட்டேன்; ஆதலின், இனி, நீ, என்னை இடைவிடாது பெற்று மகிழலாம்; என் கீழ்த் தொடர்ந்து பணியாற்றிப் பெரும்பயன் கொள்ளலாம்" என்றெல்லாம் கூறக் கருதினான். கருதியவன், அப் பொருள் தருமாறு "கரும்பெல்லாம் நின் உழவன்றோ? குவளையும்நின் உழவன்றோ? என்னை மேலும் பலகால் உழுவாய்" என்ற தொடர்களை வழங்கினான்.

அவ்வாறு அவன் கூறிய அத்தொடர்கள், உழு தொழில் மேற்கொண்ட உனக்குக் கரும்பையும், குவளை

யையும் விளக்கத்தான் தெரியுமே யல்லது, பயன் அளிக்கும் வேறு எப்பொருளை விளக்கத் தெரியும்?'' என, எள்ளி நகையாடிக் கூறிய ஒருபொருளையும் உணர்த்துவது உணர்ந்து மகிழ்க.

அவன் கூறியன கேட்டாள் அப்பெண்; அவன் ஒரோவொருகால் வந்து, தோளில் தொய்யில் வரைந்து சென்றது உண்மை; அத்தொய்யில் பெற்றதால், அத்தோள்கள் ஓரளவு அழகு பெற்றுக் காண்பதும் உண்மை. ஆனல், அவன் கூறுமாறு நீலமலரை நிகர்த்த கண்கள் தாமரைபோல் சிவந்து தோன்றுவதும், ஏனைய உடலுறுப்புக்கள் பொன்னிறம் பெற்றுத் தோன்றுவதும், அவன் வந்து அன்பு காட்டியதன் பயன் அன்று; அத்தோற்றம் அழகுமாகாது. அவன் வாராமையால், உறக்கம் ஒழிந்து வருந்தினமையால் கண்கள் சிவந்தன; வருந்தியதால் வாடிய உறுப்புக்கள், பசலை படர்ந்து பொன்னிறம் பெற்றன. உண்மை இதுவாகவும், இவையெல்லாம் தன் பேரன்பின் பயனே என்றும், அதற்காக, நான் இவனுக்குப் பொன் அளிக்கக் கடன்பட்டுள்ளேன் என்றும் கூறுகின்றனனே, என்னே இவன் பேதைமை!'' எனத் தனக்குள்ளே எள்ளினவள், ''நின்னல், நான் பெரும் பயன் பெற்றிலேன்; மாறுக, என் அழகை அழிக்கும் பொன்னிறப் பசலையினையே என் உடல் உறுப்புக்கள் பெற்றன'' என, அதை அவன் அறிய, விளங்க உரைப்பதும் செய்தாள்.

அது கேட்ட அவன், அவள் தன்னை இமைப்பொழுதும் பிரியாதிருக்கப் பெற்று, பசலையொழித்து, மகிழ்ந்து வாழ விரும்புகிருள் என்பதை உணர்ந்தான். அதனல், அவளை நோக்கி, ''பெண்ணே! உனக்கு நான் தந்த அப்பசலையாம் பொன் அனைத்தையும், நானே பெற்றுக் கொள்கின்றேன்; இனி, உன்னை மணந்து

கொண்டு, சிறிதும் பிரியாது வாழ்வேன், வருந்தற்க'' எனக் கூற விரும்பினான். ஆனால், அதையும், அவன் விளங்க உரைத்தானல்லன்; கவர்த்த நடையால் கூறக் கருதி "பெண்ணே! ஒருவன், ஓர் அரசனைச் சார்ந்து, அவன் ஊதியம் பெற்று வாழ்ந்து; அவ்வாழ்வால் சிறந்து விளங்கிய வழி, அவ்வரசன், அவனைப் பயன் கொண்டு பெரும்பொருள் ஈட்டிக்கொள்வன்'' எனும் பொருள்தரும் தொடர் ஒன்றைக் கூறி, "அதைப்போல், என்னை அடைந்து, என்னால் இன்பம் பெற்றுப் பேரழகு தோன்ற நிற்கும் நின்னைப் பயன்கொண்டு, நின்னால் பேரின்பம் நுகரத் துணிந்துவிட்டேன்'' எனும் தன் கருத்தை, அவள் உய்த்துணர வைத்தான். அவன் கூறியதைக்கேட்ட அப்பெண், அத்தொடர்; "தனக்குரிய பொருளை நுகர்ந்து போனவன் ஒருவனைப், பின்னொரு காற் கண்ட அரசன், அவனைப்பற்றி வருத்தி, அவனிட மிருந்த பெரும்பொருள்களைக் கொண்டாற்போல், யானும் என் நலன்உண்டு மகிழ்ந்த நின்னை வருத்தி, நின்பால் உள்ள நலத்தையெல்லாம் நுகர்ந்துவிடுவேன்'' எனும் பொருள் தர, தன்னை நோக்கிக் கூறியதாகக் கொண்டு, அதை மறுக்காது, "அங்ஙனமே ஆகுக'' எனக் கூறி அடங்கினாள்.

"அங்ஙனமே ஆகுக'' என்ற அவள் கூற்றில் அடங்கியிருக்கும் வெறுப்புணர்ச்சியை உணர்ந்த அவன், அவளை நோக்கி, "பெண்ணே! முத்துப்போலும் நின் பற்கள், முறுவல் தோற்றி, எனக்கு மகிழ்ச்சியூட்டு வதற்கு மாறாக, சினத்தால் மூடிக்கிடக்கும் வாயினுள் கிடந்து, பயனற்றுப் போகின்றனவே!'' என எண்ணி வருந்தும் தன் வருத்தம் தோன்ற, அவளை "முத்தேர் முறுவலாய்!'' என விளித்து, "நின் உடலிற் படர்ந்து பாழ் செய்யும் அப்பொன்னிறப் பசலை கெடவேண்டுவது

நின் கருத்தாயின், வேங்கைமலர் போலும் தேமல்கள் படர்ந்து பேரழகு காட்டும் நின் மேனி, என் மேனியை ஒரு முறை தழுவினும் நின்னை அறவே விட்டு ஓடும் ஆதலின், ஒருமுறை தழுவிச் செல்வாயாக" என்று வேண்டிக் கொண்டான். அவன் கூறிய அக்கூற்று, "உன் உள்ளத்தில் உண்மை அன்பில்லையாகவும், பொய்யாகவாவது, ஒருமுறை, நீ என்னைத் தழுவிக்கொள்வையாயின், நீ தரக்கடவை பொன்னெல்லாம் பெற்றனவாகக் கொண்டு கழித்துவிடுவன்" எனும் நகைப் பொருளும் தருவது அறிந்து அகம் மகிழ்ந்து, அவன் கூட்டத்திற்கு இசைந்தாள் அப்பெண்.

"அணிமுகம் மதிஏய்ப்ப ; அம்மதியை நனிஏய்க்கும்
மணிமுக மாமழை நின்பின்ஒப்பப், பின்னின்கண்
விரிநுண்ணூல் சுற்றிய ஈரிதழ் அலரி,
அரவுக்கண், அணிஉறழ் ஆரல்மீன் தகையொப்ப,
அரும்படர் கண்டாரைச்செய்து, ஆங்கு இயலும்
விரிந்துஒலி கூந்தால் ! கண்டை எமக்கும்
பெரும்பொன் படுகுவை பண்டு ;

ஏஎ ! எல்லா ! மொழிவது கண்டை ; இஃதுஒத்தன் தொய்யில்
எழுதிஇறுத்த பெரும்பொன் படுகம் ;
உழுவது உடையமோ யாம் ?

உழுதாய்,
சுரும்புஇமிர் பூங்கோதை அந்நல்லாய் ! யான்நின்
திருந்திழை மென்தோள் இழைத்த மற்றுஇஃதோ
கரும்புஎல்லாம் நின்உழவு அன்றோ ? ஒருங்கே,
துகள்அறு வாள்முகம்ஒப்ப மலர்ந்த
குவளையும் நின்உழவு அன்றோ ? இகலி
முகைமாறு கொள்ளும் எயிற்றாய் ! இவைஅல்ல
என்உழுவாய் நீ மற்று இனி!

எல்லா ! நற்றோள் இழைத்த கரும்புக்கு நீகூறு,
முற்றெழில் நீலமலர் எனஉற்ற

இரும்புஈர் வடியன்ன உண்கட்கும் எல்லாம்
பெரும்பொன் உண்டு என்பாய் இனி;

நல்லாய் ! இகுளை ! கேள் :
ஈங்கே தலைப்படுவன், உண்டான் தலைப்பெயின்
வேந்து கொண்டன்ன பல ;

ஆங்காக ;
அத்திறம் அல்லாக்கால், வேங்கைவீ
முற்றெழில்கொண்ட சுணங்கு அணி பூணுகம்
பொய்த்து ஒருகால் எம்மை முயங்கினை சென்றீமோ,
முத்தேர் முறுவலாய் ! நீபடும் பொன்னெல்லாம்
முத்தி எறிந்து விடற்கு,''

காண்டற்கு அரியனாய்ப் பிரிந்து மறந்து வாழ்ந்த தலைவன் வந்து, தலைவியோடு நகையாடிக் கூறிக் கூட்டத்திற்கு உடம்படுவித்தது.

*1. ஏய்ப்ப - ஒப்ப ; கனி - மிகவும் : 2. பின் - மயிர் ; பின் - பின்னல் ; 3. ஈர் இதழ் - தேனால் ஈரம்பட்ட இதழ் ; 4. ஆரல்மீன் - கார்த்திகை என்னும் விண்மீன் ; 5. படர்-துன்பம் ; கண்டாரை அரும்படர் செய்து என மாற்றுக. 6. கண்டை - காண் ; 7. பொன்படுகுவை - பேரழகு பெற்றுள்ளாய் ; பொன்கடன்பட்டுள்ளனை; 8. தொய்யில்-சந்தனக் குழம்பால், மகளிர் தோளில், கரும்புபோலும் ஓவியங்கள் வரைதல் ; 9. இறுத்த - வந்துதங்கின ; 10. உழுவது - தலைவன் மார்பைத் தழுவுதல் ; உழு தொழிலும் ஒன்றும் ; 12. சுரும்பு - வண்டு ; இமிர் - ஒலிக்கும் ; 13. இழைத்த - வரைந்த ; 14. நின்உழவு அன்றே - நின்மார்பைத் தழுவியதன் பயன்அன்றே ; 15. துகள் - குற்றம் ; 16. இகலி - மாறுபட்டு ; 18. என் உழுவாய் - வேறுளதை உழத்தெரியும் ; என்னை உழு வாய் அதாவது என் மார்பைத் தழுவுவாய்; 21. இரும்பு ஈர்வடியன்னகண் - இரும்பு ஈர்ந்த வடுப்போலும்கண் ;*

22. பொன் உண்டு என்பாய்? கண்ணும்மேனியும் பொன் னிறம் பெறல் அழகாகாது; பசலையாதலின் அவ்வாறு கேட்டாள்; 24, 25. இது ஒரு பழமொழி; பொருள் விளக்கவுரையினைக் காண்க. 31. முத்தி - உதிர்ந்து: முத்தி எறிந்துவிடற்கு; பசலை ஒழிய - நீபட்ட பொன் கடன் ஒழிய.

## 29

# ஏதில் குறுநரி

ஓர் இளைஞன் ஒரு பெண்ணைக் கண்டு காதல்கொண்டான்; அவளும் அவனைக் காதலித்தாள்; இருவரும் ஈருடலும் ஓருயிருமாய் உயர்ந்த அன்புடையராயினர்; ஆனால், அவர் கொண்ட காதலை அவர் பெற்றோர் அறியார்; அதனால், ஊரார் அறியாவாறு, ஒருவரையொருவர் கண்டு மகிழ்ந்து வந்தனர். அப்பெண் பெருஞ்செல்வர் மகளாதலாலும், அவர் மகப்பேறின்றிப் பல நாள் வருந்திய பின்னர் வந்து பிறந்தவள் ஆதலாலும், அவளை, அவள் பெற்றோர் வீட்டைவிட்டு வெளிச்செல்லாவாறு வளர்த்து வந்தனர். அதனால், பகலிற்சென்று அவளைக் காணமாட்டாமையால், அவ்விளைஞன், எவரும் அறியாவாறு இரவிற்சென்று காணத் தொடங்கினான். அதற்கு அப்பெண்ணின் தோழி பெருந்துணை புரிந்தாள்; ஆயினும், அவ்வாறு இரவில்வந்து அவளைக் கண்டு மகிழ்தலும், அவ்வளவு எளிதில் நிகழ்ந்து விடவில்லை; ஊரில் அரசன் காவலும், வீட்டில் அன்னை காவலும் அத்துணைக் கடுமை உடையவாம்; அதனால்,

அவர் அயரும் காலம் பார்த்தே அவன் வரவேண்டியிருந்தது; மேலும், அவர் அறியாவாறு வந்துசேர்ந்தவிடத்தும், வேறு பல இடையூறுகளால் அவனைக்காண இயலாதே மீளவும் நேர்ந்தது. இதனால், அப்பெண் அவனைக் காணமாட்டாதே பல நாட்களைக் கழிக்க வேண்டியதாயிற்று; அவனைக் காணுமையால், அவள் துயர்உற்றாள்; அத்துயர்க் கொடுமையால் அவள் உடல் நலமும் கெட்டது.

அவள் உடல் நலக்கேட்டினைத் தோழி கண்டாள்; அக்கேடு கண்டு, ஊரார் அலர்தூற்றத் தொடங்கி விடுவரோ என அஞ்சினாள்; அதனால் இவ்வாறு, அவன் இரவிலும் பகலிலும், பிறர் அறியாவாறு வந்து செல்வதை வெறுத்தாள; அவர் இருவரும் மணந்து மனம் நிறை வாழ்வு பெற்று வாழ வேண்டும் என விரும்பினாள்; அதுவே, அப்பெண்ணின் துயர்தீர்க்கும் மருந்துமாம் என உணர்ந்தாள்; அதனால், அவன் வந்தால், அவன்பால், இரவில்வந்து மறைந்து வாழ்வதை விடுத்துப், பலர் அறிய மணந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுதல் வேண்டும் என உட்கொண்டாள்; அவள் சொல்லும்வகை அறிந்த நல்லவள்; அதனால், 'நாம் கொண்ட இக்கருத்தை, அவன்பால் அவ்வாறே வெளிப்படக் கூறல் பண்புடைமையாகாது; நாம் கருதுவது இதுவே என்பதை, அவன் தானாகவே அறிந்துகொள்ளுதல் வேண்டும்; அப்பயனளிக்கவல்ல சொற்களை, அப்பயன் அளிக்கும் வகையில் கூறுதல் வேண்டும்; இந்த நல்ல பயனைப்பெற, பொய்கூற வேண்டினும் கேடில்லை' என எண்ணினாள்.

இவ்வாறு அவள் எண்ணியிருக்க, ஒருநாள், அவ்விளைஞன், அப்பெண்ணின் வீடு நோக்கி வந்து, அவளை எதிர்நோக்கி, ஓரிடத்தே ஒளிந்திருந்தான்; அதைக்

கண்டு கொண்டாள் தோழி. அவள் தன்னைக் கண்டு கொண்டதை அவன் அறிந்திலன்; அறியாதே அவன் ஆங்கிருக்க, தோழி, அவன் கேட்குமாறு அப்பெண்ணிடம் பொய்க் கதையொன்றைத் தானே படைத்துக் கூறத் தொடங்கினாள்.

"காதலனைக் காணாக் கலக்கத்தால் நின்உடல் நலம் குன்ற, அதனால், முன்னர் அணிந்திருந்த அணிகள் நின் உடல் உறுப்புக்களில் பொருந்தாவாகவே, அவற்றை அழித்து, தளர்ந்த நின் உறுப்புக்களிற் பொருந்துமாறு சிறியவாகத் திருத்திச் செய்த அணிகளை உடையவளே! நேற்று இரவு நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை, இவ்வூரார் அறியின், ஒருநாளெல்லாம் ஓயாது நகைப்பர்; அவ்வாறு பெருநகைக் கிடமாகும். அந்நிகழ்ச்சி யாது என்பதைக் கூறுகிறேன் கேள்: 'மயிர்கள் உதிர்ந்து வழுக்கை கண்ட தலையும், அத் தலைமீது போர்த்த போர்வையும், கருங்குட்டத்தாலே குறைந்து போன காலும் கையும் உடையனாய்த், தன் பிறப்பொழுக்கம்கெட்டு, நம் சேரியை விட்டு நீங்காது வாழும் முதிய பார்ப்பனமுடவன் ஒருவன் உளன்; இரவிற் செல்லும் நினக்கு, அவனால் யாதேனும் இடையூறு உண்டாதலும் கூடும்; ஆகவே, தோழி! அவனளவில் நீ சிறிது விழிப்பாய் இருத்தல் வேண்டும்' என, நீ பலகால் கூறியுள்ளனை; நீ அஞ்சிய வாறே நெருநல் நடந்துவிட்டது!

"நேற்று இரவு, ஊரெல்லாம் உறங்கிவிட்ட பின்னர், அழகிய துகிலால் ஆன போர்வையைப் போர்த்திக் கொண்டு, நம்முடைய அன்பன் கூறிய இடத்தே சென்று, அவன் வருகையை எதிர்நோக்கியிருந்தேன்; ஆங்கு, அந்நேரத்தில் எவ்வாறோ வந்து சேர்ந்தான் அப்பார்ப்பான்; வந்தவன், என்னைக்குனிந்து பார்த்து விட்டு, 'பெண்கள் வெளிவருதற்கு ஏற்றதல்லாத இக்

காலத்தில், இவ்விடத்தில் வந்து தனித்து நிற்கும் ஏ! பெண்ணே! நீ யார்?' என்று கேட்டுக்கொண்டே என் அண்மையில் வந்து, 'என்னிடம் நீ அகப்பட்டுக் கொண்டாய்! இனி நீ பிழைத்துப்போதல் இயலாது! என்று கூறியவன், திடுமென என்னைப் பணிந்து, வைக் கோற்போரைக்கண்ட கிழப்பசு, பற்கள் தேய்ந்துபோன மையால், அதைத் தின்னமாட்டாதாயினும், அப்போரை விட்டகல மனமிலாது அதன் அருகிலேயே கிடத்தல் போல், என்னைவிட்டு நகராதே நின்று, 'தையால்! தம்பலம் தின்றியோ?' எனக் கேட்டுக்கொண்டே, தன் பாக்குப்பையைத் திறந்து, இதோ வெற்றிலைப் பாக்கு; வேண்டுவ எடுத்துக்கொள்' எனக்கூறி என் பால் நீட்டினன்; அவன் இவ்வளவுங் கூறவும், யான் வாய்திறந்தேனல்லன்; வாய்திறவாது நின்றமையால், அவன் என்னைப் பேய் என்று கருதிவிட்டான்; அதனால், அச்சங்கொண்டு, தான் மேற்கொண்ட அக்காதல் நாடகத்தைக் கடிதின் மறந்து, என்னைவிட்டு அகன்றான்; அகன்று நின்றவாறே, ஒருவாறு உளந்தேறி, 'நீ பெண் பாற் பிசாசு என்றால், நான் ஆண்பாற் பிசாசு; இதை நீ அறிந்துகொள்: என்பால் அன்புகொண்டு என்னை ஏற்றுக்கொள்; ஏற்றுக்கொள்ளாது இன்னல் தரின், உனக்குப் பலி உணவு கிடைக்காவாறு, இவ்வூரார் உனக்கு இடும் பலியையும் நானே உண்டுவிடுவன்' என வாயில் வந்தனவற்றைக் கூறத்தொடங்கினான்; பார்ப் பான் அஞ்சிவிட்டான் என்பதை அறிந்துகொண்ட யான், உடனே மேலும் அஞ்சி அகலுமாறு, மண்ணை வாரி வாரி, விடாமல் அவன்மீது சொரிந்தேன்; அது கண்ட அவன் அலறிப்புடைத்து, ஊரெல்லாம் கேட்டு ஓடிவருமாறு பெருங்கூச்சல் எழுப்பிவிட்டான்; அதனால், ஆங்கே மேலும் நிற்றல் அலர் எழற்கு ஏதுவாம் என அஞ்சி யான் வந்துவிட்டேன்.

"புலியைப் பிடிக்க விரித்த வலையுள், ஒரு குறுநரி வந்து வீழ்ந்ததைப்போல், நம் அன்பனை எதிர்நோக்கி நின்ற என்முன், இவ்வம்பன் வந்து இடையூறு தந்தான்; இவ்வாறு, தனித்திருக்கும் மகளிர்பாற் சென்று, தகாதன கூறித் திரிவதையே தன் தொழிலாகக்கொண்டு விட்ட அப்பார்ப்பானுடைய இந் நாடகத்தால், யான் நம் அன்பனைக்கண்டு மகிழ்தல் கெட்டுவிட்டது; இனி அவனைக்காண இரவிற்செல்வது அத்துணை ஏற்புடைத்தன்று." இதுவே அவள் கூறிய கட்டுக்கதை.

தோழி, இவ்வாறு கூறக்கேட்ட அவ்விளைஞன், அவள் கூறியது கட்டுக்கதையே; உண்மை நிகழ்ச்சியன்று என்பதை உணரமாட்டானாதலின், "எனக்கு இன்பம் தருவதாக, நான் கருதும் இவ்விரவுக்குறியால், இவர்கள் இவ்வளவு துயர் உறுகின்றனரே! இதை நான் அறியாது போனேனே! என்னே என் அறியாமை! என்னே என் தன்னலம்! இனி இரவில் வந்து, இவரை இவ்வாறு வருந்த விடுவதோ, தனித்துக்கிடந்து துயர் உறச்செய்வதோ செய்யேன்; விரைவில் வந்து வரைந்து கொண்டு; பிரிவறியாப் பெருவாழ்வு பெற்று யானும் மகிழ்வேன்; இவர்க்கும் மகிழ்ச்சி தருவேன்" எனத் துணிந்த உள்ளத்தனாய் அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

இன்பம் துய்க்கவேண்டும் எனும் ஆர்வம் உந்த இரவின் இடையூறு கருதாதுவந்த அவனை, வரைந்து கொள்ளும் துணிவோடு வந்த வழியே மீளச்செய்ய, வல்லமையால் வகுத்துரைத்த அத்தோழியின் கட்டுக்கதையினைக்கூறுகிறது இச்செய்யுள் :

**திருந்துஇழாய்! கேளாய், நம் ஊர்க்கெல்லாம் சாலும்**
**பெருநகை அல்கல் நிகழ்ந்தது ஒருநிலையே;**
**மன்பதை எல்லாம் மடிந்த இருங் கங்குல்,**

அந்துகில் போர்வை அணிபெறத் தைஇ; நம்
இன்சாயல் மார்பன் குறிநின்றேன் யானாகத்,
'தீரத் தறைந்த தலையும், தன் கம்பலும்,
காரக்குறைந்து, கறைப்பட்டு வந்துநம்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்
தோழி! நீ போற்றுதி' என்றி; அவன் ஆங்கே,
பாராக், குறழாப், 'பணியாப் பொழுதன்றி
யார்இவண் நின்றீர்?' எனக்கூறிப், பையென,
வைகாண் முதுபகட்டில் பக்கத்திற் போகாது,
'தையால்! தம்பலம் தின்றியோ?' என்றுதன்
பக்குஅழித்துக் 'கொண்டீ' எனத்தரலும், யாதுஒன்றும்
வாய்வாளேன் நிற்பக், கடிதுஅகன்று, கைமாறிக்
'கைப்படுக்கப் பட்டாய் சிறுமி!நீ; மற்றுயான்
ஏனைப் பிசாசு; அருள்; என்னை நலிதரின்,
இவ்வூர்ப் பலிநீ பெறுமல் கொள்வேன்' எனப்
பலவும் தாங்காது, வாய்பாடி நிற்ப,
முதுபார்ப்பான் அஞ்சினனாதல் அறிந்து, யான்
எஞ்சாது ஒருகை மணல் கொண்டு மேல், தூவக்
கண்டே கடிது அரற்றிப் பூசல் தொடங்கினன்; ஆங்கே
ஒடுங்கா வயத்தின் கொடும் கேழ்க் கடுங்கண்
இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுள், ஓர்
ஏதில் குறுநரி பட்டற்றால்; காதலன்
காட்சி அழுங்க, நம் ஊர்க்கெலாஅம்
ஆகுலம் ஆகி விளைந்ததை; என்றும் தன்
வாழ்க்கை அதுவாகக் கொண்ட முது பார்ப்பான்
வீழ்க்கைப் பெருங் கருங் கூத்து.''

இரவுக்குறி விலக்கி, வரைவு கடாவத் துணிந்த தோழி, தலைவன் சிறைப்புறத்தானாக, அவன் செய்த குறியறிதற்குப் புறத்துச் சென்ற வழி ஆங்கு நடந்ததோர் நிகழ்ச்சியாக, ஒரு பொய்க் கதையைத் தானே புனைந்து, அவன் கேட்க, தலைவிக்குக் கூறியது இது.

*1. சாலும் - கொண்டாடுதற்குப் போதிய; 2. அல்கல் - இரவு; ஒருநிலையே - நிகழ்ந்தது நிகழ்ந்தவாறே; 3.*

மன்பதை - உலகத்தில் வாழும் உயிர்கள் ; மடிந்த - உறங்கிய ; 6. திர - மயிர் உதிர்ந்துபோக ; தறைந்த - வழுக்கையான ; கம்பல் - போர்வை ; 7. காரம் - கருங்குட்டம் ; கறைப்பட்டு - குலஒழுக்கம் விட்டுக்கெட்டு ; 10. குறழா - குனிந்து ; பணியாப்பொழுது - தகாதகாலம் ; 12. வை - வைக்கோல் ; முதுபகடு - கிழப்பசு ; 13. தம்பலம் - வெற்றிலைப்பாக்கு ; 14. பக்கு - பாக்குப்பை ; அழித்து - திறந்துகாட்டி ; 15. வாய்வாளேன் - வாய்திறந்து பேசாது ; 17. ஏனைப்பிசாசு - பெண்பிசாசு ஒழியஎஞ்சி நின்ற ஆண்பிசாசு ; நலிதரின் - வருத்தின் ; 19. வாய்பாடி - வாயாற்கூறி ; 21. எஞ்சாது - விடாமல் ; 22. ஒடுங்கா - எதனாலும் அழிக்கமாட்டாத ; வயம் - பலம் : கொடும்கேழ் - வளைந்த வண்ணக்கோடுகள் ; 24. இரும்புலி - பெரியபுலி ; கொண்மார் - பிடித்தற்கு ; 26. அழுங்க - கெடும்படி ; 27. ஆகுலம் - வருத்தம் ; விளைந்ததை - விளைந்தது ; 28. வாழ்க்கை - தொழில் : 29. வீழ்க்கை விரும்புதல் உடைய ; கருங்கூத்து - கோமாளி நாடகம்.

3788

குறிஞ்சிக் குமரி முற்றும்!

மன்றம் அச்சகம், 26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1

## கா. கோவிந்தன் எழுதியவை

| | |
|---|---|
| பாலைச் செல்வி | 3–8–0 |
| குறிஞ்சிக் குமரி | 3–0–0 |
| முல்லைக் கொடி | அச்சில் |
| நெய்தற் கன்னி | அச்சில் |
| மருதநில மங்கை | அச்சில் |


தேனருவிப் பதிப்பகம்

தியாகராயநகரம்

சென்னை–17

Cover Printed at Vinodha Press, Madras-1.